# நல்லதோர் குடும்பம்



சகரியா பூனன்

# நல்லதோர் குடும்பம்

சகரியா பூணன்

*தேவா! எமக்களித்த வாக்குத்தத்தம் :*

"பாலும் தேனும் ஓடும் மணவாழ்க்கையன்றோ!"

★ ஒன்பதாம் பதிப்பு (2018)

# வசந்தத்தின் அழைப்பு . . .

**பாகம் - 1** **கணவன் மனைவி உறவு**

*1.* திருமணம் ஓர் வசந்த சோலை 9

*2.* 'இரு துருவம்' ஒரே சரீரமாகும் அற்புதம் 29

*3.* தேவன் தங்கும் வீடே ஆசீர்வாதத்தின் உறைவிடம் 47

*4.* இயேசுவின் அடிச்சுவட்டில் "ஒளிமய" மணவாழ்க்கை 61

*5.* ஒருவரையொருவர் புரிந்து வாழுதல் 79

**பாகம் - 2** **தனித்தனியே தேவ ஆலோசனை**

*6.* மனைவிக்கு மட்டும் 107

*7.* கணவனுக்கு மட்டும் 125

**பாகம் - 3** **பிள்ளைகளும் பெற்றோர்களும்**

*8.* குழந்தை பிரதிஷ்டை 147

*9.* குடும்பத்தை தகப்பனே நடத்த வேண்டும் 156

*10.* குடும்பம் கட்டப்பட பெற்றோர்களின் பங்கு 173

**பாகம் - 4** **கேள்வி - பதில்கள்**

*11.* நல்லதோர் குடும்பத்தின் கேள்வி - பதில்கள் 195

Copyright - ZAC POONEN (A Good Family) 1998

*இப்புத்தகத்தின் செய்திகள் தவறாகக் கையாளப்படுவதைத் தவிர்ப்பதற்காக இப்புத்தகம் பதிப்புரிமையைப் பெற்றுள்ளது. ஆசிரியரின் அனுமதியில்லாமல், இச்செய்திகள் மொழிபெயர்க்கப்படவோ அல்லது அச்சிடப்படவோ கூடாது.*

*ஆசிரியர் முகவரி :*

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

**உங்கள் கரங்களில் தவழும் இப்புத்தகம் . . .**

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கடைசி காலத்தில், கிறிஸ்தவ குடும்பங்களை கடுமையாய் தாக்குவதற்கு சாத்தான் குறிவைத்திருக்கிறான் என்பதை நாம் உணர முடிகின்றது. இதற்கு ஆதாரமாய், இன்று உலகமெங்கும் ஆங்காங்கு அவன் தொடுத்திருக்கும் தாக்குதல்களை நாம் ஒன்றன்பின் ஒன்றாய் கேள்விப்படுகிறோம்! நாம் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டுமென்றால், அவருடைய நோக்கத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற வேண்டுமென்றால், இக்கொடிய காலத்தில் நம்முடைய பிள்ளைகளை அவருடைய ராஜ்ஜியத்திற்குரியவர்களாக பாதுகாக்க வேண்டுமென்றால்....... தேவனுடைய வார்த்தை போதிக்கும் வட்டத்திற்குள் நம்முடைய குடும்பங்களை வைத்துப் பாதுகாக்க வேண்டியது மிக அவசியமாகும்!

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு மூன்றுமாடி கட்டிடத்திற்கு ஒப்பிட்டுக் கூறலாம்.

இந்தக் கட்டிடத்தின் **அஸ்திபாரம்** கிறிஸ்துவே ஆவார்! நம்மீது கொண்ட தேவனுடைய பரிபூரண அன்பு அவர் மூலம் வெளிப்பட்டதை நாம் அறிந்தவர்களாய், அவர் போதகத்தின் மூலம் "இக்காலத்திற்கும் நித்தியத்திற்கும் போதுமான" அசைக்க முடியாத அஸ்திபாரத்தை நாம் பெற்றிருப்பதே இந்த பகுதியாகும்!

இந்த கட்டித்தின் **முதல் மாடி** நம்முடைய உள்ளான ஜீவியமேயாகும்! நம்முடைய சிந்தை வாழ்க்கையும், நம்முடைய மனப்பான்மைகளும் நோக்கங்களுமே உள்ளான ஜீவியமாகும். இங்கிருந்துதான் நம்முடைய புறம்பான ஜீவியம் பொங்கி வருகிறது! இந்த உள்ளான ஜீவியத்தில்தான், நாம் ஓர் சுத்தமனசாட்சியைக் காத்துக்கொண்டவர்களாய் தேவனோடு இசைந்து நடக்கும் வாழ்க்கையைப் பெற்றிருக்கிறோம்.

இந்த கட்டிடத்தின் **இரண்டாவது மாடியே** நம்முடைய குடும்ப ஜீவியம்! இது, குடும்பத்தில் நாம் கொண்டிருக்கும் அன்பின் உறவுகளையும், நம்முடைய பிள்ளைகளை தேவபக்தியின் வழியில் வளர்ப்பதையும் தொடர்புபடுத்துவதாய் இருக்கிறது.

இந்த கட்டிடத்தின் **மூன்றாவது மாடி** நம்முடைய ஊழிய வாழ்க்கையாகும்! இது, தேவனுடைய சித்தத்தின்படி அவருடைய பணிகளைச் செய்வதும், இப்பூமியில் அவருடைய சபையை தூய்மை நிறைந்ததாய் கட்டுவதேயாகும்.

மேற்கண்ட மூன்றுமாடிகளையும் கட்டுவதற்கு **பரிசுத்த ஆவியின் பெலன்** நமக்கு மிகமிக அவசியமாகும்! அப்பொழுதான், ஓர் அசைவில்லாத கட்டிடத்தை நாம் கட்டி முடிக்க முடியும்.

இன்று கர்த்தருடைய ஊழியத்தில் (மூன்றாவது மாடி) ஈடுபட்டிருக்கும் அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் செய்யும் பெரிய தவறு என்னவென்றால், தங்கள் உள்ளான ஜீவியத்திலும் (முதல்மாடி), தங்கள் குடும்ப ஜீவியத்திலும் (இரண்டாவது மாடி) வலுவான ஆதாரமில்லாமல் ஊழியம் செய்வதேயாகும்.

குறிப்பாய், குடும்ப ஜீவியத்தில்தான் இன்றைய அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் மனைவியிடம் கொண்டிருக்கும் உறவும், தங்கள் மனைவி மீதுகொண்ட மனப்பான்மையும் மோசமான நிலையிலேயே இருக்கிறது. மேலும், இவர்களுடைய பிள்ளைகள் கர்த்தருடைய வழியில் நடப்பதுமில்லை. இவ்வாறெல்லாம் கூறி அவர்களை நியாயந்தீர்க்கவோ அல்லது குறைகூறவோ ஒருதுளியும் நான் விரும்பவில்லை. பிறரை நியாயந்தீர்த்து குறைகூறுவது எதைக் காட்டிலும் மிக எளிதாகும்! அதற்கு எந்த விலைக்கிரயமும் தேவையில்லை! இதற்கு மாறாய், "இவ்வாறு நடப்பதால்"

*ஆண்டவருடைய நாமம் கனவீனமடைகிறது என்றே துயரம் அடைகிறோம்! மேலும் இவர்களுக்கு நல்ல மாதிரிகளைக் காண்பித்து, வேதத்தின் நற்போதகங்களை எடுத்துரைத்து..... இவர்கன் தங்கள் குடும்பங்களை "அதி உன்னதமான வழிக்குள்" கொண்டுவரும்படிக்குமே விரும்புகிறோம்.*

*இதுவே இந்த புத்தகத்தின் நோக்கமாகும்.*

*"உற்பத்தியாளர்களின் கவன குறிப்புகளைப்போலவே" குடும்ப ஜீவியத்திற்கு* **தேவனுடைய வார்த்தை** *அமைந்திருக்கிறது. திருமணத்தை தேவனே நியமித்ததுமல்லாமல், "நல்லதோர் குடும்பத்தைப்" பெறுவதற்கான வழிகளையும் தன்னுடைய வார்த்தையில் நமக்குச் சொல்லி வைத்திருக்கிறார். அவருடைய வார்த்தையில் காணும் குறிப்புகளை நீங்கள் கவனமாய் பின்பற்றினால் பிழையேதும் செய்துவிட மாட்டீர்கள். ஒருவேளை கடந்த காலத்தில், உங்கள் மதியீனத்தினால் உங்கள் குடும்ப ஜீவியத்தை உங்களை தூக்கிவிட முடியாத ஆழமான குழி எதுவுமில்லை! ஆம், ஆண்டவரால் உங்களை உயிர்த்தெழச் செய்யமுடியாத எந்த மோசமான மரணமுமில்லை..... அல்லேலூயா!!*

*குடும்ப ஜீவியத்தில் வெற்றி வாகை சூடியவனைப்போல், இந்தப் புத்தகத்தை நான் எழுதவில்லை. "குடும்பம்" என்ற தலைப்பில் புத்தகம் எழுத நான் பல வருடங்கள் தயங்கியிருக்கிறேன். ஏனெனில், இவ்விஷயத்தில் நான் கை தேர்ந்தவனல்ல என்பது எனக்கு தெரியும். ஓர் கணவனாகவும், ஓர் தகப்பனாகவும் இருந்து அநேக தவறுகளை நான் செய்திருக்கிறேன். ஆனால்,,,,, அந்த தவறுகளிலிருந்து நல்ல பாடங்களை கற்றிருக்கிறேன்! இவ்வாறு, கடந்த முப்பது ஆண்டுகளில் தேவன் எனக்கும், என் குடும்பத்திற்கும் சொல்லிமுடியாத இரக்கம் காட்டியிருக்கிறார் என்று மாத்திரமே என்னால் சொல்ல முடியும்!!*

*1998 ஜூன் 19 - ம் தேதி நானும் என் மனைவியுமாய் சேர்ந்து எங்கள் திருமண வாழ்க்கையை 30 ஆண்டுகள் பூர்த்தி செய்திருக்கிறோம். இன்று நாங்கள், அன்று திருமணமான நாட்களைக் காட்டிலும் ஒருவரையொருவர் அதிகமாய் நேசித்து அன்றைய நாட்களைவிட இப்போது கர்த்தருக்குள் அதிக மகிழ்ச்சியாய் இருக்கிறோம்! குடும்ப வாழ்க்கையில் ஏராளமான ஏற்றதாழ்வு அனுபவங்களையும், நாங்கள் சொல்ல விரும்பாத எண்ணற்ற உபத்திரவங்களையும் சந்தித்திருக்கிறோம். இந்த எல்லாப் பகுதிகளிலும் தேவன்தான் எங்களை வெற்றிசிறக்கும்படி நடத்தியிருக்கிறார் என இன்று நான் கூறமுடியும். என்னுடைய நான்கு பையன்களும் மறுபடியும் பிறந்து ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். ஆண்டவர் அவரவர்களுக்குத் தந்த அழைப்பின்படி இன்று அவர்கள் கர்த்தரைப் பின்பற்றி செல்கிறார்கள். அவர்கள் பெற்ற அழைப்பு, தேவன் எங்களை அழைத்த அழைப்பிற்கு வித்தியாசமானதாகவே இருக்கிறது. இதற்கெல்லாம் நாங்கள் பாத்திரர் அல்ல, ஏனென்றால் அவர்களின் பெற்றோர்களாகிய நாங்கள் ஏராளமான தவறுகளைச் செய்திருக்கிறோம். ஆகவே தேவன் ஒருவருக்கே சகல மகிமையையும் செலுத்துகிறோம். நாங்கள் செய்ததெல்லம், எங்களின் நான்கு பிள்ளைகளுக்காக கிரமமாய் ஜெபித்ததுதான்! தேவன் தம்முடைய அளவற்ற இரக்கத்தின்படி எங்கள் ஜெபங்களுக்குப் பதிலளித்துவிட்டார்!!*

*உங்களுக்கு உதவவும், அவருடைய மகிமைக்கென "நல்லதோர் குடும்பமாய்" ஜீவித்திட உங்களை சவாலிட்டு அழைக்கவும் இப்புத்தகத்தை தேவன் பயன்படுத்துவாராக!*

**உங்கள் சகோதரனும் கிறிஸ்துவின் அடிமையுமான,**

*பெங்களூர்,*
*ஜூன், 1998.*

**சகரியா பூணன்**

தம்பதியர்களின் அன்பின் காவியமாகிய
'உன்னதப்பாட்டு' புத்தகத்தை வேதாகமத்தின்
நடுமையத்தில் தேவனே வைத்தார்!

பிரியமே, ரூபவதியே,
சாரோனின் ரோஜாவே, பூச்செண்டே ....... என
மணம் கமழும் மணவாழ்க்கை
உங்கள் வாழ்வின் 'உன்னதப்பாட்டாய்'
மங்கா காவியமாய் மாறுவதன்றோ
நம் ஆத்ம நேசரின் மன வாஞ்சை!

காவியத்தலைவி சூலமித்தியாள் வடிவமைத்த
குடும்பம் எனும் தோட்டத்தில்
பிள்ளைகள் எனும் பன்னீர் பூக்கள்
வசந்த சோலையாய் மணம் கமழ

**"நல்லதோர் குடும்பமாய்"**

மன்னவன் இயேசுவின் மாட்சிமைக்குப்
புகழ்ச்சேர்ப்பதன்றோ
நாதன் ஏசுவின் நீங்கா மனஏக்கம்!!

'ஆம்' என்றும் 'ஆமென்' என்பதுமே
தேவனின் வாக்குகள்!
தேவா.... எம் நலிந்த மணவாழ்க்கை
'நல்லதோர் குடும்பமாய்'
மறுரூபமடைய
உமது 'ஆமென்' தொனி
எம் காதுகளில் இதோ
"சமீபமாய்" தொனிக்கின்றதே!
அது, அப்படியே ஆகட்டும்!
ஆமென்!!



# பகுதி – 1

## கணவன் மனைவி உறவு

## திருமணம் ஓர் வசந்தசோலை

ஆதியில், தான் சிருஷ்டித்த ஆதாமை ஏதேன் தோட்டத்திற்கு அழைத்து வந்து அத்தோட்டத்தைப் பண்படுத்தவும், காக்கவும் அவனை தேவன் வைத்தார் (ஆதி.2:15). இந்த சம்பவித்திற்கடுத்து, அவனுக்கு ஏற்றதோர் "துணையையும்" தேவன் தந்தார்! எனவே அந்த இனிய நாளில் ஆதாம் தேவனிடமிருந்து இரண்டு வெகுமதிகளைப் பெற்றான் என்றே நாம் கூறவேண்டும்! முதலாவது வெகுமதி, **தோட்டம்.....** அதை ஆதாம் பண்படுத்திக் காத்திட வேண்டும்! இரண்டாவது வெகுமதி, **ஓர் துணை** அல்லது ஓர் மனைவி.... அவளோடும் ஆதாம் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு, அவளையும் அவன் பண்படுத்திக் காத்திட வேண்டும்!! இவ்வாறு ஏதேன் தோட்டத்தையும், தனக்குக் கொடுக்கப்பட்ட மனைவியையும் காத்துக் கொள்ளும் உன்னதப் பணியை அந்நாளில் ஆதாம் தேவனிடமிருந்து பெற்றான்.

ஆனால், இந்த ஒப்பற்ற பணியை நிறைவேற்றிட ஆதாம் தவறி பெரும் தோல்வியைக் கண்டான். விழிப்புடன் காத்துக் கொள்ள வேண்டிய தோட்டத்திற்குள் சாத்தான் வரும்படி அனுமதித்து விட்டான்!



இப்போது என்ன நடந்தது? ஓர் வசந்த சோலையாய் இருக்க வேண்டிய அந்தத் தோட்டம் பாலைவனமாய் மாறி "முள்ளும் குருக்குமே" அங்கு வளர்ந்தது. இந்த நிலை தோட்டத்திற்கு மாத்திரமல்ல, ஆதாம் ஏவாளின் உறவிலும் ஏற்பட்டு விட்டது. ஆம், "எலும்பில் எலும்பும் மாம்சத்தில் மாம்சமுமாய் .... ஒரே மாம்சமாய்" இசைந்திருந்த ஆதாம்-ஏவாள் உறவைப் பிரிக்க அவர்கள் நடுவிலும் சாத்தான் புகுந்து விட்டான் (ஆதியாகமம்.2:23,24;3:1). பார்த்தீர்களா, தேவன் இணைத்ததைப் பிரித்திட 'ஒருவன்' எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறான்.

*இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என தேவன் ஒன்றாய் இணைத்த வசனத்திற்கு* **உடனடியாக அடுத்த வசனத்தில்** *'தோட்டத்தில் சாத்தான் பிரவேசித்து விட்டானே!' இதை நாம் ஒருக்காலும் மறந்து விடவே கூடாது. சர்ப்பத்தின் வடிவில் சாத்தான் தோட்டத்திற்குள் பிரவேசித்ததின் ஒரே நோக்கம் தேவன் ஒன்றாய் இணைத்தவர்களைப் பிரிப்பதேயாகும்.*

*திருமண நேரத்தில் போய் சாத்தானைப் பற்றி எண்ணுவதா? என நாம் கேட்கலாம். ஆனால் சாத்தான் நாம் மேலே கண்டபடி 'துரிதமாய்' செயல்படுகிறவனாயிருக்கிறானே! ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நடந்தது போலவே உங்கள் திருமண ஜீவியத்திலும் சாத்தான் துரிதமாய் செயல்பட மாட்டான் என நீங்கள் கூறிவிட முடியுமா? ஆகவேதான் நாம் அவனைக் குறித்து திருமண வாழ்வின் துவக்கத்திலிருந்தே விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.*

*ஆம், தேவனையும், நம்மையும் சாத்தான் பிரிப்பது மாத்திர மல்லாமல், இவ்வுலகில் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவையும் பிரித்துவிடுகிறான். இக்கொடிய "பிரிக்கும் செயலைத்தான்" சாத்தான் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் செய்திட முயற்சித்தான். முதலாவது அவனைத் "தோட்டத்திற்குள் " வரவிட்டதே ஆதாமின் பெரும் பிழை எனக் கூறலாம். ஏனெனில் சாத்தான் பிரவேசிக்கும் இடம் 'அற்புத தோட்டமாய் இருந்தாலும்' அது வெகுசீக்கிரத்தில் பாலைவனமாய் மாறிவிடும்! உங்கள் திருமண வாழ்வின் தோட்டம் பாலைவனமாய் மாறிட நீங்கள் அனுமதிக்கலாமோ?*

*நம் தோட்டம் எவ்வாறு பாலைவனமாய் மாறமுடியும் என்பதை விளக்கும் எச்சரிப்பின் வசனங்களை நீதிமொழிகள் 24:30,31-ஆம் வசனங்களில் காண்கிறோம். "சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சைத்தோட்டத்தையும் கடந்து போனேன். இதோ அதெல்லாம் முள்ளுக்காடாய் இருந்தது. நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது. அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது. அதைக் கண்டு சிந்தனை பண்ணினேன். அதை நோக்கி புத்தியடைந்தேன்" பார்த்தீர்களா, தோட்டத்தில் நீங்கள் விழிப்புடன் கவனம் செலுத்தா விட்டால் அத்தோட்டம் எவ்வளவு மோசமாய் மாறிவிடுகிறது. நீங்கள் வீதியில் கடந்து செல்லும்போது ஒருவர் வீட்டின் அருகில் செழிப்பான தோட்டத்தையும், மற்றொருவர் வீட்டின் அருகில் வறண்ட முட்புதர்களையும் பார்த்திருப்பீர்கள் அல்லவா?*

**ஒரு அழகான தோட்டம் தானாய் உண்டாவதில்லை! அந்த வீட்டில் உள்ளவர் தன் தோட்டத்தில் பயிர் செய்து, களையெடுத்து..... இவ்வாறாக நிச்சயம் அதிகப் பிரயாசப் பட்டிருப்பார்.**

*மற்றொருவர் வீட்டில் நீங்கள் கண்ட முட்புதர் எவ்வாறு வந்தது? அந்த வீட்டிலுள்ளவன் முட்களையும், புதர்களையும் விதைத்து பிரயாசப்பட்டா வந்தது? இல்லை, அது தானாகவே வனாந்தரமாய் மாறிவிட்டது. ஆம், வனாந்திர பாலைவன வாழ்க்கை உருவாகிவிட நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை! ஆனால் உங்கள் தோட்டம் "வசந்த சோலையாய்" இருக்க வேண்டுமென்றால், அதற்கு நீங்கள் கண்டிப்பாய் பாடுபட வேண்டும்!!*

*இதைப்போலவேதான் திருமண வாழ்வும் இருக்கிறது. ஒருவருடைய திருமண வாழ்க்கை வசந்த சோலையாகவும், மற்றொருவருடைய திருமண வாழ்க்கை பாலைவனமாகவும் இருப்பதை நாம் கண்கூடாகவே காண்கிறோம். வசந்தசோலையாய் இருக்கும் தோட்டத்தில் (குடும்பத்தில்) கணவனும், மனைவியும் சேர்ந்து நிச்சயமாய் பாடுபட்டு வளர்த்து, விழிப்புடன் தோட்டத்தைப் பாதுகாத்திருப்பார்கள். இதற்கு மாறாக, உங்கள் திருமண உறவு பாலைவனமாய் மாறுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதற்கு நீங்கள் கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் சத்தம் போட்டு திட்ட வேண்டியது அவசியமில்லை...*

**நீங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தாலே உங்கள் குடும்ப உறவு பாலைவனமாய் மாறிவிடும்!**

*நீதிமொழிகளில் நாம் கண்ட மனுஷன், முள்ளையும், புதரையும் தன் தோட்டத்தில் விதைத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அவன் ஒன்றும் செய்யாமல் தூங்கிக் கொண்டிருந்தான். பின் அவன் எழுந்து பார்த்தபோது தோட்டத்தில் காஞ்சொறி மூடி, கற்சுவர் இடிந்து.... பாழாய் கிடந்தது!*

*அந்த மனிதன் "இன்னும்* **கொஞ்சம்** *உறங்கட்டும்.... இன்னும்* **கொஞ்சம்** *நித்திரை செய்யட்டும்" எனக் கூறியதைக் கண்டீர்களா? இவ்விதம்தான், நாம் ஒன்றும் செய்யாமல் சும்மாயிருப்பது, குடும்பத்தில்* **கொஞ்சம் கொஞ்சமாய்** *ஆரம்பிக்கிறது. ஆம், ஒரே இராத்திரியில் உங்கள் குடும்ப ஜீவியம் பாலைவனமாய் மாறிவிடாது. ஆரம்ப மாதங்களில் குடும்ப உறவு நன்றாய் இருப்பது போல் நீங்கள் காண்கிறீர்கள்... அடுத்த சில மாதங்களிலும் நன்றாய் இருப்பதையே காண்கிறீர்கள்! இப்போது "எல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது!" என நீங்கள் எண்ணி உங்கள் தோட்டத்தை சற்று அலட்சியப்படுத்தி*

சும்மாயிருந்து விடுகிறீர்கள். இனிமேல்தான் உங்கள் கணவன், மனைவி உறவில் "தரித்திரம்" வழிப்போக்கனைப் போல் உள்ளே நுழைந்து.... பின்பு ஆயுதமணிந்த திருடனாய் மாறி உங்கள் குடும்ப ஜீவியத்தின் 'வசந்த' உறவுகளைப் பறித்துச் சென்றுவிடுகிறான்!! இவைகளைச் சாத்தான் உடனே செய்துவிட மாட்டான். அவன்மெதுவாய் வந்தாலும் நிச்சயமாய் உள்ளே பிரவேசித்து விடுவான்! ஆனால் அவன் உள்ளே வந்து விட்டால் ஆயுதமணிந்த திருடனாய் மாறி உங்கள்குடும்ப உறவின் வசந்தத்தை திருடவும், கொல்லவும், அழிக்கவும் செய்துவிடுவான்.

ஆகவே நாம் தோட்டத்தைப் பண்படுத்தி "ஓர் நல்ல உறவை" காத்துக் கொள்வதை எப்போது அலட்சியப்படுத்துகிறோமோ, அப்போது அந்தத் தோட்டம் பாலைவனமாய் மாறிவிடும். சாத்தான் தோட்டத்திற்குள் பிரவேசிக்காமல் காத்துக் கொள்ளும்படியே தேவனாகிய கர்த்தர் மனுஷனை அந்தத் தோட்டத்தில் வைத்தார். ஆனால், சாத்தானோ உள்ளே பிரவேசித்துவிட்டான்! அதன்பின் என்ன நடந்ததென்பது நமக்குத் தெரியும்!!

ஓர் வசந்தசோலை எவ்வாறு பாலைவனமாய் மாறியது என்பதையே ஆதியாகமம் 3-ம் அதிகாரம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. அதாவது, ஆதாம் ஏவாளின் வசந்த சோலையான உறவு பாலைவனமாய் மாறியது எப்படி?

1. **வசந்தசோலையான குடும்ப உறவு "பாலைவனமாய்" மாறுவதில் முதல் பங்கு மனைவியினுடையதே! ஆ, அடங்கியிராத முரட்டாட்ட ஆவியை சாத்தானிட மிருந்து ஏவாள் பெற்றுவிட்டாளே! இதே மனைவி, இப்பாலைவனத்தைச் சோலைவனமாய் மாற்ற முடியும்!!**

**முதல் காரணத்தை** ஆதியாகமம் 3:6-ல் நாம் வாசிக்கிறோம். ஆம், மானிடவர்க்கத்தில் ஒருவரும் செய்திடாத " தீர்மானிக்கும் முதல் தீர்மானத்தை" ஒரு ஸ்திரீ செய்துவிட்டாள்! அவள் அன்று எடுத்த முக்கிய அத்தீர்மானத்தை தன் கணவனிடம் ஆலோசனைகூட கேட்காமல் எடுத்துவிட்டாள். இங்குதான் பாவம் உள்ளே பிரவேசித்தது! இங்குதான் "பாலைவனம்" தொடங்கியது!! இந்த உண்மையை **மனைவியாக** இருக்கும் நீங்கள் யாவரும் எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். அவ்வேளையில் ஏவாள் சாத்தானிடமிருந்து உண்மையில் எதைப் பெற்றாள் தெரியுமா? **ஆளுகைக்கு அடங்கியிருக்க விரும்பாத** முரட்டாட்டமான "சாத்தானின் ஆவியையே" தனக்கென வாங்கிக் கொண்டாள்!

*ஏவாள் வஞ்சிக்கப்பட்டபோது அவள் ஒன்றும் தோட்டத்தில் தனியாய் இல்லை. அவளோடு ஆதாமும் நின்று கொண்டுதான் இருந்தான். எனவேதான், ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தை நல்ல தென்று கண்டு, "அதின் கனியைப் பறித்து, புசித்து,* **தன் புருஷனுக்கும்** *கொடுத்தாள்; அவனும் புசித்தான்!" (ஆதி.3:6). என நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தில் தேவன் குடும்பத்திற்கு நியமித்த தலைமையை மனைவி எடுத்துக் கொள்வதை தன் கண்களுக்கு முன்பாகவே ஆதாம் பார்த்துக் கொண்டிருந்தான். அவன், தேவன் தனக்குக் கூறியதை ஏவாளிடம் எடுத்துக் கூறி "அக்கனியைத் தொடாதே, அது பாவமானது!" எனக் கூறினானா? இல்லை. அவன் தன் மனைவியைத் தடுக்கவில்லை. எனவேதான் தேவன் மிகுந்த வருத்தத்துடன் "நீ உன் மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்துவிட்டாயே!" என ஆதாமைப் பார்த்து கூறினார் (ஆதி.3:17). ஆம், இன்றும் அநேக கணவன்மார்கள் சாத்தான் தங்கள் மனைவியை ஆட்கொண்டு "அவள் தலைமையேற்று செய்வதை சும்மா நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."*

*ஒரு மிக முக்கியமான பாடத்தை இங்கு நாம் கற்றுக்கொள்ள முடிகிறதல்லவா? ஆதியிலேயே தேவன் குடும்பத்தில் கணவனைத் தலைவராகவும், மனைவி அத்தலைமைக்கு மகிழ்ச்சியுடன் அடங்கி யிருக்கும்படியும் ஏற்படுத்தியிருந்தார். அவள் அடங்கியிருக்காமல் தானாகவே ஒரு தீர்மானத்தை எடுக்கக் கூடாது. ஏவாளோ தன் கணவனிடம் ஒரு ஆலோசனைகூட கேட்கவில்லை. ஆதாம் அவளோடுதான் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தான். "தன் புருஷனிடத்தில் கேட்போமே" என்ற ஒரு சிறிய சிந்தை கூட இல்லாமல்..... சாத்தானிடம் கலந்தாலோசித்து அவளே ஒரு முடிவு எடுத்துவிட்டாள். ஆம் முதலாவதாக இந்த இடத்தில்தான் வசந்தசோலையான அவர்கள் தோட்டம் பாலைவனமாக மாறத் துவங்கியது.*

*அன்பார்ந்த சகோதரிகளே, நீங்களும் உங்களுடைய குடும்பத்தில் 'ஏவாளுடைய ஸ்தானத்திற்கு' வந்திருப்பீர்கள் என்றால், அன்று ஏதேன் தோட்டத்தில் உண்டான குழப்பத்தைப் போலவே உங்கள் குடும்பமும் அதே போன்று குழப்பத்தில்தான் இருக்கும். ஏவாள் தன்னுடைய இருதயத்தில் சாத்தானுடைய முரட்டாட்ட ஆவியைப் பெற்று விட்டாளே!*

**இவ்வாறு ஒரு மனைவி முரட்டாட்ட ஆவியினால் பீடிக்கப் பட்டால் பின்பு அவள் என்ன செய்வாள் தெரியுமா? தான் பெற்ற முரட்டாட்ட ஆவியைத் தன் பிள்ளைகளுக்கு கொடுத்து விடுவாள்.**

இதைத்தான் ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தில் நாம் காண்கிறோம். ஏவாளுடைய மூத்த மகனாகிய காயீன் ஆளுகைக்கு விரோதமாய் முரட்டாட்டம் பண்ணினான். இந்த ஆவியை அவன் எங்கிருந்து பெற்றான்? துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவன் தன் தாயிடமிருந்தே பெற்றான்! அந்த ஆவி அவனுக்குள் கொடூரமாய் வேலை செய்து அவனுடைய சொந்த சகோதரனையே கொலை செய்யும்படி செய்துவிட்டது.

இவ்வாறு பிள்ளைகள் மூலமாய் தன்னைக் குறித்து வெளிச்சத்தைப் பெறும் ஒரு தாய் தன்னைத் தாழ்த்தி, வீட்டின் தனிஅறைக்குச் சென்று தேவனுக்கு முன்பாகத் தனக்குள் இருக்கும் தீய ஆவியை நியாயந்தீர்க்க வேண்டும். திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவுமே வருகிறான். ஆம், ஆதியாகமம் 4-ம் அதிகாரத்தின் முடிவில் ஆபேல் கொல்லப்பட்டான்...... காயீனும் வீட்டிற்கு வெளியே அலைந்துதிரிகிறவனாய் மாறினான். பார்த்தீர்களா! சொற்ப காலத்திற்குள் வசந்தசோலையான இல்லம் பாலைவனமாய் மாறிவிட்டதே!!

உங்களை நீங்கள் தாழ்த்தி அடங்கியிருப்பது அபகீர்த்தியான செயல் என்று எண்ணுகிறீர்களா? இவ்வேளையில் இயேசுகிறிஸ்துவின் நல்ல மாதிரியை நினைத்துப்பாருங்கள்.

**தாழ்மையான அடங்கியிருக்கும் ஆவியைப் பெற்றிருந்த இயேசு, முரட்டாட்ட ஆவி கொண்ட சாத்தானை முற்றிலுமாய் ஜெயித்து விட்டாரே!**

அப்படியானால் எந்த ஆவி வலிமை கொண்டது? அதற்கான விடை இப்பொழுது உங்களுக்கே தெரியும். ஆகவே சகோதரிகளாகிய நீங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் திடன் கொண்ட மனைவியராய் மாற விரும்பினால் "அடங்கியிருக்கும் ஆவியை" எல்லாச் சூழ்நிலையிலும் பெற்றுக் கொள்ளும்படி நாடுங்கள். தனக்குத் தரப்பட்ட ஆளுகைக்கு அடங்கியிருக்கும் ஆவி கிறிஸ்துவின் ஆவியே ஆகும். இதைத்தான் 1 பேதுரு 3:1-ல் "அந்தப்படி (இயேசுவைப் போலவே) மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருங்கள். **இவ்வாறு அடங்கி கீழ்ப்படிந்திருப்பதில் வல்லமை இருக்கிறபடியால்** உங்கள் புருஷர்களே திருவசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களாய் இருந்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கும் எப்போதும் அடங்கியிருங்கள்" எனக் கூறப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத ஒருவன் சாத்தானுக்கு அடிமையும், அவனுடைய பிள்ளையுமாய் இருக்கிறான். ஓர் கொடிய

*சிங்கமாயிருக்கிற சாத்தானுக்கு உங்கள் கணவர் "பாலசிங்கத்தைப் போல்" (சிங்கத்தின் குட்டியைப் போல்) இருக்கிறார். பார்த்தீர்களா, அவிசுவாசியான கணவர் உங்கள் வீட்டில் இருக்கும் பிசாசுக்கு சொந்தமான "பாலசிங்கம்!" கெர்ச்சிக்கும் சிங்கத்திடமிருந்து இந்த பால சிங்கத்தை யாரால் பிரித்தெடுக்க முடியும்? அவ்வாறு பிரித்து அந்த பாலசிங்கத்தை தேவனுடைய ராஜ்யத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும் வலிமை கொண்டவர்கள் யார்? ஆம், அடங்கி கீழ்ப்படிந்திருக்கும் ஓர் மனைவியே இதற்கான வலிமையுடையவளாய் இருக்கிறாள். அந்த வலிமை எப்படிப்பட்டது தெரியுமா? "போதிக்கும் ஒரு வார்த்தை கூட இல்லாமல்" அவள் தன் கணவனை ஆதாயம் கொண்டிட முடியும்! கெர்ச்சிக்கும் கொடிய சிங்கத்திடமிருந்து தன் கணவனை இவள் காப்பாற்றிவிடுகிறாள்!!*

*"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்" (நீதிமொழிகள்.14:1). இந்த வசனத்தில் புத்தியுள்ள கணவன் என்று எழுதப்படவில்லையே!*

**ஏனென்றால் ஒரு மனைவி அடங்கியிருக்கும் ஆவியை பெற்றிருப்பாளா? அல்லது பெற்றிருக்க மாட்டாளா? என்பதை வைத்தே வீடு கட்டப்படுவது நிர்ணயிக்கப்படுகிறது!**

*தன் வீட்டில் தேவனுடைய பிரதிநிதியாய் இருக்கும் தன் கணவனின் ஆளுகைக்கு விரோதமாய் ஒரு ஸ்திரீ முரட்டாட்ட ஆவியைக் கொண்டிருந்தால் அவள் உண்மையில் தன் சொந்த வீட்டையே இடித்துப் போடுகிறவள். இதுபோன்றவளை "புத்தியில்லாத அல்லது பைத்தியம் போன்ற ஸ்திரீ" எனக்கூறுவதில் எவ்வித பிழையுமில்லை. ஏனெனில் இவள் தன் வீட்டு ஜன்னல்களையும், சுவர்களையும் ஓர் பைத்தியத்தைப் போல் உடைத்து இடித்துக் கொண்டிருக்கிறாள்! இனி என்ன சம்பவிக்கும்? வசந்தசோலை வெகு விரைவில் பாலைவனமாய் மாறிவிடும். "தேவன் இணைத்ததை" பிரித்திடும் கொடிய செயலை சாத்தான் இவ்வாறுதான் ஒரு குடும்பத்தில் துவங்குகிறான்.*

2. **ஆதாமிடமிருந்த "குற்றம் சாட்டும் ஆவி" ஏதேன் வசந்தத்தைப் "பாலையாக" மாற்றிப்போட்டது. இன்று "தன்னை நியாயந்தீர்க்கும்" கிறிஸ்துவின் ஆவி "பாலையை" "சோலையாக" மாற்றிட முடியும்!**

*குடும்பம் பாலைவனமாய் மாறுவதற்கு, சாத்தானுடைய அடுத்த முயற்சி* **ஒருவரையொருவர் குற்றம் சாட்டும்** *அவனுடைய*

*ஆவியேயாகும். ஆதியாகமம் 3:11-ல் தேவன் ஆதாமை நோக்கி: "புசிக்க வேண்டாமென்று நான் விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ?" எனக் கேட்டார். இந்தக் கேள்விக்கு நேர்மையான ஒரே ஒரு பதில்தான் உண்டு. அது என்னவெனில், "ஆம் ஆண்டவரே நான் புசித்து விட்டேன்.... அதற்காக மனம் வருந்துகிறேன்" அவ்வளவுதான். இவ்வாறு ஆதாம் தன் நிலையை ஒத்துக் கொள்வதற்குப் பதிலாய் அவனோ, "தன் ஆள்காட்டி விரலால் தன் மனைவியாகிய ஏவாளைக் சுட்டிக்காட்டினான்."*

**தன் ஆள்காட்டி விரலை உயர்த்தி யாரோ ஒருவரை சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும் காட்சி தானே இன்று உலகம் முழுவதும் பிரபல்யமாய் காணப்படுகிறது!**

*அதாவது "எல்லாம் உன் தவறுதான்!" எனப் பிரதிபலிக்கும் செயல். "கீழ்ப்படிந்திடாத முரட்டாட்ட ஆவிக்கு" அடுத்ததாக இப்போது* "**குற்றம் சாட்டும் ஆவி**" *ஒரு குடும்பத்தைப் பாலைவனமாய் மாற்றும்படியாய் கிரியைச் செய்வதைக் காண்கிறோம்.*

*ஆதாம் தன் ஆள்காட்டி விரலை நீட்டி "தேவரீர் தந்த ஸ்திரீயானவள்!" என குற்றத்தை ஏவாள் மீது சுமத்தினான். ஒரு வீட்டில் புருஷனாய் இருக்கும் ஒருவன் தேவன் தனக்குத் தந்த தலைமையை தவறாய் பிரயோகிப்பது மிக எளிது. தன் தலைமையின் அதிகாரத்தில், எப்போதும் தன் மனைவிதான் தவறு செய்பவள் என்றும், தானோ ஒரு தவறும் செய்வதில்லை என்றும் எண்ணிக் கொள்கிறான். இதுபோன்ற அநேக புருஷர்கள் குடும்பங்களில் இருப்பதை நாம் காண்கிறோம்.*

*ஆகவேதான் மனைவியிடம், "ஒருதடவைகூட" மன்னிப்பு கேட்காத புருஷர்கள் உண்டு. இவ்வுலகில் ஒருதடவைகூட மன்னிப்பு கேட்க அவசியமில்லாதவர் யார்? அது தேவன் ஒருவரே! எனவே ஒருபோதும் மன்னிப்பு கேட்காத ஒரு கணவன் தன்னை தேவனுக்குச் சமமாகவே எண்ணிக் கொள்கிறான். இவனுடைய மனோபாவம் "வேறு யாரோ தவறு செய்திருக்கிறார்கள்" என்பதாகவே எப்போதும் இருக்கும். குறிப்பாய் குடும்பத்தில் ஒரு கணவன், தவறுகளை மனைவியிடமோ அல்லது பிள்ளைகளிடமோ காண்பவர்களாய் இருப்பார்கள். இதுபோதும்.... வெகுவிரைவில் வசந்தசோலையான குடும்பம் பாலைவனமாய் மாறிவிடும்!!*

*அடங்கியிருக்க மறுக்கும் முரட்டாட்ட ஆவிக்கு ஒப்பாகவே "குற்றம் சொல்லும் ஆவியை உடையவர்களாய்" நீங்கள் இருந்து*

*விட்டால், குடும்ப உறவை சீர்குலைத்திடும் முள்ளையும் குருக்கையும் நீங்களே முன்வந்து விதைக்கிறவர்களாய் மாறிவிடுவீர்கள்.*

*இயேசுவை சற்று நோக்கிப் பாருங்கள். அவர் ஒருதடவைகூட தன் விரலை யார் மீதும் சுட்டிக்காட்டவேயில்லை. அவர் ஜனங்களின் பாவத்திற்கான குற்றத்தைத் தன்மீதே ஏற்றுக்கொண்டார். ஒன்று அல்லது இரண்டு ஜனங்கள் அல்ல.... இவ்வையகத்தில் வாழும் எல்லா ஜனங்களின் பாவத்திற்கான குற்றங்களையும் அவர் தன்மீதே ஏற்றுக்கொண்டார். ஆனால் உண்மையில் அவைகள் அவருடைய சொந்த பாவமல்ல!! "குற்றம் தன்னுடையதாய் இல்லாதிருந்தும்" அவைகளைத் தன்மீது ஏற்றுக்கொள்ளும் ஆவிதான் கல்வாரி சிலுவையின் ஆவியாகும்!! இந்த ஆவியை நம்முடைய குடும்பங்களில் நாம் பெற்றுவிட்டால், அக்குடும்பம் வசந்தசோலையாய் நிச்சயம் மாறிவிடும்.*

*எப்படியெனில், அக்குடும்பத்தில் உள்ள கணவனும், மனைவியும்* **தன்னைத்தானே நியாயந்தீர்க்கும் செய்தியினால்** *இறுக பற்றப்பட்டுவிட்டால் அப்படியாகும்! "நியாயத்தீர்ப்பு முதலாவது தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாய் இருக்கிறது" (1பேதுரு 4:17) என நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் உங்கள் வீட்டை நீங்கள் எவ்வாறு* **தேவனுடைய வீடாய்** *மாற்றியமைக்க முடியும் என்பதைத் தெளிவாய் கூறுகிறது.*

**உங்களை நீங்களே நியாயந்தீர்த்து, ஒருபோதும் பிறரை சுட்டிக்காட்ட உங்கள் விரலை நீட்டாதிருந்தால் உங்கள் வீடு தேவனுடைய வீடாய் மாறும் என்பதில் சந்தேகமேயில்லை!**

*ஆம், நீங்கள் ஆதாமைப் போல் விரலை நீட்டாமல், "ஆண்டவரே, இச்சூழ்நிலையில் நிச்சயம் என்னிடம் ஏதாவது தவறு இருக்கக்கூடும். ஏனென்றால், நான் தேவனல்ல! நான் இன்னமும் இயேசுவைப் போல் மாறவில்லை. எனக்கு வாழ்க்கைத் துணையாய் இருப்பவரிடம் 99% தவறு இருந்து என்னிடம் 1% மட்டுமே தவறு இருக்கக்கூடும். நான் அந்த 1% தவறைக் காண்பதற்கு உதவிசெய்யும்" என்று தன்னை மாத்திரம் நியாயந்தீர்ப்பவர்களே தேவனுக்கு முன்பாய் நின்று ஜீவிப்பவர்கள். ஆ, இந்த வீடு "தேவனுடைய வீடாய்" மாறுவது அதிக நிச்சயமல்லவா!!*

*"அன்பு திரளான பாவங்களை மூடும்" என வேதம் கூறுகிறது. ஆனால் அநேக சமயங்களில் கணவன் மனைவிக்கிடையே பிரச்சனை உண்டாகும் போது இவர்களால் ஒருவர் மீதுள்ள* **ஒரு பாவத்தைக்**

கூட மூட முடிவதில்லை..... பின் எவ்வாறு இவர்கள் திரளான பாவத்தை மூடுவார்கள்? இதிலிருந்து இவர்களுடைய அன்பு ஒருவருக்கொருவர் எவ்வளவு இருக்கிறதென்பதை நாம் கண்டுகொள்ளலாம்! இதையெல்லாம் இவர்கள் ஒருவேளை வெளியே பேசாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் இருதயத்திற்குள் "குற்றம்சாட்டும் ஆவியை" ஒளித்து வைத்திருக்க முடியும்! இதுபோன்றவர்கள் தங்கள் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ விரோதமான "கடன் பத்திரத்தை" ஒவ்வொன்றாய் தங்கள் மனதில் அடுக்கி சேர்த்து வைத்துக் கொண்டேயிருப்பார்கள். ஏதாகிலும் ஒரு இக்கட்டான நிலை வரும்போது, சுமார் கடந்த இரண்டு மாதங்களாய் மறைத்து வைத்திருந்த கடன் பத்திரங்களை 'ஒவ்வொன்றாய்' எடுத்து தன் கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ வரிசையாய் காட்டுவார்கள்! உங்கள் வசந்த சோலையான வீடு பாலைவனமாய் மாறுவதற்கு இது போதாதா? நாம் விழிப்படையக்கடவோம்

3. **நாவின் "வெப்பம்" குடும்பத்தின் வசந்தத்தை வாடி வதங்கச் செய்துவிடும். குறிப்பாக, மனைவி தன் நாவில் கவனம் கொண்டுவிட்டால், அவள் குடும்பம் "வசந்தமாய்" மாறிவிடும்.**

உங்கள் வீடு பாலைவனமாய் மாறுவதற்குரிய அடுத்த காரணத்தை நீதிமொழிகள் 21:19-ல் வாசிக்கிறோம். "சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைக் பார்க்கிலும் வனாந்திரத்தில் குடியிருப்பது நலம்."

எப்போது பார்த்தாலும் சண்டை போடுகிற வீடு வனாந்திரத்தை விட மோசமானது என்றல்லவா வேதம் கூறுகிறது! மேலும் நீதிமொழிகள் 27:15,16-ல், "அடைமழை நாளில் ஓயாத ஒழுக்கு சண்டைக்காரியுமான ஸ்திரீயும் சரி. அவளை அடக்கப் பார்க்கிறவன் காற்றை அடக்கித் தன்னுடைய வலது கையினால் எண்ணெயைப் பிடிக்கப் பார்க்கிறான்" என்றும் வாசிக்கிறோம்.

அது, இது என்று.... எப்போது பார்த்தாலும் 'நொய்..... நொய்' என்றிருக்கும் மனைவி அடைமழையினால் கூரையிலிருந்து ஒழுகும் மழைத்துளிக்கு ஒப்பாயிருக்கிறாள். இந்த வீட்டில் படுத்திருப்பவர்கள் மேல் இந்த மழைத்துளி 'சொட்டு.... சொட்டாக' விழுந்து கொண்டேயிருந்தால் அவர்களால் எப்படி நிம்மதியாய் தூங்க முடியும்? இவ்வாறாகத்தான் எப்போதும் சண்டைபோடும் ஸ்திரீ இருக்கிறாள். ஒரு மனிதனால் காற்றை அடக்குவது எவ்வாறு கூடாததோ அதைப் போலவே இதுபோன்ற ஸ்திரீயை அடக்குவதும் ஒரு மனுஷனால் கூடாததேயாகும்!

இவ்வாறெல்லாம் ஸ்திரீகளைப் பற்றி நீதிமொழிகளில் ஏன் கூறப்பட்டிருக்கிறது? ஏனெனில் இவைகள் ஸ்திரீகளுக்கே உரிய வலிமையான சோதனைகளாகும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழும் ஸ்திரீ இக்குறிப்பிட்ட பகுதியை மிக கவனமாய் எடுத்துக்கொள்ளுவாள். இவையாவற்றிற்கும் ஸ்திரீயினுடைய நாவுதான் காரணம் என நீதிமொழிகள்.15:4 கூறுகிறது. "ஆரோக்கிய முள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்." ஆகவே, உங்கள் வீட்டை ஜீவவிருட்சம் விளையும் வசந்தசோலையாய் மாற்றப் போகிறீர்களா? அல்லது வனாந்திர பாலைவனமாய் மாற்றப் போகிறீர்களா? என்பது உங்கள் நாவில் அடங்கியிருக்கிறது என வேதம் தெளிவாய் கூறிவிட்டது.

ஆம், கோப வார்த்தைகளுக்கும், குற்றம்சாட்டும் வார்த்தை களுக்கும் தங்கள் நாவை அடக்காதவர்களின் நாவிலிருந்து "கோடை கால வெப்பக்காற்று" புறப்படுவதற்கே ஒப்பானதாகும். இந்தக் காற்று தோட்டத்திலுள்ள வசந்தத்தை முழுவதும் வாடிவதங்கும்படிச் செய்துவிடும்! இன்று இப்படித்தான் அநேகர் புத்தியில்லாதவர்களாய் தங்கள் சொந்த குடும்பத்தையே அழிக்கிறார்கள்!!

இதற்கு நேர்மாறாக இதே நீதிமொழிகள் 15:4-ம் வசனம் ஜீவ விருட்சத்தை உண்டாக்கும் "**ஆரோக்கியமான** நாவைக் குறித்து" கூறுகிறது அதாவது, இந்த நாவை உடையவர்கள் தங்கள் வார்த்தையினால் பிறருக்கு "சுகம் தருகிறார்கள்". இதனிமித்தமே தேவன் ஏதேன் தோட்டத்தில் "சுகம் தரும்" ஜீவவிருட்சத்தை வைத்திருந்தார். இதைப்போலவேதான் கணவனும் மனைவியும் உறவு கொண்டிருக்க வேண்டும். இவர்கள் இருவரும் சேர்ந்து தங்கள் குடும்பமாகிய தோட்டத்தின் நடுவில் ஜீவவிருட்சம் இருப்பதையே நாட வேண்டும். அதாவது, இருவருக்கும் "சுகம் தரும்" ஆரோக்கியமான நாவு இருக்க வேண்டும்!

இதைச் சற்று தியானித்துப் பாருங்கள். உங்கள் வீட்டில் யாரோ ஒருவர் பேசிய வார்த்தைகள் பிறருக்கு காயத்தை உண்டு பண்ணியிருக்கக் கூடும். இச்சமயத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் நாவை ஜீவ விருட்சத்திற்கேதுவாய் பயன்படுத்தப் போகிறீர்களா? அல்லது நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையானவர் பேசியது போலவே "அதே கடுஞ்சொல்லையும் காயப்படுத்தும் வார்த்தைகளையும்" பேசப் போகிறீர்களா? அப்படியானால் உங்கள் வீடு ஜீவவிருட்சம் கொண்ட வசந்தசோலையாய் ஒருக்காலும் மாற முடியாது! பார்த்தீர்களா,

*ஜீவவிருட்சமே இந்த ஆரோக்கியமுள்ள நாவுதான் என எழுதப்பட்டிருக்கிறதே!*

*இதற்கு மாறாக, உங்கள் நாவை அடக்காமல் "மாறுபாடு கொண்ட நாவாய்" நீங்கள் உபயோகித்தால், அது ஆவியை நொறுக்கும் என இவ்வசனம் கூறுவதைக் கவனியுங்கள். ஆம், தோட்டத்தில் முளைத்துக் கொண்டிருக்கும் ஜீவன் தரும் அரும்பு களையும், இளம் கிளைகளையும், மலர் மொட்டுக்களையும் உங்கள் மாறுபாடான நாவு நொறுக்கித் தாறுமாறாய் அழித்துவிடும்!*

*நாவைக் குறித்து கவனம் கொள்ளும் புத்திமதிகளை மனைவி மாத்திரமல்லாமல், கணவனும் இந்த புத்திமதிகளைத் தனக்குரியதாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், கொலோசெயர். 3:19,* "**புருஷர்களே,** *உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள் மேல்* **கசந்து கொள்ளாதிருங்கள்**" *என நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் புருஷர்களாகிய நீங்கள் கசப்பான வார்த்தையைப் பேசுவதை மாத்திரம் குறிப்பிடவில்லை. மாறாக, நீங்கள் உங்கள் இதயத்திற்குள்* **கசப்பாயிருப்பதையே** *இவ்வசனம் குறிப்பிடுகிறது. நீங்கள் ஒரு வார்த்தையும் பேசாமலே "கசப்பான ஆவி" கொண்டவர்களாய் இருக்க முடியும். இதைத்தான் எபிரெயர் 12:15-ல் "கசப்பான வேர்" என வேதம் குறிப்பிடுகிறது. இக்கசப்பு உங்கள் உதடுகளில் "கனிகளாய்" இன்னமும் தோன்றவில்லைதான்! ஏனெனில் இக்கசப்பு உங்கள் உள்ளத்தில் ஆரம்ப வேராக மாத்திரமே உள்ளது. உங்கள் மனைவி ஏதோ செய்த அல்லது பேசியவைகள் உங்கள் உள்ளத்திற்குள் கசப்பை உண்டு பண்ணியிருக்கக் கூடும். அல்லது "அவள் ஏன் இன்னமும் தன் பெற்றோர்களோடு பிடிப்பு கொண்டவளாய் இருக்கிறாள்" என்ற சிறிய கசப்பான எண்ணம் உங்கள் உள்ளத்தில் தோன்றியிருக்கக்கூடும். இவைகளை நீங்கள் பேசவில்லைதான். ஏனெனில் உங்கள் வீட்டில் வாக்குவாதமும் சண்டையும் உண்டாகக் கூடாதே என்ற எண்ணம் உங்களுக்குள் இருந்திருக்கலாம். ஆனால் "கசப்பின் வேர்" உங்கள் இருதயத்திற்குள் முளைத்துவிட்டதே!*

*இந்த வேர் அப்படியே இருந்துவிடும் என்று எண்ணுகிறீர்களா? நீங்கள் விரும்பாவிட்டாலும் கூட இந்த வேருக்கு சாத்தான் தண்ணீர் ஊற்றி அதை வளரச் செய்துவிடுவான். இவ்விதமாய் கசப்பின் வேரை செழித்து வளரும்படிச் செய்வதற்கு சாத்தான் எப்போதும் ஆர்வம் கொண்டவனாயிருக்கிறான். கசப்பின் வேரைக் களைவதற்கு நீங்கள் கவனம் கொள்ளாதபடியால்,*

திடீரென்று ஏதோ ஒரு நாளில் கசப்பான வார்த்தைகளோ அல்லது செய்கைகளோ உங்களிடமிருந்து வெளிப்பட்டுவிடும். இனி என்ன சம்பவிக்கும்? உங்கள் வசந்தசோலையில் முள்ளும் குருக்கும் விளைந்துவிட்டதைக் காண்பீர்கள், அவ்வளவுதான்!

தோட்டத்தைக் காத்துக் கொள்ளும்படியல்லவா தேவன் மனுஷனை உண்டாக்கியிருந்தார்? கணவன், மனைவியாகிய நீங்கள் உங்கள் தோட்டத்தை நாம் ஏற்கெனவே கண்ட முரட்டாட்ட ஆவிக்கும், குற்றம் சாட்டும் ஆவிக்கும், கசப்பான ஆவிக்கும் எதிராக உங்கள் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். இவையாவும் உங்கள் இருதயத்திற்குள் **தோன்றி முளைக்கும் போதே** நீங்கள் அதைப் பிடுங்கி எறிந்துவிட்டால் உங்கள் திருமண வாழ்க்கை வசந்த சோலையாக மலர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை!

**4. என் குடும்பம் "பாலைவனமாய்" மாறிவிட்டதே என ஏங்குவர்களுக்குத் தேவன் தரும் வாக்குத்தத்தம்!**

ஆயினும், உங்கள் திருமண வாழ்க்கை அதிக குழப்பத்திற்குள்ளாகி விட்டது போல் உணருகிறீர்களா? இங்கே சொல்லப்பட்ட புதிதும், ஜீவனுமான சத்தியங்களை நீங்கள் அறியாததால் உங்கள் தோட்டம் முழுவதும் முள்ளும் குருக்குமாக விளைந்து கிடக்கிறதா? இப்படிப்பட்டவர்களுக்கு தேவனுடைய வார்த்தையிலிருந்து இரண்டு வாக்குத்தத்தங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதலாவது, ஏசாயா 5:13-ல் "கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களை எல்லாம் தேறுதல் அடையச்செய்து, **அதின் வனாந்திரத்தை ஏதேனைப் போலவும்,** அதின் அவாந்திரவெளியை கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்" என்ற இந்த அருமையான வாக்குத்தத்தத்தை நீங்கள் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.

> **இவ்வசனத்தை நீங்கள் தேவனுக்கு முன்பாக வைத்து, "ஆண்டவரே! வனாந்திரத்தை ஏதேனைப் போலாக்குவேன் என வாக்குரைத்தீரே.... அந்த வாக்கின்படி என் வாழ்வின் முள்ளும் குருக்கும் விளைந்திருக்கும் வனாந்திரத்தை பெருமகிழ்ச்சி நிறைந்த கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும், ஏதேன் தோட்டத்தைப் போலவும் மாற்றியருளும்!!"**

என தேவனிடம் மன்றாடிக் கேட்டு ஜெபியுங்கள். இப்படியெல்லாம் நீங்கள் முன்பு ஆண்டவரிடம் கேட்டதில்லை. "இப்போது" கேளுங்கள்.... நீங்கள் நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள்!!

*உங்களுக்கு நான் காட்ட விரும்பும் மற்றொரு வாக்குத்தத்தம் எசேக்கியேல் 36:34-36 வசனங்களில் காணப்படுகிறது. ஆம். "பாழாக்கப் பட்ட தேசம் கடந்து போகிற* **யாவருடைய பார்வைக்கும் பாழாய் கிடந்ததற்குப் பதிலாக** *பயிரிடப்படும். பாழாய் கிடந்த இத்தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்று" பார்த்தீர்களா? இந்தத் தோட்டம் ஒரு அதிர்ச்சி தரும் திருமண வாழ்க்கையைக் கொண்டதாகும்! எப்படி யெனில் இவர்களுடைய குடும்ப வாழ்க்கையை (தோட்டத்தை) கடந்து சென்றவர்கள் கூட, இவர்களின் ஜீவியத்தில் சமாதானமற்று குழப்பத் தோடு வாழ்ந்ததை கண்ணாரக் கண்டிருந்தார்கள். அந்த அளவிற்கு அவர்களின் குடும்ப ஜீவியம் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் மிக மோசமானதொன்றாய் இருந்தது. இத்தனை மோசமான குடும்ப ஜீவியத்தையும் (தோட்டத்தையும்) தேவன் மீட்டுக்கொண்டு அதைச் சீர்ப்படுத்திவிட அவரால் முடியும்!! இப்போது இந்த வாக்குத்தத் தத்தையும் உங்களால் இறுகப் பற்றிக் கொள்ள முடியுமா? அப்படி யானால் நீங்கள் ஆண்டவரைப் பார்த்து,*

> **"ஆண்டவரே! நீர் வாக்குரைத்ததைப் போலவே என் குடும்ப ஜீவியத்தையும் (தோட்டத்தையும்) ஏதேன் தோட்டத்தைப் போல மாற்றியருளும்"**

*எனக்கேளுங்கள்..... நிச்சயம் பெற்றுக் கொள்வீர்கள்!*

**5. நம் குடும்ப ஜீவியம் வசந்தமாய் மாறும் செயலை தேவன்தான் நம்மில் பரிசுத்தாவியை அருளிச் செய்திட முடியும்!**

*இதுகாறும் வசந்தசோலையான தேவனுடைய தோட்டம் எவ்வாறு பாலைவனமாய் மாறிட முடியும் எனக் கண்டோம். ஆனால் இப்போது, ஒரு பாலைவனம் எவ்வாறு வசந்தசோலையாய் மாற முடியும் என்பதையும் நாம் காண வேண்டும். இந்த வலிய செயலை தேவன் உங்கள் குடும்பவாழ்வில் செய்திடும் பொருட்டு, "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே* **புதிதான ஆவியை** *கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத் திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன்" (எசேக்கியேல் 36:26) என தேவன் வாக்குரைத்திருக்கிறார். அதாவது "மணமானவர்களுக்கான ஆலோசனைகள்", "நல் வாழ்விற்கு வழி முறைகள்" என்றெல்லாம் விளக்கும் புத்தகங்களைப் படித்தால் உங்கள் குடும்ப வாழ்க்கை வசந்தசோலையாக மாறும் என தேவன் கூறவே யில்லை! ஆம்,* **பரிசுத்தாவியின் உதவியினால்** *மாத்திரமே அது சாத்தியமாகும். என தேவன் கூறிவிட்டார்!! ஆதியாகமம் 2:10-ம் வசனத்தில்*

"ஏதேனிலிருந்து ஒரு நதியோடியது" என வாசிக்கிறோம். இந்த நதிதான் ஏதேன் தோட்டத்தை எப்போதும் பசுமையாய் காத்துக் கொண்டது. இந்த நதி பரிசுத்தாவியையே சித்தரிக்கிறது. நம் குடும்ப வாழ்விலும் இதுதான் சம்பவிக்க வேண்டும்!

யாரெல்லாம் தங்கள் வனாந்திர குடும்ப ஜீவியத்தைக் தாங்களாகவே வசந்தசோலையாய் மாற்றிட முடியாது என்ற தங்கள் நிர்க்கதியை உணர்ந்திருக்கிறார்களோ அவர்களே பரிசுத்தாவியின் உதவியை நாடுவார்கள்.

**"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா" என நாம் சங்கீதத்தில் வாசித்திடும் வசனத்திற்கொப்பாகவே, "கர்த்தர் தோட்டத்தை உருவாக்க வில்லையென்றால், அதற்காக பிரயாசப்படும் நம்முடைய பிரயாசங்கள் விருதா" என நாம் கூறலாம்.**

ஆம், கர்த்தர் தோட்டத்தைக் காக்காவிட்டால், அதைக் காப்பவர்களின் பிரயாசங்கள் அனைத்தும் விருதா! இவ்வாறாக வாசிக்கும் நீங்கள் "உங்கள் நம்பிக்கையை இழக்கும்படி" நாங்கள் புத்தி சொல்லுவதாக எண்ண வேண்டாம். அவ்வாறெல்லாம் நம்பிக்கையை இழக்கச் செய்வது சாத்தானுடைய செயலேயாகும். அதற்கு மாறாக, நீங்கள் இங்கு காண்பது உங்களை விசுவாசத்திற்குள் நடத்தும் தேவனுடைய வாக்குத்தத்தமேயாகும்! விசுவாசம் கொண்ட யாவரும் இந்த வாக்குத்தத்தத்தை தங்களுக்கென்று சொந்தமாக்கி கொள்ள முடியும்!! அதைச் செய்யும்படிதான் தேவன் உங்களை அழைக்கிறார். இந்த அவருடைய மன ஏக்கத்தை எசேக்கியேல் 36:37-ல் "கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகம் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" என தேவன் கூறுவதை நாம் காண்கிறோம்.

இப்போது நாம் அவரிடம் என்ன கேட்க வேண்டும்? நாம் அவரிடம் சென்று, "ஆண்டவரே, நீர் இதைச் செய்வீர் என நாங்கள் விசுவாசிக்கிறோம். ஆகவே எங்கள் நம்பிக்கையை நாங்கள் இழக்கவில்லை." இவ்வாறு இஸ்ரவேல் ஜனங்கள் கூறும்படிக்கே தேவன் காத்திருக்கிறார். இதைத்தான் நாம் ஒருவர் பாக்கியில்லாமல் அனைவருமே செய்திட வேண்டும்.

**ஏனெனில் நம் குடும்ப உறவு எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இல்லையென்பது நம் யாவருக்கும் தெரியும்.**

“கிறிஸ்து சபையை நேசித்தது போல, நாம் மனைவியை நேசிக்க வேண்டும் ” என்ற உன்னத ஸ்தானத்தை இப்புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் ஒருவராகிலும் இன்னமும் அடையவில்லை. அதே போல “சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருப்பதுபோலவே, மனைவி தன் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்” என்ற ஸ்தானத்தையும் இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும் எந்த ஸ்திரீயும் இன்னமும் அடையவில்லை!

இவ்வாறு நாம் எல்லோருமே குறைவோடுதான் இருக்கிறோம். ஆகவேதான் நாம் எல்லோருமே நம்முடைய தேவையை தேவனிடம் ஒருமித்து அறிக்கை செய்ய வேண்டும்! “ஆண்டவரே, நீர் விரும்பு கிறதைப் போல, இதோ மிகுந்த தேவையோடு உம்மிடத்தில் வந்து இப்போது கேட்கிறோம்.... எங்கள் வனாந்திர குடும்ப வாழ்க்கையை மீண்டுமாய் ஏதேன் தோட்டத்தின் வசந்தமாய் மாற்றும்” எனக் கேட்க வேண்டும். இப்போது உடனடியாக ஆண்டவர் உங்களிடத்தில் என்ன சொல்லுவார் தெரியுமா? “உங்கள் விண்ணப்பத்தை நான் கேட்டேன்.... இதோ இப்போதே கல்லான இருதயத்தை உன் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு சதையான இருதயத்தை நான் கொடுக்கிறேன்” என்பதே அவர்தரும் வாக்குத்தத்தமாகும்!

ஆம், ஒருசமயம் பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, “மோசே விவாகரத்து செய்ய அனுமதித்தானே?” எனக் கேட்டார்கள். அதற்கு இயேசு பதில் கூறும்போது, “உங்கள் இருதய கடினத்தினிமித்தமே அப்படிச் செய்தான்” எனக் கூறினார். இதுதான் பழைய உடன் படிக்கையின் நிலைமையாய் இருந்தது. அந்நாட்களில் தேவன் தன்னுடைய கற்பனைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார். அவ்வாறு அவர் எழுதிய செயல் நமக்கு ஓர் உண்மையை எடுத்துக் கூறுவதாய் இருக்கிறது. அது என்னவெனில், “என் கற்பனைகளை இருதயத்தில் எழுதுவதைவிட கற்பலகைகளில் எழுதுவது எனக்கு மிகவும் எளிதாய் இருக்கிறது. அந்த அளவிற்கு உங்கள் இருதயம் கல்லைக் காட்டிலும் கடினமாயிருக்கிறது” என ஆண்டவர் கூறுவதுபோல் இருக்கிறது. இருப்பினும் புதிய உடன்படிக்கையில் நமக்கு கையளிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம் யாதெனில், “நான் என்னுடைய பிரமாணங்களை உங்கள் இருதயத்திலும் மனதிலும் எழுதுவேன்” என்பதேயாகும்!

பார்த்தீர்களா, பிரமாணங்களை நம்முடைய இருதயத்தில் எழுதும் செயலை **அவரே செய்து முடிப்பதாக** வாக்களித்திருக்கிறார். அதை

*தேவன் எவ்வாறு செய்து முடிப்பார்? ஆம், "நமக்குள் பரிசுத்தாவியையும், மென்மையான இருதயத்தையும் தந்தருளி" தன் பிரமாணங்களையும் நம் இருதயத்தில் எழுதுவார். இந்த மென்மையான புதுஇருதயத்தை பெற்றவர்கள் மாத்திரமே தங்களை மிகத் துரிதமாய் நியாயந்தீர்த்துக் கொள்வார்கள். இதுபோன்ற தன்னை நியாயந்தீர்க்கும் சமயங்களில்தான் தேவன் தன்னுடைய பிரமாணங்களை பரிசுத்தாவியின் மூலமாய் நம்மில் எழுதி முடிப்பார். இவ்வாறாகத்தான் ஒரு வனாந்திரம் ஓர் தோட்டமாய் மாறிட முடியும்!!*

**6. சிலுவை + கல்லறை = வசந்தசோலை! இதுவே தேவன் வசந்தமான குடும்பத்திற்கு ஏற்படுத்தியிருக்கும் வழி!!**

*வனாந்திர ஜீவியம் வசந்தம் மிக்க தோட்டமாய் மாறுவதற்கு தேவன் ஏற்படுத்தியிருக்கும் மிக முக்கியமான வழி, சிலுவையில் அறையப்படும் ஜீவியமேயாகும். இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது, "அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஓர் தோட்டமும், அந்தத் தோட்டத்தில்.... ஓர் புதிய கல்லறையும் இருந்தது." (யோவான் 19:41) என வேதம் குறிப்பிட்டுக் கூறுவதைக் கவனியுங்கள். இது எத்தனை அருமையானதோர் வசனம்! ஆம், நாம் மனப்பூர்வமாய் சிலுவையில் அறையப்பட ஒப்புக்கொடுக்குமிடத்தில்.... ஓர் தோட்டமும் இருக்கும்!! இயேசு நமக்காக சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியின் மூலமாய் "ஏதேன் தோட்டத்தின் மீட்சியை" அவர் ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும், "அந்த தோட்டத்தில் ஓர் புதிய கல்லறையும் இருந்தது" என்று வாசித்தோம். உங்கள் குடும்ப ஜீவியம் வசந்தமாய் மாறுவதற்கு இந்தக் கல்லறையும் அவசியமாயிருக்கிறது. நடந்துவிட்ட சில நிகழ்ச்சிகளை இக்கல்லறையில் புதைத்து.... கல்லைப் புரட்டி மூடிவிட்டு.... என்றென்றும் அவைகள் புதைக்கப்படுவதே இந்தக் கல்லறை நமக்கு கற்றுத்தரும் பாடம். உங்கள் திருமண உறவில் இந்தக் கல்லறை உங்கள் நடுவில் இருக்கிறதா? கல்லறையும், சிலுவையில் அறையப்படுதலும் எங்கு இருக்கிறதோ அங்கு தோட்டமும் இருக்கும்!*

*நாம் மேற்கண்ட வசனத்தை, உங்கள் குடும்ப ஜீவியத்திற்கு 'சீரியஸாக' பயன்படுத்த வேண்டுமென்று நான் உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். அதாவது, 1) சிலுவையில் அறையப்படுதல் 2) கல்லறை - ஆகிய இரண்டு முக்கியமான தேவன் ஏற்படுத்தியிருக்கும் வழிகள். கணவன், மனைவி ஐக்கியத்தில் நாம் சிலுவையில் அறையப்படும் ஜீவியத்தை நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும். நாம் விரும்புவதற்கு மாறாய் காரியங்கள் நடக்கும்போது, ஏற்ற சமயத்தில்*

உணவு தயாராகாமல் அதினிமித்தம் வேலைக்கு தாமதமாய் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் போது, துணிகள் துவைக்கப்படாமல்.... அப்படியே துவைத்திருந்தாலும் நான் விரும்பிய தரத்தின்படி துவைக்கப்படாமலிருப்பதைக் காணும்போது, இவ்வாறு ஏதாகிலும் தவறுகள் என்னைச் சுற்றி நடக்கும்போது, "ஆண்டவரே இச்சமயத்தில் நான் என் சுயத்திற்கு சாகட்டும்" எனக் கூறுங்கள்.

"மனைவி இருந்தும் சரியாய் 'அயர்ன்' பண்ணாத சட்டையைப் போட்டு வந்திருக்கிறாயே" என அலுவலகத்தில் உள்ளவர்கள் கூறும் போது, மனுஷருடைய கனத்திற்குச் சாகுங்கள்! என் அலுவலகத்தில் உள்ளவர்கள் நான் "அயர்ன் செய்யப்பட்ட சட்டையைப் போட்டிருக்கிறேனா இல்லையா" என கணிப்பதைக் காட்டிலும், நான் என் மனைவியுடன் கொண்டிருக்கும் **சுமுகமான உறவே** மிகவும் முக்கியமாகும். ஆகவே, இந்த இடத்தில் நான் சாக விரும்புகிறேன். இவ்வாறாக நீங்கள் சிலுவையில் அறையப்படும் இடத்தில் நிச்சயமாய் தோட்டம் உண்டாகியிருக்கும். அதேபோல், மனைவியராகிய நீங்கள் உங்கள் கணவரின் செயலைப் புரிந்து கொள்ள முடியாத நேரத்தில் "ஆண்டவரே எதுவாயிருந்தாலும் அவரே எனக்குத் தலையாய் இருக்கிறார். இப்போது என்னுடைய பங்காக நான் மரிக்கவே விரும்புகிறேன்" எனக் கூறுங்கள்........ அப்படியானால் அங்கு நிச்சயம் ஓர் தோட்டம் உண்டாகியிருக்கும்! நீங்கள் எத்தனையோ வழிமுறைகளைக் கையாண்டு தோட்டம் உண்டாகுவதை காண முடியாது இருந்திருக்கக் கூடும். ஆனால் இப்போது இயேசு கற்றுக் கொடுத்த மாதிரியை முயற்சி செய்து பாருங்கள். ஆம், அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஓர் தோட்டமும், ஓர் கல்லறையும் இருந்தது.

இந்தக் கல்லறையையும் நீங்கள் மறந்துவிட வேண்டாம். இங்குதான் கடந்த கால கசப்பான நிகழ்ச்சிகள் யாவும் புதைக்கப்படுகிறது. உங்கள் வீட்டிற்கு வருபவர்களிடம் அவைகளை நீங்கள் திறந்து காட்டாமல் நிரந்தரமாய் புதைக்கப்பட வேண்டும். உங்களில் ஒருவருக்கொருவர் தவறுகளைக் காணும்போது இந்தக் கல்லறைக்கு ஓடுங்கள்! அந்தத் தவறுகளை கல்லறைக்குள் தள்ளிவிட்டுப் புதையுங்கள்!! துரிதமாய் கல்லைப் புரட்டி மூடுங்கள்!! இவ்வாறு செய்வதற்கு கணவன், மனைவியாகிய நீங்கள் ஓர் நல்ல தீர்மானத்தை இன்றே எடுங்கள். ஆம், "என் கணவன் அல்லது என் மனைவி இழைத்த எந்தத் தவற்றையும் நான் உடனடியாக கல்லறையில் வைத்து நிரந்தரமாய் புதைத்துவிடுவேன்" என்ற தீர்மானம்!! இவ்வாறு

*கல்லறையில் புதைத்து நிரந்தரமாய் அவைகளை மூடி வைத்திருப்பீர்களென்றால், உங்கள் தோட்டம் செழித்து வளருவதை நீங்கள் காண்பீர்கள் என வேதவசனத்தின் ஆதாரத்தின்படி உங்களுக்கு நான் உறுதியளிக்கிறேன்!*

*கல்லறையின் நாற்றத்திற்குப் பதிலாய் பரிசுத்தாவியின் கனியாகிய அன்பு உங்கள் தோட்டத்தில் விளைந்து குலுங்கிவிடும். ஆவியின் திவ்விய சுபாவங்களுக்கு "கனி" என்றே பெயர் சூட்டப் பட்டுள்ளது. கனி, தொழிற்சாலையிலோ அல்லது அலுவலகத்திலோ வளருவதில்லை.... தோட்டத்திலேயே கனி வளருகிறது! நம் இல்லத்திற்கு இந்தத் தோட்டமே தேவையாய் இருக்கிறது. ஆவியின் கனியாகிய "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்...." ஆகிய ஆவியின் கனிகள் நம் தோட்டத்தில் பூத்துக் குலுங்குவதாக!!*

7. **என் குடும்ப ஜீவியம் "என் ஆண்டவர் மகிழ்ந்திடும்" வசந்தசோலையாய் இருந்திட வேண்டும்! என்பது ஒன்றே நம் ஒவ்வொருவரின் நோக்கமாய் இருக்கக்கடவது!!**

*இதுபோன்றத் தோட்டத்தை நீங்கள் பெற்றவுடன், நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் தோட்டத்தை உங்கள் சபையில் உள்ள மற்றவர்களுக்குக் காண்பித்து, "எங்கள் தோட்டத்தைக் கண்டீர்களா? என் மனைவியோடு நான் பெற்றிருக்கும் இணக்கமான ஐக்கியத்தைப் பாருங்கள்! அல்லது என் கணவர் என்மீது காட்டும் அன்பு சபையில் உள்ள எந்த கணவரைக் காட்டிலும் மேலானதாய் இருப்பதைப் பார்த்தீர்களா?" என உங்கள் தோட்டத்தை மற்றவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பேசுவீர்களென்றால், உங்களுக்கு ஐயோ! நீங்கள் தோட்டத்தைப் பெற்றதின் நோக்கத்தில் தவறிவிட்டீர்கள். தோட்டத்தைப் பெற்ற உங்களின் மனநோக்கமும், செயலும் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டுமென, உன்னதப்பாட்டு 4:12 வசனம் முதல் 5:1 வசனங்கள் நமக்குத் தெளிவாய் போதிக்கிறது. இங்கு தோட்டத்தைப் பெற்றிருந்த கணவன் அல்லது மணவாளன் தன் மனைவியை "நீ அடைக்கப்பட்டத் தோட்டம்" எனக் கூறிவிட்டு தொடர்ந்து கூறும்போது, "வாடையே எழும்பு! தென்றலே வா!..... என் நேசர் தம்முடையத் தோட்டத்திற்கு வந்து தமது அருமையான கனியைப் புசிப்பாராக" எனக் கூறி முடிக்கிறார். பார்த்தீர்களா, ஓர் இனிமையான தோட்டத்தைப் பெற்றதின் நோக்கம், அதே சபையில் உள்ள மற்றவர்களிடத்தில் காட்டி ஜம்பம் செய்வதற்கு அல்ல. மாறாக,*

"இந்தத் தோட்டம் என் ஆண்டவருக்காகவும், அவருடைய நாம மகிமைக்காகவும் மாத்திரமேயாகும்!!" என தாழ்மையுடன் ஆண்டவரிடம் சமர்ப்பிக்கவேயாகும்.

நாம் ஆண்டவரிடத்தில் நன்றியுடன் சென்று "ஆண்டவரே, எங்கள் திருமண வாழ்க்கை வனாந்திரமாய் இருந்ததைக் கண்டு நீர் ஏமாற்றம் அடைந்து, மனவேதனையும் கொண்டீர். இப்போதோ உம்முடைய கற்பனைகளை நாங்கள் 'சீரியஸாக' மனதில் வைத்து கைக்கொண்டபடியால் எங்கள் கணவன், மனைவி உறவு **நல்லதொரு தோட்டமாய் பூத்துக் குலுங்கிவிட்டது.** இந்தத் தோட்டத்தின் மகிமையை சபையில் உள்ள மற்றவர்களுக்குக் காட்டி அவர்களுடைய புகழ்ச்சியைப் பெற நாங்கள் ஒருக்காலும் முயலமாட்டோம். ஆனால், ஆண்டவரே நீர் எங்கள் தோட்டத்திற்குள் வாரும்! எங்கள் குடும்ப உறவின் நல்ல கனிகளை நீர் புசித்து திருப்தி கொள்வீராக! உமக்கே சதா மகிமை உண்டாகட்டும்!!" எனக் கூறுபவர்களாகவே இருக்க வேண்டும். இவ்வாறாக நாம் கூறிவிட்டால் அதைக் கேட்கும் ஆண்டவர் மன மகிழ்வுடன் பிரதியுத்தரம் செய்து, "என் மணவாளியே! உன் தோட்டத்திற்கு நான் வந்துள்ளேன். என் வெள்ளைப்போளத்தையும், என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன், தேன்கூட்டை உன்னோடு சேர்ந்து புசித்தேன்" எனப் பூரிப்புடன் கூறுவது மாத்திரமல்லாமல், அவர் தன் சிநேகிதரை அழைத்து "சிநேகிதரே புசியுங்கள். பிரியமானவர்களே.... குடியுங்கள்" என ஆர்ப்பரிப்போடு கூறிடுவார். ஆ, இது எத்தனை ஆச்சரியம்! ஓர் வசந்தமான குடும்ப ஜீவியத்தை வாஞ்சிக்கும் நம் முழு நோக்கமுமே, நம் ஆண்டவரின் இருதயத்தை மகிழ்வித்து திருப்திபெறச் செய்வதேயாகும்..... மாறாக, நம்மை நாமே பெருமையுடன் பிறருக்கு காட்டுவதற்காக அல்ல!

"என் இருதயத்தை மகிழச் செய்வார்கள்!" என்ற ஆண்டவரின் எதிர்பார்ப்பை இன்று எண்ணற்ற திருமண தம்பதிகள் ஏமாந்து போகச் செய்திருப்பதை தம்பதியராகிய உங்கள் கண்கள் கண்டுவிட தேவன் கிருபை செய்வாராக! அதினிமித்தமாய், "இனி குறைந்தபட்சம் நம்முடைய திருமண வாழ்விலாகிலும் வசந்தம் நிறைந்த தோட்டம் உருவாகி..... அதற்குள் நம் ஆண்டவர் இயேசுவை வரவழைத்து..... தோட்டத்தின் கனிகளை அவர் புசித்து, அதினிமித்தம் அவர் திருப்தி கொள்ள வேண்டும்" என்ற தீராத ஏக்கமே நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் நிறைந்திருக்கட்டும்!!

## 'இரு துருவம்' ஒரே சரீரமாகும் அற்புதம்

முதல் திருமணத்தை ஆதியில் தேவனே நியமனம் செய்தார்! இன்று திருமணமானவர்கள் இந்த பூமியில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை ஆதியில் நடந்த நிகழ்ச்சியைப் பின்னணியாகக் கொண்ட வேத வாக்கியங்கள் நமக்கு நேர்த்தியாய் போதிக்கின்றன.

சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும், மிருகங் களையும்..... ஆகிய அனைத்தையும் சிருஷ்டித்த பின்பு கடைசியாக மனுஷனை தேவன் சிருஷ்டித்தார் என ஆதியாகமம் 1:26,27 வசனங்கள் கூறுகிறது. தேவன் **தம்முடைய சாயலாக** மனுஷனை சிருஷ்டித்தார் என்றும், அவனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் என்றும் ஆதியாகமம் 1:27-ம் வசனம் கூறுகிறது.

மனுக்குலத்தின் வழித்தோன்றலாய் இருந்த அந்த முதல் திருமணத்தை தேவன் ஏற்படுத்தியபோது, அவர் உண்டாக்கின ஆதி தம்பதிகள் தம்முடைய சாயலிலும், தம்முடைய ரூபத்தின்படியும் இருக்க வேண்டுமென தேவன் விரும்பினாரே .... அப்படியானால், இங்கு **தேவசாயல்** எப்படி இருந்தது?

"தேவன் ஒருவரே" என்றே வேதம் நமக்குப் போதிக்கிறது. அவர் ஒன்றாய் இருந்தாலும் நித்திய காலம் துவங்கி 'மூன்று நபர்களாய்' இருக்கிறார்கள் என்றும் வேதம் கூறுகிறது. ஒன்றான மெய்தேவன், பிதா; குமாரன்; பரிசுத்த ஆவியாகிய மூன்று நபர்களாய் இருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்வதற்கு நம்முடைய மானிட அறிவிற்கு கடினமாகவே இருக்கிறது.




இவ்வாறு தேவத்துவத்தில் மூன்று நபர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை, நித்திய காலமாய் தேவத்துவத்தில் ஒருவருக்கொருவர் உள்ள அன்பின் உறவையே (Relationship of Love) நமக்குப் போதிக்கிறது.

தேவன் எவ்வாறு நித்தியமாய் இருக்கிறாரோ அவ்வாறாகவே அன்பும் நித்தியமாய் இருக்கிறது. ஆகவேதான் ஒரே நபராய் இருப்பதற்கு தேவனால் கூடாததாய் இருக்கிறது.

**அன்பு தன் நேசத்தைக் காட்டுவதற்கு யாராகிலும் ஒருவர் தேவையாக இருக்கிறது. ஆகவேதான் தேவத்துவத்தில் ஒரு நபருக்கு மேலாய் இருக்கிறார்கள் என்பதும் மாறாத உண்மையாயிருக்கிறது.**

அண்டசராசரத்தில் யாதொன்றும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாய் நித்தியத்தில் அன்பு இருந்தது! அந்த அன்பு தேவனுடைய சாயலில் "பிதா, குமாரன், பரிசுத்தாவி" ஆகிய மூன்று நபருக்குள் இருந்தது. ஆகவேதான் "நம்முடைய சாயலில் மனுஷனை சிருஷ்டிப்போம்" என தேவன் கூறியபோது, "அவர்களை ஆணும் பெண்ணுமாக" சிருஷ்டித்தார் என வேதம் பளிச்சென்று எடுத்துக் கூறுகிறது.

1. **தேவசாயலான "பிதா - குமாரன்" அன்பின் உறவை "கணவன் மனைவி" அடைவதே திருமண வாழ்வின் இலக்காகும்.**

இவ்வாறு ஆணும் பெண்ணுமாக சிருஷ்டிக்கப்பட்ட மனுவர்க்கத்தில், "நித்தியத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் பிதா - குமாரன் அன்பின் உறவும்" காணப்பட வேண்டுமென்பதே தேவனுடைய நோக்கமாயிருந்தது. இதைத்தான் தேவன் தம்முடைய சாயல் என்று கூறினார். அவருடைய சாயல் சரீரத்திற்குரிய ரூபம் அல்ல! ஏனென்றால் தேவன் ஆவியாய் இருக்கிறார். அவருக்கு ஒரு சரீரம் இல்லை. ஆகவே மனுஷன் தனியாய் இருந்தால் தேவனுடைய சாயல் அங்கு வெளிப்பட முடியாது. ஒருவன் தனியாய் இருக்கும்போது அன்பு நிச்சயம் வெளிப்பட முடியாது. அன்பிற்கு வேறொரு நபர் தேவை. இதனிமித்தமே தேவன் மனுஷனை "ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்." இந்த "ஆணும் பெண்ணும்" உறவு, பிதா- குமாரனின் நேச உறவிற்கு ஒப்பாய் இருக்க வேண்டுமென்பதே ஆதியில் சிருஷ்டித்த தேவனுடைய விருப்பமாய் இருந்தது. இந்த உறவு மிருகங்களுக்கு சாத்தியமில்லை. ஆம், தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனுக்கே இந்த **அன்பின் உறவு** சாத்தியமாய் இருக்கிறது.

தேவத்துவத்திலிருக்கும் உறவை 1கொரிந்தியர் 11:3 தெளிவாய் எடுத்துக் கூறுகிறது. இந்த வசனம் நமக்கு கற்றுத்தருகிறபடி, கிறிஸ்து ஒவ்வொரு புருஷனுக்கும் தலையாய் இருக்கிறார்.... ஸ்திரீக்கும் புருஷன் தலையாய் இருக்கிறான்.... கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய்

இருக்கிறார்! இவ்வாறு சரீரத்திற்கும், தலைக்கும் உள்ள உறவை இவ்வசனம் எடுத்துரைப்பதைக் காண்கிறோம். இதனிமித்தமாய் ஒரே சரீரமாயிருக்கும் நாம் இரண்டு நபர்களாய் இருக்கிறோம் என்பது பொருளல்ல. ஆனால், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் சத்தியமோ "**இரு நபர்கள் ஒன்றாயிருக்கும் ஒரு உறவையே**" சுட்டிக்காட்டுகிறது. அதாவது, குமாரனாகிய கிறிஸ்துவுக்கு பிதாவாகிய தேவன் தலையாய் இருப்பது போல, மனைவிக்கும் புருஷன் தலையாய் இருக்கிறான். ஆண்டவர் நமக்கு போதிக்கிறபடி "தலைக்கும் சரீரத்திற்கும் உள்ள உறவைப் போல்" நாம் யாவரும் ஒரே சரீரமாய் இருக்கவேண்டுமென்பதே தேவனின் உன்னத நோக்கமாகும்.

"தலைக்கும் சரீரத்திற்கும்" ஒருக்காலும் போட்டியிருப்ப தேயில்லை. அதேசமயம் தங்களில் ஒருவரை ஒருவர் பிரிந்திருப்பது போன்ற உணர்வும் ஏற்படுவதே இல்லை. நீங்கள் எங்கேயாவது ஒரு சரீரம் தலையைப் புறக்கணித்து விட்டு நடந்து செல்வதைக் கவனித்திருக் கிறீர்களா? இந்த அடிப்படையில்தான் பிதாவும் குமாரனும் ஒன்றாய் இருந்தார்கள். இயேசு இந்த பூமிக்கு வந்தபோது "பூரண ஒற்றுமையின்" சத்தியமாகிய "சரீரம்-தலை" உறவை நமக்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள உறவை நமக்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு புருஷனுக்கும் ஸ்திரீக்கும் உள்ள உறவை நமக்குப் போதித்து விட்டு, இதே உறவை கிறிஸ்துவுக்கும், விசுவாசிகளுக்கும் அல்லது சபைக்கும் உள்ள உறவை ஒரேவிதமாய் இணைத்தும் வேதம் போதிக்கிறது.

பிதாவாகிய தேவன், குமாரனாகிய கிறிஸ்து ஆகிய இருவரும் ஓர் ஆச்சரியமான நெருங்கிய உறவைக் கொண்டிருந் தார்கள். ஆம், இதைப் போலவேதான் கணவன் மனைவியாகிய இருவருக்குள்ளும் இருக்க வேண்டும்! நாம் சென்றடைய வேண்டிய இந்த இலக்கு ஓர் சொல்லி முடியா மகத்துவமான இலக்காகும்!!

ஆனால், ஒரு தம்பதியர் திருமணமாகும்போது நாம் இதுவரை கண்ட பிதா- குமாரன் உறவுக்கொப்பாய் ஐக்கியமாய் இருப்பதில்லை. ஏனெனில் இவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஓர் தனித்து வாழும் ஜீவியத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்ததே அதற்குக் காரணமாகும். **இப்போது திருமணத்தில் இணைந்திருக்கும்** இவர்களுக்கு முன்பாக, தேவன் தன் மனதில் கொண்டிருந்த மகத்துவமான இலக்கை அவர்கள் முன் வைக்கிறார்!

*"கீழ்படிந்திருத்தல் அல்லது அடங்கியிருத்தல்" என்பது எவ்வளவு அபகீர்த்தியானது என நாம் எண்ணுவது தவறு. சரீரமானது தலைக்கு மகிழ்ச்சியுடன் அடங்கிக் கீழ்படிவது, அதேபோல தலையானது தான் தலையாகத்தான் இருக்க வேண்டும் என்ற இச்சையற்று இருப்பது....... இதுபோன்ற, "தலை-சரீரத்திற்கொப்பாய்" கணவனும் மனைவியும் ஐக்கியம் கொண்டிருப்பது மெய்யாகவே ஓர் அற்புதமான உறவென்றே கூறவேண்டும். இந்த இலக்கை அடையும்படி நம்மில் அநேகர் சாதாரண விருப்பம்கூட கொண்டிருக்கவில்லை. இருப்பினும் இந்த இலக்கை அடையும்படி வாஞ்சிக்கும் ஜனங்களை தேவன் நம் தேசத்தில் அநேகரை எழுப்பிக் கொண்டு வருகிறார் என்பதை நான் ஆழமாய் விசுவாசிக்கிறேன்.*

*ஆகவே, "அடங்கியிருத்தல்" என்பதில் எவ்வித தாழ்வு மனப் பான்மையும் இல்லவே இல்லை! ஆம், ஸ்திரீயானவள் தேவனுடைய படைப்பில் தாழ்ந்தவள் அல்ல. தேவன் நித்தியகாலமாய் நிலைத்திருக் கிறார். இவ்வாறு நித்திய காலமாய் பிதாவும் குமாரனும் ஒன்றாயிருந்தாலும், குமாரனோ தானாகவே மனமுவந்து பிதாவுக்கு அடங்கியிருந்தார். எனவே கணவன் மனைவி இருவரும் சமமாயிருந் தாலும் மனைவியானவள் மனப்பூர்வமாய் அடங்கியிருத்தல் வேண்டும். அதாவது, தேவன் ஒரு ஸ்திரீக்கு நியமித்த ஸ்தானத்தை மகிழ்ச்சியுடன் ஏற்று அடங்கியிருத்தல் வேண்டும். இதுவே "தலை - சரீரம்" என்ற திருஷ்டாந்தத்தின் மூலமாய் தேவன் நமக்கு கற்றுத்தரும் பாடமாகும்.*

**2. கணவனும் மனைவியும் "தேவனைத் தங்கள் வாழ்வில் முதலாவதாக" கொண்டிருப்பதே திருமண வாழ்வின் மகிழ்ச்சிக்கு இரகசியம்.**

*தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்த போது அவர் முதலாவது ஆதாமை மண்ணிலிருந்தே சிருஷ்டித்தார். அதன்பின்பு, தேவன் ஆதாமுக்கு நித்திரையை வரப்பண்ணி, அவனுடைய 'விலா எலும்புகளில்' ஒன்றை எடுத்து ஏவாளை சிருஷ்டித்தார். இவ்வாறு தான் சிருஷ்டித்த ஸ்திரீயை தேவன் ஆதாமிடத்தில் கொண்டு வந்து கொடுத்தார் (ஆதியாகமம் 2:21-23).*

*இங்கு, ஆதாம் ஏவாளை சந்திப்பதற்கு முன்பாக அவன் ஏற்கெனவே தேவனை சந்தித்து அவரோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தான். ஆகவே ஆதாம் அறிந்திருந்த முதல் நபர் அவனுடைய மனைவியை அல்ல. தேவனையே அவன் முதலாவது அறிந்திருந்தான்! இவ்விதமாகவே ஒரு திருமணத்தில், புருஷன் முதலாவது தேவனையே அறிந்திருக்க வேண்டும்.* **அதன்பின்பு தான்,**

அவன் தன் மனைவியை அறிய வேண்டும். ஆம், புருஷனுக்கும் மனைவிக்கும் நடுவே தேவனே பிரதானமாய் இருத்தல் வேண்டும்! அப்படிப்பட்ட ஒரு திருமணம்தான் தேவனை மகிமைப்படுத்துவதாய் இருக்கும்.

ஆதாம் நித்திரையடைந்த பின்புதான் தேவன் ஸ்திரீயைப் படைத்தார்! தன்னுடைய எதிர்கால கணவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது இந்த ஸ்திரீயோ **முதலாவது** தேவனையே அறிந்திருந்தாள்! ஏனெனில் அவளை தேவன்தான் உருவாக்கினார்! இப்போது அவள் தன்னுடைய தேவனை அறிந்த பின்புதான், தன் கணவனை அறிந்து கொள்வதற்கு இரண்டாவதாக வருகிறாள்.

**எனவே, ஒரு திருமணத்தில் கணவன் மனைவிக்குள் நெருங்கிய ஐக்கியம் உருவாக வேண்டுமென்றால் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட நேசமே பிரதானமாக இருத்தல் வேண்டும்!! இதுவே ஓர் சிறந்த ஐக்கியத்திற்குரிய இரகசியமாகும்.**

இவ்வித ஐக்கியம் கணவன் மனைவியினிடத்தில் காணப்பட வில்லையென்றால், அவர்களில் ஒருவர் " இயேசுகிறிஸ்துவைத் தங்கள் வாழ்வில் பிரதானமான ஸ்தானத்தில் வைக்கவில்லை" என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறாக ஒரு கணவன் இயேசுகிறிஸ்துவுக்கே எல்லாவற்றிலும் முதலாவது இடத்தைத் தந்து எவ்விதத்திலும் தனக்கானதைத் தேடாமல் வாழ்ந்துவிட்டால்..... அதேபோல மனைவியும் இயேசுகிறிஸ்துவுக்கே முதலாவது இடத்தைக் கொடுத்து விட்டால்...... அவர்களுடைய திருமண வாழ்க்கை மகிமை நிறைந்ததாய் இருக்கும் என்று ஆணித்தரமான உத்தரவாதத்தை நாம் தந்திட முடியும்!! இதுபோன்ற திருமண வாழ்வும் "கோபமும் வாக்குவாதமும், சந்தேக உணர்வும் அற்ற" ஓர் தலைசிறந்த மண வாழ்க்கையாய் இருந்திட முடியும். இங்கு காரியம் என்னவென்றால் கணவன் மனைவியாகிய இருவரும் தங்கள் வாழ்வில் தேவனுக்குரிய முதல் இடத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்பதுதான்.

இவ்வாறு ஜனங்கள் தங்கள் ஜீவியத்தில் தேவனுக்கு முதலாவது இடத்தைத் தராததினால்தான் அவர்களை பிரச்சனைகள் வலைபோல் சூழ்ந்து வந்து சிக்கவைத்திருகிறது. உங்கள் திருமண வாழ்வில் ஏதாவது ஒரு பகுதியில் தோல்வி இருக்குமென்றால், நீங்கள் தேவனோடு ஒரு நல்ல உறவு வைத்துக் கொள்வதில் தோல்வியடைந் திருக்கிறீர்கள் என்பதே காரணமாகும்! இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவிடம்

*மீண்டுமாய் திரும்பி வாருங்கள்!! அவரே உங்கள் வாழ்வில் "முதலாவதாய்" இருந்திட தீர்மானித்து விடுங்கள், அதுபோதும்!!*

**3. "ஒன்றாயிருக்கும் ஐக்கியம்" வசனத்தின்படி தன் தகப்பனையும் தாயையும் விட்டு பிரிபவர்களுக்கே (தொப்புள் கொடி வெட்டப்படுதல்) உரியதாகும்.**

*மேலும், ஆதியாகமம் 2:24-ம் வசனத்தில் "புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்" என வாசிக்கிறோம். ஒரு மனிதன் (புருஷன்) தன் தகப்பனையும் தாயையும் விட்டுப் பிரிவது அவ்வளவு எளிதானதல்ல! சிறு பிராயத்திலிருந்தே சுமார் 25 அல்லது 30 ஆண்டுகள் வரை தகப்பனும் தாயும் அவனைப் பேணி வளர்த்து வந்தார்கள். இப்போதோ திடீரென்று ஒருநாளில் அவர்களை விட்டுப் பிரிய வேண்டும் என்று தேவன் கூறுகிறாரே!*

*அதேபோல "ஸ்திரீயானவள் தன் தகப்பன் வீட்டை மறக்க வேண்டும்" (சங்கீதம் 45:10) எனவும் வேதம் கூறுகிறது. இவ்வாறு புத்தி சொல்லும் தேவனுடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படியவில்லை யென்றால் உங்கள் திருமண வாழ்வு நிச்சயம் பிரச்சனை உள்ளதாகத்தான் இருக்கும். இதை வாசிக்கும் நீங்கள், "நான் என் பெற்றோர்களை கவனிக்கத் தேவையில்லை" என்ற இடத்திற்கு வந்துவிடாதீர்கள். நாம் நிச்சயம் நம் பெற்றோர்களை கவனித்து பராமரிக்கத் தான் வேண்டும். ஆனால் ஒருவன் தன் பெற்றோர்களிடத்தில் கொண்டிருந்த "எழுச்சி மிக்க பற்றுதல்" இப்போது துண்டிக்கப்பட்டு அந்த எழுச்சி கொண்ட பற்றுதல் மனைவியினிடத்திற்கு 'மாற்றுதல்' அடைய வேண்டும்.*

*இந்த சத்தியத்தை தாயின் வயிற்றிலிருந்து பிறந்திடும் குழந்தைக்கு ஒப்பிடலாம். குழந்தை பிறந்தவுடன் அதோடு "தொப்புள் கொடி" ஒட்டியிருக்கும். 9 அல்லது 10 மாதங்களாய் அக்குழந்தை இந்த தொப்புள் கொடியின் மூலமாகத்தான் தன் தாயிடமிருந்து உணவைப் பெற்றுக் கொண்டிருந்தது. இத்தனை மாதங்களாய் போஷித்து வந்த தொப்புள் கொடியை வெட்டுவது "கிரிமினல் குற்றம் போல்" நமக்குத் தோன்றலாம். ஆனால் அந்த தொப்புள் கொடியை வெட்டாவிட்டால்.... குழந்தை மரித்துவிடுமே!*

**அதேபோல கணவனுக்கும், அவன் தகப்பனுக்கும் இடையிலான 'தொப்புள் கொடி' வெட்டப்படாவிட்டாலும்..... குழந்தை (குடும்பத்தின் வசந்தம்) மரித்துவிடும்!**

*ஆனால் வேதம் சொல்லுகிறபடி கீழ்ப்படிந்து, தொப்புள் கொடியை வெட்டுகிறவனுடைய வாழ்க்கை மகிமை நிறைந்ததாய்*

இருக்கும் என்பதில் ஒரு துளியேனும் சந்தேகமில்லை. திருமணநாள் வரை உங்கள் ஜீவியத்தில் உங்கள் பெற்றோர்கள் பொறுப்புடன் பராமரிப்பது தேவ சித்தமேயாகும். ஆனால் இப்போதோ நீங்கள் உங்கள் மனைவியோடு ஒன்றாயிருக்க வேண்டுமென்றே “அதே” தேவனுடைய சித்தம் கட்டளை கொடுக்கிறது. இந்த அடிப்படை பிரமாணத்தை நீங்கள் உங்கள் திருமண வாழ்வில் கைக்கொண்டு விட்டால் உங்கள் வாழ்வு நிச்சயம் செழித்தோங்கும்!

ஆகவே, கணவனாய் இருக்கும் சகோதரனே உங்கள் மனைவியோடு ஒன்றாய் இசைந்திருப்பதற்கு நாடுங்கள். இந்த செயல் தானாய் நடந்துவிட முடியாது! இதற்கென நீங்கள் நிச்சயம் பிரயாசப்பட வேண்டும். இவ்வாறு ஒருவரையொருவர் பற்றிக் கொள்ளும் வாழ்க்கை வலிமையான “பெவிகால்” பசைக்கு ஒப்பான தாகும். இந்த பசை இரண்டு காகிதத்துண்டுகளை ஒன்றோடொன்று ஒட்டவைத்திருக்கும் போது, ஒரு பேப்பரை மற்றொன்றிலிருந்து பிரித்தெடுப்பது அதிக கடினமாகும்! இவ்விதமாகவே திருமண வாழ்விலும் இருவரும் ஒருவராய் மாறிவிட முடியும்!! ஒருகாலத்தில் இவர்கள் தனித்தனி இரண்டு பேராய் இருந்தாலும், இப்போதோ ஒன்றாய் இருக்கிறார்கள்! நாம் உவமானமாய் கண்ட ‘பெவிகால்’ பசையைப் போலவே இப்போது இயேசுகிறிஸ்து நம் மத்தியில் இருக்கிறார். ஆம், உங்கள் குடும்ப வாழ்க்கையில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுத்து அவரை உங்கள் வாழ்வின் மையத்தில் வைப்பீர்களென்றால், அவர் உங்கள் இருவரையும் ஒன்றாக்கி இணைத்துவிடுவார்!!

4. **“ஒவ்வொரு நாளும்” கணவன் மனைவியாகிய உங்கள் நடுவில் இயேசுகிறிஸ்து இருந்துவிட்டால், ஆண்டுகள் பல சென்றுவிட்டாலும் பிரிவு என்பதே ஏற்படாது.**

திருமணமாகி சில வருடங்களில் கணவன் மனைவி ஒருவருக் கொருவர் மரியாதையாய் பேசுவதில்லை! இவர்களின் சம்பாஷனையில் ‘பெருமை’ உட்பிரவேசிக்கிறது! தொனியில் ‘கடுமை’ ஒலிக்கிறது! ஒருவருக்கொருவர் ‘சத்தமாய்’ பேசிக்கொள்கிறார்கள்! சில வேளை களில் சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருக்கும் போது ஒருவருக்கொருவர் ‘கோபத்தைக்’ கொட்டிக் கொள்கிறார்கள்! இதெல்லாம் ஏன்?

சாப்பாட்டு மேஜைக்கருகில், உங்கள் நடுவில் இயேசு அமர்ந்திருந்தால் எப்படியிருக்கும் என்பதை யோசித்துப் பார்த்தீர்களா? பரிசுத்தமான தேவதூதர்கள் கூட உங்கள் நடுவில் இருக்கிறார்கள் என வேதம் கூறுகிறது. இப்போது நான் என் மனைவியிடம் சத்தம்

போட்டால்...... அது **முதலாவது** தூதர்களிடம் சென்ற **பின்பு** இயேசுவின் மூலமாய் (அதன் பின்பு தான்) என் மனைவிக்குச் செல்லுகிறது. இப்போது என்ன நடக்கும்? நீங்கள் உங்கள் மனைவியோடு பேசிய அநாகரீக வார்த்தைகள் தூதர்களை வெட்கத்திற்குட்படுத்தி, உங்கள் நடுவிலிருந்து அவர்கள் மெல்ல எழுந்து சென்று விடுவார்களோ என்று நான் வியக்கிறேன்! ஆனால் அதேசமயம் இவ்வாறு தூதர்களை வெட்கமடையச் செய்யாத குடும்பங்களையும் எண்ணிப்பாருங்கள்!!

ஆண்டுகள் பல சென்றாலும், இந்த நல்ல குடும்பத்தில் உள்ள கணவனையும் மனைவியையும் 'பெவிக்காலைப் போல' இயேசு ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறாரே? இது எப்படி? இவ்வுலகில் பாடுகளும், துன்பங்களும் எல்லோருக்கும் வருவது போலவேதான் இவர்களுக்கும் வந்தது! திருமணமான யாவரும் நிச்சயமாய் இவ்வுலகப் பாடுகளை கடந்து செல்லத்தான் வேண்டியிருக்கும். இதிலிருந்து ஒருவரும் தப்பிக்கவே முடியாது. ஆனால் **ஒரு தம்பதியினரின் நடுவில் இயேசு ஒவ்வொருநாளும்** இருப்பாரென்றால், எவ்வளவு தான் பாடுகள் இருந்தாலும் அந்தப் பாடுகளின் அழுத்தங்களின் மூலமாய் அவர்கள் இருவரையும் இன்னமும் நெருக்கமாய் இணைப்பதற்கே அப்பாடுகளை இயேசுகிறிஸ்து பயன்படுத்துவார்!! இந்த பாக்கியம் இயேசுவை தங்களுக்குள் **எப்போதும் நடுவில் வைத்து** வாழும் யாவருக்கும் உரியதாகும்.

உதாரணமாய், உங்கள் இருவருக்கும் ஏதோ வாக்குவாதம் ஏற்படுவதாய் எண்ணிக்கொள்ளுங்கள். திடீரென்று...... அச்சமயத்தில் யாரோ கதவைத் தட்டுகிறார்கள்! "அடடே...... என்னுடைய வாக்கு வாதங்களை வாசலில் நிற்பவர் கேட்டுவிட்டாரோ?" என்றுதான் நீங்கள் எண்ணுவீர்கள்!! நீங்கள் கதவைத் திறக்கும் போது அங்கு நீங்கள் அதிகமாய் மதிக்கும் கர்த்தருடைய ஊழியர் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். அவரைக் கண்டதும் உங்கள் மனது என்னவோ போலாகி "இவர் எங்களின் வாக்குவாதங்களைக் கேட்காதிருந்தால் நலமாயிருக்குமே!" என உங்கள் உள்ளம் இப்போது அங்கலாய்க்கிறதே!! இவ்வாறு கர்த்தருடைய ஒரு ஊழியக்காரன் உங்கள் நடுவிலிருக்கும் போது வாக்குவாதம் செய்யத் தயங்குவீர்களென்றால்..... இயேசுவே உங்கள் நடுவிலிருக்கும்போது நீங்கள் எவ்வளவு கவனமாய் இருப்பீர்களென் பதை யோசித்துப் பாருங்கள். அவர் உங்கள் படுக்கையறையின் நடுவில் இருக்கிறார், உட்காரும் அறையின் நடுவில் இருக்கிறார், உங்கள் சமையலறையின் நடுவில் இருக்கிறார்...... ஆகவே, வீட்டின் எந்த

இடத்திலும் கோபமோ, கசப்பான வார்த்தைகளோ, சத்தமாகத் திட்டும் தொனியோ ஒருபோதும் இப்போது கேட்பதேயில்லை!! இவ்வாறுதான் 'பெவிகால்' பசையைப் போல் இயேசு உங்கள் நடுவிலிருந்து உங்கள் இருவரையும் ஒன்றாக இணைக்கிறார். இதைத்தான் வேதம் "மனைவி கணவனோடுகூட (Heirs togather) நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்கள்" (1 பேதுரு 3:7) எனக் கூறுகிறது.

**5. மனைவியை செம்மையாய் காத்து நடத்த அறியாத கணவன் "சொந்த சரீரத்தைப்" பேணுவதற்கு அறியாதவன்.**

எபேசியர் 5:28-31 வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கணவன் மனைவி உறவை சற்று தியானித்துப் பாருங்கள். அவ்வசனங்களில் கணவனுக்கு மனைவி அவனுடைய சொந்த சரீரமாய் இருக்கிறாள் எனக் கூறப்பட்டிருக்கிறது. சொந்த சரீரத்திற்கு ஒருவன் என்ன செய்வான்? தன் சரீரத்தைப் போஷிக்கிறான், உடுத்துவிக்கிறான்..... இன்னமும், தன் சரீரத்தை ஒருவருக்கும் திறந்து காட்டவும் மாட்டான். இதேபோல்தான் நீங்களும் உங்கள் மனைவியின் பலவீனங்களை ஒருவருக்கும் காட்டவே கூடாது. தன் மனைவியின் பலவீனங்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறவன் ரோட்டில் **நிர்வாணமாய்** அலையும் பைத்தியத்தியத்திற்கே ஒப்பாய் இருக்கிறான்!! ஆம், தன் மனைவியின் நிர்வாணத்தை பகிரங்கப்படுத்தும் கணவர்கள்.... பைத்தியம் பிடித்த கணவர்கள்!! பின் என்ன? உங்கள் சரீரத்தையே உங்களால் மூடத்தெரியவில்லையே! மனைவியை எவ்வாறு மூடிக் காத்துக் கொள்வது என்பதை அறியாத நீங்கள் வெட்கத்திற் குரியவர்கள்!! எனவே தன் மனைவியை நேசிக்கிறவன் உண்மையாகவே தன் சொந்த சரீரத்தைத்தான் நேசிக்கிறான்.

யாரெல்லாம் தங்கள் முழு ஜீவியத்தையும் ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்திருக்கிறார்களோ அவர்கள் யாவருக்குமே இயேசு தலையாய் (தலைவராய்) வருகிறார். இதனிமித்தமே ஒரு புருஷன் "தகப்பனையும் தாயையும் விட்டுவிட்டு" வசனம் கூறுகிறபடி தன்னை அர்ப்பணம் செய்தவனாய் இருக்க வேண்டும். இவ்வாறு கிறிஸ்துவுக்கும் சபைக்கும் (விசுவாசிக்கும்) உள்ள உறவை, கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவாக சுட்டிக்காட்டி வேதம் அருமையாய் போதிக்கிறது.

மேலும், சொந்த சரீரத்திற்குரிய தலையாகவும் கணவன் ஒப்பிடப்பட்டிருக்கிறான். இவ்வாறு சரீரமாகிய தன் மனைவிக்கு "தலையாய்" வரும் கணவன் எவ்வித தலைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்? தலைமையை வகிப்பதில் பல ரகங்கள் உண்டு. கொடுங்

கோலாட்சி செய்பவனும், ராணுவ சர்வாதிகாரியும்கூட தலைவர்கள் தான்! இங்கு குடிமக்கள் யாரும் தாங்கள் விரும்பும் வழியை சுயாதீனமாய் தெரிந்து கொள்ள முடியாது. அப்படியே மீறிச் சென்றால், அவர்களை இராணுவத் தலைவன் அடித்து சிறைப்படுத்துவான்! இன்று இதைப் போலவே தான் அநேக கணவர்கள் தங்கள் மனைவிக்குத் தலைமை வகிக்கிறார்கள்.

ஆனால் வேதமோ "அருமையான தலைமையைப் பற்றி" கூறுகிறது. ஆம், தன் ஆடுகளை தலைமையேற்று நடத்தும் மேய்ப்பனுக்குரிய ஸ்தானமே இயேசு சுட்டிக்காட்டும் தலைமை ஸ்தானமாகும். இந்த சத்தியத்தை தற்காலத்தின்படி விளக்குவோமென்றால் "இசைக்குழுவை நடத்தும் தலைவனைப் போலவேதான்" இயேசு சுட்டிக்காட்டும் தலைவன் இருக்கிறான். தன் இசைக்குழுவை நடத்தும் இந்த தலைவன், இசைக்கருவிகளை வாசிக்கும் தன் குழுவைச் சார்ந்தவர்களின் தலையை பிரம்பினால் அடித்துக் கொண்டிருக்க மாட்டான். அதற்கு மாறாக, "வயலினைப்" (VIOLIN) பிழையாய் வாசிக்கிறவர்களைப் பொறுப்புடன் சுட்டிக்காட்டுவான். இப்படிப் பட்ட தலைவனின்கீழ் இப்போது இசைக்குழு இசைக்கும் போது அவை அத்தனை நேர்த்தியாய் பரலோகம் போல் இருக்கிறது.

ஆனால் அதேசமயம் தலைவனின் திருத்துதலை ஏற்க மறுக்கும் வயலின் வாசிப்பவன், "என்னைத் திருத்துவதற்கு நீ யார்? நான் விரும்புகிறபடிதான் இசைக்கருவியை மீட்டுவேன்!" எனக் கூறினால் இசைக்குழுவின் இராகம் தாறுமாறாகி விடும். இதைப்போலவேதான் சில மனைவியரும் இருக்கிறார்கள். "நீங்கள் சொல்லி நான் கேட்பதா? நான் விரும்பியபடிதான் நடந்து கொள்வேன்" என 'தலையாய்' இருக்கும் தன் கணவனிடம் கூறுகிறார்கள். இவ்வாறாக இருந்தால் இசைக்குழுவின் இராகம் தாறுமாறாய் போவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. உங்கள் கணவனை சரீரமாகிய உங்களுக்கு **"ஓர் ராணுவ சர்வாதிகாரியாய்" தேவன் நியமிக்கவே இல்லை!** ஓர் இசைக்குழுவை நடத்தும் நல்ல தலைவனாகத்தானே நியமித்திருக்கிறார். அதாவது, ஒரு மேய்ப்பன் தன் மந்தையை நடத்துவதற்கு ஒப்பாய் அவன் நடத்துகிறான். அவன் முன்சென்று நடத்தும் பாதையை மகிழ்ச்சியுடன் பின்பற்றிச் செல்லும் மந்தைக்கு ஒப்பாகவே மனைவியாகிய நீங்கள் இருக்க வேண்டாமா?

இதைப்போலவேதான் "ஆடுகளின் மேய்ப்பன்" எனப்படுவதற்கும் "ஆடுகளை வெட்டுபவன்" எனப்படுவதற்கும் பெருத்த

வித்தியாசம் உள்ளது. ஆடுகளை வெட்டுபவன் எப்போதுமே மந்தைக்குப் பின்பாக கையில் ஒரு கோலுடன் சென்று கொண்டிருப்பான். இதைப்போலவே புருஷன் தன் மனைவிக்கு இருந்துவிட முடியும். "ரோட்டை விட்டு இடதுபுறம் வந்துவிட்டாய்.... வாங்கிக்கொள் இந்த அடியை" அல்லது "ரோட்டை விட்டு வலதுபுறம் ஒதுங்கி வந்து விட்டாய்..... வாங்கிக்கொள் இந்த அடியை!" இவ்வாறாக அடித்து நீங்கள் மந்தையை ரோட்டில் சரியாகக் கொண்டு வந்து விடலாம். ஆனால் நீங்கள் மந்தையைக் கொண்டு வந்து சேர்த்த இடம் "கசாப்புக் கடைதான்!" என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆனால், உண்மையான மேய்ப்பனோ தன் மந்தைக்குப் பின்னால் அல்ல, அதற்கு முன்பாக நின்றுதான் நடத்திக் கொண்டிருப்பான். அவன் தன் மந்தையைப் பார்த்து, "இதோ உங்கள் யாவருக்கும் முன்பாகவும் மாதிரியான வாழ்க்கை வாழும் என்னைப் பாருங்கள்..... இப்போது என்னைப் பின்பற்றி வாருங்கள்" என்றே கூறுவான். இதுபோன்ற "தலைமை" எத்தனை அருமையாய் இருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட தலைமையைத்தான் இயேசு குறிப்பிட்டுக் கூறினார்.

இச்சமயத்தில், உங்கள் மனைவி ஆவிக்குரியவர்களாய் இல்லா விட்டால், தலைமையில் இருக்கும் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இவ்வேளையில் உங்கள் மனைவியை குறைகூறி இதுசரியில்லை அல்லது அதுசரியில்லை என, நாம் கண்ட கசாப்புக்காரனைப் போல் அவர்களை நடத்தலாம். அல்லது இதற்கு மாறாக, உங்கள் **மனைவியின் குறைகளை நீங்கள் தாங்கிக் கொண்டு,** அவைகளை மன்னித்து குறைகளைக் காணாததுபோல் நீங்கள் விட்டுவிடவும் முடியும்.

மேலும் நீங்கள் அவர்களுக்காக ஜெபிப்பது மாத்திரமல்லாமல், "ஆண்டவரே என் வீட்டில் என்னை ஒரு நல்ல மாதிரியாக நிலைத்திருக்கச் செய்யும்!" என உங்களுக்காகவும் ஜெபிப்பீர்கள். இது எத்தனை அற்புதமான காரியம்! இவ்வித உங்கள் பிரதிபலிப்புகளை பார்த்துக் கொண்டிருக்கும் உங்கள் மனைவி...... கேட்பதற்கு காதுள்ளவளாய் இருந்தால் உங்களை சில வருடங்கள் கழித்தாவது பின்பற்றுவாள். அப்படியே உங்கள் மனைவி பின்பற்றாவிட்டாலும், நீங்களோ **ஒரு நல்ல மாதிரியாய்** வாழ்ந்து உங்கள் பங்கை நிறைவேற்றிவிட நிச்சயமாய் முடியுமே!

**6. சரீரமில்லாமல் தலையில்லை! "ஒருவருக்கொருவர் முரண்பாடுகளை" எதிர்ப்பில்லாமல் ஏற்றுக்கொண்டு இணைந்து செயல்படுபவர்களே தேவனுடைய நோக்கத்தை குடும்ப ஜீவியத்தில் நிறைவேற்றி முடிப்பார்கள்.**

முக்கியமான காரியம் யாதெனில் தன் சரீரமாகிய மனைவி இல்லாமல் "தலை மாத்திரமே" தேவனுடைய திட்டத்தைத் தன் வாழ்வில் நிறைவேற்றிட முடியாது என்பதை கணவன் உணர்ந்திருக்க வேண்டும். நீங்கள் வெறும் தலையாக மாத்திரமே (சரீரமில்லாமல்) இருப்பதாக எண்ணிப்பாருங்கள்! பொதுவாக தலை என்பது "மூளையைத்தான்" பிரதானமாய் குறிக்கும். இந்த மூளைதான் சரீரத்தை செம்மையாய் 'கண்ட்ரோல்' செய்கிறது. இருப்பினும், சரீரமில்லாமல் தலை மாத்திரமே ஒரு வீட்டில் இருந்தால் அது எப்படி இருக்கும்? அந்த தலையில் (மூளை) ஏராளமான திட்டங்களும், புத்திக்கூர்மையும் இருந்தாலும், அவைகளை நிறைவேற்றி முடிப்பதற்கு ஒரு சரீரம் இல்லையென்றால் எந்த பிரயோஜனமும் இல்லை. இதைப்போலத்தான் பிதாவும் பரமண்டலங்களில் வீற்றிருந்தார்! ஆனால் அவருக்கு இந்த பூமியில் இயேசு கிறிஸ்துவாகிய ஒரு சரீரம் இல்லையென்றால், ஒன்றையும் அவர் நிறைவேற்றியிருக்க முடியாது. எனவே ஒரு பூரண நிறைவேறுதலுக்கென்ற தேவன் மனுஷனுக்கு மனைவியைக் கொடுத்திருக்கிறார் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

இதற்கு உதாரணமாய் ஒரு "முட்டைக்கூடு" (Egg-Shell) ஒரு திருஷ்டாந்தமாய் இருக்கிறது. அக்கூட்டை உடைத்து, உடைந்த கூட்டின் இருபகுதிகளையும் சற்று கவனித்துப் பாருங்கள். **அவைகள் இரண்டும் ஒரே விதமாய் இருப்பதில்லை.** ஆனால் நீங்கள் அவைகளை இணைக்கும் போது மிக நேர்த்தியாய் பொருந்தி பூரண வடிவவைத் தருவதைக் காணலாம். பார்த்தீர்களா, ஒரு பாதி கூட்டின் விளிம்பு நீண்டு கொண்டிருந்தல் அடுத்த பாதியோ குழியாயிருக்கும்! ஒரு கூட்டின் பாதி குழியாயிருந்தால் அடுத்த பாதியின் விளிம்பு பகுதியோ நீட்டிக் கொண்டிருக்கும். இவ்வாறு ஒன்றுக்கொன்று எதிர்மறையாய் இருந்தாலும் அவைகள் நேர்த்தியாய் இணைவதைக் காணமுடியும்.

இதைத்தான் ஆதியாகமம் 2-ம் அதிகாரம் ஏவாளை ஆதாமிற்கு "ஏற்ற துணை" (Suitable Helper) என அருமையாய் குறிப்பிடுகிறது.

> **தேவனுடைய பார்வையில் ஏற்ற துணையாய் இருப்பது நாம் மேலே கண்ட இருபாதியான முட்டைக்கூட்டின் விளிம்புபோல் ஒன்றுக்கொன்று முரணாகத்தான் இருக்கும்!**

இந்த திருஷ்டாந்தத்தின்படி கணவன் பெலஹீனமாய் இருக்கும் பகுதியில் மனைவியோ பெலமுள்ளவளாய் இருப்பாள்! கணவன் கடினமானவனாய் இருந்தால் மனைவியோ சாந்தமும், மென்மையுமாய் இருப்பாள்! ஒருவேளை...... மனைவியும் கரடுமுரடாய் இருந்தால் அந்த வீட்டிற்குள் ஒருவருமே பிரவேசிக்க முடியாதே!! இவ்வாறு தேவன் நேர்த்தியாய் இணைத்திருப்பதை உங்களால் காணமுடிகிறதா? பூரண வடிவத்திற்கு இவர்கள் இருவருமே தேவைப்படுகிறார்கள். கண்டிப்புடன் நடக்கும் ஒருவர் இருந்தால், தயை காட்டும் ஒருவரும் இருக்க வேண்டும்!

ஆதாம் மாத்திரமே தேவனுடைய சாயலை பிரதிபலித்திட முடியாது. ஆகவேதான் தேவன் ஏவாளை சிருஷ்டிக்க வேண்டியதாய் இருந்தது. எத்தனையோ விஷயங்களில் என்னுடைய மனைவி இல்லாமல் நானாக ஒன்றை நிறைவேற்றி முடிப்பது கடினம். ஆகிலும், தேவனோ ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதுபோல் தோற்ற மளிக்கும் துணையாய்தான் நமக்குத் தருகிறார். ஒருவேளை இரண்டு பகுதியையும் நீங்கள் சமப்படுத்த முயற்சித்தால்...... முட்டைக்கூடு ஒருக்காலும் நேர்த்தியாகப் பொருந்தாது!

**ஆகவே உங்கள் மனைவியை உங்களைப் போலவே மாற்றுவதற்கு முயற்சிக்காதீர்கள். அப்படிச் செய்தால் நீங்கள்தான் No 1 முட்டாளாக இருக்கமுடியும்!**

அதேபோல் மனைவியரே, உங்கள் கணவரை உங்களைப் போலவே மாற்றுவதற்கு முயற்சிக்காதீர்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் நீங்களும் No1 முட்டாள்தான் என்பதை மறக்காதீர்கள். ஆம் இருபாதியான முட்டைக்கூட்டை சமமாக உரசிவிட்டு அதை ஒன்றாக இணைக்கப் பார்ப்பவர்கள் முட்டாள்கள் என்பதை யாவரும் ஒத்துக் கொள்வார்கள்.

உங்களுக்கு ஏற்ற துணையாய் இருக்கும்படிக்கு அல்லது உங்களுக்கு உதவும்படிக்கே தேவன் மனைவியை உங்களுக்குத் தந்திருக்கிறார். நீங்கள் காணமுடியாத ஒரு கோணத்தை உங்கள் மனைவியால் பார்த்திட முடியும். அவர்கள் கண்ட திசை நீங்கள் கண்ட திசைக்கு நேர் எதிராக இருக்கக்கூடும். இதற்காக நீங்கள் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கவே வேண்டும்!

**நீங்கள் காண முடியாததை உங்கள் மனைவியும், உங்கள் மனைவி காண முடியாததை நீங்களும் காண்பது எத்தனை அருமையானது!! வாழ்க்கைக்கு "ஏற்ற துணை" என்பதின் அர்த்தம் இதுதான்.**

*கணவன் மனைவியாகிய உங்களில் இயற்கையான குணாதிசயங்கள், நீங்கள் வளர்க்கப்பட்ட விதங்கள்..... போன்ற யாவும் ஒன்றுக்கொன்று முரணாய் இருக்கும்படியே தேவன் அனுமதிக்கிறார். இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான "இருபாதியான முட்டைக் கூட்டையே" ஒன்றாய் இருக்கும்படி நேர்த்தியாய் இணைக்கிறார் என்ற சத்தியத்தை இன்று அநேகர் அறியவில்லை! ஆகவே, திருமணமான தம்பதியருக்கு வரும் முதல் பிரச்சனை* **இந்த முரண்பாட்டு** *அடிப்படையில் தான் வருகிறது என்பதை நாம் உணர்ந்திருக்க வேண்டும்!*

*உதாரணமாய், உங்களில் ஒருவர் எல்லா பொருட்களையும் அந்தந்த இடத்தில் வைத்து, துணிமணிகளை ஒழுங்காகத் தொங்கவிட்டு, அடுக்கி வைப்பவராய் இருக்கக்கூடும். ஆனால் உங்களுடைய வாழ்க்கைத் துணையோ, பொருட்களை கண்ட இடத்தில் வைப்பதும், துணிமணிகளை அங்குமிங்கும் இரைந்து போடுபவராயும் இருக்கக்கூடும். இதைக் கேட்கும் நீங்கள் "நேர்த்தியாய் அடுக்கி வைப்பவர்தான் சரியானவர்!" என சொல்லக்கூடும். ஆனால் துணிமணிகளை இரைந்து போடுபவரின் பெலவீனத்திற்கு ஒப்பாகவே, துணிமணிகளை நேர்த்தியாய் அடுக்கி வைப்பவரிடத்திலும் வேறுவிதமான பெலவீனங்கள் இருக்கத்தான் செய்யும். ஆகவே இவர்களுக்கு ஒருவரை ஒருவர் தாங்கும்படியான சந்தர்ப்பங்கள் ஏராளமாய் கிட்டுகின்றன.*

*உங்களில் ஒருவர் தன் பொருட்களையும், துணிமணிகளையும், செருப்பையும் தாறுமாறாய் இரைந்துபோட்டால் என்ன? நேர்த்தியாய் வைத்திருக்கப் பழகியிருக்கும் நீங்கள் தாறுமாறாய் கிடப்பவைகளை ஒழுங்காக அடுக்கி வைக்கலாமே! அதேபோல வீட்டிற்கு வருபவர் களிடத்திலெல்லாம் உங்கள் கணவர் சண்டைபோடும் பெலவீனராய் இருக்கக்கூடும். இப்போது இவருக்கு மனைவியாய் (வாழ்க்கைத் துணையாய்) இருக்கும் நீங்கள், உங்கள் கணவர் பகைத்தவரிடம் இனிதாய் பேசி அவர்களை சிநேகிதர் ஆக்கலாமே! இவ்வாறு எத்தனையோ விஷயங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்க முடியும். இச்சூழ்நிலைகளில் நீங்கள் ஒருவருக்கொருவர் ஏற்ற வாழ்க்கை துணையாய் இருந்து ஒருவருக்கொருவர் சுமுகமான உறவுடன் வாழலாமே! இவ்வாறு நீங்கள் இருவருமாய் சேர்ந்து உங்கள் இல்லத்தில் தேவனுடைய சுபாவத்தைப் பிரதிபலித்திட முடியுமே!!*

*இவ்வுலகில் கிரியை செய்வதற்கு இயேசுவிற்கு கூட ஒரு சரீரம் தேவையாய் இருந்தது என வாசிக்கிறோம்.*

**அவ்வாறிருக்க, இன்றோ சில கணவன்மார்கள் “என் மனைவி எனக்கு ஒரு பொருட்டு அல்ல, அவள் இல்லாமலே எல்லாவற்றையும் நானே செய்துவிடுவேன்” என கூறுகிறார்கள். இவையாவும் அவர்களின் மதியீனத்தையே காட்டுகிறது!**

*“தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் கிறிஸ்து” மற்றும் ஓர் மாதிரியை வைத்துப்போனார். அந்த மாதிரி என்னவெனில் சீஷர்களின் கால்களை இயேசு கழுவியதுதான்! இவ்வாறு கிறிஸ்து காண்பித்த மாதிரியின்படியே* **ஒரு கணவன்** *தன் மனைவிக்கு ஊழியம் செய்திட ஆயத்தமாயிருக்க வேண்டும். இந்த உண்மையைத்தான் யோவான் 12:13 கூறுகிறது. தன் மனைவியின் சரீரத்தில் ஏதேனும் பெலஹீனம் ஏற்பட்டாலும் அல்லது அவளுடைய உணர்வுகள் எந்த ஒருவகையில் பாதிக்கப்பட்டிருந்தாலும்..... தன் மனைவியின் கால்களை கழுவுவதற்கு (ஒப்புரவாவதற்கு) கணவன் ஆயத்தமாயிருக்க வேண்டும்.*

*தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் உறவு பிளவுபட்ட போது அப்பிளவை சரிசெய்வதற்கு முதல் அடியை எடுத்து வைத்தது யார்? தேவனா அல்லது மனுஷனா? ஆம், தேவன்தான்! ஆகவே எப்போதெல்லாம் கணவன் மனைவியாகிய உங்கள் உறவில் பிளவு தோன்றுகிறதோ அப்போது அவ்வேளையில் யார் அந்த இழந்த உறவை மீட்பதற்கு முனைய வேண்டும்? ஆம், கணவனாகிய நீங்கள்தான் இழந்த உறவை சீர்திருத்தவேண்டும்! ஏனெனில் கணவனே சரீரத்திற்கு தலையாய் இருக்கிறான்.*

*இவ்வாறாகவே, இயேசுவும்* **தலையாய்** *இருந்தபடியால் மனுஷனுக்கும் தேவனுக்கும் உள்ள உறவை மீட்டுத்தரும் பொறுப்பைத்* **தானே ஏற்றுக்கொண்டார்.** *எனவே கணவனுக்கும் மனைவிக்கும் பிரச்சனைகள் வரும்போது கணவன்தான் தன்னைத்தானே தாழ்த்தி மனைவியிடம் “நான் வருந்துகிறேன் என்னை மன்னித்துக்கொள்!” எனக் கூறவேண்டும். உங்களால் அவ்வாறு கூற முடியவில்லையென்றால் நீங்கள் தலையாய் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். ஒருவேளை உங்கள் வீட்டில் நீங்கள் சர்வாதிகாரியாக இருக்கலாம்..... அவ்வளவுதான்! நீங்கள் “நானும் இயேசுவைப்போல் தலையாய் இருக்கிறேன்” எனக் கூறுவதின் பொருளை ஒருதுளியும் அறியவில்லை. ஒருவேளை சொல்லலாம், “எல்லாம் அவளுடைய பிழைதான்!” இவ்வாறு நீங்கள் கூறியதைப் போலவே இயேசுவும் சொல்லியிருப்பாரென்றால் நித்தியகாலமும் வானத்திலிருந்து சொல்லிக்கொண்டேயிருக்க முடியும். முழுக்க முழுக்க ஜனங்களுடைய பாவம்தான்! அதனாலென்ன?*

இயேசுவோ தன்னைத் தானே தாழ்த்தி ஒப்புரவாகும்படி ஜனங்களிடத்தில் இறங்கி வந்து விட்டாரரோ?! பார்த்தீர்களா..... இதுபோன்ற தலைமையைத்தான் கணவன் தன் குடும்பத்தில் அப்பியாசப்படுத்த வேண்டும்.

மனைவி "பெலஹீன பாண்டம்" என்றும் கணவன்தான் பெலமுள்ளவன் என்றும் வேதம் கூறுகிறது. ஆகவே, கோபம் கொண்டு புண்படுவதற்கு மனைவி ஒருவேளை அனுமதிக்கலாம். ஆனால் "நீங்களோ" ஒருக்காலும் அவ்வாறு இருக்கக்கூடாது. இவ்வாறு நீங்கள் இல்லையென்றால், நீங்களும் பெலஹீனமான பாண்டம்தான், பலமுள்ள பாண்டமல்ல! அதாவது, நீங்கள் புருஷனாய் இருந்தாலும் ஒரு ஸ்திரீயைப் போலதான் இருக்கிறீர்கள்!! மெய்யாகவே நீங்கள் புருஷராய் இருந்தால், உங்கள் பெலனை.... உங்கள் புருஷத்துவத்தை, மனைவி கோபம் கொண்டிருந்தாலும் நீங்களோ ஒருபோதும் கோபம் அடையாதிருந்து நிரூபித்துக் காட்டுங்கள். இதுதான் புருஷத்துவம்! ஆகவே இனிவரும் நாட்களில் நம்மைநாமே வெறுப்பதற்குத் துரிதமாய் பழகிக்கொள்ள வேண்டும்.

**7. கணவன் "மேய்ப்பனாய்" இருக்கும்போது மனைவி அடங்கி ஜீவிக்கும் "ஆட்டைப் போல்" இருந்து விட்டால் இதுபோன்ற மனைவி ஒரே சரீரமாய் தேவனுடைய நோக்கத்தை தன் குடும்பத்தில் செய்து முடிப்பாள்!**

அடுத்ததாக ஸ்திரீயைக் குறித்தும் வேதம் கூறுவதைக் காண்கிறோம். சபை கிறிஸ்துவுக்கு கீழ்படிந்திருக்கிறதைப் போலவே மனைவியும் தன் சொந்த புருஷனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும். (அடங்கியிருக்க வேண்டும்) என வேதம் கூறுகிறது. யோவான் 14:15, 16 வசனங்களில் "நீங்கள் என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என இயேசு கூறினார். இவ்வசனத்தின் பொருள் என்னவெனில், அன்பினிமித்தமேயல்லாமல், அடிமைத்தனத்தினால் இயேசுவுக்கு கீழ்படிய நாம் அழைக்கப்படவில்லை. ஒரு மனைவி, "என்ன செய்வது, நான் என் கணவனுக்கு அடங்கியிருந்து கீழ்படிய வேண்டியிருக்கிறதே" என சொல்லுவாளென்றால் அதில் ஒரு பிரயோஜனமும் இல்லை! அன்போடும், மகிழ்ச்சியோடும் தன் கணவனுக்கு கீழ்படிந்திருப்பதே ஒரு ஸ்திரீக்கு மகிமையாயிருக்கும். இவ்வாறு அடங்கியிருப்பது ஸ்திரீக்கு என்று தரப்பட்ட உன்னத அழைப்பாகும். இங்குதான் "**முரட்டாட்டத்தின் ஆவியை**" சாத்தான் கொண்டு வர முயற்சிக்கிறான். உதாரணமாக, இன்று அநேக பெண்கள் புருஷர்களைப் போலவே "பேண்டும், கூந்தலை வெட்டிக் கொண்டு கிராப்பும்" வைத்துக் கொள்கிறார்கள். இது என்ன? ஆம்,

அவர்களிடம் காணும் முரட்டாட்டத்தின் ஆவியையே இது வெளிப்படுத்துகிறது! இவ்வாறு புருஷனைப் போலவே ஸ்திரீயும் உடுத்துகிறபடியால், அவள் மறைமுகமாய் செய்யும் அறிக்கை யாதெனில்,"நான் சரீரமல்ல.... புருஷனுக்குச் சமமானவள்" என்பதுதான்!!

இன்று உத்தமமான சபையிலிருக்கும் நாம், வெளிச்சம் பெற்றிருக்கிறபடியால், "இது என்ன? ஆடவனைப்போல் பேண்டும், கிராப்பும் வைத்துக்கொள்வது மதியீனமான செயல்" எனக்கூறலாம். ஆனால், வீட்டில் உங்கள் கணவனுக்கு எதிராய் முரட்டாட்டம் செய்கிறீர்களே? உங்கள் கணவனை எதிர்த்துப் பேசுகிறீர்கள்..... மரியாதையில்லாமல் சத்தமிடுகிறீர்கள்..... இப்போது சொல்லுங்கள் "பேண்டும் கிராப்பும்" வைத்திருக்கும் ஸ்திரீயைக் காட்டிலும் நீங்கள் மேலானவர்களா? நிச்சயமாய் இல்லை! இன்னும் சொல்லப்போனால் உங்கள் நிலை அந்தப் பெண்ணைக் காட்டிலும் மோசமானதாகும். ஏனென்றால், அந்த ஸ்திரீ தான் உலகத்திற்குரியவள் என்பதை வெளிப்படையாகவே காண்பிக்கிறாள்! ஆனால், நீங்களோ "நீண்ட கூந்தலும், சேலையும் உடுத்தி" ஆட்டுத்தோலிற்கு கீழாய் உங்கள் லௌகீகத்தைத் தந்திரமாய் மறைத்து வைத்திருக்கிறீர்கள்! உங்கள் முரட்டாட்டம் உங்களுக்குள் மறைவாய் ஒளிந்திருக்கிறது!! எனவே அடுத்த தடவை "பேண்டும் கிராப்பும்" உடைய ஸ்திரீயைக் கண்டு அவர்களை குறைகூறுவதற்கு முன்பாக உங்களை நீங்களே கீழ் கண்டவாறு கேட்டுப்பாருங்கள். "நான் பேண்ட் அணிவதில்லை என்ற கனத்தைப் பெற்றுக்கொண்டு, ஆட்டுத்தோலின் கீழாய் முரட்டாட்டத்தின் ஆவியை ஒளித்து வைத்திருக்கிறேனா?" இந்த வேளையில் மனைவியாகிய உங்கள் யாவருக்கும் நான் புத்திசொல்வது யாதெனில், "தலையாய் இருக்கும் உங்கள் கணவனுக்கு மகிழ்ச்சியுடன் கீழ்படிந்திருங்கள்!" இதுவே ஒரு மனைவிக்கென்று தேவன் நியமித்த உன்னத ஸ்தானமாகும்.

இயேசு இந்த பூமிக்குரிய பெற்றோர்களாகிய யோசேப்பிற்கும், மரியாளுக்கும் கீழ்படிந்து அடங்கியிருந்தார் அவ்வாறு அடங்கி யிருந்தது, அவருடைய பெற்றோர்கள் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்றவர்கள் என்பதற்காக அல்ல.... **"தேவன் சொன்னார்" என்பதற்காகவே** அடங்கியிருந்தார்! வேதம் நமக்கு காட்டுகிறபடி, கணவன் ஒரு மேய்ப்பனைப் போலவே காணப்படுகிறான். ஆகவே, அவனுக்கு கீழாய் இருக்கும் மனைவி, ஒரு ஆட்டைப் போல இருந்து தன் கணவனாகிய மேய்ப்பனைப் பின்பற்றிச் செல்லவேண்டும்! இவ்வாறு அடங்கியிருப்பதே ஒரு மனைவிக்கு தேவன் தந்த அழைப்பாகும்!

*என்னை எங்கு நடத்திச் செல்லவேண்டும் என்பதை மேய்ப்பனாகிய என் ஆண்டவர் மாத்திரமே அறிந்திருப்பார். ஒருவேளை அவைகளை நான் அறியாதிருக்கலாம். இதை இயேசு குறிப்பிடும்போது, "நான் செய்கிறதை இன்னதென்று இப்போது அறியாய், இனிமேல் அறிவாய்" (யோவான் 13:7) என்றார். ஆம், உண்மைதான்! ஆண்டவர் செய்திடும் எத்தனையோ நிகழ்ச்சிகளை நாம் புரிந்துகொள்ள முடியாததாய்தான் இருக்கிறது. அதேபோல உங்கள் கணவர் எடுத்திடும் சில தீர்மானங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையோ! இச்சரியான இடத்தில்தான் நாம் வாசித்த யோவான் 13:7-ம் வசனத்தை மனைவியாகிய நீங்கள் நினைவுகூருவது நல்லது. ஏனெனில், கணவன் மனைவியின் உறவு, கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவுக்கொப்பாகவே இருக்கிறது. ஆகவே, "என் கணவன் எடுத்திடும் தீர்மானத்தை நான் விளங்கிக் கொண்டாலொழிய அடங்கி கீழ்படிய மாட்டேன்" என நீங்கள் சொன்னால், அதுவே முரட்டாட்டத்தின் ஆவியாகும்!*

*ஒரு விசுவாசி சோர்ந்திருக்கும்போது பரிசுத்தாவியானவர் வந்து அவனை உற்சாகப்படுத்துவது போலவே, தன் கணவன் வேலை ஸ்தலத்திலும் அல்லது ஊழியத்திலும் பல்வேறு போரட்டங்களில் செல்லும்போது மனைவியும் அவனை உற்சாகப்படுத்த வேண்டும். இவ்வாறு பரிசுத்தாவியானவர் கிரியை செய்வது போலவே மனைவியும் கிரியை செய்து ஊழியம் செய்திட பாக்கியம் பெற்றிருக்கிறாள். பரிசுத்தாவியானவர் ஒரு விசுவாசியை பெலப்படுத்தி, உற்சாகமூட்டி ..... பல கிரியைகள் செய்தாலும், அவரை நாம் நம் கண்களினால் காண்பதில்லை. அதேபோலவே மனைவியும் தன் கணவனுக்கு ஆதரவாய் நின்று அநேக உதவிகள் செய்தாலும்...... அவளோ, பரிசுத்தாவி யானவரைப் போலவே தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும்!*

*இவ்வாறு "ஒரு சரீரமாய்" அழைக்கப்பட்டிருக்கும் தேவனுடைய அழைப்பை கணவனும் மனைவியும் கண்டுகொண்டால் அது எவ்வளவு பாக்கியம்! ஒரே சரீரமாய் இருக்கும் இவர்கள் தங்களுடைய "தலையாகிய" கிறிஸ்துவின் நோக்கத்தை வெகு துரிதமாய் தங்கள் குடும்ப ஜீவியத்தில் நிறைவேற்றிவிடுகிறார்கள்! இதுவே, தேவன் ஒவ்வொரு புதுமணத் தம்பதிகளுக்கும் வழங்கியிருக்கும் உன்னத அழைப்பாகும். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே தேவனைத் தங்கள் வாழ்வில் மகிமைப்படுத்த முடியும்!*

# தேவன் தங்கும் வீடே ஆசீர்வாதத்தின் உறைவிடம்

திருமண வாழ்வில் பிரவேசிக்கத் துவங்கியிருக்கும் யாவரும் உணர வேண்டிய மற்றும் ஓர் மிக முக்கியமான சத்தியம் யாதெனில், "குடும்பம் தேவன் தங்கும் வாசஸ்தலம்" என உணர்வதேயாகும். இவ்வித இனிய இல்லத்திலேயே கர்த்தருடைய ஆசீர்வாதமும் தங்கியிருக்கும்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டு நடத்திவந்த போது, தன் ஊழியன் மோசேயின் மூலமாக ஓர் முக்கியமான கட்டளையை அறிவித்தார். அது என்னவென்றால் "**நான் உங்கள் நடுவில் வாசம்பண்ண** எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவீர்களாக" என்ற கட்டளையே! ஆம், தன் ஜனத்தின் மத்தியில் வாசம்பண்ணவே தேவன் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார். அதினிமித்தமே தனக்கு ஒரு வாசஸ்தலத்தை (ஒரு கூடாரத்தை) கட்டும்படியும் கட்டளையிட்டார்.

இந்த பழைய ஏற்பாட்டின் கூடாரமே பின்பு தேவாலயமாய் மாற்றப்பட்டது. ஆனால் இப்போது புதிய ஏற்பாட்டில் கையினால் செய்யப்பட்ட ஆலயத்தில் தேவன் தங்குவதில்லை. ஏனெனில், புதிய உடன்படிக்கையில் நம்முடைய இருதயத்திலேயே தேவன் இப்போது வாசமாயிருக்கிறார். இருப்பினும், ஒருவன் தன் இருதயத்தைத் திறந்து அவரைக் ஏற்றுக் கொண்டாலொழிய அவர் நம்மில் வந்து வாசமாயிருக்க மாட்டார். இவ்வாறு நம்முடைய இருதயத்தில் வாசம் செய்வதற்கு நம்மைவிட தேவன் தான் பேரார்வம் கொண்டிருக்கிறார்!!

3



இப்போது திருமணமான தம்பதிகளுக்கு தேவன் கொடுக்கும் கட்டளை யாதெனில், "நான் தங்கும்படி உங்கள் குடும்பத்தில் ஒரு வாசஸ் தலத்தைக் கட்டுங்கள்" என்பது தான். கணவனும், மனைவியுமாய்

இணைக்கப்பட்டிருக்கும் யாவரையும் குறித்து தேவன் கொண்டிருக்கும் நோக்கம், "அவர் வந்து தங்கும்படியான வாசஸ்தலத்தை அவர்கள் குடும்ப வாழ்க்கையில் கட்டவேண்டும்" என்பதேயாகும்.

**1. நம் இஷ்டப்படி அல்லாமல் தேவனுடைய வார்த்தையின்படி கட்டப்படும் வீட்டில் (குடும்பத்தில்) தேவமகிமை தங்கிவிடும்.**

பொதுவாய் இன்று எல்லா திருமணத் தம்பதிகளுடைய எண்ணங்களும் "தாங்கள் வாழும்படி ஒரு வீட்டைக் கட்ட வேண்டும்" என்பதாகவே உள்ளது. இதுவே புறஜாதியார்கள் தொடங்கி கிறிஸ்தவம் வரை காணப்படும் துயரநிலையாகும். நாம் மெய்யாகவே இயேசு கிறிஸ்துவையும், அவருடைய வார்த்தையையும் நம் குடும்ப ஜீவியத்தில் மகிமைப்படுத்த விரும்புகிறவர்களாயிருந்தால், நாம் நமக்கென ஒரு வீட்டைக் கட்டுவதை சிந்தியாமல் "தேவன் வாசம் செய்யும்படியான குடும்பத்தைக் கட்டுவதற்கே" ஆர்வம் கொண்டிருப்போம்.

உத்தம கிறிஸ்தவ குடும்பத்திற்கும், தேவனற்ற குடும்பத்திற்கும் பெருத்த வித்தியாசம் உள்ளது. தேவன் தங்கும்படி வீட்டைக் கட்டாமல், தங்களுக்கென வீட்டைக் கட்டுவதே அந்த வித்தியாசம்!! இதனிமித்தமே இன்று குழப்பங்களும், சமாதானமின்மையும் குடும்ப ஜீவியத்தில் தோன்றுகிறது. தேவன் தங்குவதற்கென தங்கள் வீட்டைக் கட்டாத யாவருடைய நிலைமையும் இப்படித்தான் இருக்கிறது.

திருமணமான துவக்கத்தில் எல்லோருமே "மகிழ்ச்சியான குடும்பத்திற்கென" திட்டங்களைத் தீட்டுகிறார்கள். ஆனால், திருமணமான சுமார் 6 மாதங்கள் கழித்து தம்பதிகள் ஒருவரை ஒருவர் கசந்து கொள்வதும், திட்டுவதும் துவங்கி குடும்பத்தில் குழப்பமே நிரந்தரமாய் தங்கிவிடுகிறது. இந்த நிலைக்கு ஒரே காரணம், "இவர்கள் தங்களுக்காகவே வீட்டைக் கட்டினார்கள்!!" அவ்வளவுதான்.

ஆனால் தேவனுடைய வார்த்தையோ, நாம் **நிரந்தரமான மகிழ்ச்சியோடு** வாழ்வதற்குரிய வழியைப் போதிக்கிறது. இவ்வித வாழ்க்கை தேவனை மகிமைப்படுத்துவது மாத்திரமல்லாமல், அக்குடும்பத்தாரை சமாதானத்தினாலும், மகிழ்ச்சியினாலும் நிறைத்து விடுகிறது. ஆகவேதான் "நான் தங்கும்படிக்கே ஒரு வாசஸ்தலத்தை உங்கள் குடும்ப ஜீவியத்தில் கட்டுங்கள்" என ஆண்டவர் கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேலர்களை தேவன் என்ன நோக்கத்திற்காக எகிப்திலிருந்து விடுதலையாக்கினார் என்ற கேள்விக்கு பதிலை நாம் இப்போது அறிய முடிகிறது. ஆம், தேவன் அவர்களோடு

வாசம்பண்ணும்படி அல்லது அவருடைய மகிமை அவர்களிடத்தில் தங்கும்படி ஒரு "ஸ்தலத்தை" அவருக்குக் கட்டும்படிக்கே அழைத்தார்! ஆயினும், அவருக்காக கட்டப்படும் ஸ்தலம் அவருடைய கட்டளைப் படியே துல்லியமாய் இருக்க வேண்டுமென தேவன் கண்டிப்புடன் கூறியிருந்தார். தேவன் கட்டும்படி கூறிய ஸ்தலத்தை இஸ்ரவேலர்கள் தாங்கள் விரும்புகிறபடியெல்லாம் கட்ட முடியாது. ஆகவே இஸ்ரவேலர்கள் தங்களைத் தாழ்த்தி தேவன் தந்த "பிளானின்படியே" கட்டினார்கள். எனவேதான் நாம் யாத்திராகமம் 40:34-ம் வசனத்தில் வாசிக்கிறபடி "கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று" என காண்கிறோம். இதற்காகவே இன்றும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம் குடும்ப ஜீவியத்தின் துவக்கத்திலிருந்தே நமக்காகவோ அல்லது நம்முடைய சொந்த பிளானின்படியோ கட்டாமல், தேவன் நம்மிடத்தில் வாசம் பண்ணும்படி அவருக்கே ஒரு ஸ்தலத்தைக் கட்டவேண்டும்.

"தங்கள் ஆண்டவருக்கென குடும்பத்தை அவருக்கு ஒரு வாசஸ்தலமாய் கட்டத் தீர்மானித்திருக்கும்" கணவன் - மனைவியருக்கு, அவ்வித வாசஸ்தலத்தை எவ்வாறு கட்ட வேண்டும். என்ற தெளிவான கட்டளைகளைத் தேவன் தந்திருக்கிறார்.

**ஆண்டவர் கட்டளையிட்டபடியே நாம் செய்வோமென்றால் (கட்டுவோமென்றால்) முடிவில் அவருடைய மகிமை நம் வீட்டை நிறைத்துவிடும்!**

இன்று ஏன் கர்த்தருடைய மகிமை குடும்பங்களில் இல்லையென்பதற்கு இதுவே காரணமாகும்.

இன்று அநேக குடும்பங்களில் கர்த்தருடைய மகிமைக்குப் பதிலாய் சாத்தானுடைய மகிமையே நிறைந்து காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவில் கர்த்தருடைய மகிமை "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்திருந்தது" என வாசிக்கிறோம். ஆனால், இன்று அநேக குடும்பங்களில் "கசப்பும், பணஆசையும், பொறாமையுமே" நிறைந்திருக்கிறது. இதற்கு காரணம் என்ன என்பது இப்போது நமக்குத் தெரியும். ஆம், இவர்கள் கர்த்தருடைய வார்த்தைச் சொல்லுகிறபடி தங்களுடைய வீட்டைக் கட்டாமல் தாங்கள் விரும்புகிறபடி கட்டியதால் ஏற்பட்ட விளைவேயாகும்!!

**2. தேவன் வாசம்செய்யும் வீட்டில் அவர் நியமித்த "தலைமை ஒழுங்கு" கவனமாய் கைக்கொள்ளப்படும்.**

தேவன் தங்கவிரும்பும் வாசஸ்தலமாகிய குடும்பத்தில், "ஒவ்வொரு புருஷனுக்கும் **கிறிஸ்து தலையாய்** இருக்க வேண்டும்.

அதேபோல ஸ்திரீக்கு **புருஷன் தலையாய்** இருக்க வேண்டும்" (1கொரிந்தியர்.11:3,4). இவ்வாறு தேவன் கட்டவிரும்பும் குடும்பத்தில் கிறிஸ்துவே தலையாய் இருக்கிறார்.

"**கிறிஸ்து எங்கள் இல்லத்தின் தலைவர்**" என்ற வாசகத்தை கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் தங்கள் வீடுகளில் உபயோகிக்கிறார்கள். ஆனால், உண்மையில் அவ்விதம் அந்த வீட்டில் நடப்பதில்லை! ஆதாமையும், ஏவாளையும் தேவன் சிருஷ்டித்த போது ஏவாளுக்குத் தலையாய் ஆதாமும், ஆதாமுக்குத் தலையாய் தேவனும் இருக்கும் படியே தந்தருளினார். தேவன் அவர்களை குடும்பவாழ்வில் ஒன்றாய் இணைத்தபோது, அடுத்த வசனத்தில் "சாத்தான் அங்கு வந்தான்" என வாசிக்கிறோம். இவ்வாறு சாத்தான் குடும்ப வாழ்வில் பிரவேசிப்பான் என்பதை இப்புத்தகத்தின் முதல் அதிகாரத்திலேயே நாம் அறிந்திருக் கிறபடியால், கர்த்தருக்கென வாசஸ்தலத்தைக் கட்டும் இந்தப் பணியை அவனுடைய தாக்குதலிலிருந்து நிச்சயம் காத்துக் கொள்ள முடியும்!

ஆதாம்-ஏவாளின் குடும்பத்தில் எவ்விதம் சாத்தான் புகுந்து அவர்களைத் தாக்க முடிந்தது? ஆம், தேவன் அவர்களுக்கு வகுத்துத் தந்த "தலைமை ஒழுங்கினை" அவர்கள் கைக்கொள்ளவில்லை.... அவ்வளவு தான்! ஏவாளை கீழ்ப்படியாமைக்குள் நடத்திட சர்ப்பம் ஆலோசனை கூறியபோது அதற்கு ஏவாள் மறுமொழியாக,"சாத்தானே நீ சொல்வது சரிதான்! ஆகிலும், நானாக எதையும் தீர்மானிக்க முடியாது. எனக்கு தேவன் **ஒரு தலையை** நியமித்திருக்கிறார். நான் அவரிடம் சென்று கலந்தாலோசித்த பின்பு என் முடிவை உனக்குச் சொல்லுகிறேன்" என கூறியிருந்திருப்பாள் என்றால், எத்தனை மேன்மையாய் இருந்திருக்கும். ஆனால், அவளோ அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாக, அவள் சாத்தானோடு நீண்டநேரம் கலந்துரையாடி, முடிவில் தன் தலையாகிய கணவனைக் கேட்காமலே ஒரு தீர்மானத்தை எடுத்தாள்.

இவ்வாறு தேவன் ஏற்படுத்திய ஒழுங்கை இவள் மீறியது மல்லாமல், தன் கணவனையும் தேவனுக்குக் கீழ்படியாது இருக்கும்படி கூறிவிட்டாள். இந்தவேளையில் ஆதாமாவது, ஏவாளைப் பார்த்து "இதோபார், **தேவன் எனக்குத் தலையாயிருக்கிறார்.** ஆகவே, இந்த விஷயத்தில் நான் அவரிடம் சென்று கலந்தாலோசித்து பின்பு முடிவெடுக் கிறேன்" என ஏவாளிடம் கூறியிருந்திருக்கலாம். ஆனால், அவனோ அப்படிச் செய்யவில்லை. இவ்வாறெல்லாம் தேவன் வகுத்த தலைமை ஒழுங்கை

*கடைபிடிப்பது மிகவும் எளிதேயாகும். அவ்வாறு கடைப்பிடித்திருந்தால் இன்று நாம் காணும் ஏராளமான பாவங்களும், துன்பங்களும், குழப்பங்களும் ஏற்பட்டிருக்காது!*

**தேவன் நியமித்த தலைமையின் ஒழுங்கைச் சற்று எண்ணிப் பாருங்கள். ஸ்திரீக்கு புருஷனும், புருஷனுக்கு கிறிஸ்துவும் தலையாய் இருக்கும் ஒழுங்கு! இந்த ஒழுங்கை அப்படியே கைக்கொள்ளாமல் மீறினால், நாம் தேவனுக்கென ஒரு வாசஸ்தலத்தை ஒருக்காலும் கட்டவே முடியாது!**

*இன்று உலகமெங்கும் இந்த துயர சம்பவமே நடந்து கொண்டிருக்கிறது. எல்லாக் குடும்பங்களிலும் சாத்தான் எளிதில் நுழைந்து அங்கு தாறுமாறுகளை உண்டாக்கி, குடும்பத்தையும், அங்குள்ள குழந்தைகளையும் நாசம் செய்வதற்கு, இந்த "தலைமை" ஒழுங்கு மீறப்படுவதே காரணமாகும்!*

**3. தம்பதியரின் "வெளித்தோற்ற அழகு அல்ல" " இருதயத்தின் அழகே " தேவன் தெரிந்து கொள்ளும் வாசஸ்தலம்!**

*"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்.... " என்ற வசனம், தேவன் தங்க விரும்பும் வாசஸ்தலத்தை அவர் விரும்புகிறபடிதான் கட்ட முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது.*

*பழைய ஏற்பாட்டில் தேவன் தங்கிய வாசஸ்தலத்தைப் பற்றிய பொதுவான ஓர் உண்மையை நாம் அறிந்திருக்க வேண்டும். அது என்னவென்றால், அந்த வாசஸ்தலம் தோற்றத்திற்கு கவர்ச்சி கரமானதாக இல்லை. அந்த ஆசரிப்புக்கூடாரத்தை ஓர் முரடான மிருகத்தின் தோலினால் மூடும்படியே தேவன் கட்டளையிட்டார். இப்போது கூடாரத்தைப் பார்த்தால் கொஞ்சம்கூட கவர்ச்சியில்லாமல் மிக எளிய தோற்றத்தில் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் கூடாரத்தின் உள்ளேயோ நேர்த்தியான நிறங்களுடன் திரைகள் தொங்கி அழகுடையதாயிருந்தது. வெளியே எளிமையும், உள்ளே கவர்ச்சியும் இருப்பது மனுஷனுடைய வழியல்ல, அது தேவனுடைய வழியாகும்! மனுஷனுடைய வழியோ தேவனுடைய வழிக்கு நேர்மாறாய் வெளியே கவர்ச்சியும், அலங்காரமுமாய் காணப்பட்டு, இருதயத்தின் உள்ளேயோ சண்டையும், இச்சையும், பொறாமையும் நிறைந்து காணப்படுகிறது. இதைத்தான் "இது என்னுடைய வழியல்ல" என தேவன் கூறுகிறார். தேவனுடைய வழியோ வெளித்தோற்றம் கவர்ச்சியற்று இருந்தாலும், இருதயத்தின் உள்ளேயோ சமாதானமும் அன்பும், சுயநலமற்ற வாழ்வும், நன்றியின் ஜீவியமும்..... நிறைந்து*

காணப்படும். இதுவே தேவன் தங்கும் வாசஸ்தலமாகும். இவ்வித வாசஸ்தலத்தை "நான் கட்டுகிறேன்" என்றே தேவன் கூறுகிறார். ஆகவே, தேவன் கட்டும் வாசஸ்தலம் அவர் கட்டளையிட்டபடியேதான் இருக்கும். ஆனால், அவருடைய வாசஸ்தலம் நிச்சயமாய் வெளித் தோற்றத்தில் கவர்ச்சியுடையதாய் இருப்பதில்லை! இதற்கு மாறாக, இன்று அநேக விசுவாசிகள் மனுஷர் பார்வையில் காட்சி தரும் வெளித்தோற்றத்திலேயே கவனம் கொள்கிறார்கள்.

இதுபோன்றவர்கள் தங்கள் மனைவியைக் குறித்து, தங்கள் நண்பர்களின் அபிப்பிராயங்களைக் கூட மேலானதாய் எண்ணி விடுகிறார்கள். இதனிமித்தமாய் நண்பர்கள் கூறும் அபிப்பிராயங் களாகிய "உன் மனைவி கறுப்பாயிருக்கிறார்கள்..... நாகரீக ஸ்டைல் இல்லை" போன்றவைகளைக் கேட்டு சில கணவன்மார்கள் மனைவியை நேசிப்பதுமில்லை!

**உங்கள் சிநேகிதர் உங்கள் மனைவியைக் குறித்து என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள்? என நீங்கள் சிந்திப்பது தவறல்லவா! தேவன் உங்கள் மனைவியைக் குறித்து என்ன எண்ணுகிறார் என்பதே நமக்குப் பிரதானமாகும்.**

தேவன் மாத்திரமே உங்கள் மனைவியின் இருதயத்தைப் பார்க்கிறபடியால் அவர் உங்களைப் பார்த்து "மகனே நான் விரும்பிய சரியான வாழ்க்கைத்துணைவியையே நீ தெரிந்து கொண்டிருக்கிறாய்" என்றே கூறுவார். ஏனென்றால், அவளுடைய இருதயத்தில் இருக்கும் தாழ்மையையும், அன்பையும், நற்குணங்களையும், சுயநலமற்ற தன்மை யையும்.... ஆகிய திவ்விய குணங்களையே தேவன் மேலானதாய் காண்கிறார். எனவே உங்கள் மனைவியைக் குறித்து யார் கூறும் சாட்சி முக்கியமானதென்பது உங்களைப் பொறுத்தே இருக்கிறது. ஆனால், இன்று அநேகருக்கு மனுஷருடைய அபிப்பிராயங்களே பிரதானமாய் இருக்கிற படியால், அவர்களுடைய குடும்பங்களில் சாத்தானே இராஜாவாய் திகழ்கிறான். இவ்வாறு சாத்தானுக்கென நாம் ஒரு வீட்டைக் கட்டுவதை தேவன் விரும்பவில்லையே! "நீங்கள் நான் தங்கும்படியான ஒரு வாசஸ்தலத்தைக் கட்டுங்கள்" என்றே தேவன் கட்டளையிட்டார். ஆனால், துரதிருஷ்டவசமாய் இன்று அநேகர் தங்கள் இல்லங்களை சாத்தானுக்கென்றே கட்டியிருக்கிறபடியால், அங்கு சண்டையும், கூக்குரலும் நிறைந்து காணப்படுகிறது. இவ்வாறு எங்கு பார்த்தாலும் குழப்பங்கள் நிறைந்த குடும்பங்களின் மத்தியில் "தான் தங்கிடும் வாசஸ்தலத்தைக் கட்டுவதற்கு வாஞ்சை கொண்ட சிலரைக் கண்டு பிடிப்பதற்கே தேவனுடைய கண்கள் இன்று நோக்கமாயிருக்கிறது"

**4. கணவன், மனைவி தனக்கானதைத் தேடும் வலிய சுயம் "சிலுவை மரணம்" அடைந்தாலொழிய தேவன் தங்கும் வாசஸ்தலம் கட்டப்பட முடியாது!**

பழைய ஏற்பாட்டு காலத்தில், ஆசரிப்புக்கூடாரம் கட்டப்பட்ட பின்பு ஒரு மிருகத்தை பலியிட்டு அதன் இரத்தம் கூடாரத்தின் எல்லாப் பகுதிகளிலும் தெளிக்கப்படும். இதற்கு "சிலுவையின் மரணம்" நாம் கட்டும் வாசஸ்தலத்தின் எல்லாப் பகுதிகளிலும் காணப்பட வேண்டும் என்பதே புதிய உடன்படிக்கை கற்றுத்தரும் தாற்பரியமாகும். இவ்வாறாக காணப்படுபவர்கள் மாத்திரமே "ஒருவருக்கொருவர் இணைந்து கட்டப்படுகிறவர்களாய்" இருப்பார்கள்.

அதெப்படியெனில், மனுஷர்களாகிய நம்மிடம் ஓர் வலிமையான சுயசித்தம் குடிகொண்டிருக்கிறது. இந்த சுயசித்தமே கணவன் மனைவியினிடத்தில் காணப்படும் எல்லா மோதல்களுக்கும் காரணமாயிருக்கிறது. கணவன் வலிமையான சுயசித்தம் கொண்டிருக் கிறான்! மனைவியும் வலிமையான சுயசித்தத்தைக் கொண்டிருக்கிறாள்!! இவர்கள் ஒவ்வொருவருடைய சுயசித்தமும் சிலுவையில் அறையப் பட்டால் மாத்திரமே இவர்கள் இருவரும் ஒன்றாய் இணைந்து கட்டப்படுவார்கள்.

சிலுவை நமக்கு கற்றுத்தரும் முதல் பாடமே ஒருவரையொருவர் மன்னிப்பதுதான். நாம் எல்லோருமே தவறு செய்கிறோம். ஆனால், அவைகளை இயேசு மன்னித்ததைப்போல ஒருவரையொருவர் மன்னிப்போ மென்றால், அதுதான் "இரத்தத்தின் அடையாளமாயிருக்கிறது."

மேற்கண்ட சிலுவையின் சிந்தையே இயேசுவின் மனதை எப்போதும் நிறைத்திருந்து. ஆம், அவர் தனக்கானதை ஒருபோதும் தேடவில்லை. பிறருடைய நன்மையை மாத்திரமே எப்போதும் தேடினார். இன்று உலகில் ஜனங்கள் அன்பைக் குறித்து பேசுகிறார்கள். ஆனால், இவர்களோ அன்பு இன்னதென்பதை அறியாதவர்கள். ஏனென்றால், இவர்களுக்குள் **தனக்கானதைத் தேடும் வலிமையான சுயசித்தம்** குடிகொண்டிருக்கிறது. இவ்வாறு தனக்கானதைத் தேடுகிற ஒருவன் அன்பு செலுத்துவதாகக் கூறினால், அது அன்பல்ல, இச்சையே ஆகும். (Not love but lust). இச்சையென்பது பாலியத்தின் இச்சை மாத்திரமல்ல. அது இச்சையின் ஒரு பகுதியேயாகும். கணவன் மனைவி உறவில், அவர்கள் தங்களுக்கானதைத் தேடினால் அதுவே வலிமையான இச்சையெனக் கூறலாம்.

இவ்வாறு இச்சையானது இவ்வுலகம் முழுவதையும் ஆளுகை செய்து கொண்டிருக்கிறது. ஒருவர் மீது நான் "காதல்" (LOVE) கொண்டிருக்கிறேன் எனக் கூறுவதெல்லாம்..... உண்மையில் "இச்சை" (LUST) கொண்டிருக்கிறேன் என்றே கூறுகிறார்கள். இவ்வாறு தனக்கான ஒரு ஆதாயத்தைத் தேடும் இச்சையின் அஸ்திபாரத்தில் நடைபெறும் திருமணத்தில் குழப்பங்களே எஞ்சி நிற்கும். ஆம், "இரத்தத்தின் அடையாளம்"..... அதாவது, இயேசு கற்பித்த தனக்கானதைத் தேடும் சுயம் அங்கு மரிக்கவில்லை. ஒருவன் தனக்கானதை தேடுவதிலிருந்து மரித்தால் மாத்திரமே மெய்யான "தேவஅன்பு" அவனில் வெளிப்படும். உண்மையான தேவஅன்பில் தனக்கானதைத் தேடும் எந்தத் தடயமும் இருப்பதில்லை.

ஆகவே, உங்கள் சொந்த ஆதாயத்தை ஒருபோதும் தேடாமல், பிறருடைய நன்மைகளையே எப்போதும் நாடுங்கள். திருமண வாழ்வின் ஆரம்பத்தில் இவ்வித வாழ்க்கையை ஆரம்பிப்பதில் நம்மில் ஒருவருக்கும் கஷ்டமாய் தோன்றுவதில்லை. ஆனால், இதேபோல் கிட்டத்தட்ட ஒருவர்கூட முடிவு வரை நிலைநிற்பதில்லை. எனவே, திருமணமான சமயத்தில் துவங்கிய "நல்ல துவக்கம்" மாத்திரமே போதுமானதல்ல. முடிவுவரையும் நிலைத்திருப்பதற்கு, நமக்கானதைத் தேடுவதில் மரிப்பதைத் தவிர வேறுவழியேயில்லை!

5. **"ஒருவருக்கொருவர் கொண்ட சிந்தனைகளும், சம்பாஷணைகளுமே" குடும்பம் கட்ட பயன்படும் செங்கற்கள்! கெட்ட செங்கற்களை தவிர்த்து, நல்ல செங்கற்களை இன்றிலிருந்து பயன்படுத்தினால் ஒரு வருடத்திற்குள் இனிய இல்லம் கட்டப்பட்டுவிடும்!!**

நாம் குடும்பத்தைக் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளும் பிரயாசத்தில் 1) ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் எண்ணங்கள் 2) ஒருவருக்கொருவர் பேசும் வார்த்தைகள்..... ஆகிய இவைகள்தான் குடும்பத்தைக் கட்டுவதற்குப் பயன்படும் "செங்கற்களாய்" விளங்குகின்றன! உங்கள் கணவனின் அல்லது உங்கள் மனைவியின் சார்பில் எவைகளை சிந்திக்கிறீர்களோ அவைகள்தான் உங்கள் குடும்பம் கட்டப்படுவதற்கான செங்கற்கள்!! இப்போது இந்த சத்தியத்தைக் கேட்கும் நீங்கள், உங்கள் குடும்பத்தை எத்தகைய செங்கற்களால் கட்டினீர்கள் என்பது உங்களுக்கே தெரியும்! ஆகவே, நீங்கள் கட்டியவைகள் சீர்குலைந்து விழுந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை!!

இவ்வுலகத்தில் தங்களுக்கென வீடு கட்டுகிறவர்கள் நன்கு பரிசீலிக்கப்பட்ட செங்கற்களை வைத்தே கட்டுகிறார்கள். ஆனால்,

இவ்வுலகத்தில் கட்டும் வீடு நித்தியமாய் நிலைநிற்கும் வீடு அல்லவே! ஆம், அவைகள் ஒருநாளில் அழிந்துபோகும். நித்தியமாய் நிலைநிற்கும் வீடு அல்லது குடும்பம் ஒருவருக் கொருவர் பழகும் அந்நியோன்யத்தை வைத்தே கட்டப்படுகிறது. இவைகள்தான், **நிலைத்திருக்கும் குடும்பம்** கட்டப்படுவதற்கு பயன்படும் செங்கற்களாகும்.

ஆகவே, உங்கள் "சிந்தையாகிய செங்கல்லைக் குறித்து எச்சரிக் கையாய் இருங்கள்." அவைகள் ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொள்ளும் தூய்மையும் நன்மையும் நிறைந்த சிந்தைகளாய் இருக்கக்கடவது!! "புருஷர்களே உங்கள் சொந்த மனைவியினிடத்தில் கசந்து கொள்ளாதிருங்கள்" என வேதம் கூறுகிறது. கசந்து கொள்ளுதல் பிரதானமாய் சிந்தையிலிருந்து வருவதேயாகும். எனவே, இதுபோன்ற சிந்தை என்னில் எழாதபடிக்கு, என் சிந்தை வாழ்க்கை "இரத்தத்தை அதாவது சிலுவையை" முத்திரையாய் பெற்றிருக்க வேண்டும். ஆம், என்னுடைய அன்பற்ற சிந்தைகளுக்கும், சுயநலமான சிந்தை களுக்கும், பிரிவினை உண்டாக்கும் சிந்தைகளுக்கும்..... நான் சாக வேண்டும்!!

ஆனால், இங்கேயுள்ள போரட்டம் யாதெனில், சாத்தான் உங்கள் அருகில் நின்று கொண்டு "தன்னுடைய" செங்கற்களை உங்களுக்கு வழக்கம்போல் வழங்குவதற்கு ஆயத்தமாய் நின்று கொண்டிருப்பான். இவ்வாறாக, திருமணமான நீங்கள் "கடினமாய் நடந்து கொள்வதற்கும், சுயநலமாயிருக்கும்படிக்கும், கசந்துக் கொள்வதற்கும்..... எல்லாவற்றிற்கும் மேலாய் **சந்தேகப்படுவதற்கும்**" உங்கள் சிந்தை வாழ்க்கையில் சோதிக்கப்பட்டது உண்டல்லவா? இவ்விதமாய் "கணவன் அல்லது மனைவி எனக்கு உண்மையற்றவளாய் இருக்கக் கூடும்" என எழும்பும் சந்தேகங்களுக்கு நாம் கண்டிப்பாய் மரிக்க வேண்டும். இவ்வாறு **சந்தேக எண்ணங்களுக்கு மரித்து,** நம்புவதற்கேற்ற சிந்தை கொள்வதற்கு நாம் பழகவேண்டும். இவ்வாறு பழகிப் பழகி.... எப்போதும் நன்மையே பிறக்கக்கூடிய சிந்தையுடையவர்களாயிருக்க, நம் சிந்தை வாழ்க்கையை நாம் காத்துக்கொள்ளக்கடவோம்!!

இதைப்போலவே நாம் ஒருவருக்கொருவர் சம்பாஷிக்கும் வார்த்தைகளும்.... ஒருவருக்கொருவர் "குடும்பத்தை கட்டுவதற்கு" பரிமாற்றம் செய்துகொள்ளும் செங்கற்களைப் போலவே இருக்கிறது.

**கணவனும் மனைவியும் சம்பாஷிக்கும் எல்லா சம்பாஷணைகளும் ஒரு ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டு அவைகளை நியாயத்தீர்ப்பு நாளில் நாம் கேட்போமென்றால் அது எப்படியிருக்கும்? அதை உங்களால் ரசித்து கேட்க முடியுமா? அல்லது உங்கள் வார்த்தைகள் உங்களுக்கு வெட்கத்தை உண்டு பண்ணுவதாயிருக்குமா?**

*ஒருவேளை, நம்மில் சிலர் அறைகூவி "இவ்வுலகம், நான் என்னுடைய மனைவியுடன் அல்லது கணவனுடன் பேசிய வார்த்தைகளைத் தாராளமாய் கேட்கட்டும்!" எனக் கூறிட முடியும். இதுபோன்ற உத்தமமும், நேர்மையும் கொண்ட கணவன் அல்லது மனைவியின் ஒலிநாடாவில் தொனிக்கும் பெரும்பாலான வார்த்தைகள் எதுவாயிருக்கும் என்று நான் சொல்லட்டுமா? " நான் வருந்துகிறேன்.... என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.... தவறு என்னுடையதுதான்..... " என்பதாகவே இருக்கும்!! ஆம், நம்மில் ஒருவர் கூட "பூரணர்" இல்லை! ஆனால், உத்தமமான கணவன் அல்லது மனைவியர் தங்களைத் தாழ்த்துவதற்கும், நன்மையான வார்த்தைகளைப் பேசுவதற்கும், சாத்தான் தங்கள் நாவில் கொண்டுவந்து வைத்த தீமையான வார்த்தைகளுக்கும் மரிப்பதற்கும்.... தங்களைப் பழக்கப்படுத்தியிருப்பார்கள், அவ்வளவு தான்!*

*இதற்கு மாறாக, கணவனும் மனைவியும் பேசிக்கொள்ளும் கொடுமையான தீய வார்த்தைகளை சற்று எண்ணிப்பாருங்கள், "உன் அப்பா இப்படிப்பட்டவர்..... உன் அம்மா மோசம்.... உன் வீட்டாரின் லட்சணம் தெரியாதா?..... இரண்டு வருடத்திற்கு முன்பு நடந்த நிகழ்ச்சியை நான் மறப்பேனா?......" என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். இன்று அநேக குடும்பங்கள் இதுபோன்ற செங்கற்களை வைத்தே கட்டப்பட்டிருக்கிறது. இவ்வாறு நம்மைச் சூழ தரம் குறைந்த குடும்பங்களுக்கு மத்தியில்தான், தேவனை மகிமைப் படுத்தும் சிறந்த குடும்பங்களை அல்லது இல்லங்களை நாம் கட்ட வேண்டியது அவசியமாயிருக்கிறது! ஆகவே, உங்கள் வார்த்தைகளைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள். தேவன் தன்னுடைய வேதப்புத்தகத்தில் வழங்கியிருக்கும் அருமையான மாதிரியின்படியே உங்கள் இல்லங்களைக் கட்டுங்கள். அவர் தம் வேதத்தில் கட்டளையிட்டபடி நாம் ஒருவருக்கொருவர் பேசுவதற்குப் பழகியிருந்தால், அது எவ்வளவு அருமையாய் இருக்குமென்பதை சற்று எண்ணிப்பாருங்கள்!*

*கணவன்- மனைவியருக்கு எபேசியர் 4:29-ல் "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்" எனக் கூறப்*

பட்டிருக்கும் இந்தக் கட்டளையை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா? அதாவது "கெட்ட செங்கற்களைக் கொண்டு உங்கள் வீட்டைக் கட்ட வேண்டாம்" என்பதே இந்த வசனம் கூறும் கட்டளையாகும்! குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு கணவனும் மனைவியும் இந்த எளிய பிரமாணத்தைக் கடைபிடித்துவிட்டால் எத்தனை நலமாயிருக்கும். அவ்வாறு கைக்கொள்ளும் கணவன் அல்லது மனைவி எப்போதும் கிருபை பொருந்திய வார்த்தைகளையே ஒருவருக்கொருவர் பேச முற்படுவார்கள். ஆகவே இப்போது பலவருடங்களாய் இவர்கள் கட்டி எழுப்பிய மோசமான குடும்பத்திற்கு மாறாக, "ஒரு வருடத்திற்குள்" இனிமையான இல்லம் கட்டப்படும் விந்தையை இவர்கள் ருசித்திட முடியும். ஆம், இவ்வித வாழ்க்கை சாத்தியமே! நீங்கள் மாத்திரம் தேவன் வழங்கியிருக்கும் பிரமாணங்களைக் கைக்கொண்டிருக்க கவனம் கொண்டிருங்கள், அதுபோதும்!

இவ்வேளையில் உங்களுக்கு நிச்சயம் அநேக சோதனைகள் ஏற்படக்கூடும். உதாரணமாய் உங்கள் வீட்டிற்கு யாரோ ஒருவர் வரும்போது அவர் உங்கள் உறவினரையோ அல்லது வேறு யாரையோ குறை கூறிக்கொண்டு உள்ளே வருகிறார். இந்தவேளையில் அவரோடு நீங்களும் சேர்ந்து புறம்கூறும்படி சோதிக்கப்படுகிறீர்கள். இந்த சோதனையில் உங்களைக் காத்துக் கொள்ளும்படி நீங்கள் தவறினால், சாத்தான் உங்கள் வீடு தேடிவந்து வழங்கிய மோசமான செங்கற்களை நீங்கள் பெற்றுக்கொண்டு, அதை வைத்தே உங்கள் குடும்பத்தையும் கட்டுவீர்கள்! நாம் நமக்கென ஒரு இல்லத்தைக் கட்டாமல் "தேவனுக்காக" அல்லவா கட்டுகிறோம்! ஆகவே சாத்தான் வழங்கும் மோசமான செங்கற்களை மறுத்துவிட கவனமாயிருங்கள்!!

### 6. "சுட்டெரிக்கும் பரிசுத்தாவியானவர்" தங்கும் வீடே அநீதியும், பாவமும் சுட்டெரிக்கப்பட்டு தேவன் தங்கும் வீடாய் மாறிட முடியும்!!

"முட்செடியிலிருந்து எழுந்தருளினவர்..... வழங்கும் ஆசீர்வாதம்" என உபாகமம் 33:16-ல் வாசிக்கிறோம். ஆம், முதன்முதலாக தேவன் பற்றியெரியும் முட்செடிப் புதரிலிருந்தே மோசேயிடம் பேசினார். தேவன் அக்கினியாய் இருக்கிறார்! எனவே, அவர் வாசம்பண்ணும் முட்புதரும் அக்கினியால் சூழப்படுகிறது. இப்போது அந்த முட்புதரில் உள்ள எல்லா கிருமிகளும், பாக்டீரியாக்களும் சுட்டெரிக்கப்பட்டுவிடும். **இந்த சுட்டெரிக்கும் அக்கினியையே பரிசுத்தாவியானவர் நமக்குள் தருகிறார்.** நாம் பரிசுத்தாவியினால் நிறையும்போது, நம்மிலிருந்து புறப்படும்

பாக்டீரியாக்களைப் போன்ற எல்லாத் தீயசிந்தைகளையும் இந்த அக்கினி சுட்டெரித்து விடுகிறது. ஆம், இந்த அக்கினியானவரே நம் இல்லங்களில் வாசம்பண்ண விரும்புகிறார். அப்போது உங்கள் சிந்தைகள், சம்பாஷிக்கும் வார்த்தைகள் யாவும் சுத்திகரிக்கப்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள்! உங்கள் வீட்டில் உள்ள திரைத்துணிகள் அழுக்காயிருக்கலாம், தேவனுக்கு அது ஒரு பொருட்டல்ல. மாறாக உங்கள் சிந்தைகளும், வார்த்தைகளும் தூய்மையுள்ளதாக இருக்க வேண்டும். அதுவே தேவனுக்கு மிக மிக முக்கியமாகும்.

பரிசேயர்கள் வெளிப்புறத்தில் சுத்தமாயிருந்தார்கள். இதற்கு மாறாக, இயேசுவின் சீஷர்களோ தங்கள் அந்தரங்கத்திலுள்ள சிந்தைகளும், வார்த்தைகளும் தூய்மையாய் இருப்பதற்கே வாஞ்சிப்பார்கள்! அப்போதுதான் “தேவன் தங்கும் இல்லமாய்” நமது குடும்பம் விளங்கும். இவ்வாறு ஆசரிப்புக்கூடாரத்தில் தேவனுடைய மகிமை வந்து தங்கியதைப் போல நம் இல்லங்களிலும் அவருடைய மகிமை தங்கிவிட்டால் அது எவ்வளவு அருமையாய் இருக்கும்.

இதுபோன்ற அநேக குடும்பங்கள் நம்நாட்களில் கட்டப்பட வேண்டும் என்பதே தேவனுடைய தீராத வாஞ்சையாயிருக்கிறது. ஆம், அன்று முட் செடியில் வாசம்செய்த தேவன் இப்போது ஒவ்வொரு இல்லங்களிலும் வாசம்செய்துவிட்டால் அந்த இல்லத்தில் அவர்களுடைய செய்கைகள், சிந்தைகள், வார்த்தைகள் அனைத்தும் தூய்மை கொண்டதாய் மாறி விடுமே! எல்லாவற்றிற்கும் மேலாய் அங்கு ஐக்கியமும் கட்டப்படும்!

இன்று அநேகர் எரேமியா 22:13,14-ல் கூறப்பட்டது போல் தங்கள் இல்லங்களை அநீதியினால் கட்டுகிறார்கள். இவ்வாறு அநீதியினால் கட்டப்படும் வீட்டிற்கு “ஐயோ” என்றே எரேமியா கூறினார். சில வீடுகளில் “தேவனே எங்கள் இல்லத்தை ஆசீர்வதியும்!” என்ற வாசகம் கொண்ட பலகையை தொங்கவிட்டிருக்கிறார்கள். ஆனால் உங்கள் வீடு “கறுப்பு பணத்தினால்” கட்டப்பட்டிருந்தால், நீதியின் தேவன் எங்ஙனம் உங்கள் வீட்டை ஆசீர்வதிப்பார்? அதற்கு பதிலாய் நாம் ஏழையாய் இருப்பதே நல்லது.... அப்போது கர்த்தருடைய ஆசீர்வாதம் நம்மிலே தங்கியிருக்குமே! ஆகவே, நம்முடைய இல்லங்கள் எப்போதும் நீதி நிறைந்த நேர்மையின் அடிப்படையிலேயே கட்டப்படவேண்டும்.

எசேக்கியேல் 47-ம் அதிகாரத்தில், கர்த்தருடைய **ஆலயத்திலிருந்து** ஓர் நதி புரண்டோடியது. அந்த நதி எங்கெல்லாம்

சென்றதோ அங்கெல்லாம் மரணத்தையல்ல ஜீவனையே தந்து செழிக்கச் செய்தது என வாசிக்கிறோம். தேவனுடைய வாசஸ்தலமாயும், ரம்மியமாயுமிருந்த ஏதேன் தோட்டம், ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியினால் அந்த இனிமையான ரம்மிய சூழலை இழந்தது. இந்நிலைக்கு காரணம் வேறொன்றுமில்லை... ஆதாமும் ஏவாளும் ஒருவருரையொருவர் குற்றம் சாட்டினார்கள், அவ்வளவுதான்!

**ஒரு சிறிய ஆள்காட்டி விரல் எவ்வளவாய் பரலோக ரம்மியத்தை இழக்கச் செய்துவிட்டது! அந்த விரல் இன்றிலிருந்து உங்களை மாத்திரமே சுட்டிக்காட்டுவதாக!!**

நீங்கள் ஆண்டவரைப் பார்த்து “ஆண்டவரே நான்தான் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம்” என்று சொல்லுங்கள். என்னை மாத்திரமே நான் நியாந்தீர்த்துவிட்டால், என்னிடமிருக்கும் தீமைகள் பரிசுத்தாவியினால் சுட்டெரிக்கப்பட்டு என்னிடத்திலிருந்து ஆசீர்வாதமான நதிகள் புரண்டோடும் என்பதில் சந்தேகமேயில்லை!

**7. “தனக்காக கட்டும் வீட்டை விட்டுவிடும்” தம்பதியரே “தேவன் ஆசீர்வதிக்கும் புதிய வீட்டை” கட்டிட முடியும்!**

தேவன் ஆபிரகாமை ‘ஊர்’ என்ற பட்டணத்தைவிட்டு விட்டு கானான் தேசத்திற்குள் வரும்படி அழைத்தார்! அதைப் போலவே இன்று நாமும் நமக்காக கட்டும் வீட்டைவிட்டு வெளியேறி தேவன் விரும்பும்படியான இல்லத்தைக் கட்ட வேண்டும்! ஆபிரகாமைப் போல பழைய இல்லத்தை விட்டு விடுங்கள்..... அப்போதுதான், நீங்கள் புதிய இல்லத்தைக் கட்டி அதில் பிரவேசித்திட முடியும்.

இதுவரை நீங்கள் திட்டம் தீட்டி உங்களுக்காக வாழ்ந்து கொண்டிருந்த குடும்பம் பலவருடங்களாய் வாழ்ந்த ஜீவியமாய் இருக்கலாம். ஆனால் இப்போதோ தேவன் தங்கும் இல்லத்தைக் குறித்த சத்தியத்தை நீங்கள் கேட்டுவிட்டீர்கள்! இப்போது நீங்கள் என்ன செய்யபோகிறீர்கள்? உங்கள் பழைய “தனக்கானதை நாடும்” இல்லத்தை விட்டுவிட நீங்கள் ஆயத்தம்தானா?

உங்கள் “நல்ல குடும்பம்” தேவனுடைய வீடாய் மாறும்படி தேவன் தந்த அடிப்படை வசனங்களுக்கு கீழ்ப்படிந்திட உங்ளுக்கு மனதில்லையென்றால், தேவனுடைய மகிமை உங்களுடைய வீட்டை ஒருக்காலும் நிறைத்திடவே முடியாது. ஆனால், தேவனுடைய கட்டளைக்கு இணங்கி பழைய ‘ஊரின்’ இல்லத்தை விட்டு

*வெளியேறிய ஆபிரகாமை தேவன் பூரிப்புடன் பார்த்து, "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்; நீ அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பாய்" எனக் கூறினார். இவ்வாறாக, நம்முடைய இல்லம் தேவனுடைய வீடாகவும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயும் இருக்க வேண்டும்!*

*இன்றே பாலும் தேனும் ஓடுகிற வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பூமியில் நம் இல்லத்தை "தேவன் தங்கும் வீடாய்" கட்டுவதற்கு தீவிரம் கொண்டு.... புதிய பூமி நோக்கி புறப்படக்கடவோம்!*

# இயேசுவின் அடிச்சுவட்டில் "ஒளிமய" மணவாழ்க்கை

ஒரு கிறிஸ்தவ குடும்பம் "மிகவும் நல்லதாய்" அமைய வேண்டும் என்பதே தேவன் திருமண வாழ்க்கையைக் குறித்து ஆதியில் கொண்டிருந்த நோக்கமாகும். சகலத்தையும் தேவன் ஒவ்வொன்றாய் சிருஷ்டித்தபோது "அது நல்லது" (GOOD) என்று தேவன் கண்டார். மனுஷனை சிருஷ்டித்தபோது.... அவன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல (NOT GOOD) என்றார் (ஆதியாகமம்2:18). ஆனால் ஆறாம்நாளில் தேவன் ஆதாமுக்கு ஏற்றதுணையாக ஏவாளை சிருஷ்டித்த பின்பு, "மிகவும் நன்றாயிருந்தது" (VERY GOOD) என்றார் (ஆதியாகமம்1:31). இங்கு வித்தியாசத்தைக் கண்டீர்களா? நல்லதல்ல என்று சொன்ன ஆண்டவர் 'மிகவும் நன்றாயிருந்தது' என்று கூறியது எப்படி? இவ்வாறு தேவன் மாற்றிக் கூறியதற்கு என்ன சம்பவம் நடந்தது? ஆம், அதற்குரிய காரணம் நம் கண்களுக்கு முன்பாகத் தெளிவாகவே இருக்கிறது..... தனியாய் இருந்த மனிதன் இப்பொழுது திருமணம் ஆகிவிட்டான்!! பார்த்தீர்களா, திருமணத்தைக் குறித்து தேவன் இவ்வாறு எப்போதுமே நல்ல நோக்கமே கொண்டிருக்கிறார்!



அதாவது, திருமணம் ஆவதற்கு முன்பு இருந்த மனுஷனுடைய தரத்தைவிட திருமணம் ஆனபின்பு அவனுடைய வாழ்வின் தரம் **மிகவும் நல்லதாய்** உயர்கிறது. அதேபோல திருமணத்திற்கு முன்பு இருந்த ஒரு ஸ்திரீயின் தரத்தைவிட திருமணம் ஆனபின்பு அவளுடைய வாழ்க்கை தரம் மிகவும் நல்லதாய் அமைகின்றது. ஆனால் திருமணம் ஆனவர்களின் வாழ்க்கையில் காரியம் இவ்விதத்திலா சம்பவிக்கின்றது? நம்மைச் சுற்றியுள்ள திருமணமான தம்பதிகளில் 99% பேர் வாழ்க்கையில் இதற்கு நேர்மாறாய் நிகழ்வதையே நாம்

காண்கிறோம். இவர்கள் கூறும் சாட்சியோ தலைகீழாய் இருக்கின்றது. இவர்கள், "திருமணமான பின்பைவிட திருமணமாவதற்கு முன்பு அதிக மகிழ்ச்சியாய் இருந்தோம்" என்று சாட்சி கொடுக்கின்றனர். இது எத்தனை துயரமான சாட்சி!

ஆனால் ஒருவனுடைய திருமண வாழ்க்கை இவ்வாறாய் முற்றுப்பெறுவது தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல. திருமண வாழ்வைக் குறித்து தேவன் கொண்டிருந்த நோக்கம், நல்லதல்ல என்பதிலிருந்து மிகவும் நன்றாயிருக்கிறது என்ற இலக்கை அடைவதே ஆகும். ஆனால் இதற்கு நேர்மாறாய் திருமண வாழ்க்கை இருப்பதற்கு என்ன காரணம்? ஆம், தங்களை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தாவின் போதனைகளைப் பின்பற்றாமல் இவர்கள் தங்கள் சுயபுத்தியின் வழியில் சென்றதே காரணம் ஆகும். சிருஷ்டி கர்த்தாவின் வார்த்தையின்படி இவர்கள் நடந்திருந்தால், ஆதிக்குடும்ப வாழ்க்கை 'நல்லதல்ல' என்ற இடத்திலிருந்து 'மிகவும் நன்றாயிருக்கிறது' என்ற இடத்திற்கு நிச்சயமாக வந்திருக்க முடியும்!

எனவே தேவனுடைய வார்த்தையை உதாசீனம் செய்வது எவ்வளவு அபாயம் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். குறிப்பாக கணவனுக்கும் மனைவிக்கும் தேவன் ஏராளமான புத்திமதிகளை தன் வார்த்தைகளில் கூறியிருக்கிறார். அவைகளை நாம் எளிமையான உத்தம இருதயத்தோடு பின்பற்றிவிட்டால் நம்முடைய குடும்ப ஜீவியம் "நல்லது அல்ல" என்ற இடத்திலிருந்து "நல்லது" என்ற இடத்தைக் கடந்து "மிகவும் நல்லது" என்ற உன்னதமான ஸ்தானத்தை நிச்சயமாக அடைந்துவிட முடியும்!

1. **குடும்பத்தின் நடுவில் பிரவேசித்து விட்ட சாத்தானின் தலையை நாம் நசுக்கி "மிகவும் அருமையான" குடும்ப ஜீவியத்தை பெற்றுவிட முடியும் என்பதே இயேசு நமக்களித்திருக்கும் சுவிசேஷம்!**

தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்ற வேதவார்த்தையை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் கணவன் மனைவிக்கிடையே பிரிவினையைக் கொண்டு வந்த முதலாவது நபர் "பிசாசு." இதை நாம் சுருக்கமாகச் சொல்வோமானல், ஒரு தம்பதியினர் திருமணமான அடுத்த கணமே சாத்தான் அவர்களிடம் பிரவேசிக்கக் காத்திருக்கிறான் என்பதே ஆகும். மேலும் அவர்களிடம் தன் தந்திரத்தைப் புகுத்தி அவர்களுடைய வாழ்க்கை "நல்லது" என்ற இடத்திலிருந்து "மிகவும் நல்லது" என்ற இலக்கை அடையவிடாதபடி செய்துவிடுகிறான். இதைத்தான் நாம் நம்முடைய நடைமுறை ஜீவியத்தில் காண்கிறோம். கணவனும் மனைவியுமாக இணைந்த

இவர்கள் ஆரம்பநாட்களில் சண்டை போடுவதில்லை. ஆனால் நாட்கள் பல உருண்டோடிய பின்பு "நல்லது" என்ற இடத்திலிருந்து "..... மோசமானது" என்ற இடத்தைத்தான் அடைகிறார்கள். ஆம், திருமணநாளில் ஒருவரை ஒருவர் நேசித்து சண்டைபோடாதிருந்த இவர்கள் வாழ்வில் சர்ப்பம் (சாத்தான்) பிரவேசித்தபடியால் சண்டையும், அன்பற்ற தன்மையும் ஏற்பட்டுவிட்டது.

இந்நிலையை மாற்றும்படிக்கே இயேசு வந்தார்! இயேசுவின் வருகை மூலம் தேவன் நமக்குத் தந்த வாக்குத்தத்தம் என்ன தெரியுமா? ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்பதே! கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!! சுவிசேஷம் நமக்கு அளித்திருக்கும் சொல்லிமுடியாத நன்மைகளை நீங்கள் புரிந்து கொண்டீர்களா? ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நடுவே வந்த சர்ப்பத்தின் தலை இயேசுவால் நசுக்கப்பட்டுவிட்டது!! இப்போது நாம் பரிசுத்தாவியின் பெலத்துடனே இயேசுவோடு இணைக்கப்பட்டு அவருடைய தலைமையில் அடங்கியிருந்து ஜீவித்தால், இன்று நாமும் நம் திருமண வாழ்க்கையைக் கெடுக்க வந்திருக்கும் சர்ப்பத்தின் தலையை நம் காலின் கீழாக நசுக்கிப்போட முடியும். இதுவே திருமண வாழ்விற்கு தேவன் நமக்கென்று வழங்கியிருக்கும் சுவிசேஷத்தின் நற்செய்தியாம்! இந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள **விசுவாசம் கொண்டவர்களின் வாழ்க்கை** "நல்லது" என்ற இடத்திலிருந்து "மிகவும் நல்லது" என்ற ஸ்தானத்தைக் கண்டடையும் என்பதில் சந்தேகமேயில்லை!

ஆகவே, கணவன் மனைவியாக இணைந்து குடும்ப வாழ்க்கை ஆரம்பித்திருக்கும் நீங்கள் சர்ப்பத்தின் தலையை நசுக்கிய இயேசுவைப் பின்பற்ற முழுமனதாய் தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள். ரோமர்.16:20-ல் "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார்" என வாசிக்கிறோம். இது எத்தனை ஆச்சரியமான நம்பிக்கை தரும் வசனம். "சாத்தானின் தலையை இயேசு சிலுவையில் நசுக்கிவிட்டார்" என்பதை இன்று அநேகர் அறிந்திருக்கிறார்கள். ஆனால் நம்மை பரவசமூட்டும் செய்தி என்னவென்றால், சிலுவையில் அன்று தோற்கடிக்கப்பட்ட பிசாசானவன், இன்று நம்முடைய கால்களின்கீழ் நசுக்கப்படுவான் என்பதேயாகும். கணவன் மனைவியாகிய நீங்கள் முழுகவனத்துடன் இயேசுவைப் பின்பற்றினால் இந்த சாத்தான் உங்கள் கால்களின்கீழ் மிதிக்கப்படுவான் என்பது உறுதி!

இதற்கு மாறாக, கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர்

*சண்டையிட்டுக் கொண்டால் இப்போது சாத்தான் உங்கள் கால்களின் கீழ் அல்ல, உங்கள் குடும்பத்திற்கு மேலே* **சிங்காசனம் போட்டு** *உங்கள் தலையின்மேல் உட்கார்ந்திருப்பான். அதேபோல எரிச்சலடைந்து, மனம்புண்பட்டு, ஒருவரையொருவர் மன்னிக்க மனதில்லாதிருந்து.... இவ்வாறாக உங்கள் குடும்பத்தில் நடைபெறும் என்றால், இப்போது சாத்தான் உங்கள் கால்களின்கீழ் நசுக்கப்படவில்லை! சில இடங்களில் மனைவி தன் கணவனுக்கு எஜமானைப் போல் இருந்து கொண்டு அவரை வேலைக்காரனைப் போல் நடத்துவதுண்டு. அப்படியானால் என்ன? சாத்தான் உங்கள் கால்களின்கீழ் நசுக்கப்படவில்லை. அவ்வளவு தான்! அல்லது ஒரு வீட்டில் கணவன் சர்வாதிகாரியைப் போல் தன் மனைவியினுடைய உணர்வுகளுக்கு சிறிதும் மதிப்புத் தராமல் அடக்கி ஆளுவானென்றால், அதுபோன்ற வீட்டில் சாத்தான் தலைமேல் அமர்ந்து தன் சிங்காசனத்தைப் போட்டிருக்கிறான். இதுவே இன்று அநேக விசுவாசிகளின் வீடுகளில் காணப்படும் பரிதாப நிலையாகும்.*

*ஆனால் நாமோ, சாத்தான் நம்முடைய கால்களின்கீழ் நசுக்கப் படுவான் என்ற சுவிசேஷத்தின் வாக்குத்தத்தத்தை இந்நாளில் பெற்று விட்டோம். இந்த மேன்மையான சுவிசேஷத்தைத்தான் இன்று நாம் சபையில் விசுவாசிக்கிறோம். இந்த சுவிசேஷத்தை நம் சபைகளிலுள்ள அநேக குடும்பங்கள் நடைமுறையில் அப்பியாசப்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காக நாங்கள் தேவனை ஸ்தோத்தரிக் கிறோம்! ஆம், இந்த சுவிசேஷம் வெறும் பிரசங்கமல்ல, அவைகள் ஒருவரும் மறுத்திடக் கூடாத மாறாத உண்மைகளேயாகும். இவைகளை கைக்கொண்டு வாழ்பவர்கள் தவறே செய்திட மாட்டார்கள் என்பது இதன் பொருளல்ல. ஆனால் அவர்களுடைய குடும்ப ஜீவியம் நாட்கள் செல்லச்செல்ல "மிகவும் அருமை!" என்ற இடத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. அவ்வித வீடுகளில் வல்லமை தங்கியிருப்பதையும் நாம் காண முடியும். இதுபோன்ற குடும்ப வாழ்விற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

2. **இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுவது ஒன்றே "அருமையான" குடும்பத்திற்கு வழி! "தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த" இயேசுவின் வழியே மனைவியை நேசிக்க கணவன் கற்றுக்கொள்ளும் வழி! இந்தக் கணவன் "ஓர் தலைவனாய்" அதே சமயம் "ஓர் வேலைக்காரனாய்" இருப்பதற்கும் இயேசு கற்றுத் தருகிறார்!!**

*மேற்கண்டதோர் குடும்ப ஜீவியத்தை காணும்படிக்கே நம் தேசம் காத்திருக்கிறது. ஆனால் இன்று நம் தேசத்திலுள்ள புறஜாதிகள் எத்தகைய கிறிஸ்தவ குடும்பங்களைக் கண்டிருக்கிறார்கள்?*

புறஜாதிகளின் குடும்பங்களைக் காட்டிலும் மேன்மையான கிறிஸ்தவ குடும்பங்களை இன்று ஜனங்கள் கண்டிருக்கிறார்களா? புறஜாதி கணவன் மனைவியரின் நடத்தைகளைக் காட்டிலும் கிறிஸ்தவ கணவன் மனைவியரின் நடத்தைகள் மிக உன்னதமானதாய் இருப்பதை இன்று ஜனங்கள் கண்டிருக்கிறார்களா? அப்படி இல்லையென்றால், அதுபோன்ற குடும்பங்களை இந்தியாவில் காண்பதற்கு இதுவே தேவன் நியமித்த காலமாகும். இவ்வித குடும்பங்களைக் கட்டும்படிக்கே இன்று தேவன் சபையில் தன் வார்த்தைகளைத் தந்து கொண்டிருக்கிறார். இவ்வாறாக ஒரு குடும்பத்தில் கணவன் மனைவியாகிய இருவரும் இயேசுவைப் பின்பற்ற கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய ஜெபமாயிருக்கிறது. சாத்தானை ஜெயிப்பதற்கு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லும் வாழ்க்கையைத் தவிர வேறு வழி இல்லவே இல்லை.

இயேசுவின் நாமத்தை உபயோகப்படுத்திவிட்டால், நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றியதாகப் பொருளாகாது. ஏனென்றால் இவ்வாறு அவருடைய நாமத்தைப் பயன்படுத்து கிறவர்களின் வாழ்க்கையில் சாத்தான் இன்னமும் ஜெயிக்கப்படாதிருப் பதையே நாம் காண்கிறோம். ஆம், **அவரைப் பின்பற்றுவதொன்றே** ஜெயத்தின் வழியாகும்! இதை இயேசு கூறும்போது ஒருவன் என்னைப் பின்பற்றினால் நான் எங்கிருக்கிறேனோ அங்கு என் ஊழியக்காரனும் இருப்பான் என கெம்பீரமாய் முழங்கினார். இப்பொழுது இயேசு எங்கேயிருக்கிறார்? ஆம், அவர் இருக்கும் இடத்தில், அவருடைய பாதத்தின் கீழடியில் சர்ப்பத்தின் தலை நசுக்கப்பட்டுக் கிடக்கிறது! இப்போது நாமும் இயேசுவைப் பின்பற்றினால் அவருடைய பாதம் சர்ப்பத்தின் தலையின்மீது மிதிப்பதைப் போலவே நம்முடைய பாதமும் சர்ப்பத்தின் தலையை நசுக்கிடும் உன்னத ஸ்தானத்தை அடைந்திட முடியும்!! ஆனால் இந்த பாக்கியம் இயேசுவைப் பின்பற்றுவோருக்கு மாத்திரமே உண்டு. ஆகவே தான் “நாம் நம்முடைய ஓட்டத்தை இயேசுவை நோக்கிப் பார்த்து ஓடக்கடவோம்” என தேவனுடைய வார்த்தை புத்தி சொல்லுகிறது (எபி.12:1). இந்த வசனமே திருமண வாழ்க்கையைத் துவக்கியிருக்கும் தம்பதியருக்கு தரப்படும் அருமையான வசனமாகும். ஆம் இயேசுவை நோக்கி பார்த்து... அவரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து புதிய தம்பதிகளாகிய நீங்கள் உங்கள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடருங்கள்!

ஒரு கணவனுக்கு தேவன் அளித்திருக்கும் முதலாவது

வார்த்தை அல்லது ஆலோசனை "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்" (எபேசியர் 5:25). என்பதேயாகும். மேலும் அந்த அன்பை "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து..... போஷித்துக் காப்பாற்றுகிறது போல...." என இயேசுவினுடைய மனப்பான்மைக்கு ஒப்பிட்டு கூறப்பட்டிருக்கிறது (வசனம்.29). கடந்த அதிகாரங்களில் இவ்வசனத்தை நாம் தியானித்தோம். தன் உள்ளத்தில் ஓரளவு 10% நேர்மை கொண்ட எந்தவொரு கணவனும் இந்த வசனத்தின்படி வாழ்வதற்கு ஜீவகாலமெல்லாம் நீண்டபயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற தன் நிலையை ஒத்துக்கொள்வான். ஏனெனில் கிறிஸ்துவின் அன்பிற்கொப்பான நிலையை ஒருமனிதன்கூட இப்பூமியில் இன்னமும் அடைந்துவிடவில்லை. ஆனால் துயரமான விஷயம் என்னவென்றால், இந்த ஒப்பற்ற நிலையை அடைவதற்கு இன்றைய விசுவாசிகள் ஆர்வமற்று இருப்பதுதான்!

ஆர்வமான முயற்சி இல்லாமல் நாம் எதையும் பெற்றுக் கொள்ளவே முடியாது. இதுவே பூரணத்தை நோக்கி கடந்து செல்லும் வாழ்க்கையாகும். இவ்வாறு கிறிஸ்து சபையை நேசித்தது போலவே தன் மனைவியை நேசிப்பதற்கு.... பூரணத்தை நோக்கி பிரயாசத்துடன் கடந்து செல்லும் ஒரு கணவன் வருடங்கள் செல்லச் செல்ல தன் மனைவியை நேசிப்பது தனக்குள் தேறி வருவதைக் காண்பான்.

கிறிஸ்து தன் சபையில் அன்புகூர்ந்து "அதை திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறார்" என வாசிக்கிறோம் (எபேசியர் 5:26). கிறிஸ்து தன் சபையை எவ்வாறு சுத்திகரிக்கிறார்? அல்லது சபை தவறு செய்யும்போது எவ்வாறு சபையை திருத்துகிறார்? இன்று தன் மனைவியினிடத்தில் தவறுகளைக் காணும் பெரும்பாலான கணவன்மார்கள், தங்கள் மனைவிகளைக் கடினமான வார்த்தைகளால் திட்டுகிறார்கள். "உனக்கு அறிவு இல்லையா!" எனவும் அல்லது இதற்கு ஒப்பான பேய்த்தனத்திற்கடுத்த வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். ஆனால் இயேசுவோ இவ்வாறு ஒருக்காலும் நடந்து கொண்டதேயில்லை. அவளிடம் ( சபையிடம்) ஏதாவது தவறு கண்டால், அவளைப் பரிசுத்தப்படுத்தவே தீவிரம் கொள்வார். ஏனென்றால் தன் மனைவியை (சபையை) தமக்கு முன் "கறைதிரை முதலானவைகள் **ஒன்றும் இல்லாமல்** நிறுத்திக் கொள்வதற்கு" அவர் கொண்ட விருப்பமே அவருடைய தீவிரத்திற்கு காரணமாகும். இவ்வாறாகவே

நீங்களும் உங்கள் மனைவியை கறைதிரை ஒன்றும் இல்லாமல் உங்களுக்கு முன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறீர்களா?

இங்கே இயேசு தன் சபையைப் பரிசுத்தப்படுத்துவதற்கு என்ன செய்தார் தெரியுமா? அவளை (சபையை) பரிசுத்தம் செய்வதற்கு **"தம்மைத்தாமே அவளுக்காக (அதற்காக) ஒப்புக் கொடுத்தார்"** என வாசிக்கிறோம் (எபேசியர் 5:27). சபையின் பிழையைப் போக்குவதற்கு தேவன் கையாளும் வழி இதுதான். இந்த தேவனுடைய வழியையே நாமும் பின்பற்றக்கடவோம். கணவனாகிய நீங்கள் உங்கள் மனைவி யினிடத்தில் தவறுகளைக் கண்டால்..... நீங்கள் என்ன செய்ய வேண்டும்? இயேசுவைப் பின்பற்றுங்கள், அதுபோதும்! அதாவது, நீங்கள் இவ்வுலகிலுள்ள புத்தியில்லாத மற்ற கணவன்மார்களைப் போல் நடக்கக்கூடாது. இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஆண்டவரிடம் திரும்பிப் பார்த்து "ஆண்டவரே, நீர் உம்முடைய மணவாளியிடம் பிழையைக் கண்டபோது, அவளுக்காக உம்மையே ஒப்புக் கொடுத்தீர். இப்போதும் கர்த்தாவே உம்மைப் போலவே **நானும் என் மனைவிக்கு என்னை ஒப்புக்கொடுக்க** எனக்கு கற்றுத்தாரும்" என ஜெபியுங்கள்.

ஆம், "நான்" என்ற மிக முக்கியமான மனுஷன் என்னுடைய சிங்காசனத்தில் எப்போதும் வீற்றிருக்கிறான். இந்த சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் "நான்" என்ற இராஜாவிற்கு எதிராக மனைவி ஒன்றைச் செய்துவிட்டபடியால் இந்த இராஜா அதிகம் மனம் புண்பட்டு விட்டான். இவ்வேளையில் நான் மனைவியைப் பரிசுத்தம் செய்ய வேண்டுமென்றால் இந்த வலிமையான "நான்" என்ற சுயத்தை கிறிஸ்துவைப் போலவே ஒப்புக்கொடுத்துவிட வேண்டும்! அதாவது நீங்கள் சிங்காசனத்திலிருந்து கீழே இறங்கி "மரிக்க" வேண்டும்! ஆனால் கிறிஸ்து சென்ற இந்த வழிசெல்வதற்கு ஆர்வம் கொண்ட விசுவாசிகளாகிய கணவன்மார்கள் மிகவும் கொஞ்சம் பேர்களே இருக்கிறார்கள். காரியம் இவ்வாறு இருப்பதால் இவர்கள் வளர்ச்சிக்குப் பதிலாக அதிகமதிகமாய் வீழ்ச்சிக்குள்ளே தான் இறங்கிச் செல்கிறார்கள்.

தன் மனைவியை, கிறிஸ்து சபையை நேசித்தது போலவே நேசிக்க ஆர்வம் கொண்டவர்கள் மாத்திரமே கிறிஸ்து சென்ற வழியைப் பின்பற்றுகிறவர்கள். " அன்பு" என்பதற்குரிய விளக்கத்தை அகராதி கூறும் விளக்கத்தின்படி கற்றுக்கொள்ளாமல், "கிறிஸ்து சபையை நேசித்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என்ற தேவனுடைய வழியின்படியே நாம் அன்பைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது உங்கள் மனைவியைப் பரிசுத்தம் செய்யும்படி

உங்களுக்குரிய "நான்" என்ற ஸ்தானத்திலிருக்கும் நீங்கள் "மரிப்பதே" அதன் பொருளாகும். இவ்வாறாகத்தான் நீங்கள் உங்கள் மனைவியைப் பரிசுத்தம் செய்ய முடியும். ஒரு கணவனுக்குத் தேவன் தந்திருக்கும் அழைப்பு இதுதான்.

இயேசு நம் எல்லோருக்கும் குரு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் உலகத்தாரைப் போலில்லாமல் நம்முடைய ஒப்பற்ற குரு தன் ஜீவியத்தின் கடைசிநாளில் எங்கு இருந்தார் தெரியுமா? ஆம், அவர் தம் மணவாளியின் (சீஷர்களின்) பாதபடியில் அமர்ந்து அவர்களுடைய பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். இந்த குருவினுடைய பூரணத்தை நோக்கி ஒருவன் கடந்து சென்றால், அவனும் தன் குருவைப் போலவே தன் மனைவியின் பாதத்திற்குத் தன்னைத் தாழ்த்தி அவளிடம் காணும் எல்லா அழுக்குகளையும் கழுவி சுத்திகரிப்பான்.

பாதங்களைக் கழுவுவதென்பது மனைவிக்கு உதவி செய்யும்படி இழிவான வேலைகளைச் செய்வதும் அடங்கும். இருப்பினும் இவ்வாறு உதவிசெய்யும் கணவன்மார்களை சுயநலமாய் தங்களுக்கு ஆதாயம் தேடி பயன்படுத்தும் மனைவிமார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதுபோன்ற மனைவிகள் சபையில் இருப்பது துக்கம் நிறைந்ததாகும். அதேபோல, கணவன் தன் மனைவியின் பாதங்களைக் கழுவும்படி எந்த இழிவான வேலைகளையும் செய்யலாம் என நாம் கூறும் இந்த சத்தியத்தைத் தவறாய் புரிந்துகொண்ட புருஷர்களும் உண்டு. அதாவது, புருஷர்களாய் இருந்து உதவுவதற்குப் பதிலாய், இவர்கள் தங்கள் வீட்டில் ஓர் அடிமையாக மாறிவிடுகிறார்கள். ஆனால் இந்த செய்தியின் அர்த்தம் அப்படி இல்லவே இல்லை! இயேசு தன்னை "எல்லோராலும் துடைத்துப்போடும் கந்தையைப் போல்" தன்னைத் தாழ்த்தினார் என்பது உண்மைதான். இருப்பினும் இயேசு தன்னுடைய சீஷர்களோடு உட்கார்ந்திருக்கும் போது அவர்களில் தலைவர் யார் என கண்டு கொள்வது நமக்கு கடினமாயிருக்காது. நீங்கள் தவறுதலாக கூட பேதுருவையோ அல்லது மத்தேயுவையோ 'தலைவன்' என கருத மாட்டீர்கள். அங்கு எல்லோரையும் வழிநடத்திச் செல்லும் ஒருவராக இருந்த இயேசுவின் தலைமை மிகவும் தெளிவகாக் காணப்பட்டது! இதைப் போலவே ஒரு கணவனுடைய நிலையும் இருக்க வேண்டும்.

**ஓர் தலைவனாகவும் அதே சமயம் ஓர் வேலைக்காரனாகவும் இருப்பது, மேன்மையானதோர் சமநிலையாகும்.**

இந்த சமநிலையை நாம் இயேசுவிடத்திலிருந்துதான்

கற்றுக்கொள்ள முடியும். வீட்டிலுள்ள இழிவான வேலைகளை மாத்திரம் செய்ய வேண்டுமென்றால், அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். அதேபோல் தன் மனைவியை அடக்கி சர்வாதிகாரி போல் நடக்க வேண்டுமென்றால்..... அதையும் யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் வீட்டில் தலைவனாகவும் அதேசமயம் வேலைக்காரனாகவும் இருப்பது தேவஞானத்திற்குரியதாகும்!

சில வீடுகளுக்குள் நாம் நுழைந்த உடனே அந்த வீட்டில் யார் தலைவன் என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். நான் சென்ற சில வீடுகளில் எல்லா நேரங்களிலும் அந்த வீட்டின் மனைவிதான் பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்களுடைய கணவனோ வெறும் "ஆமாம் சாமி" குள்ளனைப் போலிருப்பார்கள்! இவ்வித சூழ்நிலையில் அந்த வீட்டில் யார் தலைவர் என்பது தெளிவாக விளங்கிடும். இதுபோன்ற சகோதரிகள் தங்களை கிறிஸ்தவர்கள் என அழைத்துக் கொள்வதே வெட்கத்திற்குரியதாகும். இந்த நிலையிலுள்ள அந்த வீட்டில் இருக்கும் மனைவி "என் கணவர் அமைதியான சுபாவமுடையவர்" எனக் கூறலாம். ஆனால் அவரை அந்த நிலைக்கு ஆளாக்கியதே "பல வருடங்களாய் அவர் பேசுவதற்கு முன்பாகவே நீங்கள் பேசிய 'சலசலத்த' பேச்சுக்களேயாகும்." உங்கள் சலசலப்பான வாயை கொஞ்சம் மூடியிருந்தால், அவர் தானாகவே தனது வாயைத் திறந்து பேசியிருப்பார்! இந்த புத்திமதியைத்தான் இதுபோன்ற அநேக மனைவியர்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன்.

இயேசுவோ ஒரு தலைவனாயிருந்து கொண்டே அன்பு செலுத்தினார்..... பணிவிடை ஊழியமும் செய்தார்! இவ்வாறு இருப்பதற்கே நமக்கு ஞானம் வேண்டும். இவ்வாறு இயேசுவைப் போலவே நாம் இருப்பது எப்படி? அதன் இரகசியம் "ஓர் மேய்ப்பனாய்" அவர் இருந்ததுதான்! அதாவது, தன் மந்தைக்கு மாதிரியாக முன்சென்றார்! தன் மந்தைக்குப் பின்னால் இருந்து அவைகளை விரட்டி ஓட்டாமல், **முன்னால் நிற்கும் "ஓர் மாதிரியாய்" திகழ்ந்தார்.** உங்கள் வீட்டில் காரியம் எல்லாம் சீர்பட்டு நடைபெற நீங்கள் விரும்பினால் இயேசுவைப்போலவே நீங்களும் ஓர் நல்ல மாதிரியாய் இருப்பதற்கு வாஞ்சை கொள்ளுங்கள். ஏராளமான புத்திமதிகளை மனைவிக்குக் கூறிக்கொண்டிராமல் அவள் பின்பற்றத் தகுந்த ஓர் நல்ல வாழ்க்கையை இயேசுவைப்போல மாதிரியாக வாழ்ந்து காண்பியுங்கள்.

ஒரு கணவனாயிருக்கும் நீங்கள் இயேசுவின் மாதிரியைப்

போலவே குடும்பத்திலுள்ள மற்றவர்களை நடத்திச் செல்லும்படி ஓர் நல்ல மேய்ப்பனாய் இருக்க வேண்டும். உங்கள் மனைவி ஜீவியத்தின் ஏதாவது ஒரு பகுதியில் தடுமாறுவார்களென்றால், அன்புள்ள சகோதரனே, இப்போது உங்களைப் பார்த்து நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்டுபார்க்க வேண்டும். "தேவன் எனக்குத் தந்த மனைவியை (ஆட்டை) தேவன் விரும்பிய பாதையில் நான் சரியாய் நடத்திச் செல்கிறேனா?" என்றே உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள்.

**உங்கள் மனைவிக்குப் பின்னால் உங்கள் பிள்ளைகளாகிய ஆட்டுக்குட்டிகளும் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் மேய்ப்பனாகிய ஒரு மனிதனையே (கணவனாகிய உங்களையே) சார்ந்திருக்கிறார்கள்.**

இந்நிலையில் கணவனாகிய நீங்கள் இயேசுவைப் பின்பற்றிச் செல்லவில்லையென்றால், உங்களைப் பின்பற்றும் உங்கள் வீட்டார் எந்த திசை நோக்கிச் செல்வார்கள்? இவ்வுலகத்தார் போலவே உங்கள் குடும்பத்தார் தேவன் நியமித்த வழியை விட்டு தாறுமாறாகவே சென்று கொண்டிருப்பார்கள். ஆகவே உங்கள் திருமண வாழ்க்கை "நல்லது" என்ற நிலையிலிருந்து "மிக நல்லது" என்ற நிலையை அடைந்திட நீங்கள் விரும்பினால் கணவனாகிய உங்களுக்கு "இயேசுவைப் பின்பற்றும் ஜீவியம்" எத்தனை முக்கியத்துவம் கொண்டது என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்.

3. **"தலையாகிய தன் தேவனுக்கு கிறிஸ்து அடங்கியிருந்ததே" மனைவி பின்பற்ற வேண்டிய சிறந்த வழி! அடங்கியிருக்கும் ஆவிகொண்ட மனைவியே, முரட்டாட்ட ஆவியுடைய "சாத்தானை" தன் வீட்டில் நசுக்கிப் போடுகிறாள்!**

அதைப் போலவே, சர்ப்பத்தின் தலையை நசுக்குவதற்கு மனைவியும் இயேசுவைத் தன் மாதிரியாகக் கொண்டு பின்பற்ற வேண்டும். மனைவியானவள் இயேசுவைப் பின்பற்ற வேண்டிய பகுதியை 1கொரிந்தியர் 11-ம் அதிகாரத்தில் நாம் காண்கிறோம். இந்த அதிகாரம் 3-ம் வசனத்தில் "ஒவ்வொரு புருஷருக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார் என்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான் என்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார்" என்றும் வாசிக்கிறோம்.

இயேசுகிறிஸ்து இந்த பூமியிலிருந்த போது, பிதாவாகிய தேவனுக்கும் அவருக்கும் இடையே காணப்பட்ட உறவை சற்று கவனியுங்கள்! ஒருவர் தலையாகவும் மற்றொருவர் சரீரமாகவும் இருந்தார்கள்! ஆம், ஒரு சரீரம் தன் தலைக்கு அடங்கியிருப்பதைப்

போலவே இயேசுவும் இப்பூமியில் வாழ்ந்த தன் ஜீவகாலமெல்லாம் தன் பிதாவிற்கு அடங்கியிருந்தார். "இதைப்போலவே" ஒரு மனைவியும் புருஷனாகிய தன் கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும்.

இன்றைய அநேக மனைவிமார்கள் இதுபோன்ற அடங்கியிருக்கும் ஜீவியத்தில் ஆர்வம் கொண்டிருப்பார்கள் எனக் கருதுகிறீர்களா? அதுதான் இல்லை! ஆகவே, இவர்களுடைய மணவாழ்க்கை தாறுமாறாய் செல்வதில் நமக்கு எவ்வித ஆச்சரியமும் இல்லை. தேவன் விரும்புகிற ஓர் திருமண வாழ்க்கைக்கு "ஓர் விலைக்கிரயம்" செலுத்தப்பட வேண்டும். இந்த விலைக்கிரயத்தை நீங்கள் செலுத்த ஆயத்தமாயிருந்தால் உங்கள் குடும்ப ஜீவியம் "நல்லது" என்ற நிலையிலிருந்து "மிகவும் நல்லது" என்ற நிலையை நிச்சயம் வந்தடையும் என்பதற்கு **சகரியா பூணனாகிய** நானே உங்களுக்கு உத்திரவாதம் அளிக்கிறேன்.

ஒரு மனைவி அடங்கியிருக்கும் ஜீவியத்திற்கு விலைக்கிரயம் செலுத்த வேண்டிய தருணம் எப்போது சம்பவிக்கும்? நீங்கள் விரும்பியதை உங்கள் கணவர் செய்யச் சொல்லும்போது அதற்கு அடங்கியிருப்பது மிகவும் எளிது. ஆனால் நீங்கள் விரும்பாததைச் செய்திட வேண்டிய நிலையில்தான் உங்கள் அடங்கியிருத்தல் சோதிக்கப்படுகிறது. இந்த உண்மை உங்களுக்கே நன்றாய் தெரியும். உதாரணமாய், நீங்கள் உங்கள் மகனை ஐஸ்கிரீம் சாப்பிடும்படி கட்டளை பிறப்பிக்கிறீர்கள். இந்தக் கட்டளைக்கு உங்கள் மகன் கீழ்படிவது அவனுக்கு எவ்வித கஷ்டமும் இல்லை! எத்தனை தடவை வேண்மானாலும் ஐஸ்கிரீமை அள்ளிச் சாப்பிடுவதற்கு உங்கள் மகன் பிரியமாயிருப்பான். ஆனால், நீங்கள் உங்கள் மகனைப் பார்த்து "விளையாடுவதை நிறுத்திவிட்டு வீட்டுப்பாடத்தை எழுது!" என்றோ அல்லது "சமையலறையில் எனக்கு சில உதவி செய்ய வா!" என்றோ நீங்கள் கூறும்போது அவன் ஐஸ்கிரீமை சாப்பிடுவதற்கு மனப்பூர்வமாய் மகிழ்ச்சியுடன் கீழ்படிந்ததைப் போல இந்தக் கட்டளைக்கு கீழ்படிந்திட ஆர்வமற்றிருப்பான். ஆகவே உங்கள் மகனின் கீழ்படிதல் ஐஸ்கிரீம் சாப்பிடும் கட்டளையில் சோதிக்கப்படுவதில்லை! ஆனால் அவன் விரும்பாததை அவனுடைய அம்மாவாகிய நீங்கள் செய்யச் சொல்லும் கட்டளையில்தான் அவனுடைய கீழ்படிதல் சோதிக்கப்படுகிறது.

உங்கள் கணவன் "சபை கூட்டத்திற்கு போவோம்" என அழைக்கும்போது அதற்கு மகிழ்ச்சியுடன் கீழ்படிய உங்களுக்கு எந்த கஷ்டமும் இல்லை. ஏனென்றால் கூட்டங்களுக்குச் செல்வதில் உங்களுக்கும் விருப்பம்தான். (ஒரு சில மனைவிகளுக்கு சபை

*கூட்டங்களுக்கு வருவது கூட கஷ்டமாயிருக்கிறது!) ஆனால் உங்கள் விருப்பத்திற்கு எதிராக "இப்போது சேலை எடுக்க வேண்டாம்" என்றோ அல்லது வேறு உங்களுக்கு இஷ்டமில்லாத ஒன்றை உங்கள் கணவன் கூறும்போது இந்த இடத்தில்தான் உங்கள் கீழ்படிதல் சோதிக்கப்படுகிறது. இங்குதான் ஒரு மனைவி முறுமுறுக்கத் துவங்குகிறாள், இப்பொழுது குடும்பத்தில் ஒவ்வொருவரும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு சர்ப்பம் வீட்டில் நுழைந்து, வீட்டிலுள்ள எல்லோரையும் கடிப்பதற்கு கதவைத் திறந்து விட்டது யார்? இந்த மனைவி தான்! இருப்பினும், சர்ப்பத்தை வீட்டிற்கு வெளியே தூர விலக்கி வைத்திருக்கக் கூடிய அதி உன்னதமான வலிமை ஓர் மனைவிக்கு இருக்கிறது!!*

*இவ்வுலகத்தில் இரண்டு வலிய ஆவிகள் கிரியை செய்கின்றன. அவை 1) முரட்டாட்டத்தின் ஆவி 2) அடங்கியிருத்தலின் ஆவி. பிரதான தூதனாகிய லூசிபர் தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்தபோது சாத்தானாய் மாறினான். இந்த சாத்தானிடத்திலிருந்து தான் முரட்டாட்டத்தின் ஆவி பிறந்தது. இதற்கு நேர்மாறாக, இயேசுகிறிஸ்து இந்த பூமிக்க வந்தபோது தேவனுக்கு அடங்கி கீழ்படிந்திருக்கும் ஆவியோடு வந்தார். ஆகவே ஒரு மனைவி தன் கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்காத பட்சத்தில்,* **முரட்டாட்டத்தின் ஆவி** *தன் வீட்டிற்குள் நுழையும்படியே கதவைத் திறக்கிறாள்! இந்த ஆவி அவளுடைய பிள்ளைகளையும் பாதித்துவிடுகிறது. இப்போது அவளுடைய வீட்டில் சண்டையும் சச்சரவும், தலைவலியும், வியாதியும்..... இன்னும் பல பிரச்சனைகளும் நுழைந்துவிடுகிறது. இவைகளை யெல்லாம் தேவனா கொண்டு வந்தார்? இல்லை, சாத்தானே இவைகளைக் கொண்டுவந்தான். ஆனால், இந்த சாத்தானை வீட்டிற்குள் திறந்துவிட்டது யார்? மனைவிதான்! இவளிடம் காணப்பட்ட முரட்டாட்டத்தின் ஆவி சாத்தானுக்கு வாசலைத் திறந்து விட்டது!! இந்த மனைவி அடங்கியிருக்கும் ஆவியால் நிலைத்திருந்தால், பொல்லாத ஆவிகளுக்குத் தன்வீட்டின் கதவை அடைத்திருப்ப தற்குரிய வலிமையை நிச்சயமாய் பெற்றிருப்பாள்.*

*இன்று அநேகர், கெத்செமனே தோட்டத்தில் இயேசு தன் பிதாவின் சித்தத்திற்கு கீழ்படிந்திருந்ததை மாத்திரமே அறிந்திருக்கிறார்கள். இவ்வாறு பிதாவுக்கு கீழ்படிந்திருப்பதை ஆரம்பநிலையில் உள்ள கிறிஸ்தவர்களும் செய்திடக்கூடும். ஆனால் அற்புதம் யாதெனில், இயேசு பூரணமற்ற தன் பெற்றோர்களாகிய யோசேப்பிற்கும், மரியாளுக்கும் அடங்கி கீழ்படிந்திருந்ததேயாகும்!!*

இயேசுவினிடத்தில் காணப்பட்ட பிரதான கிரியை "தன் பெற்றோர்களுக்கு 30-ஆண்டுகள் அடங்கியிருந்த செயலே" எனக் குறிப்பிடலாம். வியாதியஸ்தரை சுகமாக்குதல், மரித்தோரை உயிரோடு எழுப்புதல்..... போன்றவைகளெல்லாம் இந்த அடங்கியிருக்கும் ஜீவியத்திற்குப் பின் நடந்த அற்புத செயல்களேயாகும். ஆம், இந்த அற்புதங்கள் இயேசுவைப் பொறுத்தவரை இரண்டாவது ஸ்தானத்திற்கு உரியதேயாகும்.

தன் தாயாகிய மரியாள் அநேக தவறுகள் செய்திருந்தாலும் இயேசுவோ அவர்களுக்கு அடங்கிருந்தார். இதேபோல அநேக தவறுகள் செய்யும் தன் கணவனுக்கு அடங்கியிருக்கும் மனைவியர் நம்மிடையே எத்தனைபேர் உண்டு? அவ்வாறு அடங்கியிருக்கும் ஸ்திரீகளே ஆவிக்குரிய சகோதரிகள் என புகழப்படுவர்! ஆனால், இதுபோன்ற சகோதரிகளைக் காண்பதோ இன்று மிகவும் அரிதாகிவிட்டது.

ஓர் பூரண வளர்ச்சி கொண்ட மனைவி யார் தெரியுமா? எந்த மனைவி தன் கணவரிடம் பூரணத்தை எதிர்பாராதிருக்கிறாளோ அவளே பூரணம் நிறைந்த மனைவியானவாள்! அதேபோல எந்த கணவன் தன் மனைவியிடம் பூரணத்தை எதிர்பாராதிருக்கிறானோ அவனே பூரணம் நிறைந்த கணவனாவான்!! ஆனால், இதுபோன்ற குணாதிசயம் கொண்டவர்கள் விசுவாசிகளின் மத்தியில் அரிதாகவே காணப்படுகிறார்கள்.

**பூரணமில்லாத தன் கணவனுக்கு அடங்கியிருக்காதவர்கள்.... நிரூபணமாய் கூறிடும் உண்மையாதெனில், இவர்கள் "தேவனுக்கு அடங்கியிருக்கவில்லை" என்பதுதான். அவர்களுக்கு அடங்கி யிருக்கும்படி கட்டளையிட்டதே இந்த தேவன்தான்!**

"மனைவிகளே **கர்த்தருக்குக்** கீழ்படிகிறது போல உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்ப்படியுங்கள்" என தேவன் தான் கட்டளையிட்டார்!! இந்த கட்டளைக்கு நீங்கள் கீழ்படியவில்லையென்றால், நீங்கள் "தேவனுக்கே இன்னமும் கீழ்படியவில்லை" என்பதே அர்த்தமாகும். இவ்வாறு இருந்து கொண்டு நீங்கள் பேசும் ஆவிக்குரிய விஷயங்கள் அனைத்தும் குப்பைத்தொட்டியில் எறிவதற்கே உகந்ததாகும்.

இருப்பினும் ஒரு மனைவி தன் கணவனுக்கு எந்த ஆலோசனையும் தரமுடியாது என நாம் இங்கு கூறவில்லை. மனைவியானவள் "உதவுகிறவள்" என்றும் வேதம் கூறுகிறது. புருஷன் என்ன சொன்னாலும் அதற்கெல்லாம் "ஆமாம் ஆமாம்" என தலையை

ஆட்டிக்கொண்டு எந்த ஆலோசனையையும் கூற முடியாத "ஓர் மக்குபோல்" மனைவி இருக்க வேண்டியதில்லை. நீங்கள் ஓர் நல்ல மனைவியாயிருந்தால், உங்கள் கணவருக்கு **ஓர் அடங்கியிருக்கும் ஆவியோடுகூட** எவ்வாறு உதவிசெய்யமுடியும் என்பதை நன்கு அறிந்திருப்பீர்கள். இவ்வாறு அடங்கியிருக்கும் ஆவியோடு ஆலோசனைகளைத் தன் கணவருக்கு கூறுவது மனைவிக்குள்ள முக்கிய பொறுப்பாகும்.

**4. கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் கலந்தாலோசிப்பதே "ஏற்ற துணையாய்" விளங்குவதாகும்!**

ஆதாமுக்கு ஏற்றதுணையாய் தேவன் ஏவாளை சிருஷ்டித்தார் என்ற சத்தியத்தில் அதிக மேன்மையுள்ளது. அது எப்படியெனில் ஒரு கட்டிடத்தை கணவன் வடக்கு திசையிலும், மனைவி தென்திசையிலுமிருந்து நோக்குவது போலாகும்! இவ்வாறு இவர்கள் இருவரும் கண்ட கட்டிடத்தின் வரைபடத்தை ஒருவருக்கொருவர் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவைகள் முற்றிலுமாய் வேறுபட்டிருக்கும். அப்படியானால், அவர்கள் கண்டது இரண்டு வித்தியாசமான கட்டிடங்களா? இல்லை! ஒரே கட்டிடத்தைத்தான் இருவரும் கண்டார்கள். வடதிசையிலிருந்து கட்டிடத்தைப் பார்த்த எனக்கு தென் திசையிலிருந்த கட்டிடத்தின் அமைப்புகள் மறைவாகவே இருந்தது. ஆனால் இப்போதோ எனக்கு உதவும்படி ஓர் உதவியாளரை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இவ்வாறு எனக்கு உதவியாக வந்த மனைவி நான் காணக்கூடாத தென்திசையின் கட்டிட அமைப்புகளை எனக்குக் கொண்டுவந்து காட்டுகிறாள்..... இப்போது ஓர் கட்டிடத்தின் முழு அமைப்பையும் என்னால் காணமுடிகின்றது!! இவ்விதமாய் உதவும்படிக்கே தேவன் நமக்கு மனைவியைத் தந்திருக்கிறார்.

இவ்வாறு கணவனும் மனைவியும் ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் செயல்பட்டு, இருவரும் கலந்தாலோசிக்க வேண்டும். கணவன் காணமுடியாததை, மனைவி கூறுவதை ஓர் நல்ல கணவனாய் இருக்கும் நீங்கள் கவனித்துக் கேட்க வேண்டும். ஆகிலும் குடும்பத்தின் தலைவனாக இருக்கும் நீங்கள்தான் ஒன்றை முடிவாகத் **தீர்மானம்** செய்யவேண்டும். இதுதான் உதவியாளராக இருக்க வேண்டிய ஒரு நல்ல மனைவியின் பங்கு. உங்கள் திருமண வாழ்க்கை இவ்வாறு அமைவதற்கே தேவன் உதவி செய்வாராக.

கணவன் மனைவியின் திருமண வாழ்க்கை "உனக்கு நான்

எனக்கு நீ" என்பது போலவும் இருந்துவிடக்கூடாது. நீங்கள் இவ்வித நோக்கத்தோடு கலந்தாலோசிப்பது மிகுந்த தவறு! அதற்கு பதிலாய், அவர்கள் இருவரும் சேர்ந்து "**தேவனை** மகிமைப்படுத்தும்படிக்கே" எதையும் முடிவு செய்ய வேண்டும்.

**5. ஆண்டவர் கட்டளைப்படி, அவரவர் தங்கள் தகப்பனையும், தாயையும் விட்டு ஒருவரையொருவர் "பற்றிக்கொண்டு" வாழ்வதே தேவன் வகுத்த "அருமையான" குடும்பம்!**

கணவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு மனைவியோடு இசைந்து ஒரே மாம்சமாக இருக்கவேண்டுமென தேவன் கட்டளையிட்டார். ஆனால், இன்றோ இந்த தேவனுடைய கட்டளைக்கு ஒப்பாய் அநேகர் இருப்பதில்லை. இன்று அநேக புத்திசாலியான கணவர்கள் "நான் என் தகப்பனையும், தாயையும் விட்டு விடாமலே என் மனைவியோடு இசைந்திருக்க முடியும்" என அகந்தையோடு கூறுகிறார்கள். இவ்வாறு கூறி செயல்பட்ட கணவன்மார்களில் ஒருவர் கூட செழித்ததில்லை. தேவன் ஒன்றைச் சொல்லிவிட்டால் அது நமக்கு "ஒருவழி பாதை" (One Way) மாத்திரமே. ஆம், அதற்கு மாறாக வேறு வழி இல்லவே இல்லை.

இப்படியெல்லாம் நாம் கூறுவது நம்முடைய பெற்றோர்களுக்கு நாம் மரியாதை செலுத்த முடியாது என்பது பொருளல்ல. நாம் எல்லாவிதத்திலும் நம் பெற்றோர்களுக்கு மரியாதை செலுத்தி கனம் பண்ணவேண்டும். இயேசு, தான் சிலுவையில் தொங்கும்போது கூட தன் தாயின் மீது அக்கறை காட்டினார். ஆனால் அதேசமயம் தன் தாய் அவருடைய ஊழியத்தில் தலையிட அவர் அனுமதிக்கவே இல்லை. அவ்வாறு தலையிட்ட சமயம் "ஸ்திரீயே உனக்கும் எனக்கும் என்ன?" எனக் கேட்டுவிட்டார். அதுபோலவே தன் சொந்த சகோதர, சகோதரிகளும் அவருடைய ஊழியத்தில் தலையிட அவர் அனுமதிக்கவே இல்லை. ஆனால் அதே சமயம், தன் குடும்பத்தாருக்கு உரிய மரியாதை செலுத்தவும், அவர்களைப் பராமரிக்கவும் செய்தார். இதுபோன்ற சமநிலையை இன்றைய அநேக தம்பதியினரின் வாழ்வில் காணப்படவே இல்லை. ஆனால் இந்த சமநிலை கொண்டவர்கள் மாத்திரமே உண்மையான ஆவிக்குரியவர்கள்.

இப்போது நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களுடைய "உணர்ச்சிமிகுந்த பாசத்தின் பிடியிலிருந்து" விடுபடுங்கள் ஓர் புருஷன் திருமணம் ஆவதற்கு முன்பு தன் பெற்றோர்களிடம்

இவ்விதமான உணர்ச்சி பொங்கும் பாசத்தின் பிடிப்பை கொண்டவனாயிருக்கிறான். இவ்விதப் பிடிப்பை "தொப்புள் கொடிக்கு" ஒப்பிட்டு நாம் கூறலாம். ஓர் மனிதன் திருமணமாவது, குழந்தை கர்ப்பப்பையிலிருந்து வெளியே வருவது போலாகும். பிறந்த குழந்தையின் வயிற்றிலோ தொப்புள் கொடி இணைந்துள்ளது. கடந்த ஒன்பது மாதங்களாய் இந்த தொப்புள்கொடி இந்த குழந்தைக்கு (புருஷனுக்கு) ஏராளமான நன்மைகளைச் செய்தது உண்மைதான்! கடந்தகாலத்தில் இவனுக்குத் தேவையானதையெல்லாம் தியாகத்துடன் தந்தருளி பாதுகாத்ததும் உண்மைதான்! ஆகவே "இந்த தொப்புள் கொடியை யாரும் வெட்டவேண்டாம்..... அது என்னோடுகூட பத்திரமாய் இருக்கட்டும்" என்று பிறந்த குழந்தை (புருஷன்) சொல்ல முடியுமா? அப்படி அவன் சொன்னால் அந்தக் குழந்தை எவ்வளவு காலம் ஜீவிக்கும்? புத்தியுள்ள எந்த டாக்டரும் தொப்புள் கொடியை வெட்டிவிட வேண்டும் என்றே கூறுவார், என்பது உங்களுக்கே தெரியும்தானே!!

இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அநேக கணவன்மார்கள் உணர்வுபெற்று உடனடியாக இந்த தொப்புள் கொடியை வெட்டிவிட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். "ஆ, பாசமுள்ள தொப்புள் கொடியே உன்னை நான் எப்படி வெட்டுவேன்" என காத்துக் கொண்டிருக்காதீர்கள்!! என் சகோதரனே, துரிதமாய் தொப்புள் கொடியை வெட்டுங்கள். நீங்கள் இப்போது பிறந்திருக்கும் புதிய உலகில் (குடும்ப ஜீவியத்தில்) பிழைத்திருக்க வேண்டுமென்றால், ஒன்றிலிருந்து விடுபட்டு மற்றதைப் பற்றிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னிருந்த பாசத்தின் பிடியிலிருந்து விலகி, உங்களின் பாசம் மனைவியைப் பற்றிக் கொள்ளக்கடவது. அதாவது, ஓர் வலிமையான பெவிகால் போன்ற பசை இரண்டு பேப்பர் துண்டுகளை ஒட்டுவதைப் போல ஒட்டிக் கொள்ளுங்கள். இனி அந்தப் பேப்பர் துண்டை ஒருவரும் பிரிக்க முடியாது. அப்படியே பிரித்தாலும், ஒன்றை மற்றொன்று பற்றிக் கொண்டுதான் கிழிந்து வரும். இவ்வாறாக திருமண வாழ்வில் கணவனும் மனைவியும் ஒன்றாய் இருப்பதே தேவனுடைய திட்டமாகும்.

### 6. ஒருவரையொருவர் துரிதமாய் மன்னிப்பதும், சந்தேகமில்லாது வாழ்வதும் "அருமையான" குடும்பத்திற்கு வழி!

நாம் வாழும் இந்த உலகத்தில் நம்மைச் சுற்றிலும் ஏராளமான தீமைகள் சூழ்ந்திருக்கின்றன. மேலும் கணவன் மனைவியாகிய நாமும் பூரணமானவர்கள் அல்ல. ஆகவே, நாமும்

ஏராளமான தவறுகளைச் செய்திட முடியும். இதுபோன்ற சமயங்களில் நம்மில் ஒருவர் தவறு செய்தால் நாம் என்ன செய்ய வேண்டும்? இங்குதான் "மன்னிப்பு என்னும் பசை" வலிமையாய் கிரியைச் செய்ய வேண்டும். இச்சூழ்நிலைகளில் இந்த பசைதான் உங்களைப் பிரிக்கவிடாமல் ஒட்டிக்கொள்ளச் செய்யும். இன்று பொதுவாய் அநேக குடும்பங்களில் கணவனும் மனைவியும் பிரிந்திருப்பதற்கு ஓர் முக்கிய காரணம் உண்டு. அது ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் சந்தேக எண்ணங்களேயாகும். வீட்டிலிருக்கும் மனைவி "தூரத்திலிருக்கும் என் கணவனுடைய சிந்தை என்னவாயிருக்கும்?" என்று யோசிக்கிறாள்! அல்லது தூரத்திலிருக்கும் கணவன் "இப்போது என் மனைவி என்ன செய்து கொண்டிருப்பாள்?" என்று சிந்திக்கிறான்!! இவையாவும் **வெறிகொண்ட பற்றுதலினால்** உண்டான சந்தேக எண்ணங்களாகும். ஆம், நீங்கள் ஒருவரை ஒருவர் நம்புவதால் மாத்திரமே நன்றாக ஒட்டிக்கொண்டிருக்க முடியும். அதுவல்லாமல் ஓர் வெறி கொண்ட பற்றுதல் உங்களை ஒருபோதும் ஒன்றாய் இருக்கவே வொட்டாது!

**நம்பிக்கையும், ஐக்கியமும் ஒன்றோடொன்று இணைந்து செல்லும் நண்பர்கள்!!**

என்ன நடக்கிறது என்று நான் விளங்கிக்கொள்ளவிட்டாலும் நானோ நம்பும் மனிதனாய் இருக்க வேண்டும். இன்று இதை வாசிக்கும் எல்லாக்கணவன்மார்களும், எல்லா மனைவிமார்களும் ஒன்று, ஒருவரை ஒருவர் நம்பவேண்டும் அல்லது பிரிந்திருக்க வேண்டும்! இந்த இரண்டு தெரிந்து கொள்ளுதல் தவிர நீங்கள் ஒன்றாய் இருப்பதற்கு வேறு வழி இல்லவே இல்லை. நீங்கள் விவாகரத்து செய்வீர்கள் என நான் கூறவில்லை. ஆனால் நீங்கள் ஒன்றாய் இருக்க மாட்டீர்கள் என்றே கூறுகிறேன். ஆம், ஒருவரையொருவர் நம்புவது ஐக்கியத்தின் மிக வலிய தேவையாகும்.

வேதம் கூறுகிறபடி கணவனாகிய உங்களிடத்தில் மனைவியைப் பற்றிக்கொள்ளும் வாழ்க்கை வேண்டும். நாம் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் உங்கள் வேலை கூட மனைவியை விட மேலானதாய் இருக்கக்கூடாது. உங்கள் மனைவியை விட்டு விட்டு பணம் சம்பாதிப்பதையே நோக்கமாக **தூரதேசம்** சென்று விடாதீர்கள். நீங்கள் பெற்றிடும் பிள்ளைகளும் மனைவியைக் காட்டிலும் அல்லது கணவனைக் காட்டிலும் முக்கியமாய் மாறிட வேண்டாம். நம் இந்திய தேசத்தில் அநேக தம்பதியர் ஒருவரை

யொருவர் நேசிப்பதைக் காட்டிலும் தங்கள் பிள்ளைகளையே அதிகம் நேசிக்கிறார்கள். ஆ, இது துயரமன்றோ! இதுபோன்ற நிலை வேதவசனத்திற்கு முரணானதும், அஞ்ஞான மார்க்கத்திற்குரியதுமாகும்.

**7. கணவன் மனைவிக்கிடையே உள்ள "காம உணர்வுகள்" தேவன் வகுத்த பரிசுத்தமும் கனமும் நிறைந்த உறவேயாகும்!**

முடிவாக, கணவனும் மனைவியும் தங்கள் சரீரத்திலும் ஒன்றாய் இருக்க வேண்டும். "காமத்தை" (Sex) ஏதோ அருவருப்பானதாக வேதம் கூறவே இல்லை. அவை அசுத்தமென விசுவாசிக்கும், அசுத்த சிந்தையுள்ளவர்களுக்கே காமம் அசுத்தமாயிருக்கிறது. அதை கனமுள்ளது என்றும் பரிசுத்தமானது என்றுமே தேவனுடைய வார்த்தை கூறுகிறது. இவ்வுலகில் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பாகவே தேவன் காமத்தை சிருஷ்டித்து விட்டார்! இருப்பினும் திருமண எல்லைக்கோட்டிற்கு வெளியே ஈடுபடும் எந்த காமமும் மகாகேடும், அருவருப்பும் கொண்டதாகும். ஆனால் திருமண எல்லைக்குட்பட்ட காமமோ தெய்வீகமானதாய் விளங்கிட முடியும்!! (இதைக் குறித்த மேலும் விரிவான விளக்கத்தை அடுத்த அதிகாரத்தில் நாம் காணலாம்.)

மேலும் இவ்வசனத்தின்படி மனைவி விரும்பும் போதெல்லாம் புருஷனும், புருஷன் விரும்பும் போதெல்லாம் மனைவியும் தங்கள் சரீரத்தை "காம உறவுக்கு" விட்டுத்தர வேண்டும். தேவனுடைய வார்த்தை சிறிதும் ஒளிவுமறைவு இன்றி நம்மோடு நேருக்கு நேர் பேசுகின்றபடியால் நாம் தேவனை ஸ்தோத்தரிக்கக்கடவோம். சிறிதும் பழுதற்ற நம் தேவனுடைய வார்த்தைகளை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டு அதைப் பின்பற்றுவோமென்றால் நம்முடைய திருமண வாழ்க்கை "நல்லது" என்ற நிலையிலிருந்து "மிகவும் நல்லது" என்ற நிலையைக் கண்டடையும் என்பதில் சந்தேகமேயில்லை!!

இந்த அற்புத மணவாழ்க்கை, தேவனுடைய வார்த்தையை கனம்பண்ணி இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் யாவருக்கும் சொந்தமானதாகும்! அவருடைய அடிச்சுவட்டில் நடந்து "ஒளிமய" குடும்பவாழ்க்கையை நம் தேசத்தில் மலையின்மேல் உள்ள பட்டணமாய் அமைத்திடக்கடவோம்! ஆமென்.

# ஒருவரையொருவர் புரிந்து வாழுதல்

"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்" என பிரசங்கி 4:9 கூறுகிறது. இந்த வசனத்தை LIVING BIBLE மொழிபெயர்ப்பு "இரண்டு பேர் சேர்ந்தால், அவர்கள் இருமடங்கு பணியை நிறைவேற்று வார்கள்" எனக்கூறுகிறது. அதாவது இரண்டு பேர் செய்வதைவிட "இரு மடங்கு" அதிகமாய் நிறைவேற்றுவார்கள் என்பதையே இவ்வசனம் கூறுகிறது.

அதே போல் "ஒருவன் விழுந்தால் வேறொருவன் அவனைத் தூக்கி விடுவான்" என்றும் பிரசங்கி கூறுவதை வாசிக்கிறோம். ஒருவன் விழும் போது அவனைத் தூக்கிவிடுவதற்கு ஒருவனும் இல்லாதிருந்தால் அது எவ்வளவு பரிதாபமாக இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். இவ் விதமே தேவன் நம் திருமணத்தில் கணவனையும் மனைவியையும் "ஒருவருக் கொருவர்" வாழ்க்கைத் துணையாய் வைத்திருக்கிறார். உங்களில் ஒருவர் விழும்போது மற்றொருவர் அவர் விழுந்ததைக் கண்டு குறை கூறுவதற்கல்ல .... அவரைத் தூக்கிவிடுவதற்கே தேவன் உங்களை இணைத்துள்ளார்!

இப்போது உங்களுக்கு நீங்களே சில கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள் "மெய்யாகவே நான் திருமணம் செய்து கொண்டது எனக்கு நல்லதுதானா? என் திருமணம் நான் தனிமையாயிருந்ததைக் காட்டிலும் மெய்யாகவே நல்ல விசேஷத்தை எனக்கு கொண்டு வந்திருக்கிறதா?...." இன்று அநேகர் இந்த கேள்விகளுக்கு வேதம் கூறுவதைப் போல் நல்ல பதிலைப் பெற்றிருக்கவில்லை. அதற்கு மாறாக இவர்களுடைய பதில் "நான் தனியா யிருந்திருந்தால் நன்றாய் இருந்திருக் குமே!" என்பதாகவே இருக்கிறது.




ஆனால் வேதமோ நீங்கள் தனிமையாய் இருந்த நாட்களை விட "வாழ்க்கைத் துணையாய் - இருவராய்"

*சேர்ந்திருப்பதே மிகவும் நல்லது எனக் கூறுகிறது. ஆகவே நீங்கள்* **வேதத்தை விசுவாசித்து** *“என் கணவனின் குறைகள் எவ்வளவுதான் இருந்தாலும்.... நாங்கள் ஒண்டியாயிருப்பதைக் காட்டிலும் சேர்ந்திருப்பதே நலம்! இருவர் ஒருவரைக் காட்டிலும் அதிக வலிமையாய் குடும்பத்திற்கும், சபைக்கும் செய்து முடிக்க முடியும்!” என்றே கூறுபவர்களாய் இருக்க வேண்டும்.*

*கணவனும் மனைவியுமாய் நீங்கள் சேர்ந்து வாழும்போது ஒருவரிலுள்ள குறைகளை மற்றொருவர் வெகு சீக்கிரத்தில்* **ஏராளமாய்** *காணமுடியும். ஆனால் நீங்கள் சபைக்கு வரும்போது, மற்ற தம்பதியரிடம் காணும் குறைகளோ “ஒருசதவீதம்” மாத்திரமே இருப்பதுபோல் உங்களுக்குத் தோன்றும். ஆனால் உங்கள் கணவரிடமோ அல்லது உங்கள் மனைவியிடமோ ஏராளமான குறைகள் இருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அதாவது உங்கள் கணவனை அல்லது மனைவியைவிட நிச்சயமாய் சபையிலுள்ள மற்றவர்கள் மேலானவர்கள் என்பதே உங்கள் அபிப்பிராயமாய் இருக்கிறது! ஆனால் இந்த உங்களுடைய எண்ணம் நூற்றுக்கு நூறு பொய்யான எண்ணமேயாகும்.*

1. **பிறர் மனைவியைப் புகழுதல், பிறர் கணவனைப் புகழுதல்.... ஆகிய தீமையான நடைமுறைகள் உங்கள் ஐக்கியத்தை சீர்குலைக்கும். ஒருவரையொருவர் மேன்மையாக மதிக்காமல், பிள்ளைகளுக்கு முதலிடம் தருவதும் ஐக்கியத்தை சீர்குலைக்கும்!**

*“தேவன் இணைத்ததை......” என்றும் இயேசு குறிப்பிட்டார். இது திருமண வாழ்க்கையில் ஒரு ஆச்சரியமான வசனம் அல்லவா! நாம் இன்று சபையில் வாழ்க்கைத் துணையை தெரிந்து கொள்வதற்கு மிக கவனமாய் தேவசித்தம் அறிவதற்காக “சுமார் மூன்று மாதங்கள்” ஜெபம் செய்து, தேவசித்தத்தை திட்டவட்டமாய் அறிந்தே பின்பே திருமணத்தையே முடிவு செய்கிறோம். ஆனால் இயேசுவின் நாட்களில் கிட்டதட்ட 99% திருமணங்கள் பெற்றோர்களால் ஒழுங்கு செய்யப்பட்டவைகளேயாகும்* (ARRANGED MARRIGE). *அதிலும் 90% திருமணங்களில் மணப்பெண் மணமகனையோ அல்லது மணமகன் மணப்பெண்ணையோ பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட திருமணத்தைக் குறிப்பிட்டே* **“தேவன் இணைத்ததை** *மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்” (மத்தேயு 9:6). என இயேசு கூறினார்.*

*பார்த்தீர்களா, மேற்கண்டவிதமாய் ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களைக் கூட “தேவன் இணைத்தது” என இயேசு ஆழமாய்*

*விசுவாசித்தார். திருமணம் செய்வதற்கு முன்பாக தேவசித்தம் அறிவதற்கு காத்திருந்து ஜெபிப்பதுதான் மிகவும் நல்லது. இருப்பினும் இவ்வாறெல்லாம் கவனமாய் ஜெபிக்காமலே திருமணங்கள் நடந்திருந்தாலும், அவர்களையும் தேவனே ஒன்றாக இணைத்தார் என்பதையும் நாம் விசுவாசிக்க வேண்டும்.*

*இவ்வாறு தேவன் தம்பதியர்களை* **இணைத்திருப்பாரென்றால்** *அவர்களைப்* **பிரிக்க வகைதேடும்** *எந்த சத்துவங்களும் பிசாசிடமிருந்தே வருவதாயிருக்கிறது. இதுவே மார்க்க கண்மூடி குழுவினரிடம் காணப்படும் ஒரு அடையாளமாயும் இருக்கிறது. இவர்கள் கணவனையும் மனைவியையும் அல்லது பெற்றோர்களையும் பிள்ளைகளையும் பிரித்துவிடுகிறார்கள். இவ்வாறு பிரிப்பதின் மூலமாய், பிரிக்கப்பட்ட ஒருசாரர்களிடத்தில் தங்களின் ஆதிக்கத்தை மிக இலகுவாய் பயன்படுத்துகிறார்கள். அநேக சமயங்களில் பிள்ளை களிடமிருந்து தகப்பனை பிரிப்பது, சில சமயங்களில் விவாகரத்தை ஏற்படுத்துவதும் இக்குழுவினருக்கு மிக சாதாரணமான ஒன்று!*

*இவ்வாறெல்லாம் சமுதாய தீமைகள் இருப்பதினிமித்தமாய் நாங்கள் சபையில் மிக கவனமாய் நடந்து கொள்கிறோம். தங்கள் பெற்றோரைச் சார்ந்துள்ள 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளிடம் "உங்கள் பெற்றோர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதற்கு கீழ்படியுங்கள்.... ஒருவேளை, சபைக்குப் போகவேண்டாம் என பெற்றோர்கள் கூறினாலும் அவர்கள் அனுமதி அளிக்கும் வரை சபைக்கு வரவேண்டாம்" என கூறிவிடுகிறோம். அதேபோல், இரட்சிக்கப்படாத கணவன் தன் மனைவி சபைக்கூட்டத்திற்குச் செல்வதைத் தடை செய்தால், நாங்கள் அந்த சகோதரியிடம் "உங்கள் கணவன் கூறுவதற்கு கீழ்ப்படியுங்கள். அவருடைய அனுமதியில்லாமல் இரகசியமாய் சபைக்கு வந்து பிரச்சனைக்கு உள்ளாகாதீர்கள்" என கூறிவிடுகிறோம். ஏனென்றால் கணவனும் மனைவியும் அல்லது தகப்பனும் பிள்ளைகளும் பிரிக்கப்படுவதை நாங்கள் ஒருதுளி கூட விரும்புவதில்லை.*

*ஆனால் இன்றோ பக்தியின் பேரில் ஏராளமான பிரிவினைகள் உண்டாகியிருப்பதை நாம் காண்கிறோம். இவையாவும் சாத்தானுடைய பயங்கர கிரியைகளேயாகும்.*

**ஆகவே நீங்கள் ஏதோ செய்வதினிமித்தம் உங்கள் கணவனுக்கோ அல்லது உங்கள் மனைவிக்கோ ஏதேனும் பிளவை கொண்டு வந்தால் நீங்களும் சாத்தானின் கிரியைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள்!**

ஏனென்றால் தேவன் இணைத்ததை எந்த மனுஷனும் பிரிக்கக்கூடாதென வேதம் திட்டவட்டமாய் நமக்கு கூறுகிறது.

ஒரு புருஷன் தன் மனைவியல்லாத வேறொரு ஸ்திரீயைப் புகழ்வது ஒரு கொடிதான குணம் என நாம் ஏன் கூறுகிறோம்? ஏனென்றால் நீங்கள் அந்த ஸ்திரீயினுடைய அழகையோ அல்லது அவருடைய வீட்டை சுத்தமாய் வைத்திருக்கும் திறமையையோ அல்லது அவருடைய சிறந்த சமையலையோ நீங்கள் புகழ்ந்து பேசும்போது..... நீங்கள் அறியாமலே உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் இடையே பெரும்பிளவை அல்லது பிரிவினையை கொண்டு வருகிறீர்கள்! அதேபோல், ஒருமனைவி தன் புருஷன் அல்லாத வேறொரு மனிதனை அவருடைய சுறுசுறுப்பின் நிமித்தமோ அல்லது அவருடைய உத்தியோக திறமையின் நிமித்தமோ அல்லது வேறு எந்த காரியத்தின் நிமித்தமோ நீங்கள் புகழ்ந்தால்..... இப்போது நீங்கள் அறியாமலே உங்களுக்கும் உங்கள் கணவனுக்குமிடையில் பிளவை அல்லது பிரிவினையை கொண்டு வந்துவிட்டீர்கள்! இங்கே நாம் காணவேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், உங்கள் மனைவி ஆவிக்குரியவர்களாய் இல்லாதிருக்கும்போது அவர்களை ஆவிக்குரியவர்களாக நீங்கள் எண்ண வேண்டிய அவசியமில்லை. அதேபோல் உங்கள் கணவர் ஆவிக்குரியவராய் இல்லாதிருக்கும்போது நீங்கள் அவரை ஆவிக்குரியவராக எண்ணவேண்டும் என்றும் வேதம் கூறுவதில்லை. ஆனால் நீங்களோ ஒருவரையொருவர் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமே! இது ஒன்றே மிகவும் முக்கியமானதாகும்!!

இவ்வாறு ஒருவரையொருவர் மதிப்பதற்கு எவ்வித ஆவிக்குரிய தரமும் தேவையில்லையே! நீங்கள் கண்டிப்பாய் ஒருவரையொருவர் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் கணவரையோ அல்லது மனைவியையோ உங்களால் மதிக்க முடியாததற்கு எந்த சாக்குபோக்கும் தேவனுக்குத் தேவையில்லை! ஏனென்றால் உங்கள் இருவரையும் தேவன் தான் ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறார். எனவே ஐக்கியத்திற்கு உறுதுணையாக இருக்கும் யாவும் தேவனிடத்திலிருந்தும்...... ஐக்கியத்திற்கு ஊறுவிளைவிக்கும் யாவும் பிசாசினிடத்திலிருந்துமே வருகிறது. உதாரணமாய், உங்கள் கணவனையோ அல்லது மனைவியையோ காட்டிலும் உங்கள் பிள்ளைகளை நீங்கள் அதிகமாய் நேசித்தால்..... இப்போது நீங்கள் விவாகரத்து செய்யாவிட்டாலும் ஒருவிதமான பிரிவினையை கொண்டு வந்து விட்டீர்கள் என்பது உறுதி!! இதை நீங்களே அறிவீர்கள். பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பாக நெருக்கமாக இருந்த நீங்கள் பிள்ளைகள் பிறந்தவுடன் உங்களுக்குள் இடைவெளி ஏற்பட

அனுமதிக்கலாமா? இங்கு பிள்ளைகள் ஒன்றும் பிசாசின் வேலையைச் செய்யவில்லை. ஆனால் நீங்கள்தான் சாத்தான் உங்களுக்கு போதித்த படி பிள்ளைகளை உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் அல்லது கணவனுக்கும் நடுவில் வைத்துவிட்டீர்கள்!

இப்போது தேவன் உங்களைப் பார்த்து என்ன கூறுகிறார் தெரியுமா? “உங்கள் கணவன் மனைவி உறவில் நீங்கள் கொண்டு வைத்த பிள்ளைகளை தயவுசெய்து அப்புறப்படுத்துங்கள்!” என்றே கூறுகிறார். **கணவன் மனைவி உறவில் பிள்ளைகள் குறுக்கே வரக்கூடாது** என்ற சத்தியம் மிகமிக முக்கியமாகும். ஆனால் இதற்கு நேர்மாறாகத்தான் நம் இந்திய தேசத்தில் ஏராளமான வீடுகளில் சம்பவிக்கிறது. இதனிமித்த மாய், பிள்ளைகள் வளர்ந்து மேற்படிப்பிற்கோ அல்லது தனிக்குடித் தனத்திற்கோ சென்றவுடன் “ஐயோ பிள்ளைகள் போய்விட்டார்களே...... போரடிக்கிறது!” எனக் கூறுகிறார்கள். ஆனால் எனக்கோ இதற்கு நேருக்குமாறாய் பிள்ளைகள் இல்லாதிருக்கும் போதுதான் என் மனைவியோடு மிகுந்த பரவசத்துடன் நட்பும், ஐக்கியமும் கொள்ளுகிறேன். இது எப்படி எனக்குச் சாத்தியமாயிருக்கிறதென்றால், என் கடந்த 30 ஆண்டு திருமண வாழ்வில் பிள்ளைகளைக் காட்டிலும் என் மனைவியைத்தான் முக்கிய இடத்தில் வைத்திட பழகியிருக்கிறேன். ஆகவே இப்போது என்னுடைய நான்கு பிள்ளைகளும் வீட்டிலிருந்து வெளியே சென்றுவிட்டாலும் கணவன் மனைவியாகிய எங்களுக்கும் போரடிப்பதாக எண்ணுவதேயில்லை!

இவ்வாறு உங்கள் பிள்ளைகள் உங்களைவிட்டு வெளியேறும் காலம் வரைக்கும் நீங்கள் காத்திருக்கலாமா? அந்நாளில் உங்கள் மனநிலையை உங்களால் திடீரென்று மாற்றிக்கொள்ளவே முடியாது!

> **உங்கள் பிள்ளைகள் சிறியவர்களாய் இருக்கும் இந்த காலத்திலேயே உங்கள் கணவனோ அல்லது மனைவியோ உங்கள் பிள்ளைகளைக் காட்டிலும் அதிக முக்கியமாய் இருப்பதற்கு தயவுசெய்து தீர்மானித்துவிடுங்கள்.**

கணவனுக்கும் மனைவிக்கும் உரிய நேசத்தைக் காட்டிலும் தங்கள் பிள்ளைகளை அதிகமாய் நேசிப்பது நம் இந்திய புறஜாதி மக்களின் மனப்பான்மையாகும். இந்த புறஜாதியாரின் மனப் பான்மைக்கு ஒப்பாய் வாழ்ந்துவிட்டால் உங்கள் பிள்ளைகள் நன்மை அடைவார்கள் என நீங்கள் எண்ணவேண்டாம். மாறாக பெருத்த தீமைகளையே அவர்கள் அடைவார்கள். நாம் எப்போதுமே தேவனுடைய வசனங்களுக்கு கீழ்ப்படிவதுதான் மிகச்சிறந்த வழியாகும்.

எனவே உங்கள் பிள்ளைகளுக்கு மேன்மையானவைகளை அளித்திட நீங்கள் விரும்பினால் வேதம் கூறுகிறபடி புருஷர்களாகிய நீங்கள் "உங்கள் மனைவியை கிறிஸ்து சபையை நேசித்ததுபோல நேசிக்கக்கடவீர்கள்." அதேபோல், மனைவியராகிய நீங்கள் "உங்கள் கணவருக்கு சபை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருப்பது போலவே நீங்களும் உங்கள் கணவருக்கு கீழ்ப்படிந்திருங்கள்." இதுவே உங்கள் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு தேவன் நியமித்த மிகச்சிறந்த வழியாகும்.

2. **தாழ்மையின் அடித்தளத்தில் வேரூன்றி, ஒருவரையொருவர் மன்னித்து, மன்னிப்பு கேட்டு..... புரிந்து வாழுங்கள்!**

ஆகவே வேதம் நமக்கு கற்றுத்தருகிறபடி "உங்கள் கணவரோடு அல்லது மனைவியோடு இசைந்திருந்து" உங்கள் குடும்ப ஜீவியத்தின் அஸ்திபாரம் வலுவானதாய் மாறக்கடவது! இவ்வாறு உங்கள் இருவருக்குள் ஐக்கியத்தை நீங்கள் பாதுகாப்பது மாத்திரமல்லாமல், நாட்கள் செல்லச்செல்ல அந்த ஐக்கியம் ஆழமானதாயும், வலிமை நிறைந்ததாயும் வளர்ந்து பெருகவேண்டும். கணவன் மனைவியராகிய உங்களுக்கு இந்தப்பகுதி மிகமிக முக்கியமானதாகும். ஆகவே உங்கள் ஐக்கியத்தின் வளர்ச்சிக்காய் நீங்கள் எவைகளை பேசுகிறீர்களோ அல்லது சிந்திக்கிறீர்களோ அவைகள் அனைத்தும் நிச்சயமாய் **தேவனால்** உண்டானதாகவே இருக்கும். இதற்கு மாறாய் உங்களுடைய செயலோ அல்லது உங்களுடைய வார்த்தைகளோ ஐக்கியத்திற்கு ஊறுவிளைவிப்பதாயிருந்தால் அவைகள் **சாத்தானிடமிருந்து** உண்டானவைகளேயாகும். ஒருவேளை நீங்கள் தவறி மனம் பாதிக்கக்கூடிய வார்த்தைகளைப் பேசிவிட்டாலும் உடனடியாக மன்னிப்பு கேட்டுவிடுங்கள். இவ்வாறு திருமண தம்பதியராகிய நீங்கள் உங்கள் ஜீவகாலமெல்லாம் மன்னிக்கிறவர்களாயும், மன்னிப்பு கேட்கிறவர்களாயும் இருங்கள்! உங்களால் மன்னிப்பு கேட்க முடியவில்லையென்றால் நீங்கள் பெருமையாயிருப்பதையே அது காட்டுகிறது. அதேபோல் உங்களால் மன்னிக்க முடியவில்லையென்றால் அதுவும் உங்கள் பெருமையைத்தான் சுட்டிக் காட்டுகின்றது. இந்த "பெருமை" என்ற காரணத்தை தவிர உங்களின் இந்த "மன்னிக்காத" அல்லது "மன்னிப்பு கேட்காத" சுபாவத்திற்கு வேறு எந்த காரணமும் இல்லவேயில்லை.

இக்கொடிய பெருமையைக் குறித்து **ஆண்ட்ருமுரே** என்ற பரிசுத்தவான் எழுதிய "தாழ்மை" என்ற கைப்பிரதியை நான் மறப்பதேயில்லை. அந்த செய்தியை என்னுடைய வேதாகமத்தில்

வைத்திருந்து அடிக்கடி வாசிப்பதுண்டு. அந்த செய்தியில் அவர் எழுதும்போது "உங்களுக்கு எவ்வளவு பெருமை இருக்கிறதோ அவ்வளவுக்கதிகமாய் பிசாசும் உங்களோடு இருப்பான்" என எழுதியுள்ளார். அதேபோல் "உங்களிடத்தில் எவ்வளவு தாழ்மை உள்ளதோ அந்த அளவுக்கு கிறிஸ்துவின் ஆவியும் உங்களில் வாசமாயிருக்கும்" என்றும் எழுதினார். அவர் வெளிப்படுத்திய இந்த சத்தியத்தை என் முழுஇருதயத்தோடும் நான் விசுவாசிக்கின்றேன்.

ஆகவே ஐக்கியத்தின் நல்ல உறவு இந்தத் தாழ்மையில்தான் கட்டப்படுகிறது. அதாவது உங்களிடத்தில் தாழ்மை இருக்கிறபடியால் மிகத்துரிதமாய் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் உங்களால் முடிகிறது! இக்குறிப்பிட்ட பகுதி உங்கள் ஜீவகாலமெல்லாம் எப்போதும் தங்கியிருக்க வேண்டிய மிகமுக்கியமான பகுதியாகும்.

3. **கணவன், மனைவி "பாலிய உறவு" தேவன் நியமித்த பகுதியேயாகும்! இதை கணவன் தன் கடமையாகவும், மனைவி தன் கடமையாகவும் நிறைவேற்றிட வேண்டும்!**

மேலும் மத்தேயு 19:6-ம் வசனத்தில் இயேசு குறிப்பிடும்போது கணவனும் மனைவியும் "தேவனால் இணைக்கப்பட்டவர்கள்" மாத்திரமல்லாமல், அவர்கள் இனியும் "இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்" என்றும் இயேசு கூறினார். இது எத்தனை ஆச்சரியமான வசனமாயிருக்கிறது!

மேற்கண்ட வசனத்தில் "ஒரே மாம்சம்" என கூறப்பட்டிருப்பது நம் சரீரத்திற்குரியதேயாகும். அதாவது கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள "பாலிய உறவையே (Sex) குறிப்பிடுகிறது. இவ்வாறு கணவனுக்கும் மனைவிக்குமுள்ள பாலிய உறவைப் பற்றி பேசுவதற்கு இயேசு சிறிதும் வெட்கப்படவேயில்லை. அவர்கள் இனி இருவரா யிராமல் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என இயேசு கூறினார். இங்கு ஒரு வித்தியாசத்தை நாம் கவனிக்க வேண்டும். "அவர்கள் ஒரே ஆவியாயிருப்பார்கள்" என இயேசு கூறவில்லை. அவ்வாறு கணவனும் மனைவியும் ஒரே ஆவியாய் மாறுவதற்கு பல ஆண்டுகள் ஆகக்கூடும். ஆனால் நீங்கள் திருமணமான அன்றே "ஒரே மாம்சமாய்" மாறிடமுடியும். இவ்வாறு ஒரே மாம்சமாய் இருந்திட நீங்கள் கொண்டிருக்கும் வாஞ்சைதான், பல ஆண்டுகள் கழித்து நீங்கள் ஒரே ஆவியாயும் மாறவேண்டும் என்ற விருப்பத்திற்கு முன்னோடியான அடையாளமாயிருக்கிறது. இருப்பினும் திருமண உறவில் முதலாவது துவக்கம் சரீரத்தில்தான் தொடங்குகிறது! எனவேதான் சரீரப்

*பிரகாரமான பாலிய உறவு முக்கியமானதாயிருக்கிறது. அதை "அதிக முக்கியம்" என நான் குறிப்பிடுவது இல்லை. ஏனென்றால் மனைவி அதிக சுகவீனம் அடைந்து பாலிய உறவுக்கு சாத்தியமில்லாமல் போகும்போது நாங்கள் "ஒன்றாயில்லை" என கூறவேண்டிய அவசியமில்லை. எனவேதான் இந்த பாலிய உறவை அதிக முக்கியமென நான் கூறுவதில்லை. இருப்பினும் இதை தேவனே நியமித்திருக்கிற படியால் "முக்கியமானது" என்று மாத்திரமே நான் கூறுகிறேன். ஆகவே ஒருவருக்கொருவர் "ஆவியில் கொண்டிருக்கும் அன்னியோன்ய ஐக்கியமே" பாலியத்தின் சரீர ஐக்கியத்தைவிட அதிக முக்கியத்துவம் நிறைந்ததாகும்.*

*இதைக் குறித்து நமக்குள் இரண்டு மனப்பான்மை எழ முடியும். ஒன்று காரியம் இப்படியாய் இருக்கிறபடியால் நான் இதை சகித்துதான் ஆகவேண்டும் என எண்ணும் மனப்பான்மை. குறிப்பாய் இவ்விஷயத்தில் மனைவியர்கள் இந்த மனப்பான்மை கொண்டிருப்பதுண்டு, ஏதோ சகித்திருப்பதைப் போலவே அல்லது ஏனோதானே என அனுபவிக்கிறது போலவோ இவர்கள் நடந்து கொள்வதுண்டு. சில பெண்களின் மனப்பான்மை* "**மகாராணி மனப்பான்மைபோல்**" *பொல்லாததாய் இருப்பதையும் நாம் கேள்விப்படுகிறோம். இவர்கள் தங்கள் கணவரைப் பார்த்து "இந்தந்த காரியங்களை நீர் செய்து முடித்தால்..... நான் உமக்கு அனுமதி தருவேன்" எனக் கூறுவார்கள். இவ்வாறு நடந்து கொள்வது நூற்றுக்கு நூறு பொல்லாத குணமேயாகும்! ஏனென்றால் இந்த உறவை தேவன்தான் நியமித்தாரேயல்லாமல், இதைக் குறித்து உங்கள் அபிப்பிராயத்திற்கு சிறிதும் இடமேயில்லை. ஆம், இந்த பாலிய உறவு தேவன் வழங்கிய ஆணித்தரமான கட்டளையாகும்.*

*இதைக் குறித்து வேதம் மேலும் கூறும்போது, "புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்" (1கொரி.7:3) எனக் கூறுகிறது. இதுபோன்ற ஒரு வசனத்தை முன் வசனங்களோடு நீங்கள் தொடர்புபடுத்தி வாசிக்கவில்லையென்றால் முற்றிலும் தவறான அர்த்தத்தைத்தான் நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இங்கு கூறப் பட்டிருப்பதுபோல் புருஷன் மனைவிக்கும், மனைவி புருஷனுக்கும் செய்ய வேண்டிய கடமை என்ன? இந்த வசனத்தை தவறாய் புரிந்து கொண்டவர்கள், கணவனின் கடமை பிழைப்பிற்காக பணம் சம்பாதிப்பதும், பிள்ளையைக் கண்டிப்பதும், வீட்டுப் பொறுப்புகளைக் கவனிப்பதுமே..... அவர்களுடைய கடமையாக எண்ணுகிறார்கள்.*

*இதேபோல் மனைவியினுடைய கடமை வீட்டை கவனித்துக் கொள்வதும், சமையல் செய்வதும், பொருட்களை அடுக்கி வைப்பதுமே.... அவர்களின் கடமையென எண்ணுகிறார்கள். ஆனால் இவ்வசனத்தின் முன் பின் வசனங்களை நீங்கள் தொடர்புபடுத்தி வாசித்தால் புருஷன் - மனைவிக்குள்ள திருமண உறவைக் குறித்தே பேசுகிறார் என்ற உண்மையை நீங்கள் காணமுடியும்.*

*1கொரிந்தியர்.7:1-ம் வசனம் கூறுகிறபடி நீங்கள் திருமண மாகாதிருந்தால் அது நல்லதுதான். ஆனால், "அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாய் இருக்கவேண்டும்" என இரண்டாம் வசனம் கூறுகிறது. மேலும் இவ்வாறு திருமணம் செய்வதற்கு காரணம் "உங்களுக்குள் வேசித்தனம் இராதபடிக்கு" (வசனம் 2) என கூறுவதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே திருமணம் செய்வதற்குரிய முதல் காரணம் "வேசித்தனத்தை தவிர்ப்பதற்காகவே" என இந்த வசனங்கள் தெளிவாய் கூறுகிறது.*

*இவ்வாறெல்லாம் பாலியத்திற்குரிய காரியங்களை நாம் பேசும்போது சில "சூப்பர் ஆவிக்குரியவர்கள்!" இதெல்லாம் உலகத்திற் கடுத்தவைகள், ஆவிக்குரியவைகள் அல்ல என சொல்லுவதுண்டு. நீங்கள் "இச்சத்தியங்களை" உலகத்திற்குரியவைகள் என எண்ணினால் அப்படியே நீங்கள் எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால் இயேசுவோ நாம் ஒரு சரீரத்தைப் பெற்றவர்கள் என்பதை நன்கு அறிந்திருக்கிறார். எனவேதான், கர்த்தருடைய ஜெபத்தில் "எங்களுடைய பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என ஜெபிப்பதற்கு முன்பாய் "அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிக்கும்படி கற்றுத் தந்தார். ஆனால் இந்த சூப்பர் ஆவிக்குரியவர்கள், "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்.... தீமைகளிலிருந்து எங்களை இரட்சியும் கடைசியாக, உமக்கு விருப்பம் இருந்தால் எங்களுக்கு அப்பத்தைத் தாரும்" என்றுதான் ஜெபிப்பார்கள். ஆனால் இயேசுவோ இவர்களைப் போல் இல்லாமல் பூமிக்குரிய நமது காரியங்களில் மிகுந்த அக்கறை கொண்டவராய் இருந்தார்.*

*இன்று ஏராளமான கிறிஸ்தவர்களும் "சூப்பர் ஆவிக்குரியவர்களாய் இருப்பதினிமித்தமே" இன்னமும் மாம்ஷீக கிறிஸ்தவர்களாய் தேங்கி நிற்கின்றனர்! நம்முடைய சரீரத்தை தேவன்தான் சிருஷ்டித்தார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தீமைக்கு, நம்முடைய சரீரமே காரணம் என்ற எண்ணம் உண்மையல்ல என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இதற்கான*

*நிருபணத்தை நான் உங்களுக்கு விளக்குகிறேன். இயேசுவிற்கு ஒரு சரீரம் இருந்தது. ஆனால், அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை! சாத்தானுக்கு எந்த சரீரமும் இல்லை, ஆனால் அவனுக்குள் முழுக்க முழுக்க பாவம் குடி கொண்டிருந்தது!! இப்போது உங்களுக்கு விளங்குகிறதா? ஆம், பாவம் சரீரத்திலிருந்து தோன்றவில்லை..... மாறாக, நம்முடைய இருதயத்திலிருந்தும், நம்முடைய ஆவியிலிருந்தும், நம்முடைய சிந்தையிலிருந்தும், நம்முடைய மனப்பான்மையிலிருந்துமே பாவம் பிறக்கிறது.*

*"பாலியத்திற்குரிய காமம்" பாவமானது என்ற எண்ணத்தை புறஜாதி மக்கள் கொண்டிருக்கிறார்கள். திருமணத்திற்கு வெளியே சம்பவிக்கும் "காமம்" நிச்சயமாய் பாவம்தான்! நீங்கள் சாப்பிடுவதுகூட வெளியில் உள்ள உணவுவிடுதியில் காசு கொடுக்காமல் சாப்பிட்டால் அதுவும் பாவம்தான். நீங்கள் தூங்குவதுகூட அலுவல் நேரத்தில் தூங்கினால் அதுவும் பாவம்தான். எனவே "காமம் மாத்திரமல்ல" வேறு எதையுமே தவறான இடத்தில் நீங்கள் நிறைவேற்றினால் அவையாவும் பாவமாகவே கருதப்படும். அதேசமயம் சரியான இடத்தில் நீங்கள் செய்திடும் யாவுமே "சரியானதுதான்" என்பதை நீங்கள் அறிய வேண்டும்.*

> **பசி, உறக்கம், காமம் ஆகிய இந்த மூன்று விருப்பங்களையும் தேவன்தான் நம்மில் சிருஷ்டித்தார். ஆனால் ஏதோ ஒருவகையில் இந்த மூன்றில் ஒன்றைக் குறித்து நாம் வெட்கமடைகிறோம்..... ஆனால், மீதமுள்ள இரண்டைக் குறித்தோ நாம் வெட்கமடைவதில்லை!!**

*பார்த்தீர்களா, இவையாவும் சாத்தானுடைய கிரியைகளேயாகும். இந்த காரணத்தினிமித்தமே, குறிப்பாக சகோதரிகள் பாலியத்திற்குரிய காமத்தைக் குறித்து தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் இந்த ஒரு காரியத்தினிமித்தமாய் தங்கள் கணவன்மார்களுக்கு ஏராளமான பிரச்சனைகளைத் தரும் அநேக சகோதரிகள் இருப்பதை நான் அறிந்திருக்கிறேன்.*

*ஆகவே காமமானது கணவனிடத்தில் மனைவியும், மனைவியினிடத்தில் கணவனும் ஒருவருக்கொருவர் நிறைவேற்ற வேண்டிய "கடமையாகவே" இருக்கிறது என பவுல் 1கொரி 7:3-ம் வசனத்தில் கூறினார். மேலும் பவுல் இதை வெளியரங்கமாய் பேசும்போது "ஒரு பெண் திருமணமானவுடன் தன் சுயசரீரத்திற்கு அவள் அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி" எனக் கூறினார் (வசனம் 4). சத்தியம் இவ்வாறிருக்க,*

நீங்களோ என் சரீரத்தைக் குறித்து எனக்குதான் முழு உரிமையுண்டு எனக் கூறுபவர்களாய் இருந்தால், அதற்கு விடை என்ன? இவ்வித எண்ணம் கொண்ட நீங்கள் "திருமணம் செய்யக் கூடாது!" ஆம், அதுதான் தேவன் உங்களுக்குத்தரும் விடை!! ஆனால் நீங்கள் திருமணம் செய்வதாய் இருந்தால் உங்கள் சொந்த சரீரத்தின் மீது உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்ற உண்மையை நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். இதே வார்த்தைகள் கணவனுக்கும் பொருந்துமென பவுல் மேலும் கூறினார். ஆகவே உங்களில் ஒருவருக்கொருவர் காம விருப்பங்களுக்கு நீங்கள் மறுப்பு சொல்லவே கூடாது.

இந்த திருமண உரிமைகளுக்கு நீங்கள் விலகியிருக்க வேண்டிய ஒரே இடம் "உபவாசமும், ஜெபமும்தான்" என பவுல் தொடர்ந்து கூறினார் (வசனம்5). அதுவும் "சிலகாலம்தான்" என்றும் அந்த காலம் முடிந்தவுடன் சாத்தான் அவர்களைச் சோதிக்காதபடி மீண்டுமாய் கூடி வாழ வேண்டும் என்றும் வேதம் கூறுகிறது. பார்த்தீர்களா, "திருமணத்திற்குரிய காமம் முழுக்க முழுக்க ஆவிக்குரியவைகள்தான்!" ஆனால் இன்று ஏராளமான "சூப்பர் ஆவிக்குரியவர்கள்" இவைகளை மாம்ஷீகமானது என எண்ணுகிறார்கள்.

இருவரும் ஒரே மாம்சமாய் இருப்பார்களென இயேசுதான் குறிப்பிட்டார். ஆகவே நாம் ஏதாகிலும் ஒன்றிற்கு ஜெபிப்பதைப் போலவே உங்கள் சரீர பாலிய உறவுகளுக்காகவும் இயேசுவிடம் ஜெபிக்கவேண்டியது அவசியம். அவ்வாறு நீங்கள் ஜெபிக்கும்போது உங்கள் படுக்கையறைக்கு வேறு யாரையும் நீங்கள் அழைக்கவில்லை..... இயேசுவை மாத்திரமே அழைக்கிறீர்கள்! மேலும் உங்கள் சரீர உறவை கிறிஸ்து பரிசுத்தம் ஆக்கும்படிக்கும், அவ்வேளையில் அவர் உங்களை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீங்கள் ஜெபியுங்கள். ஒரு கணவன் தன் மனைவியோடு உறவு கொண்டிருக்கும் வேளையில், வேறு பெண்மணியை மனதில் கொண்டிருந்தால் அல்லது மனைவி அவ்வேளையில் வேறு மனுஷனை மனதில் கொண்டிருந்தால் அது எவ்வளவு அசுசியானது என்பதை நீங்கள் யோசித்துப்பாருங்கள். ஆனால் நீங்கள் உங்கள் படுக்கையறையில், உங்களை ஆசீர்வதிக்கும் படி இயேசுவை அழைத்திருந்தால் இவ்வித அசுத்த எண்ணங்கள் அவருடைய சமூகத்தில் விலகியோடிவிடுமே! ஆகவே கணவனுக்கும் மனைவிக்குமுள்ள சரீர உறவு மகா பரிசுத்தமுள்ளது என நாம் அறிந்திருக்கிறபடியினால் அங்கு இயேசுவை நாம் அழைக்கிறோம்!!

இதுபோன்ற திருமணத்திற்குரிய காம விஷயங்களை நான் பேசுவதற்கு யாதொரு வெட்கமும் எனக்கு இல்லை. நான் வாலிப சகோதரர்களிடம் "சுயபுணர்ச்சியைக்" குறித்து பேசுவதுண்டு. என்னுடைய வாலிப பருவத்தில் இதுபோன்ற நடைமுறைத் தீமைகளை யாரும் எனக்கு எடுத்துக்கூறியதே இல்லை. ஆகவேதான் எண்ணற்ற வாலிபர்கள் இவ்வித தீமைக்குப் பலியாகி உழன்று கொண்டிருக் கிறார்கள். அதேபோல், இன்று கிட்டத்தட்ட எந்த சபையிலும் திருமணத்திற்குரிய சரீர உறவை போதிப்பதேயில்லை. ஆகவேதான் இவ்விஷயத்தில் அநேக வாலிப தம்பதிகளுக்கு குழப்பங்களும் ஏராளமான கேள்விகளும் அவர்களிடம் மண்டிக்கிடக்கிறது.

இவைகளைக் குறித்து வேதாகமம் ஒன்றும் சொல்லாதிருந்தால் நாமும் அப்படியே ஒன்றும் சொல்லாமல் இருந்து விடலாம். ஆனால் வேதாகமமோ இவைகளைக் குறித்த ஏராளமான விஷயங்களை வெளிப்படையாகவே நமக்குப் போதிக்கிறது. அதுவும் குறிப்பாய் **சாலமோனின் உன்னதப்பாட்டு** கணவன் மனைவிக்கிடையேயுள்ள அன்பின் உறவை விரிவாகவே எடுத்துரைக்கிறது. ஆனால் உன்னதப்பாட்டு புத்தகத்தை வேதாகமத்திலிருந்து எடுத்துவிட வேண்டுமென யூதபோதகர்கள் ஆரம்பநாட்களில் கடும் வாதம் செய்தனர். இந்தப் புத்தகம் ஒரு பரிசுத்தமானதல்ல! என வாதித்தார்கள். ஆனால் தேவனோ, இவ்வாறு ஒரு மனைவி தன் புருஷனுடைய சரீரத்தைக் குறித்து வியந்து பேசுவதையும்; ஒரு புருஷன் தன் மனைவியின் சரீரத்தை குறித்து வியந்து பேசுவதையும் தன் வேதபுத்தகத்தில் இருக்கும்படி அனுமதித்துள்ளார். இவையாவும் சில "சூப்பர் ஆவிக்குரியவர்கள்" மாம்ஷீகமானது என கருதுவார்கள் என்பதை அறிந்துதான் பரிசுத்த ஆவியானவர் இந்தப் புத்தகத்தை வேதாகமத்தின் நடுமையத்தில் கொண்டுவந்து வைத்தார்! நான் உங்களுக்கு வருந்தி சொல்ல விரும்புவதெல்லாம், பரிசுத்த ஆவியானவரைக் காட்டிலும் நீங்கள் அதிக ஆவிக்குரியவர்களாய் மாற முயலவேண்டாம் என்ற புத்திமதிதான். அவ்வித உங்கள் முயற்சி வியர்த்தமானது என்பதை நன்கு அறிந்துகொள்ளுங்கள்.

**4. கணவனுக்கு மனைவியைவிட "காம உந்துதல்" அதிகம்! மனைவிக்கு அதுவல்ல பிரச்சனை....... அவளுக்கோ கணவனின் "பாதுகாப்பே" பிரதானம்!! இதை ஒருவரையொருவர் புரிந்து வாழக்கடவோம்!**

தேவன் பரிசுத்தப்படுத்திய இந்த திருமண உறவை ஒருநாளும் அசுத்தம் என சொல்லிவிடாதிருங்கள். இவ்விஷயத்தில் எவைகள்

*எல்லாம் அசுத்தமானவைகள் என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். காமத்திற்குரிய நிர்வாண படங்கள் பார்ப்பது அசுத்தம்! 'செக்ஸ்' கதைப் புத்தகங்களை வாசிப்பது அசுத்தம்! அல்லது வேறொரு வருடைய கணவன் அல்லது வேறொருவருடைய மனைவியின் மீது ஆசைகொண்டிருப்பது அசுத்தம்! ஏன்?..... வேறொருவரின் மனைவியின் சமையலில் நீங்கள் ஆர்வம் கொண்டிருப்பதும்கூட அசுத்தம்தான்!*

**ஆனால் திருமணத்தில் காம உறவு கொண்டிருப்பது ஒரு துளிகூட அசுத்தமானதல்ல. அவைகள் யாவும் தேவனுடைய பார்வையில் தூய்மையும், பரிசுத்தமும் கொண்டவைகள் ஆகும். இவ்வாறு தேவன் பரிசுத்தப்படுத்தியதை அசுத்தமென கூறுவதற்கு நாம் எம்மாத்திரம்!**

*மேற்கண்ட திருமண உறவுகளில் உள்ள காமத்துப் பிரச்சனைக்கு, பொதுவாக சகோதரிகளே முதலிடம் வகிக்கிறார்கள். ஏனென்றால் ஒரு ஸ்திரீயைவிட புருஷனுக்குத்தான் பாலியத்திற்குரிய காம உந்துதல் அதிகமாய் இருக்கிறது. ஆகவே, இவ்விஷயத்தில் காம உறவு* **அவனுக்கு** *ஒரு பிரச்சனையல்ல! இந்த உண்மையை நன்றாய் விளங்கிக்கொண்ட மூத்த சகோதரிகளாய் நீங்கள் இருந்தால், உங்களிடத்தில் கேள்வி கேட்க வரும் இளம் மணப்பெண்களுக்கு இந்த உண்மையை விளக்கிச்சொல்லி அவர்களுக்கு உதவுங்கள்.*

*என் பல ஆண்டு கிறிஸ்தவ ஊழிய அனுபவத்தில் அநேக திருமணத் தம்பதியரை கவனித்துப் பார்த்து அவர்களை விளங்கிக் கொள்ள முயற்சித்ததுண்டு. இவ்வித என் முயற்சியில் நான் கண்டறிந்தது என்னவென்றால், ஒரு புருஷனை திருமணத்திற்கு உந்தித் தள்ளும் அவனுடைய முதல்தேவை , "காமத்திற்குரியதாகவே" இருக்கிறது. இது ஒன்றும் ஆவிக்குரிய தேவையில்லை என்பது உண்மைதான். ஆவிக்குரிய தேவைகளை "சகோதரர்களின் ஐக்கியத்தில்" பூர்த்தி செய்திட முடியுமே! ஆம், திருமணம் ஒன்றே ஒரு மனுஷனுடைய "காமத்துத் தேவையை" பூர்த்தி செய்கிறது. எனவேதான் "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்" (1 கொரி.7:9) என வேதம் கூறுகிறது. ஒரு மனுஷனுடைய ஆசையை "நெருப்பு" என வேதம் குறிப்பிடுகிறது. இந்த நெருப்பு ஒரு ஸ்திரீயைவிட புருஷனிடத்தில்தான் வலிமையாய் இருக்கிறது. குறிப்பாக, திருமண வயதிற்குரிய வாலிபனிடத்தில் ஒவ்வொரு நாளும் அந்த நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அந்த நெருப்பை தவறு என்ற வேதம் கூறவேயில்லை! மாறாக, அந்த நெருப்பின் விருப்பத்தை திருமணத்தில் நிறைவேற்றுங்கள் என்றே வேதம் கூறுகிறது.*

ஆகவே ஒரு புருஷனை திருமணத்திற்கு உந்தி தள்ளிய முதல் முக்கியமான பகுதி "காமத்து விருப்பமே" என்பதை திருமணமான ஒவ்வொரு சகோதரிகளும் நன்றாய் விளங்கியிருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாய் இந்த உண்மையை அறியாத சகோதரிகள் "என் புருஷனிடம் ஏன் இவ்வளவு அதிகமாய் காமவிருப்பம் இருக்கிறது?" என்ற கேள்வியோடு இருக்கிறார்கள். இந்த கேள்விக்கு விடை மிக எளிதானதுதான். "உங்கள் கணவனை தேவன் ஒரு ஆணாகப் படைத்திருக்கிறார்" என்பதே அந்த விடை! அவர் ஒரு ஸ்திரீயா யிருந்தால் நீங்கள் பார்க்கின்ற அந்த "நெருப்பின் விருப்பம்" அவரிடம் இருக்காது. ஆகவே உங்களிடம் நான் கேட்க விரும்புவதெல்லாம் "உங்கள் கணவன் உங்களுக்கு ஒரு ஸ்திரீயாயிருக்க நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது ஓர் புருஷனாயிருக்க விரும்புகிறீர்களா?" என்பதுதான். உங்கள் கணவன் ஒரு புருஷனாயிருந்தால் அவர் 'அவ்விதமாய்' இருக்கும்படிக்குதான் தேவன் அவரை சிருஷ்டித்துள்ளார். இதைக்குறித்து நீங்கள் குறைகூறினால், "புருஷனை ஏன் இவ்வாறு சிருஷ்டித்தீர்?" என நீங்கள் தேவனிடத்தில் தான் கேள்வி கேட்க வேண்டும்! தேவன் தன்னுடைய தீர்மானத்தின்படி நியமித்த நியதிகளை தெய்வபயம் கொண்ட யாவரும் எந்த கேள்வியும் கேட்காமல் அதை அப்படியே ஏற்றுகொள்வார்கள்.

இப்போது அடுத்த பகுதியை நாம் கவனிப்போம். ஒரு மனுஷனுக்கு திருமணத்திற்கு உந்தித்தள்ளுவது அவனுடைய காமத்துத் தேவையாயிருந்தால்..... ஒரு ஸ்திரீயை திருமணத்திற்கு உந்தித்தள்ளிய பிரதான தேவை என்ன? அது, "காமம்" அல்ல! ஏனென்றால், தேவன் அவளை அவ்விதமாய் சிருஷ்டிக்கவில்லை. 'சில' தாறுமாறான பெண்கள் அப்படியிருக்கலாம். ஆனால் பொதுவாய் ஒரு ஸ்திரீக்கு திருமணத்திற்குரிய அவளின் ஏக்கம் காமமாய் இல்லாமல், அது வேறொன்றாகவே இருக்கிறது! அது என்ன? ஆம், அவளின் தாகம் "பாதுகாப்பு" (Security) என்பதேயாகும்!!

> **ஒரு புருஷனுடைய தாகம் எந்த அளவிற்கு காமத்தில் இருக்கிறதோ.... அதே அளவிற்கு ஒரு ஸ்திரீயின் தாகம் "பாதுகாப்பில்" இருக்கிறது!**

குறிப்பாய் புதிதாக திருமணமான மனைவி, "என் கணவன் ஏன் இப்படி அடிக்கடி காம உறவில் பிரியப்படுகிறார்? ஆனால் எனக்கோ அந்த அளவு விருப்பம் இல்லையே!" என வியக்கிறார்கள்.

அதேபோலவே திருமணமான கணவன், "நான் என் மனைவியை நேசிப்பதை திரும்ப திரும்ப ஒவ்வொருநாளும் உறுதியளிக்கும்படி அவள் ஏன் விரும்புகிறாள்? நான் அவளை நேசிக்கிறேன் என்பதை அவளிடம் ஒரு தடவை சொன்னால் போதாதா...... அந்த உறுதியை என் வாழ்நாளெல்லாம் கைக்கொள்வேன் என்பது அவளுக்குத் தெரிய வேண்டாமா? 'நீங்கள் என்னை நேசிப்பது உண்மையானதுதானா?' என ஏன் இத்தனை மாதங்களுக்குப் பிறகும் அலட்டிக் கொள்கிறாள்?" என்றெல்லாம் வியக்கிறார்கள். இவ்வாறு வியந்து கேள்வி கேட்கும் புருஷனுக்கு நான் கூறும் பதில், "பாதுகாப்பை விரும்பி தேவன் அவளை அவ்விதம் சிருஷ்டித்திருக்கிறார்" என்பதுதான்.

கணவன் மனைவியைக் குறித்த சத்தியம் இவ்வாறிருக்க, மிகத் துயரமான சம்பவம் என்னவென்றால் "ஒரு ஸ்திரீ புருஷனுடைய தேவை இன்னதென்பதை விளங்காமல் இருப்பதும், ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயின் தேவை இன்னதென்று விளங்காமலும் இருப்பதுதான்!" ஆகவே புருஷனாகிய நீங்கள், "என்னிடத்தில் காம விருப்பம் வலிமையாய் இருப்பதைப் போலவே என் மனைவியினிடத்தில் என் மீது கண்டடையும் பாதுகாப்பின் விருப்பம் வலிமையாயிருக்கிறது" என்பதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். ஆகவே நீங்கள் வேறு யாரைக் காட்டிலும் உங்கள் மனைவியைப் போஷித்துக் காத்துக்கொள்வதை அவள் மனதில் உறுதிபடச் செய்வது மிகவும் முக்கியமாகும். உங்கள் மனைவி வேலைக்காரியைப்போல் சமையல் செய்வதற்கும், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்குமே என எண்ணிவிடாமல் உங்களின் முக்கியமான வாழ்க்கைத்துணை என்பதை உணர்ந்தவர்களா யிருங்கள். இதனிமித்தமாய் அவளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பழகி, குடும்ப விஷயங்களை (சபையின் விஷயங்களையல்ல!) அவளிடம் ஆலோசிக்கும்படி கலந்து கொள்ளுங்கள். ஒருபோதும் நீங்கள் அவளிடம் நடந்துகொள்ளும் விதம் "உனக்கு ஒன்றுமே தெரியாது. நீ சொல்லும் காரியம் எதுவும் முக்கியமல்ல" என்றெல்லாம் அவள் எண்ணும்படி வைத்துவிடாதீர்கள். உங்கள் மனைவிக்கு குடும்ப வாழ்வில் அவளுக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுத்து அவளை ஆதரியுங்கள்.

உங்கள் மனைவியைப் பார்த்து, "நேற்றுதான் நான் உன்னை நேசிக்கிறேன் என்று சொன்னேன். இன்றும் நான் மறுபடியும் அவ்வாறு சொல்ல வேண்டுமென்று ஏன் எதிர்பார்க்கிறாய்?" எனக் கேட்காதீர்கள். அது எதற்கு சமம் என்றால், உங்கள் மனைவி உங்களைப் பார்த்து

"நேற்றுதான் காம விருப்பம் அடைந்தீர்கள்... இன்றுமா உமக்கு இந்த விருப்பம்?" எனக் கூறுவதற்கே சமமாகும். இவளுடைய கூற்று எவ்வளவு முட்டாள்தனமானதோ அதேபோலவே உங்களுடைய கூற்றும் முட்டாள்தனமானதுதான்! ஆனால் இவ்வித கொடிய தீமைதான் மானிடர்களாகிய நம்மிடத்தில் மண்டிக்கிடக்கிறது.

இவ்வாறு தேவன் மனுஷனையும், மனுஷியையும் வித்தியாச மானதாய் படைத்திருப்பதில் நல்ல நோக்கமேயிருக்கிறது. ஆனால் மானிடர்களாகிய நாம்தான் ஒருவர் மற்றொருவரைப்போல இருக்கவேண்டுமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதுதான் நம்மிடத்தில் காணும் பொல்லாப்பு என மேலே கண்டோம். தேவன் புருஷனையும் ஸ்திரீயையும் வித்தியாசமாய் படைத்தது மாத்திர மல்லாமல், புருஷர்களுக்குள் ஒருவருக்கொருவர் வித்தியாசமாகவும், ஸ்திரீகளுக்குள் ஒருவருக்கொருவர் வித்தியாசமாகவும் படைத்திருக் கிறார். கம்ப்யூட்டரில் பற்பல திறன்கொண்ட வித்தியாசமான உருளைகள் (Package) உள்ளன. அதேபோலவே நீங்கள் பெற்ற கணவன் அல்லது மனைவி வித்தியாசமான திறன்கொண்டவர்களாய் (Package) இருக்க முடியும். நீங்களோ உங்களுக்குத் தரப்பட்ட 'பேக்கேஜை' அது இருக்கும் வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு பதிலாய் நீங்கள் ஒரு பேக்கேஜில் கொஞ்சமும், மற்றொரு பேக்கேஜில் கொஞ்சமுமாக தெரிந்து கொள்ளவே முடியாது. இது எப்படியெனில் ஒருவனுடைய புத்திக்கூர்மையையும், இன்னொரு சினிமா ஸ்டார் போன்றவனுடைய அழகையும் ஒன்றாய் இணைத்து பூரண மனுஷனை சிருஷ்டிக்க முயற்சிப்பது போலாகும். ஆம், இதுபோன்ற தீமையான எண்ணங்களைத்தான் நாம் பெற்றிருக்கிறோம். தேவன் எனக்கென்று தந்த பேக்கேஜை (கணவன் அல்லது மனைவியை) அப்படியே ஏற்றுக்கொள்ள நம்மால் முடிவதில்லை.

நீங்களும் ஒரு பேக்கேஜ் என்பதை மறந்துவிடாதிருங்கள். உங்களை உங்கள் கணவன் அப்படியே ஏற்றுக்கொண்டிருந்தால், நீங்களும் உங்கள் கணவனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமல்லவா! ஒரு பேக்கேஜில் எத்தனையோ நன்மைகளும், எத்தனையோ தீமைகளும் அடங்கியிருக்கக்கூடும். இந்தக் கணவனாகிய உங்கள் பேக்கேஜை மனைவி ஏற்றுக்கொள்ள வேண்டும். மனைவியின் பேக்கேஜை கணவன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு பேக்கேஜும் சுமுகமாய் இணைந்துவிட்டால், நல்லதோர் நிறைவான குடும்பம் உருப்பெற்றுவிடும் என்பது உறுதி!

5. **உடைந்த முட்டைக்கூட்டின் ஓரத்தைப்போல் வித்தியாசமான கணவனையும் மனைவியையும் வைத்தே தேவன் "இணைக்கும்" பணியை செய்கிறார். இதைப் புரிந்து வாழும் தம்பதியர் பாக்கியவான்கள்!**

மேற்கண்ட நிறைவான குடும்பம் இரண்டாக உடைந்த முட்டை கூட்டிற்கே ஒப்பாயிருக்கிறது. ஒரு பக்கத்திலுள்ள முட்டைகூடு ஊசியாயிருந்தால் அடுத்த பக்கத்திலுள்ள முட்டைகூடு பள்ளமாயிருக்கும்! ஆனால் இந்த இரண்டையும் பொருத்தும்போது ஊசியான பகுதி பள்ளத்தோடும், பள்ளமான பகுதி ஊசியான பகுதியோடும் இணைந்து முழு முட்டை வடிவம் கிடைப்பதை நாம் பார்க்கிறோம். இதைத்தான் தேவன் ஆதாமை சிருஷ்டித்தபோது செய்தார். முதலாவது ஆதாமை சிருஷ்டித்த உடன் அவன் பாதி முட்டைக்கூட்டைப்போல் இருப்பதை தேவன் கண்டார். எனவேதான் "அவனுக்கு ஏற்றதுணையை நான் உண்டாக்குவேன்" என அடுத்த பாதியான ஏவாள் என்னும் முட்டைக்கூட்டை சிருஷ்டித்தார். இப்போது அவர்களிருவரும் பொருந்தி பூரணமுட்டை வடிவத்தைத் தந்ததை தேவன் கண்டார்!!

இதனிமித்தமே நீங்கள் பார்க்கும் விதத்தைவிட உங்கள் மனைவி பார்க்கும் விதம் வித்தியாசமாயிருக்கிறது. இது எப்படியெனில் ஒரு கட்டிடத்தை வடக்கு திசையிலிருந்து நீங்கள் புகைப்படம் எடுத்தீர்கள், உங்கள் மனைவி தென்திசையிலிருந்து அதே கட்டிடத்தை புகைப்படம் எடுத்தாள். இந்த இரண்டு புகைப்படத்தையும் தனித்தனியே பார்க்கும்போது, அது தனித்தனி கட்டிடம் போன்றுதான் தோன்றுகிறது. ஆனால் அந்த இரண்டு புகைப்படத்தையும் இணைத்துப் பார்க்கும்போதுதான் கட்டிடத்தின் முழு உருவத்தை நீங்கள் காண்பீர்கள்! ஆகவே, "ஒண்டியாய் இருப்பதைக்காட்டிலும் இருவராயிருப்பது மிகவும் நல்லது."

**எனவே கணவன் மனைவியாகிய நீங்கள் ஒருவரையொருவர் மதிக்கப் பழகுங்கள். அப்படிச் செய்யாவிட்டால் நீங்கள் ஒருபோதும் நிறைவான குடும்பத்தைக் காணவே முடியாது!**

நம்மில் எந்தவொரு சிறந்த ஆவிக்குரிய மனிதனும், குடும்ப ஜீவியம் என வரும்போது அவன் பாதி முட்டைக்கூடுதான்! திருமணம் தான் ஒரு மனிதனை பூரண புருஷனாக்கும் என்பதை இங்கு நான் குறிப்பிடவில்லை. ஏனென்றால் இயேசுவோ, பவுலோ அல்லது சாதுசுந்தர்சிங் போன்ற தேவமனிதர்களோ திருமண மாகாதிருந்தும் பூரணவடிவம் கொண்டவர்களாய்தான் இருந்தார்கள். ஆனால் நீங்கள் திருமணம் செய்யத் தீர்மானித்து

*விட்டால், குடும்ப உறவில் நீங்கள் பாதி முட்டைக் கூட்டின் வடிவமும், உங்கள் வாழ்க்கைத்துணையாய் வருபவர் அடுத்த பாதி முட்டைக்கூட்டின் வடிவமும் கொண்டவர்கள் என்பதை மறந்து விடாதிருங்கள்!*

*இந்த இடத்தில், நீங்கள் சபைக்கு எவ்வளவு ஆவிக்குரிய ஆசீர்வாதம் கொண்டுவர முடியும் என்பதைக் குறித்து நான் பேசவில்லை. உங்கள் மனைவி சிறிதளவுகூட ஆவிக்குரிய அருகதை யற்றவர்களாய் இருந்தும் நீங்களோ சபைக்கு முழு ஆசீர்வாதத்தைக் கொண்டுவர முடியும். இதேபோல் மனைவிக்கும் இந்த வாக்கியம் பொருந்தும். ஆனால்* **உங்கள் திருமண உறவில்** *உங்கள் பிள்ளைகள் அல்ல..... உங்கள் மனைவியோ அல்லது உங்கள் கணவனோதான் அடுத்த பாதி வடிவத்தைத் தரமுடியும்! நான் முதலில் சொன்ன வித்தியாசத்தைப்போல் ஒரு பாதி முட்டைக்கூட்டின் தேவை "காம விருப்பமாயும்" மற்றொரு பாதி முட்டைக்கூட்டின் தேவை "பாதுகாப்பாயும்" இருப்பதுபோல ஏராளமான வித்தியாசங்களோடு தான் "பூரண குடும்பத்தை" நீங்கள் இணைந்து பெற்றிட முடியும்!!*

*சாலமோனின் உன்னதப்பாட்டில், "நேசர் தன் கைகளால் தன் பிரியமான மனைவியை அணைத்துத் தேற்றுகிறார்" என நாம் வாசிப்பது கணவன் மனைவிக்குத் தர வேண்டிய பாதுகாப்பையே குறிக்கிறது. இவ்வுலகத்திலுள்ள மனுஷர்களின் தாக்குதல்களிலிருந்து மாத்திரமல்ல, சாத்தான் மனைவிக்கு எதிராக தொடுக்கும் தாக்குதலிலிருந்தும் நாம் அவளை பாதுகாக்க வேண்டும். நீங்கள் ரோட்டில் நடந்து செல்லும்போது உங்கள் மனைவியை ஒருவன் தாக்கினால் நீங்கள் சும்மாயிருந்து கொண்டு "நீயாகவே எதிர்த்து சண்டையிட்டு உன்னை விடுவித்துக்கொள்" என கணவனாகிய நீங்கள் கூறமாட்டீர்கள் என்றே நம்புகிறேன். நீங்கள் உடனே துள்ளிக்குதித்து உங்கள் மனைவியை பாதுகாப்பதற்குரிய எல்லா முயற்சியையும் செய்வீர்கள்.*

*இவ்வித பொல்லாத மனுஷர்களைவிட மிக மோசமான சாத்தானின் ஆவிகள் அவளைத் தாக்கினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உதாரணமாய், உங்கள் மனைவி கோபப்படும்படி சாத்தான் தூண்டிவிடுவதாக எண்ணிப்பாருங்கள். இப்போது நீங்கள் உங்கள் மனைவியை துன்புறுத்தும் ஆவியைக் கடிந்து கொள்வீர்களா? அல்லது அவளுக்கு புத்திசொல்லி "நீயாகவே உன்னை விடுவித்துக்கொள். கோபத்தை நீதான் மேற்கொள்ள வேண்டும்" எனக் கூறப் போகிறீர்களா?*

**இவ்வாறு ரோட்டில் செல்லும் பொல்லாத மனிதனிடமிருந்து உங்கள் மனைவியைக் காப்பதைவிட பொல்லாத ஆவிகளின் தாக்குதல்களிலிருந்தும் உங்கள் மனைவியை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை கணவனாகிய நீங்கள் உணர்ந்ததுண்டா?**

இங்குதான் "ஒண்டியாய் இருப்பதைக்காட்டிலும் இருவராயிருப்பது நல்லது, ஏனென்றால் ஒருவன் விழுந்தால் மற்றொருவன் அவனைத் தூக்கிவிடுவானே" என்ற வசனம் செயல்படத் துவங்குகிறது!

உங்கள் மனைவியினிடத்தில் அனைவரும் காணத்தக்க பெலஹீனங்கள் பல இருக்கலாம். சூழ்ந்திருக்கும் ஜனங்கள் யாவரும் உங்கள் மனைவியை குறைகூறிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் உங்கள் மனைவி ஜெயம் பெறுவதற்கு உதவிசெய்ய வேண்டாமா? "ஆண்டவரே, என் மனைவி ஜெயம் பெறுவதற்கு என் பங்காய் எவ்வாறு நான் அவளுக்கு உதவி செய்ய முடியும் என்பதை எனக்குக் காட்டும்" என்று நீங்கள் ஜெபித்ததுண்டா?

இன்று அநேக மனைவிகள், "என் புருஷன் என்னை ஒரு ராணியைப்போல நடத்துவது இல்லை" எனக் குறைவுபட்டுக் கொள்கிறார்கள். உங்கள் வீட்டில் நீங்கள் ராணியாவதற்குரிய வழியை நான் சொல்லித்தருகிறேன். ஆம், உங்கள் கணவனை நீங்கள் ராஜாவாய் மாற்றிவிடுங்கள்! இப்போது ராஜாவின் மனைவி யார்? ராணி தானே! இப்படித்தான் உங்கள் குடும்பம் இருக்க வேண்டும். உங்கள் கணவன் எடுக்கும் தீர்மானங்களுக்கெல்லாம் **சாராளைப்போல்** "அப்படியே ஆகட்டும் ஆண்டவனே" என ஏற்று அடங்கிக் கீழ்படியுங்கள். எல்லாக் காரியத்திலும் உங்கள் ராஜாவாகிய கணவனே முடிவான தீர்மானம் எடுக்க அனுமதியுங்கள்! அவருடைய தீர்மானம் அனைத்திற்கும் அடங்கிக் கீழ்ப்படியுங்கள்!! இப்போது நீங்கள் யார்? உங்கள் கணவனாகிய ராஜாவிற்கு நீங்கள்தான் ராணி! உங்கள் அஞ்ஞானியான அல்லது ஆவிக்குரிய தன்மையற்ற கணவனுக்கும் ராஜாவிற்கு நீங்கள் அடிபணிவதுபோல பணிந்து விடுங்கள். உங்கள் கணவனுக்கு நீங்கள் அடங்கிக் கீழ்ப்படியக்கூடாத இடம் "வேதவசனம் நேரடியாய் தடைசெய்யும் காரியங்களை அவர் செய்யச்சொன்னால்" அங்கு மாத்திரமே உங்களால் அவருக்கு கீழ்ப்படிந்திட முடியாது. உங்கள் கணவர் விக்கிரகங்களை வணங்க கட்டளையிட்டாலோ அல்லது பொய் சொல்லச் சொன்னாலோ அல்லது பொய் கையெழுத்துப் போடச் சொன்னாலோ அல்லது இதுபோன்ற வேதம் தடைசெய்யும் வேறு

எந்தக் காரியத்திற்கும் நீங்கள் கீழ்ப்படிய அவசியம் இல்லை. இவைகளைத் தவிர கணவனுடைய வேறு எந்த தீர்மானத்திற்கும் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிவதுபோல் அடிபணிந்து அவரைப் பின்சென்றுவிடுங்கள்.

ஆவிக்குரிய காரியங்களுக்கு என்னதான் உங்கள் கணவர் ஆவிக்குரிய பெலவீனமுடையவராய் இருந்தாலும், அவரே உங்கள் முன் ராஜாவாய் செல்லும்படி அனுமதியுங்கள். குடும்ப ஜெபத்தை அவரே நடத்துவதற்கும், பிள்ளைகளைக் கண்டித்து ஒழுங்குபடுத்துவதற்கும் அவருக்கே முழுஉரிமை தந்து உற்சாகப்படுத்துங்கள். இதுபோன்ற குடும்பம்தான் நல்ல அஸ்திபாரத்தில் கட்டப்பட்ட ஆரோக்கியமான குடும்பமாய் இருக்க முடியும்!

6. **ஒருவருக்கொருவர் "சுபாவ" வித்தியாசங்களைத் தேவனே ஏற்படுத்தினார்! அவரவர் சுபாவத்தை மதிப்பவர்களே புரிந்துவாழும் தம்பதியர்கள்!**

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவெனில் நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான "சுபாவம்" (Temperement) கொண்டவர்கள். சில புருஷர்கள் எதற்கும் தைரியம்மிக்கவர் களாயிருப்பார்கள். சில புருஷர்கள் அமைதியான தன்மையும், சற்று வெட்க சுபாவம் கொண்டவர்களாயும் இருப்பார்கள். ஆனால் இந்த இரு சுபாவம் கொண்டவர்களும் அவரவர்கள் சுபாவத்தின்படி **தலைவர்களாய்** மாறுவதற்கு தகுதி பெற்றவர்கள் என்ற உண்மையை, குறிப்பாக மனைவியர்கள் அறிந்திருக்க வேண்டும். யோவான்ஸ்நானகன் நிறைவேற்றும்படி "தேவன் தந்த ஊழியத்திற்கேற்ற சுபாவத்தை" அவன் பெற்றிருந்தான். ஆனால் தீமோத்தேயு தேவனுடைய ஊழியத்தைத் தன் வாழ்வில் நிறைவேற்றுவதற்கு ஏற்ற "அமைதியான சுபாவத்தைப்" பெற்றிருந்தான். ஆனால் யோவான்ஸ்நானகன் தீமோத்தேயுவைபோல் அமைதியான சுபாவம் பெற்றிருந்தால், அவன் ஒருக்காலும் தேவன் அவனுக்கென்று தந்த ஊழியத்தை நிறைவேற்றி முடித்திருக்க மாட்டான்! ஆகவே மனைவியராகிய நீங்கள் உங்கள் கணவர் எந்த சுபாவம் உடையவராயிருந்தாலும் அதை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டு, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க ஒத்துழையுங்கள். "உங்கள் சுபாவம் அந்த சகோதரனைப்போல் வீரமுள்ளதாய் மாறவேண்டும்" என்றெல்லாம் கூறி ஆண்டவர் உங்கள் கணவருக்குத் தந்த ஊழியத்தைப் பாழாக்கிவிடாதிருங்கள்.

King James - மொழிபெயர்ப்பின்படி எபிரெயர்.3:13, "ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்" எனக் கூறுகிறது. ஆனால் மற்ற வேதாகம மொழிபெயர்ப்பில் "ஒருவருக்கொருவர் உற்சாகப் படுத்துங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது! இந்த இரண்டு மொழிபெயர்ப்பில் எதை நாம் தெரிந்துகொள்வது? உங்கள் சுபாவம் எப்படிப்பட்டதோ அதைப் பொறுத்தே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய வசனத்தைத் தீர்மானிக்க முடியும். ஒருவனுடைய மனைவி வலிய சித்தம் கொண்டவர்களாய் எப்போதும் துடுக்காய் பேசுகிறவர்களாய் இருந்தால்..... இந்நிலையிலிருக்கும் கணவன், "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" என்ற வசனமே எனக்கு ஏற்றதாயிருக்கிறது எனக் கூறமுடியும். ஆனால் அதிக மென்மையான சுபாவம் கொண்ட மனைவியைப் பெற்றிருக்கும் சகோதரன் "**ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்துங்கள்**" என்னும் மொழிபெயர்ப்பே எனக்கு ஏற்றதாயிருக்கிறது எனக் கூறலாம். ஆகவே அந்தந்த வித்தியாசமான சுபாவம் கொண்டவர்களை தேவன் அறிந்திருக்கிபடியால், அவரவர்களுக்கு ஏற்றவிதமாய் இந்த மொழிபெயர்ப்பு வித்தியாசத்தைத் தேவனே தந்திருக்கிறார் என நான் நம்புகிறேன். புத்தி சொல்வது அல்லது உற்சாகப்படுத்துவது ஆகிய இந்த இரண்டையும் ஏற்றவேளையில் பயன்படுத்தினால் மிகுந்த பலனளிப்பதாயிருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும்.

பொதுவாக ஸ்திரீகள் மிக எளிதில் உணர்ச்சிவயப்படுவதற்கோ அல்லது கவலைப்படுவதற்கோ சுபாவம் கொண்டிருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். சிறிய அளவு பணநஷ்டத்தைக்கூட அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது. இவ்வித மனநிலை உங்கள் மனைவிக்கு மாத்திரமல்ல, கிட்டத்தட்ட உலகத்திலுள்ள எல்லா மனைவியரும் இப்படித்தான் இருக்கிறார்கள்! ஆனால் புருஷர்களோ பணநஷ்டத்தைத் தாங்கிக்கொண்டு கவலைப்படாதிருக்க அவர்களால் முடிகிறது! இதற்குரிய காரணத்தை நான் பல வருடங்களாய் சிந்தித்து அதன் விடையை அறிந்தேன். அது என்னவெனில், ஒரு ஸ்திரீதான் ஒரு பிள்ளையைப் பெற்று அக்குழந்தையை பாலூட்டி, சீராட்டி வளர்க்கிறாள். ஆகவே அவள் அதிக உணர்ச்சி பொங்கும் உணர்வுடையவளாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரு குழந்தை அழும்போது, அக்குழந்தையின் தகப்பனுக்கு "குழந்தை ஏன் அழுகிறது" என்ற காரணம் ஒரு துளிகூட விளங்காதிருப்பான். ஆனால் அவனுடைய மனைவியோ குழந்தையின் அழுகைக்குரிய காரணத்தை உடனடியாக கண்டுபிடித்துவிடுவாள். இது எப்படி சாத்தியமானது?

*உங்கள் மனைவியை தேவன் "ஒரு ஸ்திரீயாகப்" படைத்திருக்கிறார், அவ்வளவுதான்!*

*ஆகவே மனைவியாகிய நீங்கள், குழந்தை அழும்போது உங்கள் கணவரிடம் சென்று "குழந்தை என்ன காரணத்திற்காக அழுகிறது என உமக்கு தெரியாதா?" என்று ஒருபோதும் கேள்வி கேட்காதிருங்கள். தேவன் அவரை புருஷனாய்ப் படைத்திருக்கிறபடியால் குழந்தை அழும் காரணத்தை அவரால் உணர முடியவில்லை! அதேபோல் கணவனாகிய நீங்கள் "இந்த ஐந்து ரூபாய் நஷ்டத்தை உன்னால் தாங்கிக்கொள்ள முடியாதா, ஏன் எதற்காக கவலைப்படுகிறாய்?" என்றெல்லாம் கேட்டு உங்கள் மனைவியிடம் அலட்டிக் கொள்ளாதிருங்கள்.*

**தன் குழந்தையின் பிரச்சனைக்கு உணர்வுள்ளவளாயிருப்பதற்கு ஸ்திரீயை தேவன் படைத்ததைப்போல், சிறிய நஷ்டத்திலும் அவர்கள் அதிக உணர்வுள்ளவர்களாய் இருந்ததில் எந்த தவறும் இல்லை. இவ்வாறு ஒருவரையொருவர் தேவன் உங்களைப் படைத்த விதத்தைப் புரிந்துகொண்டால் எத்தனையோ பிரச்சனைகளுக்கு உங்கள் குடும்பத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட முடியும்!**

*மேலும், கணவன் மனைவியர்களுக்கு நான் அடிக்கடி சொல்லும் புத்திமதி யாதெனில், "உங்கள் மனைவியோடு சற்று வெளியே 'வாக்கிங்' சென்று அவர்களுடன் ஐக்கியப்பட நாடுங்கள்." குழந்தையில்லாதிருக்கும்போது வாக்கிங் சென்றோம்..... இப்போது குழந்தை பிறந்துவிட்டபடியால் வாக்கிங் செல்வதில்லை, என அநேக கணவன்மார்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் கணவனாகிய நீங்கள் உங்கள் அலுவலகத்திற்குச் சென்றபோது, உங்கள் நகரின் எல்லா வீதிகளையும், கடைகளையும் ரசித்துச் சென்றீர் களல்லவா? அலுவலகத்தில் பலரோடு சிரித்துப் பேசினீர்களல்லவா? ஆனால் உங்கள் மனைவியோ நான்கு சுவர்களுக்குள் சமைய லறையிலும், பிள்ளைகளோடு நாள்முழுவதும் மாய்ந்து கிடக்கிறார்களே! ஆகவே உங்கள் மனைவி உங்களோடு வெளியே செல்ல விரும்புவது இயற்கையான விருப்பம்தான்!! வெளியே சுற்றிவந்த உங்களுக்கு அவர்களுடைய விருப்பம் அவசியமில்லாதிருப்பதுபோல் இருக்கலாம். அல்லது, நான் இப்போது களைத்திருக்கிறேன் என நீங்கள் கூறலாம். ஆனால் வேதவசனம் "திருமணமான உங்கள் சரீரம் உங்களுடையதல்ல என்றல்லவா கூறுகிறது." ஆகவே உங்கள் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய, நீங்கள் அவளோடு வாக்கிங் செல்லத்தான் வேண்டும்.*

*இவ்வாறாக* **ஒருவருக்கொருவர் கரிசனை** *கொண்டிருந்தால் உங்கள் குடும்ப வாழ்வு செழித்திருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை!*

**7. "நல்லதோர் குடும்பத்தை" பகிர்ந்துகொள்ளும் சகரியா பூணனாகிய நான் 'ஏராளமான' தவறுகள் மூலமே பாடங்களைக் கற்றுக் கொண்டேன்! எனக்குப் பாராட்டிய தேவ இரக்கம் உங்கள் வாழ்விலும் 'நல்லதோர் குடும்பம்' அமைய கிருபை புரியட்டும்!**

*இவைகளெல்லாம் புத்திமதியாகக் கூறும் என்னை, "ஆரம்பத்திலிருந்தே எல்லாவற்றையும் நேர்த்தியாய் செய்து வாழ்ந்தவன்" என எண்ணிவிடாதிருங்கள். நான் எப்போதுமே கற்றுக்கொள்ள முயற்சிப்பவன். நான் இன்னமும் கற்றுக் கொண்டுதான் இருக்கிறேன். கடந்த வருடங்களில் எத்தனையோ முட்டாள்தனமான தவறுகளைச் செய்து.... அதன்மூலம் பல நல்ல பாடங்களைக் கற்றுக்கொண்டேன்! இவ்வாறு நான் பெற்ற நன்மைகளைத்தான் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஞானமுள்ளவராகிய நீங்கள், இந்த ஒரு முட்டாள் மனுஷனாகிய நான் அநேக முட்டாள்தனத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை நீங்கள் எளிதில் கற்றுக்கொள்வீர்கள் என உறுதியாக நம்புகிறேன்!! இப்போது நீங்கள் என்னைப்போலவே பல முட்டாள்தன கிரியைகளுக்கு உட்பட அவசியமில்லையே!!*

*என்னுடைய திருமண வாழ்க்கையினிமித்தம் நான் ஆண்டவருக்கு மிகுந்த நன்றியுடையவனாயிருக்கிறேன். என்னுடைய மணவாழ்க்கை சுமார் 30 ஆண்டுகளைக் கடந்து சென்று விட்டது. ஆகிலும் ஒருநாள் கூட, என் திருமண வாழ்வைக் குறித்து எனக்கு வருத்தம் ஏற்பட்டதே கிடையாது. என்னுடைய ஜீவியமும், என்னுடைய ஊழியமும் திருமண வாழ்விற்குப் பிறகுதான் அதிக உற்சாகமும், பெலனும் அடைந்தது! இனிவரும் நாட்களில் உங்களுடைய மணவாழ்க்கையும் என்னுடைய சாட்சியைப்போலவே மாறமுடியுமென நான் நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாய் நம்முடைய இந்தியதேசத்தில் ஏராளமான குடும்பங்கள் தேவனுக்கு சாட்சியாய் மிளிர வேண்டுமென்பதே ஆண்டவரின் தீராத விருப்பமாயிருக்கிறது.*

*சாட்சி என்றவுடன் "என் ஜீவகாலமெல்லாம் என் மனைவியிடம் ஒரு கடின வார்த்தைகூட நான் பேசியதில்லை" என்பதுபோன்ற சாட்சிகளை நான் குறிப்பிடவில்லை. இதுபோன்ற சாட்சியை நம்மில் ஒருவர்கூட தரமுடியாது என்றே நான் எண்ணுகிறேன். இப்படியெல்லாம் சாட்சி சொல்பவர்கள் நூற்றுக்கு*

நூறு நேர்மையாய் சொல்லுகிறார்களா என்பதை நான் அறியேன். ஒருவேளை "கடினமான வார்த்தையென" நான் எண்ணுவதற்கு வித்தியாசமாய் வேறொரு விளக்கத்தை அவர்கள் கொண்டிருக்கக் கூடும். ஏனென்றால், ஒருசமயம் ஒரு பாஸ்டர் தன் சபையில் பிரசங்கிக்கும்போது "நானும் என் மனைவியும் எதைக் குறித்தும் ஒருபோதும் வாக்குவாதம் செய்ததேயில்லை" என சாட்சி கூறி பிரசங்கித்தார். ஆனால் சில நாட்கள் கழித்து சபையிலுள்ள ஒரு சகோதரன் பாஸ்டரும், பாஸ்டர் மனைவியும் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்தார். அவர்களுடைய சம்பாஷணை காரசாரமான வாக்கு வாதமாக கூடிக்கொண்டே போனதைக் கண்டார். அப்போது "அந்த நல்ல சகோதரன்" தன் பாஸ்டரை நியாயம் தீர்க்காமல் "ஓகோ! நான் வாக்குவாதத்திற்கு கொண்டிருக்கும் விளக்கத்தைக் காட்டிலும் பாஸ்டர் வேறுவிளக்கத்தை தன் மனதில் கொண்டிருக்கக் கூடும்" என எண்ணியவராய் கடந்து சென்றுவிட்டார். பார்த்தீர்களா! நான் எதை வாக்குவாதம் என எண்ணினேனோ அதை வேறொரு சகோதரன் வாக்குவாதமாய் எண்ணவில்லையே! இந்த அடிப்படையில் தான் "நான் வாக்குவாதம் செய்ததில்லை!" என அவர் கூறியிருக்கிறார்!!

ஆகவே "நான் ஒருபோதும் இதைச் செய்ததில்லை! ஒருபோதும் அதைச் செய்ததில்லை!!" போன்ற சாட்சிகளைக் கேட்டு நீங்கள் சோர்ந்துபோகத் தேவையில்லை. ஒருநாளில் நாம் இந்த அற்புதநிலைக் வரமுடியுமென சுவிசேஷம் நமக்கு வாக்களித்திருப்பது உண்மைதான்! ஆனால் நாமோ பலதடவை வீழ்ச்சியடைந்து "உடனே" மன்னிப்பு கேட்கிறவர்களாய் தான் இருக்கிறோம்!! பரவாயில்லை, நாம் இதைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்போமென்றால் நிச்சயமாய் ஒருநாளில் மீண்டும் வீழ்ச்சியடையாத இடத்திற்கு நாம் வந்துவிட முடியும்!! நீங்கள் வெகு சீக்கிரத்தில் கோபமும் எரிச்சலும் அடைகிறவர்களாயிருக்கலாம். அதனிமித்தம் மனம் தளர்ந்து விடாதீர்கள். நீங்கள் முற்றிலும் ஜெயம் பெறுவதற்கு மூன்று அல்லது நான்கு வருடங்கள்கூட ஆகலாம். ஆனால் அதன்பிறகு, நீங்கள் பெற்ற பலனை உங்கள் ஜீவகாலமெல்லாம் சுதந்தரித்து வாழ்ந்திட முடியுமே!

நான் பல சமயங்களில் சகோதரர்களோடும், பிள்ளைக ளோடும் பேசிய பின்பு, அவர்களிடமிருந்து நான் அடிக்கடி கேள்விப்பட்ட வாசகம் என்னவெனில், "நீங்கள் சொல்ல வந்ததை கொஞ்சம் அன்போடு சொல்லியிருக்கக் கூடாதா?" என்பதுதான். இதைக்குறித்து நான் சிந்தித்துப் பார்த்து "ஆம், உண்மைதான்! என்னுடைய அணுகுமுறை தவறுதான்" என உணர்ந்திருக்கிறேன்.

இப்போது அடுத்த சந்தர்ப்பத்தில் அன்போடு பேசுவதற்கு கற்றுக்கொண்டேன். ஆகவே நீங்கள் உங்கள் பிள்ளைகளிடம் ஏதோ பேசியபின்பு "இவ்வளவு கடினமாய் இவ்விஷயத்தை நான் என் பிள்ளைகளிடம் பேசியது அவசியம்தானா?" என உங்களுக்கு நீங்களே கேட்டுப்பாருங்கள்.

இதனிமித்தம் நம்முடைய பிள்ளைகளிடம் நாம் கண்டிப்பாய் இருக்கமுடியாது என்பது அர்த்தமல்ல. நாம் கண்டிப்பாய்தான் இருக்க வேண்டும். உதாரணமாய், "**சத்தத்தை உயர்த்திப் பேசுவதும்**" இந்த கண்டிப்பில் அடங்கும். இவ்வாறு பிள்ளைகளிடம் சத்தத்தை உயர்த்திப் பேசுவது அவ்வவ்போது அவசியமாய் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். இந்த செயல் கோபத்திற்கு சமமானதல்ல. ஒருமனிதன் நூறு அடிக்கு அப்பால் இருந்தால் அவனிடம் மெதுவாய் பேசுவதில் பிரயோஜனம் இல்லை. ஆகவே அவர் கேட்கும்படி சத்தத்தை உயர்த்தி நான் பேசத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் வீட்டில் நம்முடைய பிள்ளைகள் இரண்டடி தூரத்தில்தானே நின்று கொண்டிருக்கி றார்கள்? என நீங்கள் கூறலாம். ஆனால் அந்த பிள்ளையின் மனதோ நூறடிக்கு அப்பால்.... சில சமயங்களில் நூறு மைல்களுக்கு அப்பால் சென்று விடுகிறதே! ஆகவேதான் அவர்கள் செவிகளில் விழும்படி சத்தமாய் பேசவேண்டியது அவசியமாயிருக்கிறது. நூறடிக்கு அப்பால் உள்ளவனிடத்தில் சத்தமாய் பேசுவது எவ்வாறு தவறில்லையோ அதுபோலவே மனதளவில் தூரமாயிருந்த பிள்ளைகளிடம் சத்தமாய் பேசுவதும் தவறில்லை.... அது கோபமும் இல்லை! ஆகவே இதுகுறித்து நீங்கள் ஒருபோதும் குற்றமனப்பான்மை அடைந்துவிடாதிருங்கள். ஆனால் இச்சமயங்களில் நீங்கள் கோபமோ, அல்லது எரிச்சலோ அடையாமல் இருக்கவேண்டும், அவ்வளவுதான்!!

என் பிள்ளைகளை நான் கோபத்தில் அடித்துவிட்டு **தேவனிடம் மனஸ்தாபப்பட்டு** பலமுறை மன்னிப்புக் கேட்டிருக்கிறேன். ஆனால் என் பிள்ளைகளிடம் அதற்காக மன்னிப்பு கேட்டதில்லை. ஏனெனில் என் பிள்ளைகளுக்கு கோபத்திற்கும், ஒழுக்கக்கட்டுப் பாட்டிற்கும் (Discipline) இடையிலான வித்தியாசம் தெரிவதில்லை. இருப்பினும் என் பிள்ளைகள் 18 வயதைத் தாண்டியவுடன் அவர்களிடம் எல்லாவற்றிற்கும் சேர்த்து "கடந்த வருடங்களில் உங்களைக் கோபமாய் அடித்ததுண்டு, அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்" எனக் கேட்டிருக்கிறேன். இவ்வாறு தெளிவான உணர்வை பிள்ளைகள் அடையும் 18 வயதிற்காக நான் காத்திருந்து பின்பு அவர்களிடம் மன்னிப்பு கேட்டேன்!

என்னுடைய குடும்பத்தில் நான் நடந்துகொண்ட விதத்தை அதிகமாய் பேசுவதற்கு நான் விரும்புவதில்லை. ஏனென்றால் நான் உங்கள் குடும்ப ஜீவியத்திற்கு நிரந்தர அளவுகாட்டியல்ல! அப்படி நான் ஒருபோதும் எண்ணியதேயில்லை. நான் என்னுடைய பிள்ளைகளை ஒருவிதத்தில் வளர்த்தேன், நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஒருவிதத்தில் வளர்த்தீர்கள். ஆகவே நான் வளர்த்தவிதமாய் நீங்கள் பிள்ளைகளை வளர்க்கவேண்டும் என நீங்கள் ஒருபோதும் எண்ணாதிருங்கள். ஆனால் உங்களுக்கும் எனக்கும் "**பிள்ளைகளை தேவபக்தியான வாழ்க்கைக்குள் கொண்டுவரவேண்டும்**" என்ற நோக்கம் ஒன்றுதான்! இந்த நோக்கத் தோடு நாம் செயல்படும்போது, நம் பிள்ளைகள் சிலரிடம் அதிக கண்டிப்போடும், சிலரிடம் கடினமான வார்த்தைகளோடும் ஒழுங்கு செய்யவேண்டியது அவசியமாய்தான் இருக்கிறது. இவ்வாறு நாம் செயல்படுத்தும் காரியங்களைவிட நம்முடைய நோக்கம்தான் மிகவும் முக்கியமானது!

அன்பான திருமண தம்பதியரே, உங்கள் யாவருக்கும் நான் கடைசியாக சொல்ல விரும்பும் ஒரு முக்கியமான விஷயம் உண்டு. நீங்கள் தயவுசெய்து மற்ற குடும்பங்களில் எந்த விதத்தில் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை வைத்து அவர்களை ஒருபோதும் நியாயந் தீர்க்காதிருங்கள். அந்தக் குடும்பத்தில் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விலையுயர்ந்த உடுப்புகளை வாங்கியிருந்தால் அதற்காக அவர்களை நியாயந்தீர்க்காதீர்கள். ஒருவேளை இந்த வழியை சாதகமாகக் கொண்டு தங்கள் பிள்ளைகளின் இருதயத்தைக் கவருவதற்கு அவர்கள் முயற்சித்திருக்கக்கூடும். ஒருவேளை உங்கள் பிள்ளைகளின் இருதயத்தைக் கவருவதற்கு அவ்வித விலையுயர்ந்த உடுப்புகளை நீங்கள் வாங்கவேண்டியது அவசியமில்லாதிருக்கலாம். அதனிமித்தம் நீங்கள் அந்தக் குடும்பத்தை நியாயந்தீர்க்கலாமா? அல்லது விலையுயர்ந்த விளையாட்டு சாமான்களை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாங்கியிருக்கலாம் அல்லது அந்த பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அதிகக் கண்டிப்போடு நடத்துவதை நீங்கள் கண்டிருக்கக்கூடும். இதையெல்லாம் பார்த்து அவர்களை ஒருபோதும் நியாயந்தீர்க்காதிருங்கள். நீங்கள் ஏதாகிலும் நன்மைசெய்ய விரும்பினால்..... அவர்களுக்காக ஜெபியுங்கள்! தயவுசெய்து நியாயந்தீர்க்க வேண்டாம்!!

இவ்வாறு கிறிஸ்துவுக்கு மகிமையான சாட்சியைக் கொண்டு வரும் ஏராளமான நல்ல குடும்பங்களை, நம் இந்திய தேசத்தில் தேவன் எழுப்பிக் கட்டுவாராக! ஆமென்.

# பகுதி – 2

## தனித்தனியே தேவ ஆலோசனை

# மனைவிக்கு மட்டும்

நல்லதோர் குடும்பம் கட்டப்படுவதற்கு கணவனுக்கும் மனைவிக்கும் தேவன் அவரவர்களுக்குத் தனித்தனியே கட்டளைகள் தந்திருக்கிறார். மனைவி தன் பங்கையும், கணவன் தன் பங்கையும் நிறைவேற்றிவிட்டால், அங்கு நல்லதோர் குடும்பம் கட்டப்படுவது உறுதி! இங்கு அபாயம் யாதெனில், கணவன் பகுதியை மனைவியும், மனைவியின் பகுதியை கணவனும் கேள்வி கேட்கவே கூடாது. இயேசு வாழ்ந்ததுபோல் "புத்தக சுருளில் **என்னைக் குறித்து** என்ன எழுதியிருக்கிறது" என்பதே உங்கள் அக்கறையாய் இருக்க வேண்டும்.

குடும்பம் கட்டப்படுவதற்கு மனைவி என்ன செய்ய வேண்டும் என்பதையே வேதம் **முதலாவதாகக்** கூறுகிறது. ஆம், மனைவிதான் முதலாவதாக தன் புருஷனுக்கு அடங்கி கீழ்படிந்திருந்தல் வேண்டும். **அதற்குபின்புதான்** எபேசியர். 5:25 ஆம் வசனத்தில் புருஷர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூர வேண்டும் என கூறுகிறது. இருப்பினும் முதலாவது சொல்லப்பட்ட கட்டளைதான் மிகவும் முக்கியமானது என நாம் எண்ணிவிடக் கூடாது. இரண்டுபேருக்கும் சொல்லப்பட்ட கட்டளைகளும் சமமான முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும். ஆகிலும், வேதம் கற்றுத்தரும் ஒழுங்கு வரிசையில் நாம் கவனிப்பதுதான் நமக்கு மிகவும் நல்லது!




ஆம்,முதலாவது பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்படிந்திருக்க வேண்டும்..... பின்பு தான் பிதாக்கள் செய்ய வேண்டியதைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது! முதலாவது வேலைக்காரர்கள் தங்களுடைய எஜமான்களுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும்..... பின்புதான் எஜமான்கள் செய்ய வேண்டியதை குறித்து வேதம் கூறுகிறது! முதலாவது, மனைவி

*தன் சொந்த புருஷனுக்கு கீழ்படிந்திருக்க வேண்டும்..... பின்புதான் கணவன் செய்ய வேண்டியதை வேதம் குறிப்பிடுகிறது! இவ்வாறு தேவன் தந்திருக்கும் வரிசையின் ஒழுங்கைக் கண்டீர்களா? ஒரு பிள்ளை அல்லது ஒரு வேலைக்காரன் அல்லது ஒரு மனைவியின் கீழ்படிதலில் அடங்கியிருக்கும் சொல்லிமுடியா வல்லமையை நமக்குக் காட்டுவதற்கே இவ்வித வரிசையை தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். உதாரணமாக, ஒரு பிள்ளையை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு பிள்ளை தன் தகப்பனுக்கும் தாய்க்கும் கீழ்படிந்திருக்கும்போது - அந்த பிள்ளைக்கு "நன்மை" உண்டாகுமென்றும், "நீடிய ஆயுசுடையதாய்" இப்பூமியில் வாழும் என்றும் வேதம் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருப்பதைப் பாருங்கள். எனவே ஒரு பிள்ளையோ அல்லது ஒரு வேலைக்காரனோ அல்லது ஒரு மனைவியோ ஆகிய யாராயிருந்தாலும்* **தேவனுடைய வார்த்தை அவரவர்களுக்குச் சொல்லுகிறபடி வாழ்ந்துவிட்டால்** *அவர்களை தேவன் நிச்சயம் அதிகமாய் கனம் பண்ணுவார். நாம் தேவனுடைய வார்த்தையில் ஒன்றை காணும்போது, அந்த தேவனுடைய வார்த்தையின் தரத்தை ஏற்றுக்கொள்ள முடியாததினிமித்தம் அந்த வார்த்தையை நம்முடைய தரத்திற்கு இணையாய் சமப்படுத்த முயற்சிக்கலாம் அல்லது நம்முடைய உண்மை நிலையை நாம் ஒத்துக் கொண்டு தேவனுடைய வார்த்தையின் தரத்தை அடைவதற்கு தீராத நாட்டம் கொள்ளலாம். இந்த இரண்டாவது ரகத்தை சேர்ந்தவர்களாய் நீங்கள் இருந்தால், நீங்கள் தேவனுடைய தரத்தை ஓர் நாளில் நிச்சயம் அடைவீர்கள் என்பதைக் குறித்து எவ்வித சந்தேகமும் இல்லை.*

**1. "ஒருவருக்கொருவர் அடங்கியிருக்கும்" சத்தியமே புருஷருக்கு மனைவி அடங்கியிருக்கும் சத்தியத்தின் ஆதாரமாய் இருக்கிறது.**

*"மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்படியுங்கள்" (எபேசியர் 5:22) என மனைவியர்களுக்கு புத்தி சொல்லப்பட்டிருக்கும் இந்த வசனத்தை நாம் யாவரும் அறிவோம். இந்த வசனத்தை அதற்கு முந்திய வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம். இவ்வசனத்திற்கு முந்திய வசனம், "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்படிந் திருங்கள்" (வசனம் 21) எனக் கூறுவதைப் பாருங்கள். இந்த வசனத்தை நீங்கள் வாசித்ததுண்டா? இந்த வசனத்தின்படி, "புருஷர்களே உங்கள் மனைவிக்கு அடங்கியிருங்கள்" என்றுதானே பொருள்? இவ்வாறு வசனத்தின் பின்னணியைப் பார்க்காமல் அதற்கு முந்திய வசனத்தை நாம்*

தெளிவாய் புரிந்து கொள்ளவே முடியாது. எனவே ஒருவருக்கொருவர் தெய்வபயத்தோடு அடங்கியிருக்கும் பின்னணியை ஆதாரமாய்க் கொண்டுதான் மனைவி புருஷனுக்கு அடங்கியிருக்கும் சத்தியத்தை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

ஒருவருக்கொருவர் தெய்வபயத்தோடே அடங்கியிருப்பதற்கு என்ன அர்த்தம்? ஒருவருக்கொருவர் அடங்கியிருத்தலின் பொருள், கணவன் தன் மனைவிக்கும், எஜமான் தன் வேலைக்காரர்களுக்கும் அடங்கியிருக்க வேண்டும் என்பதேயாகும். ஆம், "ஒருவருக்கொருவர்" அடங்கியிருக்க வேண்டிய "பொதுவான பகுதிகளை" நாம் அறிந்திருக்க வேண்டும்.

இதைத் தெளிவாய் புரிந்து கொள்வதற்கு **ஒவ்வொருவருக்கும் தேவன் ஒரு வட்டத்தை வரைந்து வைத்திருக்கிறார்** என்ற உவமானத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு வட்டத்திற்குள் இருக்கும் நான் இன்னொருவர் வட்டத்தை மீறிச் செல்லக்கூடாது. என் வீட்டில் என் மனைவியைச் சுற்றி ஒரு வட்டமும், என் ஒவ்வொரு பிள்ளையைச் சுற்றி ஒரு வட்டமும், வீட்டிலுள்ள ஒவ்வொரு வேலைக்காரரைச் சுற்றி ஒரு வட்டமும் இருக்கிறது. நான் எவ்வளவு தான் அதிகாரம் உடையவனாய் இருந்தாலும் இன்னொருவர் வட்டத்திற்குள் மீறி நுழைந்திட எனக்கு உரிமையில்லை. ஒரு சிறு பகுதியை மேற்கோளாய் காட்டி இதை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். **ஒவ்வொரு மனிதனுக்கும் "கௌரவம்" என்ற வட்டம் உள்ளது.** யாரோ சிலருக்கு முன்பாக என் பிள்ளையைக் கண்டிப்பதின் மூலமாகவோ அல்லது ஒருவரை இன்னொருவருக்கு முன்பாக இழிவுபடுத்துவதின் மூலமாகவோ நான் மீறி அவர்கள் வட்டத்திற்குள் இப்போது சென்றுவிட்டேன்!! அந்த நபரை தனியாக அழைத்துச் சென்று அவரைக் கண்டித்திருந்தால் அந்த நபரின் கௌரவத்தை நான் பாதுகாத்திருக்க முடியும். அதேபோல, என் வீட்டு வேலைக்காரரைச் சுற்றியும் இந்த கௌரவம் என்ற வட்டம் இருக்கிறபடியால் நான் அவரை 'பன்றி' என்றோ அல்லது 'நாய்' என்றோ ஒருக்காலும் அழைக்கவே கூடாது. இதுபோன்ற தருணங்களில்தான் நான் என்னுடைய பிள்ளைகளுக்கும் அல்லது என்னுடைய வேலைக்காரனுக்கும் அடங்கியிருந்து, தெய்வ பயத்தோடு அவர்களுடைய வட்டத்தை மீறி பிரவேசிக்காதிருக்க வேண்டும்.

"என் மனைவி என்ன நினைத்தாலும் பரவாயில்லை" என தான் செய்ய நினைத்ததையெல்லாம் செய்யக்கூடிய ஒரு கணவன், உண்மையில் மனைவியின் மீது முழு அதிகாரம் கொண்டவன் அல்ல.

தேவன் மனைவியைச் சுற்றி ஒரு வட்டத்தை வைத்திருக்கிறார். அந்த வட்டத்தில் அவளுடைய கௌரவம், அவளுடைய தேவை ஆகிய பகுதிகள் அடங்கியுள்ளன. இவைகளையெல்லாம் கணவனாகிய நான் அலட்சியபடுத்துகிறவனாயிருந்தால் என்னிடத்தில் தெய்வபயமில்லை என்பதே பொருளாகும். பழைய ஏற்பாட்டில் "நரைமுடியோடு உள்ள மனுஷனுக்கு முன்பாய் எழுந்து நிற்க வேண்டும்" என புத்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் "**எல்லோரையும் கனம் பண்ணுங்கள்**" (1பேதுரு 2:17) என வேதம் கண்டிப்புடன் கூறுகிறது.

எனவே எல்லோரையும் கனம் பண்ணுவதே நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்ட பொறுப்பாகும். புறஜாதியாரின் கலாச்சாரம் கொண்ட நம் இந்தியதேசத்தில், மனைவி புருஷனை மரியாதை இல்லாமல் பேசிவிட்டால் ஆத்திரம் அடைந்து விடுகிறார்கள்! ஆனால் கணவனோ அவளுடைய வட்டத்தை ஒரு துளியும் மதிக்காமல் எவ்வளவு கேவலமான வார்த்தைகளை வைத்தும் திட்ட முடியும்!! இவ்வாறு ஒருவருக்கொருவர் காட்டும் மரியாதையின் அடிப்படையில்தான் குடும்பத்தில் மனைவியின் பங்கு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நாம் தெளிவாய் உணர்ந்து கொள்ள முடியும்.

நாம் முதலாவதாக கற்றுக்கொள்ள வேண்டிய பகுதி "ஒருவருக் கொருவர் மரியாதையோடு பேசுவதுதான்." நம்முடைய விசுவாசத்தைக் குறித்து யாராகிலும் கேள்வி கேட்டால் அவர்களுக்கு மிகுந்த சாந்தத் தோடும் வணக்கத்தோடும் பதில் கூற எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் என வேதம் நமக்கு புத்தி சொல்லுகிறது. நாம் கிறிஸ்துவுக்கு பயந்திருக்கிறோமா? என்பதற்குரிய நிரூபணத்தை, பிறருடைய கௌரவ வட்டத்தை உணர்ந்து அதை மீறாமல் இருக்கிறோமா என்பதை வைத்தே சொல்ல முடியும். நமக்குள் சில விஷயங்களில் வேறுபாடு இருந்தால் கூட "அவரவர் வட்டத்தை மதித்து" மரியாதையோடு பேசக் கற்றுக் கொண்டால் எத்தனையோ பிரச்சனைகள் மிக எளிதில் நீங்கிவிடும்.

2. **"அடங்கியிருக்கும் ஆவி" ஏதோ இழிவான ஆவியே அல்லது அது, சாத்தானை ஜெயித்து இரட்சிப்பை உங்கள் இல்லத்திற்கு கொண்டுவரும் "கிறிஸ்துவின் ஆவியாகும்!"**

"மனைவிகள் தங்கள் சொந்த புருஷருக்கு அடங்கியிருக்க வேண்டும்" என்ற வேதவாக்கியத்தை சற்று சிந்தித்துப்பாருங்கள். இந்த உலகம் கற்றுத்தரும் 'அடங்கியிருத்தலை' நாம் அறிந்திருக்கிறபடியால்,

அவ்வாறு அடங்கியிருப்பது இழிவானது என நாம் எண்ணியிருப்பது துரதிருஷ்டமேயாகும். இந்த உலகில் ஆளுகையில் உள்ள புறஜாதியர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஒருவரையும் மதிக்காமல் தங்கள் காரியங்களை நிறைவேறச் செய்கிறார்கள். இதனிமித்தமும் இன்று அநேகர் அடங்கியிருப்பதை கொடூரமானதாய் கருதுகிறார்கள். இதுபோன்ற **"துன்மார்க்கரின் ஆலோசனையின்படி"** அல்லது **இவ்வுலக வழக்கின்படி** நாம் தவறாய் நடத்தப்பட்டுவிடக் கூடாது. இங்கு மனைவி தன்னுடைய கணவனுக்கு அடங்கியிருக்க வேண்டும் என கட்டளையிடுவது தேவனல்லவா? தேவனுடைய வார்த்தையை மதிக்கும் ஒவ்வொரு ஸ்திரீயும் அதை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு கைக்கொள்ள வேண்டும்.

"ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான்" என்று 1 கொரிந்தியர் 11:3 கூறுகிறது. இதுவும் தேவனுடைய வார்த்தையேயாகும். இன்று "ஆணுக்கு பெண் சமம்" என பெண்கள் போராடும் காலமாயிருக்கிறது. ஆனால் நாமோ ஜனங்கள் என்னதான் கூறினாலும்..... வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவருடைய வார்த்தைகள் ஒருநாளும் மாறுவதில்லை என தேவனுடைய வார்த்தைக்கே நாம் திரும்ப வரவேண்டும். தேவனுடைய வார்த்தையோ "ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறான்" என்றே கூறுகிறது.

மேலும் 9-ம் வசனத்தில், "புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப் பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள்" என்றும் கூறுகிறது. புருஷனையும் ஸ்திரீயையும் தேவன் சமமாகவே ஏற்றுக்கொள்வது உண்மைதான். ஆனால் ஆளுகையும் அதிகாரமும் என்று வரும்போது, புருஷனே வீட்டுக்குத் தலையாயிருக்க தேவன் விரும்புகிறார். தன்னுடைய வீடு தேவனை மகிமைப்படுத்தும் வீடாய் இருப்பதை வாஞ்சிக்கும் எந்த ஸ்திரீயும் தன்னுடைய கணவனின் தலைமை ஸ்தானத்தையும், அதிகாரத்தையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புருஷன் ஸ்திரீக்கு தலையாயிருக்க வேண்டும் என வேதம் கூறும் அதேவேளையில், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்று ஒப்பிட்டுக் கூறுவதைப் பார்க்கிறோம் (1 கொரிந்தியர் 11:3). இதனிமித்தம் வேதம் கொடுத்த கட்டளையில் ஓர் உயர்ந்த அந்தஸ்தை நாம் காணமுடிகிறது. ஆம், "ஒரு அடிமைக்கு எஜமான் இருப்பதுபோல்" என்பதாய் ஒப்பிடப்படவில்லையே! ஒரு எஜமான் ஒரு அடிமையின் மீது கொண்ட தொடர்பைவிட கிறிஸ்துவின்மீது பிதா கொண்ட உறவு

பன்மடங்கு மேலானதாகும். நித்திய நித்திய காலமாய் பிதாவும், குமாரனும் சமமாயிருந்தார்கள் என்ற உண்மையை வேதத்திலிருந்து நாம் அறிந்திருக்கிறோம். இருப்பினும் இப்பூமியில் குமாரன் தன் பிதாவுக்கு அடங்கியிருப்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். இந்த இயேசுவின் உதாரணமே மனைவிகளுக்கு வழங்கப் பட்டிருக்கிறது! இயேசுவைக் காட்டிலும் மேலான உதாரணம் இனி உங்களுக்கு வேண்டுமா?

இயேசு தேவனுக்குச் சமமாயிருந்தும் அதைக் கொள்ளை யாடின பொருளாய் எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார் என (பிலிப்பியர் 2:6,7) கூறுகிறது. இவ்வாறு தன் பிதாவிற்கு முன்பாய் இயேசு தன்னைத் தாழ்த்தியிருந்தும் "தேவனுக்கு சமமானவர்" என வேதம் கூறுவதைப் பார்க்கிறோம். இவ்விதமாகவே ஓர் மனைவி தன் கணவனுக்கு கீழ் அடங்கியிருக்கும் ஸ்தானத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்டால் "பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கும்" பாக்கியத்தை தானும் பெற்று தன் குடும்பத்திலும் அந்த ஐக்கியம் பரிமளிப்பதை நிச்சயமாய் காண்பாள்!

"புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்" (நீதிமொழிகள் 14:1) என்ற வசனம் உங்களுக்குத் தெரியுமல்லவா? இங்கு ஏன் வீட்டைக் கட்டுவது புருஷன் என எழுதப்படாமல் ஸ்திரீ என எழுதப்பட்டிருக்கிறது? இதைக் குறித்து நான் வருடக்கணக்கில் சிந்தித்துப் பார்த்து முடிவில், புருஷனல்ல, ஸ்திரீயே வீட்டைக் கட்டுகிறாள் என்ற உண்மையைத் தெளிவாய் கண்டேன்.

அதற்கு காரணம் என்ன தெரியுமா? ஏனென்றால், ஒரு ஸ்திரீதான் "**அடங்கியிருக்கும் ஆவியை**" தன் வீட்டில் வெளிப்படுத்தும் வாய்ப்பை பெற்றிருக்கிறாள். ஒரு மனைவி தேவபக்தியுள்ள சகோதரியாய் இருந்தால் நிச்சயமாய் அடங்கியிருத்தலின் மூலம் வெளிப்படும் மகிமையினால் தன் வீட்டை நிறைத்துவிடுவாள்! ஆனால் இதுபோன்ற சகோதரிகள் இன்று மிகவும் கொஞ்சம்பேர்கள்தான் இருக்கிறார்கள்.

சாத்தான் எவ்வாறு தோன்றினான் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லாத் தூதர்களுக்கும் தலைமைத் தூதனாக இந்த லூசிபரை தேவன் சிருஷ்டித்தார். ஆனால் இந்த லூசிபர் பெருமையும் அகந்தையும் கொண்டு அதிருப்தியுற்ற நிலையில், தேவன் தனக்குத்தராத ஊழியத்தையும் ஸ்தானத்தையும் அடைவதற்குத் தீர்மானித்தான். இதனிமித்தம் அவன் பிசாசாய் மாறினான். இந்த

உலகில் முதலாவது பாவம் கொலையின் மூலமாகவோ, விபச்சாரத்தின் மூலமாகவோ பிரவேசிக்கவில்லை. மாறாக, **பெருமையும் அகந்தையும்** மூலமாகவே பாவம் முதலாவது பிரவேசித்தது. லூசிபர் தன்னை ஒரு பொருட்டாக எண்ணியவுடன் பிசாசாய் மாறிவிட்டான். இவ்விதமாய் சாத்தான் மனிதவர்க்கத்திற்குள் பாய்ச்சிவிட்ட பெருமை, அகந்தை, தன்னை ஒரு பொருட்டாக எண்ணுதல், ஆளுகை செய்தல் ஆகிய விஷத்திலிருந்து மனுஷனை விடுவிக்கும்படியே இயேசு இப்பூமிக்கு வந்தார்.

பிசாசின் விஷத்திலிருந்து இயேசு மனுவர்க்கத்தை எவ்வாறு விடுவித்தார்? அடங்கியிருந்து, தன்னைத் **தாழ்த்தியதின் மூலமாகவே** அவர் மனுவர்க்கத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தார்! ஆம், இதைத் தவிர வேறு எந்த வழியும் தேவனிடம் இருக்கவில்லை. ஏனெனில் ஒரு ஆவியை அதற்கு நேர் விரோதமான மற்றொரு ஆவியினால் மாத்திரமே ஜெயித்திட முடியும். லூசிபர் பெருமையின் ஆவியினால் சாத்தானாய் மாறினான். இப்போது அவனை இந்த ஆவிக்கு எதிர்மறையான தாழ்மையின் ஆவியினாலேயே ஜெயித்திட வேண்டும். எல்லா எதிர்த்துப் பேசும் குணமும், எல்லா அகந்தைகளும், எல்லா தன்னை ஒரு பொருட்டாக எண்ணுதலும், எல்லா ஆளுகை செய்யும் விருப்பமும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நூற்றுக்கு நூறு சாத்தானிடமிருந்து தோன்றுவதேயாகும். இவனிடம் உள்ள "இதே ஆவியைக்" கொண்டு நாம் அவனை ஒருக்காலும் ஜெயித்திட முடியாது. உதாரணமாக, மனைவி வாக்குவாதம் செய்யும்போது, புருஷனும் வாக்குவாதம் செய்ய தீர்மானித்தால்..... அங்கு சாத்தானே மேலோங்கி நிற்பான்! சாத்தானைவிட அதிக அகந்தையும், அதிக பெருமையும் கொண்டு இயேசு அவனை ஜெயிக்காமல், தன்னைத் தாழ்த்தி, தன் பிதாவுக்கு அடங்கியிருந்து தன் உரிமைகளை இழந்ததினாலேயே ஜெயம் பெற்றார்! ஆனால் நம்முடைய மனுஷீக எண்ணத்திற்கோ இவ்வாறு தன் உரிமைகளை விட்டுக் கொடுத்து இழப்பது முட்டாள்தனமானதும், மாறுபாடு உடையதுமாகவே இருக்கிறது.

இயேசு தன் பிதாவிற்கு அடங்கி கீழ்படிந்திருந்தார். இன்று நமக்கு தேவனுக்கு அடங்கியிருப்பது அதிகக் கஷ்டமாகத் தோன்றுவதில்லை. ஆனால் மனுஷர்களுக்கு அடங்கியிருப்பது தான் நமக்குப் பெரும் கஷ்டமாயிருக்கிறது. இன்று அநேக மனைவிமார்கள் "பாருங்கள் சகோதரனே, நான் தேவனுக்கு முன்பாக என்னைத் தாழ்த்தி அடங்கியிருப்பது கஷ்டமாகவே இல்லை. ஆனால் என் கணவருக்கு

*அடங்கியிருப்பதுதான் பெரும் கஷ்டமும், தொல்லையுமாயிருக்கிறது" எனக் கூறுகிறார்கள். வாழ்க்கையில் எந்த பிரச்சனைக்கும் இயேசுதான் நல்ல மாதிரியாய் இருக்கிறார்! மனைவியர்களாகிய உங்கள் பிரச்சனைகளுக்கும் இயேசுவே மாதிரியாய் இருக்கிறார்!!*

*இப்போது மனைவியர்களாகிய நீங்கள் இயேசுவின் மாதிரியை கவனியுங்கள். அவர் பன்னிரண்டு வயதாயிருக்கும் போது இஸ்ரவேல் நாட்டிலுள்ள யாரைக் காட்டிலும் அதிகமாய் வேதவாக்கியங்களைக் கற்றிருந்தார்! குறிப்பாய் தன் பெற்றோர்களாகிய யோசேப்பையும், மரியாளையும் காட்டிலும் அதிகமாய் வேதத்தை அறிந்திருந்தார். 12 வயதில் தேவாலயத்தில் போதகர்களிடம் அவர் பேசும்போது வெளிப்பட்ட ஞானத்தைக் கண்டு அவர்களே வியந்தார்கள் எனக் காண்கிறோம். இவ்வாறெல்லாம் இருந்தும், அவர் நாசரேத்திலுள்ள தன் வீட்டிற்குச் சென்று ஜீவகாலமெல்லாம் தன் தகப்பனுக்கும், தாய்க்கும் அடங்கி கீழ்படிந்திருந்தார் (லூக்கா 2:42-51). இங்குதான் நாம் இயேசுவின் மகிமையைக் காண்கிறோம். மனைவியர்களாகிய நீங்கள் கூறுவதுபோல், பிதாவிற்கு இயேசு அடங்கியிருந்தது எளிதுதான். ஆனால், அவரோ தன்னைவிட குறைந்த வேத அறிவுள்ள, பூரணமற்ற மானிடர்களுக்கு அடங்கி கீழ்ப்படிந்திருந்தாரே!!*

*ஆகவே வேதத்தை ஒன்றுமே அறியாத அல்லது ஏராளமான தாறுமாறுகள் கொண்ட பூரணமற்ற கணவன்மார்களை உடைய ஸ்திரீகள், இன்னும் இதுபோன்ற யாவருக்கும் இயேசுவே தலைசிறந்த மாதிரியாய் திகழ்கிறார்.*

**இயேசு தன் தெளிவான பகுத்தறியும் தன்மையைக் கொண்டு யோசேப்பிடத்திலும், மரியாளிடத்திலும் உள்ள ஏராளமான குறைகளைப் பார்த்திருக்கக் கூடும். அப்படியிருந்தும் அவர்களுக்கு இயேசு அடங்கியிருந்தார்! ஏனென்றால், தான் அடங்கி ஜீவிக்காத பட்சத்தில் சாத்தானை ஒருபோதும் ஜெயிக்க முடியாது என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார்!**

*அடங்கியிருக்க வேண்டும் என்பதே தேவன் இயேசுவிற்குத் தந்த பிரதான கட்டளையாகும். அந்தக் கட்டளையை நிறைவேற்றுவது ஒன்றே அவருடைய நோக்கமாயிருந்தபடியால்...... எந்த அளவு ஆவிக்குரிய குறைவான தன்மை கொண்டவர்களிடத்திலும் மனப்பூர்வமாய் அடங்கியிருக்க அவரால் முடிந்தது.*

*இவ்வாறு இயேசு மனைவியர்க்கு மாதிரியாய் ஜீவித்திருந்தும்,*

*இன்று அநேக மனைவியர்கள் தேவனுடைய வார்த்தை அவர்களுக்கென கட்டளையிட்டிருக்கும் ஸ்தானத்தை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளவேயில்லை. இவர்கள் ஏவாளைப் போலவே தங்கள் சொந்த புத்தியின் மூலமாய் வழிதவறிப் போகிறார்கள். ஆனால் இயேசுவை சற்று சிந்தித்துப் பாருங்கள். பூரணமற்ற தன்னுடைய பூமிக்குரிய பெற்றோர்களிடத்தில் அவர் அடங்கி ஜீவித்தனிமித்தம் எத்தனையோ சோதனைகளை அவர் சந்தித்திருக்கக் கூடும். சில சமயங்களில், அவர் எந்த தவறும் செய்யாதிருக்கும்போது காரியத்தை சரியாய் புரிந்து கொள்ள முடியாத அவருடைய பெற்றோர்கள் கடுமையாய் அவரைத் தண்டித்திருக்கக்கூடும். ஆனால் அவரோ ஜீவகாலமெல்லாம் இவ்வித பெற்றோருக்கு அடங்கியிருந்தாரே!*

3. **மறைந்திருந்து உதவிசெய்யும் "பரிசுத்தாவியின்" ஸ்தானத்தையே மனைவி பெற்றிருக்கிறாள்!**

*பரிசுத்தாவி போலவே தன் இல்லத்தில் பொறுப்புள்ள ஊழியம் செய்யும் பாக்கியத்தையும் மனைவி பெற்றிருக்கிறாள்!!*

*ஆதாமுக்காக சிருஷ்டிக்கப்பட்ட ஏவாள் அவனுக்கு "ஏற்றதுணை" அல்லது உதவிசெய்பவள் என தேவனால் அழைக்கப் பட்டாள். அதேபோல் இயேசு சிலுவைக்குச் செல்வதற்கு முன்பாக பரிசுத்தாவியின் வருகையைக் குறித்து கூறும்போது "நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களோடே கூட இருக்கும்படி சத்தியஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை* (Another Helper) *அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என இயேசு கூறினார். பார்த்தீர்களா, ஆதாமுக்கு ஏவாள் உதவி செய்கிறவளாய் சிருஷ்டிக்கப்பட்டது போலவே, சீஷர்களுக்கு பரிசுத்தாவியானவரும் உதவிசெய்கிறவராய் அனுப்பப்பட்டார்.*

*மனைவியர்களாகிய உங்களின் மேன்மையான அழைப்பை இப்போது உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? நாம் ஏற்கெனவே கண்டதுபோல்:*

*1) கிறிஸ்து பிதாவுக்கு அடங்கியிருந்ததுபோல், மனைவியும்* **கிறிஸ்துவின் மாதிரியைப்** *பின்பற்றி அடங்கியிருக்க வேண்டும்.*

*2) பரிசுத்தாவியானவர் உதவி செய்கிறவராய் இருப்பது போல்,* **பரிசுத்தாவியின் மாதிரியைப்** *பின்பற்றி மனைவியும் கணவனுக்கு உதவுகிறவளாய் இருக்கவேண்டும்.*

*இவ்வாறு இயேசுகிறிஸ்து போலவும், பரிசுத்தாவியானவர்*

போலவும் வாழ்ந்திடும் வாழ்க்கையைக் காட்டிலும் மேலான சந்தோஷம் ஒரு ஸ்திரீக்கு வேறென்ன வேண்டும்!

ஒரு சீஷனுடைய வாழ்க்கையில் பரிசுத்தாவியானவர் செய்திடும் கிரியையை மனைவி அறிந்திருக்க வேண்டும். பரிசுத்தாவியானவர் எப்போதுமே காட்சிக்குப் பின்னால் மறைந்திருந்து எவ்வித டாம்பீகமும் இல்லாமல் கிரியை செய்வார். இருப்பினும் அவருடைய கிரியையின் மதிப்போ "அவருடைய உதவி இல்லாமல் தேவனுடைய பணிகள் எதையும் செய்திடவே முடியாது" என்பதாகவே இருக்கிறது. என் பல வருட ஊழிய அனுபவத்தில் **பரிசுத்தாவியின் பெலன் இல்லாமல்** என்னால் எந்த ஒரு தேவனுடைய பணியையும் செய்திருக்க முடியாது என்ற உண்மையை நான் கண்டறிந்திருக்கிறேன். அவ்வாறு இருந்தும்கூட நான் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்போது என் மூலம் வல்லமையாய் கிரியைச் செய்யும் பரிசுத்தாவியானவரை நீங்கள் ஒருவரும் கண்டிருக்கவே முடியாது! நீங்கள் யாவரும் என்னை மாத்திரமே பார்த்திருப்பீர்கள்..... ஆனால் அதைக் குறித்து பரிசுத்தாவியானவர் அக்கறைப்படுவதேயில்லை, இவ்விதமாய்தான் ஒருவராலும் காணப்படாமலும், மறைவாகவும் இருக்கவேண்டிய நிலையை ஒரு பொருட்டாக பரிசுத்தாவியானவர் எண்ணியதே இல்லை. பரிசுத்தாவியானவர் தனக்கென எந்தவித கனத்தையும் விரும்புவதே இல்லை! ஆனால் அவரோ நம் ஜீவியத்திற்கும், ஊழியத்திற்கும் தேவையான வல்லமையைத் தொடர்ந்து தந்து கொண்டேதானிருக்கிறார். மனைவியும் இதைப்போலவே தன் புருஷனுடைய வாழ்க்கையில் இருந்திட வேண்டும். இவ்வாறு நீங்கள் எந்த கனமும், புகழ்ச்சியும் பெறாமலேயே உங்கள் கணவருக்குப் பின்பாக ஆதரவாயும், உதவியாயும் இருக்கவேண்டிய உங்கள் ஊழியம் பரிசுத்தாவியானவரின் ஊழியத்தைப் போலவே இருக்கிறதல்லவா?

மனைவியின் ஊழியம் தன் ஜீவகாலமெல்லாம் 'பம்ப்' செய்து கொண்டிருக்கும் **இருதயத்திற்கு ஒப்பாகவே** இருக்கிறது என நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. ஆனால் உங்கள் இருதயத்தை நீங்கள் காண முடிவதில்லையே! அது மறைந்தேதான் இருக்கிறது! ஆம், இருதயம் 'பம்ப்' செய்வதை நிறுத்திவிட்டால் சரீரத்திலுள்ள எல்லா அவயவமும் சீர்குலைந்து அழிந்துவிடும். இவ்வளவு மதிப்புடைய இந்த இருதயம், நம்முடைய கைகளைப் போலவும், கண்களைப் போலவும், நாக்கைப் போலவும் தானும் மற்றவர்களால் காணப்பட வேண்டுமென

ஒருநாளும் விரும்புவதே இல்லை. மிக அமைதியாய் அது தன் வேலையை செய்து கொண்டேயிருக்கிறது. இதேவிதமாகத்தான் பரிசுத்த ஆவியானவரும் கிரியை செய்கிறார்.

மனைவியாயிருக்கும் மகிமையை ஒரு ஸ்திரீ கண்டுகொண்டால், தான் தேவனுடைய பார்வைக்கு முன்பாய் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புள்ள தன் ஊழியத்தை உணர்ந்துவிடுவாள். இதுபோன்ற ஒரு மனைவி ஒருநாளும் தன் பிரதிபலனை இழக்கப்போவதில்லை! நியாயத்தீர்ப்பின் கடைசிநாளில் தேவன் அவளை ஜனங்களுக்கு முன்பாய் நிறுத்தி அவள் மறைந்து செய்த எல்லா கிரியைகளையும், எல்லா ஜனங்களும் காணும்படிச் செய்வார். இன்று இந்த பூமியில் உங்கள் கணவனுக்கு ஓர் மறைவான ஆதரவாயிருக்கும் உங்களுக்கு அன்று மிகப்பெரும் பலன் காத்திருக்கிறது. ஆகவே தேவன் உங்களுக்கென ஏற்படுத்தித் தந்த "இரண்டாவது ஸ்தானத்தை" மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். இவ்வித இரண்டாவது ஸ்தானத்தை இயேசு ஏற்றுக்கொண்டார். பரிசுத்த ஆவியானவரும் ஏற்றுக்கொண்டார்.... ஆம், இதுவே மெய்யான அடங்கியிருக்கும் ஆவியாகும்!!

**4. இரட்சிக்கப்படாத தன் கணவனை ஆதாயம் செய்திட "இயேசுவின் அடிச்சுவட்டை" மனைவியர் பின்பற்ற அழைத்திடும் தேவ அழைப்பு!**

ஒரு மனைவி தங்கள் சொந்த புருஷருக்கு எவ்விதமாய் அடங்கியிருக்க வேண்டுமென்பதை 1பேதுரு 3:1-5 வசனங்கள் தெளிவாய் எடுத்துக்கூறுகிறது. குறிப்பாய் திருவசனத்திற்கு கீழ்படியாத கணவனையுடைய மனைவியர்களுக்கே இவ்வசனங்கள் எழுதப் பட்டுள்ளன. உங்கள் கணவர் விசுவாசியாய் இல்லாததினிமித்தம் நீங்கள் மனம் கலங்கியிருந்தால், சகோதரியே, இவ்வசனங்கள் உங்களுக்காகவே எழுதப்பட்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் கணவர் ஒருவேளை அவிசுவாசியாகவோ அல்லது நேசிக்காத விசுவாசியாகவோ அல்லது ஒரு வேதவசனத்தைக் கூட அறியாதவராகவும் அதற்கு கீழ்படியாதவராகவும் இருந்தால் ..... இங்கு சொல்லப்பட்ட வசனங்கள் யாவும் உங்களுக்காகவே சொல்லப்பட்டவைகளாகும்.

இதை 1பேதுரு.3ஆம் அதிகாரம் கூறும்போது, திருவசனத்திற்குக் கீழ்படியாத தங்கள் கணவன்மார்களை "**போதனையின்றி,** மனைவிகள் தங்களின் கற்புள்ள நடக்கையினால் ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும்" எனக் கூறுகிறது. இதுபோன்ற நிலைமை கொண்ட கணவனைப் பெற்றிருக்கும் நீங்கள், உங்கள் மனதில் எழும் எல்லா காரண எண்ணங்களையும் ஒதுக்கி

*வைத்துவிட்டு தேவனுடைய வசனம் கட்டளையிடுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள உங்களால் முடிகிறதா? கணவனிடம் எந்த புத்திமதியும் சொல்லாமலே அவரை மாற்றி ஆதாயப்படுத்திக் கொள்ள முடியும் என்பதை எத்தனை மனைவியர்கள் அப்படியே விசுவாசிக்கிறார்கள்? இவ்வாறாக தன் கணவனிடம் புத்திமதியின் ஒருவார்த்தை கூடப் பேசாமல்..... தங்கள் நன்னடக்கையின் மூலமாய் அவர்களை மாற்றிவிட முடியும் என விசுவாசிக்கும் வைராக்கியமுள்ள சகோதரிகள் மிக மிக கொஞ்சம்பேர்களே இருக்கிறார்கள்!*

*இந்த 1 பேதுரு 3-ஆம் அதிகாரம் "அந்தப்படி மனைவிகளே" என ஆரம்பிப்பதைப் பார்த்தீர்களா? இதற்கு என்ன அர்த்தம்? மனைவிகள் தங்கள் புருஷர்களுக்கு "எந்தப்படி" அடங்கியிருக்க வேண்டும்? இதற்குரிய விடையை முந்தின அதிகாரத்தில்* "**கிறிஸ்துவைப் பின்பற்றி வருவதையே**" *'அந்தப்படி' என வேதம் குறிப்பிடுகிறது. "கிறிஸ்து உங்களுக்காக பாடுபட்டு, நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" என 1 பேதுரு 2:21 கூறுகிறது.*

*இந்த வசனம் கூறுகிறபடி யாருடைய கரங்களில் இயேசு பாடுபட்டார்? ஆம், கைகளில் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படியாத யூதஜனங்களின் கைகளினாலேயே பாடுபட்டார்! இவர்கள் வேதப் புத்தகத்திலிருந்து பிரசங்கித்தார்கள்.... ஆனால் அவர்கள் பிரசங்கித்த அந்த வசனங்களுக்கோ கீழ்படியாமல் இருந்தார்கள். ஒருவேளை உங்கள் கணவரும் இப்படிப்பட்டவராய் இருக்கலாம்! இவர்கள் இயேசுவை சூழ்ந்து கொண்டு பரியாசம் பண்ணினார்கள், தூஷித்தார்கள், கன்னத்தில் அறைந்தார்கள், துப்பினார்கள், ஆனால் 1 பேதுரு 2:23-ல் இயேசுவோ "வையப்படும் பொழுது பதில் வையாமலும் பாடுபடும்பொழுது பயமுறுத்தாமலும் நியாயமாய் தீர்ப்பு செய்கிறவர்க்குத் தன்னை ஒப்புவித்தார்" எனக் காண்கிறோம். ஆம் கிறிஸ்து காண்பித்த "இந்தப்படியேதான்" மனைவியர்களும் அடங்கியிருக்க வேண்டும்.*

*புதியஏற்பாட்டின் மேலான மகிமை என்னவென்றால் அவைகள் வெறும் கற்பனைகளாயிராமல் நாம் பின்பற்றத் தகுந்த ஓர் மாதிரியாயிருப்பதுதான். "அடங்கியிருக்க வேண்டும்" என்பது வெறும் கட்டளையாக இருந்தால் அதைக் கைக்கொள்வது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால் இங்கோ, "அந்தப்படியே" என இயேசுவின்*

மாதிரியை கூறியிருப்பது நமது பாக்கியமல்லவா!

**5. "கிறிஸ்துவின் பாடுகளில்" உன்னத மகிமையைக் கண்ட சகோதரி மேடம் குயான் வாழ்க்கை அளித்திடும் சாட்சி ஓர் நல்ல மாதிரி!**

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பாக மேடம் குயான் என்ற பெயருடைய ஒரு சகோதரி பிரான்ஸ் தேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். நான் படித்த பரிசுத்தவாட்டிகளில் மிகவும் மதிக்கத்தக்க ஓர் சிறந்த பரிசுத்தவாட்டியாக இந்த அம்மையாரை நான் கூறமுடியும். இந்த அம்மையார் ஓர் மாபெரும் பிரசங்கியல்ல! இருப்பினும் இவர்கள் எழுதிய சில புத்தகங்கள் தேவனைப் பற்றியும், தேவனுடைய வார்த்தையைப் பற்றியும் சொல்லிமுடியா வெளிச்சத்தை வெளிப்படுத்தியிருப்பதை நான் அறிவேன். இத்தனை அருமையான வெளிப்பாடுகளையெல்லாம் அவர்கள் எவ்வாறு பெற்றார்கள் என்று தெரியுமா? முழுக்க முழுக்க தான் அனுபவித்த ஏராளமான பாடுகள் மூலமாகவே இவ்வித அரிய வெளிப்பாடுகளைப் பெற்றார்கள்!

இந்த சகோதரியின் கணவர் தனது மனைவியாகிய மேடம் குயானை எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகும் கொஞ்சம் கூட புரிந்து கொள்ளவேயில்லை. மேலும் அவர் வசித்த வீட்டில் அவருடைய மாமியாரும் வசித்துவந்தார்கள். இந்த மாமியார் ஒரு பொல்லாத பெண்மணியாய் மேடம் குயானுக்கு எதிரியாகவே எப்போதும் நடந்து கொண்டார்கள். இதைவிட அதிக நெருக்கம் என்னவெனில் இவர்களுடைய **வீட்டில் வேலைசெய்த வேலைக்காரிகூட மேடம் குயானை அலட்சியப்படுத்தி நிந்திக்கிறவளாயிருந்தாள்.**

பார்த்தீர்களா, கணவன், மாமியார், வேலைக்காரி ஆகிய வீட்டிலுள்ள யாவரும் இந்த தேவபக்தி நிறைந்த மேடம் குயான் சகோதரிக்கு எதிராக எப்போதும் கைகோர்த்து நின்றார்கள். உதாரணமாக, மேடம் குயானைக் குறித்து தவறான குற்றச்சாட்டுகளை அவருடைய கணவரிடம் இந்த வேலைக்காரி புகார் செய்வாள், இச்சமயங்களில் இச்சகோதரியின் கணவர் வேலைக்காரி சொல்வதைத்தான் நம்புவார்..... தன் மனைவி சொல்வதையோ ஏற்றுக்கொள்ள மாட்டார். இப்படியெல்லாம் இருந்தும் இவர்கள் யாவரையும் சகோதரி மேடம் குயான் மிகவும் அன்புகூர்ந்தார்கள். ஆம், **தேவன் அனுமதித்த சிலுவையை** இந்த சகோதரி மனமாற தழுவிக்கொண்டு தன் சுயத்திற்கு மரித்தார்கள். மேலும் தான் அனுதினமும் சிலுவையை சுமப்பதற்குரிய சந்தர்ப்பங்களைத் தேவன் தனக்கு அருளவேண்டுமென

வாஞ்சையுடன் ஜெபிப்பார். தன்னை வெறுத்த வேலைக்காரியை மெய்யான அன்போடு நேசித்து, அவளுக்கு பரிசுகளும் வழங்குவார்கள்.

இவ்வாறு இந்த சகோதரி மேடம் குயானைப் போல நாம் ஜீவித்தால், மற்றவர்கள் நம் ஜீவியத்தைத் தங்களுக்கென சாதகமாய் துஷ்பிரயோகம் பண்ணமாட்டார்களா? என நீங்கள் கேட்கலாம். ஆனால் "நாம் திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்படுகிறதில்லை" என்றல்லவா வேதாகமம் கூறுகிறது. அதன்படியே மேடம் குயானும் திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட தேவன் இடம் தரவேயில்லை. தான் அடைந்த எல்லாப் பாடுகளின் மூலமாகவும் இன்றைய கிறிஸ்தவ உலகிலேயே ஓர் மிகச் சிறந்த பரிசுத்தவாட்டியாய் இந்த சகோதரி மறுரூபமடைந்தார்கள்!

இந்த உன்னத ஸ்தானத்தை எத்தனையோ சகோதரிகள் அடையவில்லை. ஏனென்றால் தேவன் தந்திடும் **எல்லா சூழ்நிலைகளுக்கும் "அடங்கியிருக்கும் ஜீவியமே"** தேவ மகிமையை சுதந்தரிக்கும் பாதை என்பதை இவர்கள் விசுவாசிக்கவே இல்லை. இந்த சகோதரியின் வாழ்க்கை சரிதை எனக்கு ஓர் மாபெரும் சவாலாயிருப் பதை உணர்கிறேன். இவ்வாறு இந்த சகோதரியின் வாழ்க்கை மூலமாய் நான் ஆசீர்வதிக்கப்பட்ட சத்தியங்களை இன்றைய கிறிஸ்தவ பிரசங்கிகள் ஒருவர்கூட பிரசங்கித்ததே இல்லை! அதற்கு ஒரே காரணம் துன்பத்தின் பாதையை இவர்கள் அறியாததேயாகும்!

துன்பத்தின் பாதையும், அடங்கியிருத்தலுமே மகிமையை நமக்குக் கொண்டுவருகிறது. இதை சகோதரி மேடம் குயான் தன்னுடைய வாழ்க்கையில் மெய்யாகவே ருசித்தார்கள். ஆம், தன் வீட்டிலும், வெளியிடங்களிலும் தனக்கு ஏற்பட்ட ஏராளமான துன்பங்களுக்கும், தவறாய் புரிந்து கொள்ளப்படுதலுக்கும் ஊடாய் கடந்து சென்று "தேவனை அறிகிற அறிவில்" மிகவும் நெருங்கிச் சென்றுவிட்டார்கள்! இந்த சகோதரி தான் வாழ்ந்த நாட்களில் மாத்திரமல்லாமல் இன்றும்கூட அநேகருக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கிறார்கள். இவ்வித சாட்சி எத்தனை மகத்துவமானது என்பதை சகோதரிகளாகிய நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

**6. "அடங்கியிருக்கும் ஆவி கொண்ட" மனைவி கிறிஸ்துவைப் போலவே பாடுகளில் பங்கு பெற்று, தாழ்மையுடன் சிலுவை சுமந்து தன் வீட்டை சீரும் சிறப்புமாய் கட்டிடும் ஞானமுள்ள ஸ்திரீயாய் திகழ்கிறாள்!**

அடங்கியிருத்தலில் காணப்படும் சொல்லிமுடியா வல்லமையை நாம் யாவருமே நன்கு அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும். தேவனுடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்பது பெருமையின் வல்லமையைக் காட்டிலும், அகங்காரத்தின் வல்லமையைக் காட்டிலும் அதிக வல்லமை நிறைந்ததாகும்! இவ்வாறு பெருமையையும், அகங்காரத்தையும் கொண்டு இவ்வையகத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் சாத்தானின் வல்லமையை அவமாக்கி, தன்னைத் தானே தாழ்த்தும் வல்லமையே மகா மேன்மையானது என விளங்கச் செய்யும்படிக்கே இயேசு இப்பூமிக்கு வந்தார், "சிலுவையில் நம்முடைய பாவங்களுக்கு இயேசு மரித்தார்" என்பதை மாத்திரம் நாம் காண்கிற வர்களாய் இருக்கக்கூடாது. அதற்குமேலாக "**சிலுவையில் சாத்தானை இயேசு ஜெயித்தார்**" என்ற சத்தியத்தையும் நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். சாத்தானை இயேசு எவ்வாறு ஜெயித்தார்? தாழ்மையின் வல்லமையாலும், அடங்கியிருத்தலின் வல்லமையாலும், சுயத்திற்கு மரிக்கும் வல்லமையினாலுமே இயேசு சாத்தானை ஜெயித்தார்! சாத்தானை ஜெயிப்பதற்கு இந்த ஒரு வழியைத் தவிர வேறு வழி இல்லவே இல்லை.

அகங்காரத்தை இன்னும் அதிகமான அகங்காரத்தால் நீங்கள் ஜெயித்துவிட முடியாது! ஆனால் இன்றைய உலகம் இவ்வித புத்தியீனத்தில்தான் வீழ்ந்து கிடக்கிறது! ஒருவன் இன்னொருவனோடு சண்டைபோடுகிறான். உடனே மற்றொருவன் தன்னிடம் சண்டை போட்டவனுக்கு பாடம் புகட்ட முயற்சிக்கிறான்! ஆனால் இதனிமித்தமாய் இவர்களுடைய பிரச்சனை தீர்வதே இல்லை. ஆம், சாத்தானின் ஆவியை, தாழ்மையின் ஆவியினால் மாத்திரமே ஜெயித்திட முடியும். இவ்வாறு இயேசு சாத்தானை ஜெயித்த வழியைத் தவிர வேறு எந்த வழியின் மூலமாகவும் நாம் அவனை ஜெயித்திடவே முடியாது. ஆகவே, இனிவரும் நாட்களிலாவது, "கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டு நாங்கள் சாத்தானை முற்றிலும் ஜெயம் பெற்றோம்" எனக் கூறும்படியான ஜீவனுள்ள சாட்சிகளாய் நம்முடைய இல்லங்கள் திகழுவதாக!

"வீட்டைக் கட்டும் புத்தியுள்ள ஸ்திரீ யார்?" என்பதை இப்போது நீங்கள் விளங்கிக் கொண்டீர்களா? ஆம், **தன் கணவனுக்கு அடங்கியிருக்கும் ஸ்திரீயே** புத்தியுள்ள ஸ்திரீயாய் விளங்குகிறாள். ஆனால் இவ்வித ஜீவியத்தை இந்த இருபதாம் நூற்றாண்டு பெண்மணிகள் விரும்புவதேயில்லை. எவ்வாறு இயேசு சாத்தானை அடங்கியிருத்தலின்

*வல்லமையினால் ஜெயித்தார் என்ற "கிறிஸ்துவின் மகிமையை" நீங்கள் கண்டால் மாத்திரமே உங்கள் சொந்த புருஷனுக்கு எல்லாவற்றிலேயும் அடங்கி ஜீவித்திட உங்களால் முடியும்.*

*பிசாசின் ஆவியை மேலும் அதிகமான பிசாசின் ஆவியைக் கொண்டு இவ்வுலகில் இன்றுவரை ஒருவரும் ஜெயித்ததில்லை. நீங்கள் பிசாசை உங்கள் இல்லத்திலிருந்து விரட்டியடிக்க விரும்பினால் நீங்கள் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். ஆம், அது ஒன்றுதான் நமக்கு இருக்கும் வழி! கிறிஸ்துவின் ஆவி பெருமையோ அல்லது அகங்காரமோ கொண்ட ஆவி அல்லவே அல்ல. அதற்கு மாறாக எந்த அநீதிக்கும் அடங்கியிருப்பதும், தான் கையாள முடியாத திராணிக்கு மிஞ்சிய காரியங்களைத் தேவன் ஒருபோதும் அனுமதியார் என தேவனிடத்தில் விசுவாசமும் நிறைந்ததே கிறிஸ்துவின் ஆவியாகும். ஆகவே சகோதரிகளே, இனியும் அடங்கி யிருத்தலைப் புறக்கணியாமல், உங்கள் கணவருக்கு மகிழ்ச்சியுடன் அடங்கியிருக்க நாடுங்கள்.*

*தங்கள் புருஷனுக்கு அடங்கியிருப்பதே* **தேவனுடைய பார்வையில் விளங்கும் "அலங்கரிப்பு"** *என 1பேதுரு3-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்த பூமியில் தன்னை அலங்கரிக்க விரும்பாத சகோதரிகள் யாராகிலும் உண்டா? தேவனுடைய பார்வையில் "தன் புருஷனிடத்தில் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியோடு அடங்கியிருப்பதையே" விலையுயர்ந்த மெய்யான அலங்கரிப்பு என 1 பேதுரு 3-ம் அதிகாரம் தொடர்ந்து கூறுகிறது. இந்த ஆவியை உடையவளாய்த்தான் சாராள் ஆபிரகாமை "ஆண்டவன்" என்று சொல்லி அடங்கிக் கீழ்படிந்திருந்தாள். மனைவியராகிய நீங்கள் இந்த சாராளைப் போலவே அடங்கியிருந்து, எந்த ஆபத்திற்கும் பயப்படாதிருந்தால், நீங்களும் சாராளின் குமாரத்திகளாயிருப்பீர்கள் என வேதம் கூறுகிறது (1 பேதுரு 3:6).*

*ஆம், மனைவியர்கள் தங்கள் புருஷருக்கு எல்லாவற்றிற்கும் அடங்கியிருக்கும்போது தங்களுக்கு விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என அஞ்சக்கூடும் என்பதை பேதுரு நன்கு அறிந்திருந்தார். ஆனால், சகல சூழ்நிலைகளையும் தன் சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகை செய்யும் தேவன் மீது இவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்கள் எந்த விபரீதத்திற்கும் அஞ்சத்தேவையில்லை என பேதுரு எடுத்துரைத்தார்! அதாவது, இதுபோன்ற சகோதரிகளுக்கு தேவனுடைய அனுமதி*

யில்லாமல் அவர்கள் தலையிலுள்ள ஒரு முடி கூட கீழே விழுவதில்லை என்பதே அதன் பொருளாகும்!!

ஒரு சகோதரியைக் குறித்த ஓர் உண்மை நிகழ்ச்சியை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த உத்தம சகோதரி துரதிருஷ்டவசமாய் ஒரு அவிசுவாசிக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். திருமணமான அடுத்த நாளே அவளுடைய கணவன் சினிமாவுக்கு வரும்படி தன் மனைவியை அழைத்தான். சினிமாவை அடியோடு வெறுத்திருந்த இந்த சகோதரி வேறு வழியில்லாமல் தன் கணவனோடு சினிமாவிற்குச் சென்றாள். ஆனால் சினிமா படம் போட ஆரம்பித்த வுடன், அவளோ தன் கண்களை இறுகமூடிக்கொண்டாள்.

சினிமா திரையில் ஏதாவது பரவச காட்சி வரும் பொழுதெல்லாம் அந்தக் கணவன் தன் அருகிலிருந்த மனைவியைத் திரும்பிப் பார்ப்பான். ஆனால் அவளோ எதையும் பார்க்காமல் கண்களை மூடிக் கொண்டிருந்ததைக் கவனித்தான். இவ்வாறு தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தபடியால், ஒருநாள் அவர்கள் சினிமாவிலிருந்து வீடு திரும்பியவுடன், அந்தக் கணவன் தன் மனைவியைப் பார்த்து "உன்னோடு சினிமாவிற்கு வருவது எனக்கு போரடிக்கிறது! இன்றிலிருந்து உன்னை ஒருக்காலும் சினிமாவிற்கு அழைத்துச் செல்லமாட்டேன்!!" எனக் கூறிவிட்டான். பார்த்தீர்களா, சினிமா தியேட்டரில் இந்த மனைவி தன் கண்களை மூடி ஜெபித்த **ஜெபத்திற்கு எவ்வளவு துரிதமாய் பதில் கிடைத்து விட்டது!** இந்த நல்ல செயலை அவள் தன் கணவனோடு சண்டையேதும் போடாமல் ஓர் அடங்கியிருக்கும் ஆவியோடும் ஞானமாய் செய்து முடித்தாள். முடிவில், இந்த சகோதரியின் கணவனும் மனந்திரும்பி இரட்சிக்கப் பட்டுவிட்டான்!

அடங்கியிருத்தலின் வல்லமையை இப்போதாவது உங்களால் பார்க்க முடிகின்றதா? **இந்த வல்லமை** உங்கள் கணவனை சாத்தானின் கையிலிருந்து பிடுங்கி தேவனுடைய ராஜ்ஜியத்திற்குள் கொண்டுவரும் மகா வலிமை பொருந்தியதாகும். இந்த வலிய செயலைக் காட்டிலும் மேலான வல்லமை வேறு எதுவுமே இல்லை எனலாம். ஆம், ஓர் மனைவி அடங்கி வாழ்ந்தால் போதும், அவர் தன் கணவனை சிங்கத்தின் வாயிலிருந்து கூட அவனை மீட்டு இரட்சித்து விட முடியும்!! உங்கள் கணவனிடத்தில் எவ்வளவு மோசமான பிரச்சனைகள் இருந்தாலும், தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் நீங்கள் மாத்திரம் அடங்கி ஜீவித்துவிட்டால், உங்கள் வீட்டிற்குள் மகிமையையும்,

*இரட்சிப்பையும் உங்களால் கொண்டு வந்து விட முடியும். இவ்வாறுதான் ஞானமுள்ள ஸ்திரீ தன்னுடைய அடங்கியிருக்கும் ஆவி மூலமாய் தன் வீட்டைக் கட்டுகிறாள். ஆனால் மதியீனமான ஸ்திரீயோ* **தன் முரட்டாட்டமான ஆவியினால்** *தன் சொந்த வீட்டை, தன் சொந்த கைகளால் இடித்துப் போடுகிறாள்!*

*இவ்வாறு அடங்கியிருக்கும் ஆவி மூலமாய் நம்முடைய வீட்டில் சாத்தானை ஜெயித்து வாழ தேவன் கிருபை செய்வாராக! தேவனுடைய வார்த்தை நூற்றுக்கு நூறு அப்பழுக்கற்றதும், உண்மை நிறைந்ததுமாகும். மனைவியராகிய நீங்கள், அவருடைய வார்த்தைகளுக்கு மனப்பூர்வமாய் கீழ்படிந்துவிட்டால் அதற்குரிய பலனை நிச்சயமாய் உங்கள் வாழ்வில் கண்டடைவீர்கள்! ஆம், சிலுவையின் பாதையே மகிமையின் பாதை! அடங்கியிருப்பதில்தான் எத்தனை சொல்லிமுடியா வல்லமை அடங்கியிருக்கிறது!*

# கணவனுக்கு மட்டும்

ஒரு மனைவி எவ்விதம் நடக்க வேண்டும், ஒரு கணவன் எவ்விதம் நடக்க வேண்டும் என்பதை வேதம் நமக்குத் தெளிவாய் விளக்குகிறது இவ்வாறு **உங்களைக் குறித்து** தேவன் விரும்பும் தரம் என்ன என்பதைக் கண்டு, "ஆண்டவரே, நீர் குறிப்பிடும் வாழ்க்கைத் தரத்தில் நான் வாழவில்லை, ஆகிலும் அவ்வித வாழ்க்கைக்காய் நான் மிகவும் விரும்பி ஏங்குகிறேன்" என மெய்யாகவே அறிக்கையிட்டால் உங்களுடைய திருமண வாழ்க்கை இப்பூமியில் ஓர் குட்டி பரலோகமாக மாறிவிடும் என்பதற்குச் சந்தேகமேயில்லை!

கர்த்தருடைய ஜெபத்தில், "பரலோகத்தில் உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என ஜெபிக்கும்படி இயேசு கற்றுக்கொடுத்தார். சமாதானம் சம்பூரணமாய் நிறைந்திருக்கும் இடமே பரலோகம்! அது ஏனென்றால் அங்கு தேவனுடைய சித்தம் சம்பூரணமாய் நிறை வேற்றப்படுவதே காரணமாகும்!! இவ்வாறு பரலோகத்தில் தூதர்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிவதைப் போலவே நாமும் தேவன் சொல்லுகிறபடி இப்பூமியில் வாழ்வதற்குத் தீராத ஏக்கம் கொண்டு விட்டால் நம்முடைய வீடும் பரலோகத்திற்கு ஒப்பாகவே மாறிவிட முடியும். இதற்கு மாறாக நரகத்தின் சாயலோ, இதற்கு நேர் மாறாகவே இருக்கிறது. அங்கு உள்ளவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வித மதிப்பும் தருவதில்லை. தேவனுடைய சித்தம் என்ன என்பதைக் குறித்த அக்கறையும் கொள்வதில்லை. இதனிமித்தமே இன்று அநேக குடும்பங்கள் இந்த பூமியிலும் நரகத்திற்கு ஒப்பாக வாழு கிறார்கள்! ஆகவே நாம் தேவனுடைய வார்த்தையைக் குறித்தும், அவருடைய போதனையைக் குறித்தும் என்ன மனப்பான்மை கொண்டிருக் கிறோம் என்பதை வைத்துத்தான்

7



*நம்முடைய குடும்பம் பரலோகத்தின் சாயலா அல்லது நரகத்தின் சாயலா? என்பதைத் தீர்மானிக்க முடியும். இவ்வாறு* **தேவனுடைய வார்த்தையை** *அண்டிக்கொள்வதற்கு பதிலாய், நல்லதோர் குடும்பத்திற்குரிய எத்தனை உயர்ந்த ஆலோசனைகளை நீங்கள் பெற்றாலும் அது ஒன்றும் உங்கள் குடும்ப ஜீவியத்திற்கு கை கொடுக்கவே மாட்டாது!*

1. **கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி "மனைவியை நியாயந்தீர்க்காமல்" பிரச்சனை நேரத்தில் அதற்குத் தீர்வு காண்பதே கணவன் தன் மனைவியை நேசிக்கும் தேவ அன்பாகும்!**

*இப்போது புருஷர்களுக்கு வேதம் கூறும் ஆலோசனையைக் கவனித்துக் கேளுங்கள், "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார்" (எபே 5:25) என வாசிக்கிறோம். அடங்கி கீழ்படிந்திருப்பதைக்குறித்து ஒரு மனைவி அநேக சத்தியங்களைக் கேட்டபின், அவ்வாறெல்லாம் அடங்கி வாழ்வது மிகவும் கடினம் என அவள் எண்ணக்கூடும். ஆனால் உண்மையில் மனைவிக்கு இருப்பதைவிட புருஷருக்கு சொல்லப் பட்டிருக்கும் கட்டளைதான் மிகவும் கடினமானது என நான் எண்ணுகிறேன். ஏனெனில் "***கிறிஸ்து** *சபையை நேசித்தது போலவே புருஷன் தன் மனைவியை நேசிக்க வேண்டும்" என தேவன் கூறியிருக்கும் உயர்ந்த தரமே அதற்குக் காரணமாகும்!*

> **அன்புகூருவதைவிட அடங்கியிருப்பது மிகவும் எளிதான செயலேயாகும். எனவே கணவன் நிறைவேற்ற வேண்டிய பங்கு தான் மிகவும் கடினமானது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.**

*இந்த வசனத்தை நாம் தியானிக்கும்போது ஏராளமான பாடங்களை நாம் தேவனிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம்.*

*கிறிஸ்து சபையை அன்புகூர்ந்தது போலவே நான் என் மனைவியில் அன்புகூர வேண்டும் என்பதற்குப் பொருள் யாது? ஆதாமிடமிருந்து நாம் சுதந்தரித்த எல்லாத் தீமைகளுக்கும் நிவாரணம் அளிக்கும் பூரண மீட்பை இங்கு நாம் கிறிஸ்துவுக்குள் காண்கிறோம். ஆதாம் பாவம் செய்தவுடன், அவன் தன் மனைவியிடம் முதலாவது நடந்துகொண்ட அவனது மனப்பான்மை யாதெனில் "தன் விரலை நீட்டி தன் மனைவியை குற்றம் சாட்டியதுதான்!" தேவன் அவனிடம் கேட்ட பொழுது, "இந்த ஸ்திரீயே நான் பாவம் செய்வதற்கு காரணமானவள்" என சுட்டிக்காட்டினான். தேவன் அவனிடம் கேட்டதெல்லாம் "ஆதாமே விலக்கப்பட்ட கனியை நீ புசித்தாயோ?" என்ற ஒரே கேள்விதான். இந்த*

மிக எளிய கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என நேரிடையாகக் கூறுவதற்கு பதிலாய், அவன் தன் மனைவியை குற்றம் சாட்டினான். "நீர் தந்த **இந்த ஸ்திரீயே** எல்லாப் பிரச்சனைக்கும் காரணம்" என அவன் கூறினான். இந்த ஆதாமின் அடிச்சுவட்டையே சுமார் 6000-வருடங்களாக பல்லாயிரம் கோடி புருஷர்கள் பின்பற்றிச்சென்று தங்கள் மனைவியை எண்ணற்ற காரணங்களுக்காய் குற்றம் சாட்டுகிறார்கள். இந்த ஆதாமின் வழியையே நாம் இன்னமும் தொடர்ந்து கடைப்பிடித்தால் நமக்கு எவ்வித இரட்சிப்பும் கிட்டாது! நம்முடைய இல்லம் பரலோகமாய் மாறவும் செய்யாது!! அதற்கு மாறாக நரகமே நமக்குச் சொந்தமாயிருக்கும்!!

கிறிஸ்து எவ்வாறு நம்மில் அன்புகூர்ந்தார்? அவர் கல்வாரி சிலுவையில் மரித்தபோது, தான் ஒருபோதும் செய்யாத பாவங்களுக்கான ஆக்கினையை தன்மீது ஏற்றுக்கொண்டார்! இங்குதான் ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் தெளிவாகக் காண்கிறோம். ஆதாம் **தன் சொந்த பாவத்திற்கான** பழியைக்கூட அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மாறாக, தன்மனைவி மீது பழி சுமத்தினான். ஆனால் இயேசுவோ **தான் செய்யாத பாவங்களுக்கான** பழியைத் தன்மீது ஏற்றுக்கொண்டாரே! ஆம், சர்வலோகத்தின் பாவபலியையும் அவர் தன்மீது ஏற்றுக்கொண்டார். நாம் அனைவருமே அறிந்தோ அல்லது அறியாமலோ ஒன்று ஆதாமைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோம் அல்லது கிறிஸ்துவைப் பின்பற்று கிறவர்களாயிருக்கிறோம்.

நாம் மறுபடியும் பிறந்தவுடன், ஆதாமோடு கொண்டிருந்த தொடர்பைத் துண்டித்து விட்டோம் என்று தான் அறிக்கை செய்கிறோம். ஆனால் நம்முடைய வீட்டில் மனைவியிடம் எவ்வாறு நடந்து கொள்கிறோம்? நம்முடைய நடத்தை ஆதாமைப் போலல்லவா இருக்கிறது! எனவே பிரச்சனை இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் தேவனோ, நம்முடைய மனைவியை நாம் பழிசுமத்தாத இடத்திற்கே கொண்டு வர விரும்புகிறார். இவ்வாறு நாம் வாழ்வதால் சரியான விடை கிடைத்துவிடுமா? அப்படி ஒன்றும் இல்லை! அதாவது, தவறு செய்தது யாரென்று கண்டுபிடிக்க இது உதவுவது இல்லை. ஆனால் மிக முக்கியமான பகுதியாகிய பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்துவிடுமே!! இதைத்தான் தேவன் ஏதேன் தோட்டத்தில் செய்தார். ஏதேன் தோட்டத்திற்குள் தேவன்

பிரவேசித்தபோது, அவர் ஆதாமைப் போலல்லாமல் பிரச்சனைக்கு ஓர் தீர்வை ஏற்படுத்திவிட்டார். அவர் சொன்னார், "ஒருநாளில் ஸ்திரீயின் வித்து வெளிப்பட்டு இந்தப் பிரச்சனையை எதிர்கொண்டு நிரந்தரமான தீர்வு ஏற்படுத்துவார்" எனக்கூறிவிட்டார். இதுவே தேவனுடைய வழி! ஒரு தேவபக்தியுள்ள மனுஷனும் இவ்வாறு தேவனுக்கு ஒப்பாகவே செயல்படுவான்.

> **ஒரு சூழ்நிலையில் பிரச்சனையைக் காணும் இந்த தேவமனுஷன் இந்தப் பிரச்சனைக்கு யார் காரணமென அறிவதற்கு நேரத்தை வீணாக்காமல் அதற்கு பதிலாய் ஒரு தீர்வை ஏற்படுத்தவே எத்தனிப்பான். ஆம், கிறிஸ்து இவ்விதமாகவே சபையை நேசித்தார்.**

அவர் இவ்வுலகத்தை நியாயந்தீர்க்கவோ அல்லது ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும்படிக்கோ வரவில்லை. மாறாக உலகத்தை **இரட்சிக்கும் படிக்கே** வந்தார். இவ்வாறு இயேசுவே பிறரை நியாயந்தீர்க்கும்படியான ஆவியில் வராதிருக்கும்போது, நாம் பிறரை நியாயந்தீர்ப்பதற்கோ அல்லது குற்றம் சாட்டுவதற்கோ எவ்வித உரிமையுமில்லை. இருப்பினும், இன்று அநேக குடும்பங்களில் "நரகத்தின் ஆவி" ஆளுகை செய்வதற்கு இதுவே பிரதான காரணமாயிருக்கிறது.

இன்று நம் எல்லோரிடத்திலும் "உனக்கு எத்தனை தடவை தான் சொல்லுவது!" என குற்றம் சாட்டும் மனப்பான்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இதுபோன்ற சொல் நம்மிடத்தில் காணப்படவே கூடாது. இயேசு ஒருபோதும் "இதைச் செய்யக் கூடாது என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?" என்ற குற்றச்சாட்டோடு ஒருபோதும் நம்மிடத்தில் வருவதில்லை. அதற்கு மாறாக, **ஒரு தீர்வை கொண்டு வரும்படிக்கே** அவர் வந்தார். இவ்வித கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டுதான் கணவன் தன் மனைவியை நேசிக்க வேண்டும். இப்போது குடும்பத்திற்குத் தலைவராய் இருக்கும் நீங்கள், உங்கள் மனைவி தவறு செய்வதைக் காணும்போது இனி என்ன செய்யப்போகிறீர்கள்? உங்கள் மனைவியை எப்போதும் போலவே குற்றம் சாட்டப் போகிறீர்களா? ஆதாம் ஏவாளின் மீது குற்றத்தை சுமத்தியதினிமித்தம், பிரச்சனைக்கு எவ்வித தீர்வும் காணமுடியாததைப் போலவே நீங்களும் உங்கள் மனைவி மீது குற்றம் சுமத்துவதினிமித்தம் எவ்வித தீர்வும் காணப்போவதில்லை. நீங்கள் மாத்திரம் கிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவிட்டால் நிச்சயமாய் பிரச்சனைக்கு தீர்வு கண்டுவிடுவீர்கள்.... ஆம், தவறு கண்டுபிடித்து குற்றம் சாட்டும் ஆவியை உங்கள் வாழ்விலிருந்து நீங்கள்

விரட்டியடித்தபடியால் ஒரு தீர்வு ஏற்படுவது உங்களுக்கு சாத்தியமாவதை நீங்களே காண்பீர்கள். குற்றம்சாட்டும் ஆவி நமக்குள் ஆழமாய் வேரூன்றியிருக்கிறபடியால், அது அவ்வளவு எளிதில் நம்மைவிட்டு ஒழிந்து போவதில்லை. "நான் கூட அநேகம் பிரச்சனைகளுக்கு காரணமாயிருந்திருக்கக்கூடும்" என ஒத்துக் கொள்வதை நாம் பொதுவாய் விரும்புவதில்லை.

2. **சீஷர்களின் பாதத்தை கழுவிய கிறிஸ்துபோல் மனைவியின் தேவையை அறிந்து செயல்படும் கணவனே "செய்யத் தவறிய பாவங்களுக்கு" (Sins of omission) நீங்கலாயிருக்கிறான்!**

அநேக சமயங்களில் "நாம் என்ன செய்தோம்" என்ற நிலையின்படி அல்லாமல் "நாம் என்ன செய்யவில்லை" என்ற நிலையில்தான் அநேக பிரச்சனைகள் உருவாகுவதை காண்கிறோம். உங்கள் மனைவி திடீரென்று நிதானமிழந்து உங்களிடம் கோபப்படும் ஒரு சூழ்நிலையை சற்று சிந்தித்துப் பாருங்கள். இச்சூழ்நிலையில் நீங்கள் சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு "இப்பொழுது நான் என்ன செய்துவிட்டேன்? நான் எவ்வித தவறும் அவளுக்குச் செய்யவில்லை" என எண்ணிக் கொண்டு இருக்கலாம். இவ்வாறு நீங்கள் உட்கார்ந்து கொண்டு ஓர் சுயநீதிக்கொண்ட பரிசேயனாய் உங்கள் மனைவியை "மாம்சீகத்திற்குரியவள்" என நியாயந்தீர்த்து நீங்களோ எந்தத் தவறும் செய்யாதவர்போல எண்ணிக்கொண்டிருக்கக்கூடும்.

ஆனால் பல ஆண்டுகளுக்குப் பிறகு நான் கண்டுபிடித்தது யாதெனில், இம்முழு உலகத்திலும் எந்தக் குறையும் இல்லாத ஒரே நபர் தேவன் மாத்திரமேயாவார்...... அதேபோல ஒருபோதும் ஒருதவறும் செய்யாத நபராய் இருப்பதும் தேவன் மாத்திரமேயாவர்! நாம் மகா பரிசுத்த சிந்தையும், பரிசுத்த சூழ்நிலையும் கொண்டிருக்கும்வேளையில் கூட இன்னமும் நமக்குள் ஏராளமான தவறுகள் குடி கொண்டிருக் கின்றன என்றே நான் நம்புகிறேன். உங்கள் மனைவியைக் கோபம் மூட்டும்படி நீங்கள் எதுவுமே செய்யாதிருக்கக்கூடும். இது நீங்கள் "செய்யாதிருந்த" ஒரு நிலையேயாகும். அநேக சமயங்களில் நாம் செய்த பாவங்களைக் (Sins of Commission) குறித்துத்தான் எண்ணுகிறோம். ஆனால் "செய்யத் தவறிய" பாவங்களும் (Sins of Omission) ஏராளமா யிருப்பதை நாம் அறிவதில்லை. அதாவது, நாம் செய்திருக்க வேண்டிய பகுதிகளைச் செய்யாமல் விட்டுவிட்டதை இங்கு நான் குறிப்பிடுகிறேன். நீங்கள் ஒருவேளை, உங்கள் மனைவியைப் பார்த்து திட்டவோ அல்லது கோபமாய் சத்தமிடவோ அல்லது இதுபோன்ற ஏதாகிலும் நீங்கள்

செய்யாதிருக்கக்கூடும். இவ்வேளையில் நீங்கள் "செய்த பாவங்கள்" என சொல்லுவதற்கு ஏதுமில்லை என்பது உண்மைதான். ஆனால் 'செய்யத் தவறிய பாவங்களைக்' குறித்து என்ன? நீங்கள் உங்கள் மனைவியோடு உட்கார்ந்து அவளை உற்சாகப்படுத்தும்படி நேரம் எடுத்துப் பேசியிருக்கிறீர்களா? இல்லையே! இவ்வாறு செய்வதற்கு நீங்கள் சிந்தித்ததுகூட இல்லை. அநேக சமயங்களில் இதுபோன்ற செய்யத் தவறிய பாவங்கள்தான் இன்று அநேக குடும்பங்களில் குழப்பங்கள் ஏற்படக் காரணமாயிருக்கிறது. எனவே இங்கு தவற்றிற்கு கணவன்தான் காரணமாயிருந்திருக்கிறான்!

**பார்த்தீர்களா, அவன் ஏதோ செய்ததினால் அல்ல, அவன் செய்திருக்க வேண்டியதைச் செய்ய தவறியதினாலேயே குடும்பத்தில் பிரச்சனைகள் உண்டானது!**

இதை வேதம் குறிப்பிடும்போது "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமல் போனால் (Sins of omissions) அது அவனுக்கு பாவமாயிருக்கும்" (யாக்கோபு.4:17) எனக்கூறுகிறது. இவ்வாறு வேதம் கூறுகிறபடியெல்லாம் கணவனாகிய நீங்கள் கீழ்படிந்து, அந்தந்த சூழ்நிலைகளில் உங்களை நியாயந்தீர்த்து கொள்வது மிகவும் நல்லது. ஆகவே, "நான் இன்னமும் சரி செய்ய வேண்டிய பகுதிகள் என் ஜீவியத்தில் இருக்கத்தான் செய்கிறது" என்ற அறிக்கையே நேர்மையானதாய் இருக்க முடியும்!

உங்கள் திருமண வாழ்க்கையின் தரத்தில் ஓங்கி வளர்வதற்கு நீங்கள் மெய்யாகவே விருப்பம் கொண்டிருந்தால், கணவன் மனைவியாகிய நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதை முற்றிலுமாய் நிறுத்தி விடுங்கள். அதற்கு பதிலாக, இக்கட்டான ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் செய்திருக்க வேண்டிய.... ஆனால் அதை செய்யாமல் விட்டுவிட்ட (Sins of omissions) பகுதிகளை ஆண்டவர் உங்களுக்குக் காட்டும்படி அவரிடம் ஜெபித்துக் கேளுங்கள்.

சில சமயங்களில் நம்முடைய மனைவியின் தேவையை அறியமுடியாத அளவுக்கு நாம் உணர்வற்றவர்களாக இருக்க முடியும். இவ்விதநிலை நாம் விழிப்பில்லாத கவனமற்றவர்கள் என்பதையே நமக்குப் போதிக்கிறது. யோவான் 13-ம் அதிகாரத்தில் இயேசு தன் அரையைக் கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷர்களின் கால்களைக் கழுவினார் என வாசிக்கிறோம். இதுதான் இயேசு சபையின் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்துவதாயும் இருக்கிறது. ஒவ்வொரு கணவனுக்கும் உரிய மாதிரியாயும் இருக்கிறது.

பார்த்தீர்களா, இயேசு தன்னுடைய சீஷர்களின் தேவைகளை உன்னிப்புடன் கவனித்து அதை நிறைவேற்றுவதற்கு உடனடியாக கிரியையும் செய்தார். அதாவது **எதைச்செய்ய வேண்டுமோ அதை அவர் செய்யத் தவறவில்லை!!**

அந்நாட்களில் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தாளிகள் பாதங்களைக் கழுவதற்காக ஒரு வேலையாளும் அங்கு நின்று கொண்டிருப்பான். இவ்வாறு விருந்துண்பதற்கு முன்பாகத் தங்கள் கால்கள் கழுவப்பட்ட புத்துணர்வோடு விருந்தாளிகள் விருந்து மேஜைக்குச் செல்வார்கள். ஆனால் இயேசு சென்ற இராப் போஜனத்தில் பாத்திரமும், தண்ணீரும் வாசலில் இருந்தது. மேஜையில் உணவும் இருந்தது. ஆனால் கால் கழுவிவிட ஒரு வேலைக்காரன் இல்லை! இச்சூழ்நிலையில் எந்த சீஷனும் அந்த இழிவான வேலையைச் செய்ய ஆயத்தமாயில்லை. இச்சமயத்தில்தான் இயேசு முன்வந்து ஒரு வேலைக்காரன் செய்ய வேண்டிய பாதம் கழுவும் வேலையைத் தன் சீஷர்களுக்குச் செய்தார். இங்கு நாம் கற்றுக்கொள்ளும் காரியம், ஏதோ சடங்காச்சாரமாய் ஜனங்களின் பாதங்களைக் கழுவும் ஒரு குருட்டு சடங்கு அல்ல! இந்நிகழ்ச்சிக்குப் பின்பாக ஒரு போதகத்தை இயேசு வைத்திருந்தார். இயேசு சென்ற இடத்தில் ஒரு தேவை இருந்தது! அந்த தேவையை இயேசு விழிப்புடன் இருந்து கண்ணுற்றார்!! அந்தத் தேவையை உடனே நிறைவேற்றவும் செய்தார்!! இவைகளே அந்த போதகமாகும்.

“கிறிஸ்து சபையை நேசித்தது போலவே புருஷன் தன் மனைவியை நேசிக்க வேண்டும்.” இந்த வசனத்தை நாம் ஆழமாய் தியானிக்க வேண்டும். இதன் பொருள், இயேசுவைப் போல் மனைவியின் தேவையை விழிப்புடன் அறிந்து அதை உடனடியாக நிறைவேற்றுவதேயாகும். இந்த இடத்தில், “நான் பாவஞ்செய்யவில்லை” என நீங்கள் கூறுவது பொருத்தமல்ல. இயேசுவும்கூட அந்த வேளையில் சீஷர்களின் பாதங்களைக் கழுவாமல் சும்மா உட்கார்ந்திருந்தால், அவரும் “நானும் எந்த பாவமுஞ் செய்யவில்லை” எனக் கூறமுடியும். ஆனால் அவர் செய்ய வேண்டியிருந்ததை செய்யாமல் இருக்கும் “செய்யத் தவறிய பாவம்” (SIN OF OMISSION) அங்கே நடந்திருக்கும்!

இன்று அநேக உண்மையுள்ள சகோதரர்களிடம் காணப்படும் பிரச்சனை “அவர்கள் பாவஞ்செய்தார்கள்” என்பதாய் இல்லை. மாறாக தங்கள் மனைவிகளின் தேவைகளை விழிப்புடன் அறிந்து “**செய்யத் தவறிய பாவங்களே**” பிரதானமாய் இருக்கிறது. சபையிலுள்ள

கர்த்தருக்கென்று வைராக்கியமான சகோதரர்கள், தங்கள் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் உடனடியாக சபை ஊழியத்தில் ஈடுபடுகிறார்கள். ஆனால் வீட்டிலுள்ள தன் மனைவியின் நியாயமான தேவைகளை நிறைவேற்றுவதற்கோ தவறிவிடுகிறார்கள். தங்கள் மனைவி வீட்டுவேலைகளோடும், பிள்ளைகளோடும் போராடிக் கொண்டிருப்பதைக் குறித்த கரிசனை இல்லாமல் "ஆண்டவருடைய ஊழியம் ஏராளமாய் இருக்கிறது" என மிக எளிதில் சாக்குபோக்கு சொல்லி விடுகிறார்கள். இங்குதான் அந்த சகோதரனின் மதியீனம் விளங்குகிறது. திடீரென்று குடும்பத்தில் ஒரு குழப்பம் உண்டாகிறபோது இவ்வேளையில் அக்குழப்பத்திற்கு யார் காரணம்? நூற்றுக்கு நூறு அந்தக் கணவனே பொறுப்பு!! இவன் ஏதோ குழப்பத்திற்கான தூண்டுதலை ஏற்படுத்திவிட்டான் என்ற காரணமல்ல ..... அவன் கரிசனையற்றவனாய் இருந்துவிட்டான் என்பதே காரணமாகும்.

ஆம், இந்த சகோதரன் தன் மனைவி ஒரு பெலஹீன பாண்டம் என்பதைக் குறித்த கரிசனையற்றவனாய் இருந்துவிட்டான். அவளுக்கு எவ்வளவோ ஊக்கமும், உதவியும் தேவையாய் இருக்கிறது. என்பதை உணரத் தவறிவிட்டான். காலை தியானத்திற்கு நேரம் செலவழிக்கும் சகோதரர்களிடம் நான் கீழ்கண்டவாறு கூறுவதுண்டு. "நீங்கள் வேதத்தைத் திறந்து தேவன் என்னோடு பேசுவதைக் கேட்க வேண்டும் என அமர்ந்திருக்கும் போது, அங்கு சமையலறையில் பிள்ளைகளின் பிரச்சனையோடு உணவு சமைத்துப் போராடிக் கொண்டிருக்கும் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். இச்சமயத்தில் தேவன் நிஜமாய் உங்களோடு பேச விரும்புவதெல்லாம், உன் பைபிளை மூடிவிட்டு, உன் மனைவிக்கு **'உதவி செய்யப் போ'** என்ற குரல் தான்!" என கூறியுள்ளேன்.

இவ்வாறு தேவன் உங்களோடு எப்போதாவது பேசியதுண்டா? நீங்களோ ஒரு கடினமான வேதவாக்கியத்திற்கு விளக்கத்தைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்..... ஆனால் தேவனோ பூமிக்குரிய நடைமுறை காரியத்தை உங்களோடு பேச விரும்புகிறார். அந்தோ, அவர் குரலை உங்களால் கேட்க முடியவில்லை! தேவன் கூறும் நடைமுறையான காரியத்தைச் செய்யாமலே, வேதவாக்கியங்களை ஆராய்ந்து கொண்டிருப்பது நமக்கு மிகவும் எளிது!!

தேவன் இயேசுவின் இருதயத்தில் பேசி, "சீஷர்களின் பாதங்களைக் கழுவும்படி பாத்திரத்தையும், தண்ணீரையும் எடு" என்று

சொன்னவுடன் அவர் உடனே எடுத்துவிட்டார். இதைப் போலவே நாமும் பரிசுத்த ஆவியானவரின் குரலுக்கு உணர்வுள்ளவர்களாய் இருந்தால், நாம் வியக்கத்தக்க அநேக காரியங்களை நம்மோடு பேசுவார்!

**வியக்கத்தகும் அந்தக் குரல் "நீ இன்ன இடத்துக்குப் பிரசங்கிக்கச் செல்" என்பதாய் இருக்காது! மாறாக, இயேசுவிடம் பாத்திரத்தையும், தண்ணீரையும் எடுக்கச் சொன்னதுபோல் "உன் குழந்தையின் நாப்கினை கழற்றி சுத்தம் செய்" என்பதாகவே இருக்கும்!!**

இவ்வாறெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பேசுவரா? ஆம், வேதாகமத்தை உங்களுக்கு விளக்கிக் காட்டும் ஆர்வத்தைவிட உங்கள் குழந்தையின் நாப்கினை நீங்கள் கழற்றி சுத்தம் செய்வதில்தான் அதிக ஆர்வம் கொண்டுள்ளார்!

உங்கள் குடும்பத் தேவையைக் குறித்த விழிப்பு உங்களிடம் இல்லை என்றால் இவ்வாறெல்லாம் பரிசுத்த ஆவியானவர் பேசுவதை நீங்கள் எப்படி கேட்க முடியும்? கிறிஸ்து சபையை நேசித்தது போல நம் மனைவியை நேசிப்பதின் மெய்யான அர்த்தம் இதுதான். நாம் மாத்திரம் கிறிஸ்துவைப்போல நம் மனைவியின் தேவையை அறியும் உணர்வைப் பெற்றுவிட்டால் எத்தனையோ பிரச்சனைகள் முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க முடியும்.

"நம்மைக் குறித்த தேவையின் உணர்வுதானே" இயேசுவைப் பரலோகத்திலிருந்து இப்பூமிக்கு கொண்டு வந்தது? நீங்கள் உங்கள் மனைவியின் பொறுமையின்மையைக் குறித்து மிக எளிதில் குறை சொல்லி விடலாம். ஆனால் உங்கள் மனைவியோ என் கணவன் என்னோடு பேசுவதற்கு நேரம் செலவழிப்பதில்லை அல்லது என்னோடு சேர்ந்து "வாக்கிங்" வருவதில்லை என மனம் குமைந்திருக்கிறார்களே! கணவனாகிய நீங்கள் இதைக் குறித்து எப்போதாவது கரிசனை பெற்றதுண்டா?

**மனைவி தன் மனதில் உள்ளதையெல்லாம் தன்னிடம் கொட்டித் தீர்க்கும்படி இந்தக் கணவன் இடம் கொடுத்ததே இல்லை!**

இதற்கு பதிலாய் இந்தக் கணவன் கூறியதெல்லாம் "நான் என் மனைவியிடம் ஒரு தடவைகூட கோபப்பட்டதோ அல்லது தீய வார்த்தை பேசியதோ இல்லை" என்ற மேன்மையான சாட்சிதான். அது உண்மைதான். ஆனால் அந்தோ, தன் மனைவிக்கு அந்தக் கணவன் செய்ய தவறியவைகளைக் குறித்தோ முற்றிலும் அறியாமல் இருக்கிறானே!

ஆனால், இந்த இழிநிலையில் இருக்கும் கணவனோ, “ஆண்டவரே நான் என் மனைவியைப் போல் பொறுமை இழப்பவன் அல்ல. கோபத்தின் மீது நீர் எனக்குத் தந்த ஜெயத்திற்காக ஸ்தோத்திரம்!” என்றல்லவா தன் மனதிற்குள் சொல்லிக் கொண்டிருக்கிறான். இவ்வாறு அவன் உட்கார்ந்து சொல்லிக் கொண்டிருக்கும் வேளையில், அங்கு தேவனோ பாவியாகிய அவன் மனைவியைத்தான் தன்னுடையவளாக அங்கீகரித்தார்!! பெருமை கொண்ட இந்தப் பரிசேயனைவிட தேவனுக்கு இந்தப் பாவியே உத்தமம்!! இவள் கொதிப்பும், கோபமும் அடைந்த பின்பு.... நான் பாவம் செய்துவிட்டனே என்ற உணர்வோடு தேவனின் முகத்திற்கு முன்பாய் சென்று மனந்திரும்பிவிட்டாள்! அன்பார்ந்த கணவனே, “நான் ஒன்றும் என் மனைவியைப்போல் இல்லை” என ஆண்டவரை ஸ்தோத்தரித்துக் கொண்டிருக்கும் நீங்கள் ஒரு பரிசேயனாய் இருப்பதை உங்களால் காண முடியவில்லையா? இன்று இவ்வாறுதான் ஏராளமான பரிசேயத்துவம் கிறிஸ்தவ குடும்பங்களில் காணப்படுகிறது. நீங்கள் எவ்வளவு அதிகம் கர்த்தருடைய ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாய் நீங்கள் ஒரு பரிசேயனாய் மாறும் அபாயத்தில் இருக்கிறீர்கள்! நாம் விழிப்படையக்கடவோம்.

கெட்ட குமாரன் உவமையில், மூத்த மகன் தன்னுடைய தகப்பனுக்கு மிகவும் சுறுசுறுப்புடன் ஊழியம் செய்தான். ஆனால் அவனோ ஒரு பரிசேயனாய் இருந்தான்! இயேசுகிறிஸ்துவோ பிறரிடம் எப்போதும் கரிசனையும், அக்கறையும் கொண்டவராகவே இருந்தார். தன்னைச் சுற்றியுள்ள ஜனங்களின் தேவையை அறிந்து கொள்வதில் எப்போதுமே விழிப்புடன் இருந்தார். இவ்வாறுதான் இயேசு நம்மை அன்புகூர்ந்தார். தேவையை உணர்ந்து செயல்படுவதுதான் மெய்யான அன்பு! இதை ஒரு தாய் தன் பிள்ளைகளின் மீது கொண்டிருக்கும் கரிசனைக்கு ஒப்பிட்டுப் பார்க்க முடியும். அவள் தன் குழந்தையின் தேவையை அறிந்து அதற்கேற்ப உடனே செயல்படுகிறாள்!!

3. **கிறிஸ்து அன்புகூர்ந்தது போல் அன்புகூரவும், பரந்த மன்னிக்கும் சுபாவமும் “பரிசுத்த ஆவியின்” உதவியில்லாமல் எந்தக் கணவனும் இவ்வாழ்க்கையை வாழ்ந்திட முடியாது!**

கிறிஸ்து தன் சபையை அன்புகூர்ந்ததின் மற்றொரு அடையாளம் “முடிவில்லாது மன்னித்திடும் அவரது பரந்த மனமேயாகும்.” “கர்த்தருடைய இரக்கம் என்றென்றைக்கும் உள்ளது” என வேதாகமம் கூறுகிறது. அவரால் மன்னிக்க முடியாத என ஒரு

பாவமும் இல்லை! நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்தால், நம்மை அவர் மன்னிப்பதற்கு **என்றென்றைக்கும்** உண்மையுள்ளவராயிருக்கிறார். நீங்கள் இருபது கோடி பாவங்கள் செய்திருந்தாலும், அவரிடம் நீங்கள் சென்றுவிட்டால் அவர் உங்களை மன்னிக்கத்தான் செய்வார். இதற்குப் பிறகும் மீண்டும் இருபது கோடி பாவங்கள் நீங்கள் செய்தாலும், அதையும் ஆண்டவர் மன்னிப்பார்! இதுவே "என்றென்றைக்குமுள்ள" அவரது இரக்கம்! கிறிஸ்து சபையை நேசித்தது போலவே மனைவியை நேசிப்பதும் இவ்வாறாகவே முடிவற்ற இரக்கமும், மன்னிக்கும் தன்மையும் பெற்றிருப்பதாகும்.

இந்த மன்னிக்கும் சுபாவம் ஒரு தேவபக்தியுள்ள மனுஷனுடைய வாழ்க்கையில் காணப்படும் ஓர் பிரதானமான அடையாளம் என்றே நான் விசுவாசிக்கிறேன். அவன் எப்போதும் இரக்கமுள்ளவனாயிருப்பான்.

**நாம் முதன்முதலாய் ஆண்டவரை சந்தித்தபோது அவரிடம் நாம் கண்ட முதல் குணாதிசயம் அவருடைய பரிசுத்தமல்ல...... மாறாக அவருடைய மன்னிக்கும் இரக்கமேயாகும்! இவ்வாறு நாம் முதலாவது சந்தித்த இந்த குணாதிசயமே கணவனாகிய நமக்கு இப்போது முதலாவதாய் தேவைப்படுகிறது!**

எந்த தேவபக்தியுள்ள மனுஷனையும் ஜனங்கள் முதலாவது சந்திக்கும்போது அவனிடமுள்ள இரக்கத்தையும், மன்னிக்கும் சுபாவத்தையுமே முதலாவதாகக் காணவேண்டும். நம்மால் மன்னிக்க முடியவில்லையென்றால், கிறிஸ்து சபையை நேசித்ததுபோல கணவனாகிய நம்மால் மனைவியை நேசித்திட ஒருக்காலும் முடியாது! மன்னிப்பதும், அன்பு செலுத்துவதுமாகிய இந்தப் பகுதி மனைவியைக் காட்டிலும் கணவனுக்கே கடினமான பகுதியாகும்!

"கிறிஸ்து சபையை நேசித்ததுபோல மனைவியை நேசிக்க வேண்டும்" என நமக்கு முன் ஆண்டவரால் வைக்கப்பட்டிருக்கும் இந்தத் தரம் உண்மையிலேயே ஓர் ஆச்சரியமூட்டும் தரமே ஆகும். பரிசுத்தாவியின் பெலனில்லாமல் இந்தத் தரத்தை எட்டுவது நம்மால் கூடாத காரியமேயாகும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள உறவைப் பற்றி எபேசியர் 5,6 அதிகாரங்கள் நமக்கு எடுத்துக் கூறுகிறது. எபேசியர்.5:22-ம் வசனம் தொடங்கி, கணவனுக்கும் மனைவிக்குமிடையே உள்ள உறவு கூறப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். பின்பு எபேசியர்.6:9- வசனம் தொடங்கி பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவும்,

எஜமான்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் உள்ள உறவும் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு எல்லாக் குடும்ப உறவுகளைக் குறித்தும் பேசுவதற்கு முன்பாக எபேசியர்.5:18-ம் வசனத்தில் "நாம் பரிசுத்தாவியால் நிறைந்திருக்க வேண்டும்" எனக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு நாம் பரிசுத்தாவியினால் நிரப்பப்படுவது, நாம் சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும் பாடுவதற்காக மாத்திரமல்ல, எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்தரிப்பதற்காக மாத்திரமுமல்ல....... முக்கியமாக, நாம் ஏற்ற கணவனாயிருக்கும்படி, ஏற்ற மனைவி யாயிருக்கும்படி, ஏற்ற தகப்பனாயிருக்கும்படி, ஏற்ற எஜமானாய், வேலைக்காரனாய், ஏற்ற பிள்ளைகளாய் நம்மை மாற்றும்படிக்கே ஆகும்.

**அன்பான கணவனே, நீங்கள் ஆவியினால் நிறைந்து உங்கள் மனைவியை நேசியுங்கள்! இல்லையென்றால் அவ்வாறு நேசிப்பது உங்களால் ஒருக்காலும் முடியாது!**

இதைப்போலவே மலைப்பிரசங்கத்தில் ஆண்டவர் நமக்கு முன்பாக வைத்திருக்கும் தரமும் நம்முடைய மனுஷீக பெலனால் அடைந்திடக் கூடாததேயாகும். இவ்வித உயர்ந்த தரங்களை நிறைவேற்றுவது **தங்களால் முடியாது** என்பதை ஜனங்கள் உணரவேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். ஆனால் அதேசமயம் இந்த இடத்தில் நாம் தளர்ந்துவிடவும் கூடாது. இங்குதான் வாஞ்சை கொண்ட ஆத்துமாக்களுக்கு தேவன் ஒரு விடையை வைத்திருக்கிறார். அந்த விடையை இயேசு கூறும்போது, "நான் என் பிதாவினிடத்தில் சென்று வேறொரு **தேற்றரவாளனை** உங்களிடத்தில் அனுப்புவேன்! இந்தக் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கு அவர் உங்களுக்கு உதவிசெய்வார்" எனக் கூறினார். பார்த்தீர்களா, இதனிமித்தமே நாம் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசிய மாயிருக்கிறது. மனுஷருடைய பெலத்தினால் அடைய முடியாத "தேவன் விரும்பும் கணவனுக்குரிய தரத்தை" பரிசுத்த ஆவியின் உதவியின் மூலமாய் நாம் நிச்சயம் அடைந்திட முடியும்.

**4. கிறிஸ்து சபையை அன்புகூர்ந்த இரகசியம் "சிலுவை மரணமே." இன்றும் இதே "சிலுவை மரணத்தை" ஏற்று வாழும் கணவன் தன் குடும்பத்தில் அன்பையும், ஐக்கியத்தையும் கண்டடைவது உறுதி!**

மேலும், எபேசியர் 2:14-ம் வசனத்தில் இயேசு எவ்வாறாக இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார் என்பதைக் காண்கிறோம். இங்கு

சொல்லப்பட்ட இருதிறத்தார் யூதர்களும், புறஜாதிகளுமேயாகும். மானிட சரித்திரத்தில் யூதர்களும், புறஜாதிகளுமே மிகப்பெரிய பிரிவினை கொண்டவர்களாயிருந்தார்கள். ஆம், ஒரு இந்து சமுதாயத்தில் பிராமணருக்கும், தாழ்ந்த ஜாதிக்குமிடையேயுள்ள பிரிவினையைக் காட்டிலும் மிக அதிகமான பிரிவினை யூதர்களுக்கும், புறஜாதிகளுக்குமிடையே இருந்தது. ஆனால் இந்த வேத வசனம் குறிப்பிடும் போது இயேசு இப்பகையை தன் மாம்சத்திலேயே சிலுவையின் மரணத்தின் மூலமாய் கொன்று இருதிறத்தாரையும் ஒன்றாக்கினார் என்று கூறுகிறது!

**இவ்வாறு முற்றிலும் எதிரும் - புதிருமாயிருந்தவர்கள் இயேசுவின் மரணத்தின் மூலமாய் ஒன்றாக்கப்பட்டார்கள்!**

கிறிஸ்து சிலுவையில் மரித்ததை மாத்திரம் வேதாகமம் கூறாமல், நாமும் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுவதையும் வேதாகமம் கூறுவதை நாம் காண்கிறோம். கிறிஸ்து மரித்த ஸ்தானத்தை நாம் ஏற்றுக்கொண்டு அவரோடு நாம் மரித்தால்.... "இதே போல" கிறிஸ்துவோடு மரிப்பதை தெரிந்து கொண்ட மற்றவர்களோடு நாம் ஒன்றாகிவிட முடியும். "புருஷர்களே கிறிஸ்து சபையை அன்புகூர்ந்தது போல உங்கள் மனைவியில் அன்புகூருங்கள்" என்ற இந்த வசனத்தின் படி கிறிஸ்து எவ்வாறு சபையில் அன்பு கூர்ந்தார்? சபைக்காக "மரித்தே" அவர் அன்புகூர்ந்தார்! இப்போது நான் என் மனைவியை எவ்வாறு அன்புகூர வேண்டும்? மரிக்க வேண்டும் - அவ்வளவுதான்!! ஆம், என்னுடைய உரிமைகளுக்கும், என் கௌவரவங்களுக்கும், என் மரியாதை உணர்வுகளுக்கும் இன்னும் இதுபோன்ற என் சுய விருப்பங்கள் யாவற்றிற்கும் நான் மரிக்க வேண்டும்.

"நான் மரிக்க வேண்டும்" என்பதின் பொருள், குடும்பத்தின் நம்முடைய தலைமை ஸ்தானத்தையும் மனைவிக்கு கொடுத்துவிட வேண்டும் என்பது அல்ல! யார் வேண்டுமானாலும் ஏறி மிதித்துச் செல்லும் "ஓர் மிதியடியாய்" (Door Mat) இயேசு இருந்ததில்லை!! இயேசுவும் அவருடைய சீஷர்களும் குழுமியிருக்கும் கூட்டத்திற்கு நீங்கள் சென்றால், அக்கூட்டத்தில் யார் தலைவர் என்பதை இரண்டு நிமிடத்தில் நீங்கள் கண்டுபிடித்துவிடலாம். இதைப் போலவே நம்முடைய வீட்டிலும் இருக்கவேண்டும். ஆம், நம்முடைய தலைமைப் பொறுப்பை ஒருபோதும் நம்முடைய மனைவிக்குத் தரவே கூடாது. வீட்டின் தலைவராய் இருக்கும்படி மனைவி வடிவமைக்கப்படவேயில்லை!

இருப்பினும், இயேசுவின் தலைமை வித்தியாசமான பாதையில் இருந்ததை நாம் பார்க்கிறோம். ஆம், தன் ஜீவனை இழந்து மரிப்பதற்கு அவர் எப்போதும் ஆர்வமுள்ளவராயிருந்தார்! இந்த தாற்பரியமே ஒரு வீட்டில் சமாதானமும் ஐக்கியமும் ஏற்படுவதற்குரிய இரகசிய மாயிருக்கிறது!

“நான் மரிப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும்!” இதை யார் முதலில் செய்வது? தேவனுக்கும் மனுஷனுக்கும் உள்ள உறவு முறிந்தபோது உறவை சீர்படுத்த யார் முதலாவது அடியை எடுத்து வைத்தார்கள்? தேவன்தான்! ஏனென்றால் அவர்தான் தலைவர், அவர்தான் உயர்ந்த ஆவிக்குரியநிலை கொண்டவர்!! இதைப்போலவே கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஓர் கடினமான சூழ்நிலை உருவாகும்போது யார் முதலாவது அடியை எடுத்து வைக்கவேண்டும்? இப்போது அதற்குரிய விடை நமக்கு தெரியும்..... யார் அதிக ஆவிக்குரியவர்களாய் இருக்கிறார்களோ அவர்கள்தான் முதலாவது அடியை எடுத்து வைக்க வேண்டும். சுமுகமான உறவு சீர்குலையும் போது, யார் முதலாவதாக மன்னிப்பு கேட்க வேண்டும்? நிச்சயமாய் “குடும்பத்தின் தலையாய்” இருப்பவர்கள்தான் செய்ய வேண்டும்! அவர்தான் முன்மாதிரியாயிருக்க வேண்டும். தலையாயிருந்த இயேசு ஒரு கூலிக்காரனாயிராமல், நல்ல மேய்ப்பனாக இருந்தார். மேய்ப்பனுக்கும் கூலிக்காரனுக்கும் உள்ள பிரதான வித்தியாசம், “மேய்ப்பன் எப்போதும் மந்தைக்கு முன் செல்வான்.” கூலிக்காரன் எப்போதும் மந்தைக்குப் பின்னால் நின்று விரட்டுவான்! இவ்வாறு, இயேசு தன்னுடைய நல்ல மாதிரியினால் நம்மைத் தன்னண்டை ஈர்த்துக் கொண்டாரே அல்லாமல் வெறும் கட்டளைகளையும், சாட்டை அடியையும் கொடுத்தது அல்ல!! தன் ஜீவனை நமக்காகத் தந்தே நம்மை அவர் ஆதாயம் செய்து கொண்டார்!

**இயேசுவைப் போலவே கணவனும் தன் ஜீவனை இழந்து தன் மனைவியை நேசிக்க வேண்டுமென்பதே வேதம் நமக்குக் கற்றுத்தரும் போதனை!**

உங்கள் மனைவியினிடத்தில் ஒரு தவறை நீங்கள் கண்டால் இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இயேசு தன் மணவாட்டியின் “கறைதிரைகளை” நீக்கும்படி வந்தார் என வேதம் கூறுகிறது. இவ்வாறு கறைகளை அகற்றுவதற்கு அவர் தன் ஜீவனைத் தருவது ஒன்றே அவருக்கு வழியாயிருந்தது. இதற்குப் பதிலாய், குற்றம் காண்பதற்காய் அவர் வரவேயில்லை. இவ்வாறாகவே ஒரு கணவன் இருக்க தேவன் விரும்புகிறார். மனைவியினிடத்தில் உள்ள

*‘கறைதிரையாகிய’ குற்றத்தை காண வராமல், எவ்வாறு அவைகள் அகற்றப்பட முடியும் என வாஞ்சிக்கும் ஒரு கணவன்! இவ்வாறாகத் தான் இயேசு நம்மைக் கண்டார்!!*

*கிறிஸ்து சபையை நேசித்தது போலவே மனைவியை கணவன் நேசிக்க வேண்டும் என்பதின் அர்த்தத்தை நாம் எவ்வளவு அதிகம் தியானிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் நம்மிடத்திலுள்ள குறைகளை நாம் கண்டுகொள்ள முடியும். புருஷர்களாகிய நாம் நம்முடைய தலைமைப் பொறுப்பிற்கு உரிய கனத்தை தரவேயில்லை! “தீர்மானங்களை எடுப்பது” போன்ற காரியங்களில் நம்முடைய தலைமை ஸ்தானத்தை விளங்கச் செய்திருக்கிறோம். ஆனால், இயேசு தம்முடைய தலைமை ஸ்தானத்தை நமக்கு முன்பாய் காண்பித்த* **மாதிரியின்படியோ** *நாம் இன்னமும் மாறவில்லை. தேவையை கண்ட அவர் அதை* **உடனே சந்திக்க** *வகைதேடினார்! அதாவது, “கறை திரையை” கண்ட அவர் அவைகளை* **உடனே அகற்றுவதற்குத்** *தன் சொந்த ஜீவனை இழப்பதற்கு ஆயத்தமாயிருந்தார்! இவ்வாறு நம்முடைய இருதயத்தை பயமுறுத்தியல்ல தன் அன்பினாலேயே ஜெயித்து விட்டார். ஒரு வீட்டில்* **ஒருவர் மரிப்பதற்கு** *ஆயத்தமாகி விட்டால் அதுவே அந்த வீட்டில் சமாதானமும், ஐக்கியமும் உண்டாக வழி வகுத்துவிடும்!*

*ஓர் உதாரணத்தைக் கவனித்துக் கேளுங்கள்! கணவனும் மனைவியும் எப்போதும் சண்டைபோட்டுக் கொண்டிருக்கும் ஒரு வீட்டிற்கு அருகில் உங்கள் வீடு இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். காலையில் தொடங்கி அந்த வீட்டில் வாக்குவாதமும், சண்டையும், ஒருவருக்கொருவர் கெட்ட வார்த்தைகளைப் பேசிக் கொள்வதையும் நீங்கள் தினசரி கேட்கிறீர்கள். இவ்வாறு ஒவ்வொருநாளும் நீங்கள் கேட்பது இப்போது உங்களுக்கு வழக்கமாகிவிட்டது. ஆனால் திடீரென்று ஒருநாள் எந்த வாக்குவாதமும் சண்டையும் அந்த வீட்டிலிருந்து கேட்காததால் உங்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டு விட்டது! இந்த திடீரென்று மாற்றத்திற்கு என்ன காரணம் என்பதை அறிய நீங்கள் முற்படுகிறீர்கள். நீங்கள் விசாரித்தபோது, நீங்கள் கேள்விப்பட்ட செய்தி என்னவெனில், “அந்த வீட்டிலுள்ள கணவன் மரித்துவிட்டான்!” என்ற செய்திதான். இனி வாக்குவாதம் அங்கு இல்லை..... என்றுமே இல்லை! இனி அந்த வீட்டில் சமாதானம், சமாதானமே!!*

*இப்போதாவது இயேசு வகுத்த சமாதானத்திற்குரிய இரகசியம் உங்களுக்குப் புரிந்ததா? இந்த நிகழ்ச்சியின் அர்த்தம் உங்களுக்கு*

விளங்கியிருந்தால் மாத்திரம் போதாது, நீங்கள் மரிக்க ஆயத்தமாக வேண்டுமே, அதுதான் காரியம்! அப்போது மாத்திரமே அங்கே சமாதானம் உண்டாக முடியும். இந்த வழியின் மூலமாகத்தான் இயேசு ஒரு சகோதரனுக்கும் மற்றொரு சகோதரனுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் சமாதானம் உண்டு பண்ண வகை செய்தார். ஆகவே, சாகுங்கள் சகோதரனே! உங்கள் மனம் புண்படும் உணர்வுகளுக்கு சாகுங்கள்! உங்கள் மனைவியோ அல்லது வேறு யாரோ உங்களிடம் கடினமாய் பேசும்போது, நீங்களும் பதிலுக்கு பேசுவதற்கு விரும்பிய விருப்பத்திற்கு சாகுங்கள்! உங்களுக்கு ஏற்பட்ட அவமானத்திற்கு சாகுங்கள்! மரித்துபோன மனுஷன் எவ்விதம் எதிர்த்து நிற்பான்? மரித்துவிட்ட மனிதனை அவமானப்படுத்த முடியுமோ? இந்த அற்புதமான வழியைத்தான் இயேசு நமக்குக் கற்றுக்கொடுத்தார். "உங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு நீங்கள் என்னைப் பின்பற்றாவிட்டால் என்னுடைய சீஷர்களாயிருக்கமாட்டீர்கள்" என இயேசு கூறினார்.

**இப்போது, யார் முதலாவது சிலுவை எடுக்க வேண்டும்? மரிக்க வேண்டும்?** "கிறிஸ்து சபையை நேசித்தது போல......." என்று எழுதியிருக்கிறதே. அப்படியானால் இங்கு சிலுவையை எடுக்க வேண்டியது யார்? சபை அல்ல! கிறிஸ்துவிற்கு பின்பு தான் சபை ஒன்றை செய்திட முடியும். முதலாவது அவர் செய்தார், பின்பு சபை செய்யும்படி கூறினார். ஆகவே ஒரு குடும்பத்தில் யார் முதலாவது மரிக்க வேண்டும்? கணவன் தான்! இயேசுவின் மாதிரி எனக்கு சவாலை உண்டாக்கி அவரைப் போலவே சிலுவை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்ற என்னைத் தூண்டுகிறது. அதே போலவே, கணவன் முதலாவது மரித்த **மாதிரியை** முன்வைக்கும்போது அதை மனைவி காண்பாள்! இவ்வாறு ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் கணவன் மரிப்பதைக் காணும் மனைவிக்கு சவால் உண்டாகி, தன் கணவன் செல்லும் அதே வழியில் அவளும் சென்றிட நிச்சயமாய் தூண்டப்படுவாள். இப்போது அந்த வீட்டில் பூரண சமாதானம் நிலவுகிறது!! இதுவே தேவனுடைய வழியாகும்.

ஒரு வீட்டில், இவ்வாறு கணவனும் மனைவியும் தீர்மானம் செய்து அவரவர் தங்கள் சிலுவையை எடுத்து இயேசுவை ஒவ்வொரு நாளும் பின்பற்றிவிட்டால், அந்தக் குடும்பம் எப்படியிருக்கும் என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். "நாமும் அவரோடுகூட மரித்தோமானால் அவரோடுகூட பிழைத்திருப்போம்" (2தீமோ.2:3) என வேதம் கூறுவதைப் பாருங்கள். ஆம், இதுபோன்ற வீட்டில் உயிர்த்தெழுந்த தேவனுடைய வல்லமை நிஜமாகவே வெளிப்பட்டு

*அந்த வீடு பூமியிலுள்ள பரலோகம் போலிருக்கும்! நம் வீட்டில் இதைவிட ஓர் நல்ல சூழ்நிலையை நாம் நம்முடைய பிள்ளைகளுக்குத் தந்துவிட முடியுமோ? ஆம், பூமியிலே (வீட்டிலே) பரலோகத்தின் சாயல்!! ஆனால் இந்த முழுப்பொறுப்பும் "தலைமை" வகித்து ஓர் நல்ல மேய்ப்பனாய் தன் ஜீவனைக் கொடுக்கும் கணவன் கையிலேதான் உள்ளது. இயேசு இவ்வாறாகவே பரலோகத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தார். நாமும் இந்த வழியைக் கவனமாய் பின்பற்றக்கடவோம்!*

*இயேசு எவ்வாறு சாத்தானை ஜெயித்தார்? "மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை* **தமது மரணத்தினாலே** *அழித்தார்" (எபி.2:14) என வேதம் கூறுகிறது. ஆம், மரணத்தின் மூலமாகவே சாத்தான் ஜெயிக்கப்பட்டான். இதே பாடத்தைத்தான் நாம் இப்போது கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவன் தன்னுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்ற தீர்மானித்து விட்டால், அந்த மனிதன் மீது சாத்தானுக்கு எந்த வல்லமையும் இருக்காது. ஆனால் மரிப்பதற்கு ஆயத்தமில்லாத மனிதனிடமோ அவன் தன் முழு வலிமையாலும் ஆட்கொள்வான். பவுல் ஒருசமயம், "உலகம் எனக்கு சிலுவையிலறையப்பட்டிருக்கிறது; நானும் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்" எனக் கூறினார் (கலாத்தியர் 6:14). இந்த வசனத்தை* Living Bible *வேதாகமம் "ஓர் மரித்த மனிதனைக் காட்டிலும் மேலாக, இந்த உலகம் எனக்கு அதிகக் கவர்ச்சியாய் இல்லை" என நேர்த்தியாய் விவரித்துக் கூறுகிறது.*

*இன்று சாத்தான் அநேகருடைய வாழ்க்கையை எவ்வாறு ஆட்டிப்படைக்கிறான்? ஆம், இயேசுவுக்கு வழங்கியதைப் போலவே இவ்வுலகத்தின் சகல மகிமையையும் நமக்குத் தருவதின் மூலமே சாதித்துவிடுகிறான். இயேசுவின் மீது சாத்தானுக்கு ஏன் வல்லமை இல்லாமல் போனது? ஏனென்றால் இயேசு இவ்வுலகத்திற்கு மரித்தார். இயேசுவைப்போலவே பவுலும் "நானும் உலகத்திற்கு சிலுவை யிலறையப்பட்டிருக்கிறபடியால் ஓர் மரித்த மனிதனின் கவர்ச்சியைக் காட்டிலும் இந்த உலகம் எவ்விதத்திலும் எனக்கு கவர்ச்சியாயில்லை" எனக்கூறினார். ஒருவன் உயிரோடிருக்கும் பொழுது இந்த உலகம் அவனுக்கு கவர்ச்சியாயிருக்கலாம்! ஆனால் அவன் மரித்தவுடன் இவ்வுலக கவர்ச்சியனைத்திற்கும் ஓர் முற்றுப்புள்ளி உண்டாகிவிடும். இனியும் உலகம் அவனை கவர்ச்சிக்க முடியாது. ஏனென்றால் அவன் மரித்துப்போனான்!! இதுதான் புதிய ஏற்பாட்டின் நடுமையான உபதேசம் ஆகும். இதை ரோமர் 6:11-ல், "நீங்களும்* **உங்களை மரித்தவர்களாக** *எண்ணிக்கொள்ளுங்கள்" எனக் கூறுகிறது.*

இந்த "மரணச்செய்தியை" (அதுவே நற்செய்தி!) நீங்கள் நன்றாய் விளங்கிக் கொண்டால் அது பரலோகத்தை உங்கள் வீட்டில் கொண்டு வந்து தந்துவிடும். "கிறிஸ்து சபையை அன்பு கூர்ந்ததுபோல, புருஷனும் மனைவியை அன்புகூரவேண்டும்" என்ற வசனத்தின் மூலம் கணவன் மாத்திரமே இவ்விதமாய் அன்புகூர வேண்டுமென நாம் எண்ணிவிடக் கூடாது. ஏனெனில் யோவான் 13:34-ல் "நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் **ஒருவரிலொருவர்** அன்பாயிருங்கள்" என இயேசு கூறினார். ஆகவே இந்த வசனம் கணவனுக்கும் மனைவிக்கும் சமமாய் உரியது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே குடும்பத்தில் யாராவது ஒருவர் தீர்மானம் செய்து, "நான் என் வீட்டிற்குள் பரலோகத்தைக் காணவேண்டும். ஆகவே கல்வாரியின் ஆவியை நான் என் வீட்டிற்கு கொண்டுவந்து இப்போதே சாத்தானை விரட்டியடிக்கப் போகிறேன்" எனக் கூறி செயல்படுவார்களென்றால், அவர்கள் மரிப்பதினிமித்தமாய் சாத்தான் வலிமையை இழந்து ஜெயிக்கப்பட்டு விடுவான்.

இன்று அநேக வீடுகளில் சாத்தானுடைய ஆளுகை இன்னும் இருப்பதற்குக் காரணமென்ன? அதற்குக் காரணம் மிகத் தெளிவாய் இருக்கிறது. ஆம், **இயேசுவோடு மரிப்பதின் வல்லமையை** அந்த வீட்டிலுள்ள கணவனும் விளங்கிக் கொள்ளவில்லை, மனைவியும் விளங்கிக் கொள்ளவில்லை! என்பதே காரணமாகும். இந்த வல்லமையை, குறைந்தது வீட்டிலுள்ள ஒரு நபராவது விளங்கிக் கொண்டு, "ஆண்டவரே, இந்தச் செய்தியை நான் விசுவாசிக்கிறேன். நான் இந்த வழியாய் சென்று என்னுடைய உரிமைகளுக்கும், என்னுடைய ஸ்தானத்திற்கும், என்னுடைய அந்தஸ்தைக் குறித்த உணர்வுகளுக்கும் நான் மரிக்கப் போகிறேன்" எனக் கூற வேண்டும். இவ்விதக் குடும்பத்தில் தேவன் தன்னுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நிச்சயமாய் அந்த வீட்டிற்குள் பிரவேசிக்கச்செய்து, சாத்தானை விரட்டி அவனைத் தோல்வியடையச் செய்வார். இவ்வாறாகவே குடும்பம் கட்டப்படுகிறது!!

இயேசு மரணத்தின் மூலமாகத்தான் இவ்வுலகத்திற்கு இரட்சிப்பை கொண்டுவந்தார். இப்போது குடும்பத்திலுள்ள ஒரு நபர் இயேசு சென்ற வழியை பின்பற்றிவிட்டால், அவர்கள் மூலமாய் இரட்சிப்பும், விடுதலையும் அந்த வீட்டிற்குள் நிச்சயமாய் பிரவேசித்துவிடும்.

"மரிப்பதில்" சொல்லிமுடியாத வல்லமையிருப்பதன் நிமித்தமே, இயேசு தீமையை நன்மையினால் ஜெயித்தார். அடங்கியிருப்பதில்

எவ்வாறு வல்லமை இருக்கிறதோ அதைப் போலவே, அன்பின் ஆவியிலும் வல்லமையிருக்கிறது. அதாவது ஒருவரையும் குற்றம் சாட்டாதிருக்கும் வல்லமை! மற்றவர்களுடைய தேவையை விழிப்புடன் உணர்ந்திடும் வல்லமை! முடிவில்லாத மன்னிக்கும் வல்லமை! இவ்வாறெல்லாமிருந்தும், சுபாவ மனிதனுக்கு இந்தப் போதகங்கள் நூதனமாகவே தோன்றுகிறது. சுபாவ மனிதன் இந்த சத்தியங்களை ஒருக்காலும் புரிந்து கொள்ளமாட்டான். எனவேதான் இன்று அநேகர் இந்த செய்தியைக் கேட்கும்போது, "இவ்வழியில் செல்வதற்கு என்னால் முடியாது" எனக் கூறிவிடுகிறார்கள்..... ஆ, இது துயரம்!!

**5. கணவனின் ஸ்தானம் ஆட்டிப்படைக்கும் தலைமையாய் இல்லாமல் "சரீரத்திற்குத் தலையாய்" இருந்து தேவன் விரும்பும் நல்லதோர் குடும்பத்தைக் கட்டுவோமாக!**

கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவு எபேசியர் 5-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டது போல, தலை - சரீரம் என்ற உறவாக இருக்க வேண்டும். அந்தத் தலை ஒரு அரசாங்க அலுவலகத்தின் தலையல்ல.... ஒரு சரீரத்தின் தலையாகும்! ஒரு வீட்டில் கணவன் பிரதம மந்திரி போலவோ அல்லது ஜனாதிபதி போலவோ தலைமை வேடம் பூண்டுவிடக்கூடாது. இதை இயேசு எச்சரித்துக் கூறும்போது, "புறஜாதியாரின் அதிகாரத்தைப்போல்" பரலோக ராஜ்ஜியத்தின் அதிகாரம் இல்லை என்பதை குறிப்பிட்டுக் கூறினார். ஆகவே, ஒரு கணவன் தன் வீட்டில் பிரதம மந்திரியைப் போலவோ அல்லது ஜனாதிபதியைப் போலவோ இருந்துவிடக்கூடாது. இவையாவும் உலகம் எதிர்பார்க்கும் அதிகாரங்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் "சரீரத்திற்குரிய தலையே" கிறிஸ்து நமக்குப் போதித்த தலைமையாகும்.

ஏனெனில், சரீரத்திற்குரிய தலை தன்னுடைய **ஸ்தானத்தை** பற்றிக்கொள்ள வேண்டுமென ஒருபோதும் முயற்சிப்பதில்லை. ஆனால் ஒரு பிரதமந்திரி தன்னுடைய பதவியின் ஸ்தானத்தைப் பற்றிக் கொண்டிருக்க எப்போதும் கவனமாயிருப்பார். ஆனால் தலையோ தன் சரீரத்தைக் குறித்த அக்கறை நிறைந்ததாகவே எப்போதுமிருக்கும். ஒரு சிறு காயம் சரீரத்தில் ஏற்பட்டாலும், தலை உடனடியாகத் துடிப்புடன் செயல்படும். சரீரத்தை செம்மையாய் காத்து நடத்த வேண்டும் என்ற "சரீரத்தின் நலன் ஒன்றே" தலைக்கு எப்போதும் பிரதானமாயிருக்கும்!

ஆகவேதான், எபேசியர் 5:28-ல், "அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து,

அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்" என கணவன்மார்களுக்கு புத்தி சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள். இவ்வாறு வேதவசனம் வழங்கும் சத்தியத்தின் அடிப்படையில் **கணவனின் பங்கு** என்ன என்பதை நன்கு அறிந்தவர்களாய் குடும்பத்தைக் கட்டக்கடவோம்.

இவ்வாறு அவரவர் பங்கை நிறைவேற்றாமல், ஒருவரையொருவர் குற்றம் சாட்டும் சுபாவத்தை முற்றிலுமாய் நம்மை விட்டு ஒழிக்கக்கடவோம். அதற்கு பதிலாய் ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, என்னுடைய அழைப்பை உணர்ந்து அதை செம்மையாய் நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும். உம்முடைய வார்த்தை கூறும் தரத்திற்கு முன்பாக என்னை நேர்மையாய் நிறுத்தி என்னைக் குறித்த உண்மைகளை நான் காண உதவிச்செய்யும். எங்களைச் சுற்றிலும் சீரழிந்திருக்கும் அநேக குடும்பங்கள் நடுவில் தேவபக்தியுள்ள குடும்பமாய் நாங்கள் கட்டப்பட விரும்புகிறோம். ஆகவே உமக்காக பிரகாசிக்கும் ஓர் இனிய இல்லமாய் எங்கள் குடும்பம் அமைய எங்களுக்கு உதவும். இவ்வாறு எங்கள் குடும்பம், எங்கள் பிள்ளைகள் பூமியிலே (வீட்டிலே) பரலோகத்தை ருசிக்கும் இனிய சூழ்நிலையைத் தந்து அவர்கள் ஓங்கி வளர கிருபை தாரும்" என மிகுந்த கரிசனையோடு ஜெபம் செய்யுங்கள்.

கிறிஸ்து காண்பித்த மாதிரியைப் போன்ற ஓர் சிறந்த கணவனாய் இருந்திட தேவன் உங்களுக்கு கிருபை செய்வாராக. ஆமென்!!

# பகுதி – 3

## பிள்ளைகளும் பெற்றோர்களும்

## குழந்தை பிரதிஷ்டை

பெற்றோர்களாகிய நமக்கு ஏராளமான பொறுப்புகள் இருக்கின்றன. நீங்கள் ஒரு கம்பெனியில் வேலை பார்ப்பவராக இருந்தால், அந்தக் கம்பெனியிலிருந்து முக்கியமான பொறுப்பாக பத்துலட்ச ரூபாயை உங்களிடம் கொடுத்து, மதுரையிலிருந்து டெல்லியில் உள்ள ஒரு கம்பெனியில் அதைச் சேர்க்கும்படி கூறுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பயணத்தில் நீங்கள் எவ்விதமாய் நடந்து கொள்வீர்கள்? உங்களுடைய கையிலோ சூட்கேஸ் நிறைய பத்துலட்ச ரூபாய் இருக்கிறது! அதை வைத்துக் கொண்டு நீங்கள் பயணம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அது எவ்வளவு பெரிய பொறுப்புள்ள வேலை!! அந்த இரவிலே நீங்கள் தூங்ககூட மாட்டீர்கள். அந்த பணமுள்ள சூட்கேஸை உங்கள் தலையணைக்கு அடியில் வைத்திருப்பீர்கள். ஐந்துநிமிடம் ரயிலை விட்டு கீழே இறங்க வேண்டுமானாலும் அந்த சூட்கேஸை கையிலேயே எடுத்துக் செல்வீர்கள். ஏனென்றால் அந்த சூட்கேஸ் மிகவும் விலைமதிப்புள்ளது.

இந்த 10லட்ச ரூபாயின் மதிப்பினை விட ஒரு குழந்தை அதிக மதிப்புள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா? இதை இயேசு கூறும் போது, "நீ உலக முழுவதும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் உன் **ஆத்துமாவை** நஷ்டப்படுத்திக் கொண்டால் அதனால் லாபம் என்ன?" எனக் கேட்டார். அது எப்படி என்று சொன்னால் ஒரு தராசின் ஒரு தட்டிலே மனிதனுடைய ஆத்துமாவையும், இன்னொரு தட்டிலே இந்த உலகத்திலுள்ள சகல சம்பத்துக்களையும் வைத்தாலும் இந்த ஆத்துமாதான் இன்னமும் எடை உள்ளதாய் இருந்து கொண்டே இருக்கும்.




**எனவே ஒரு சிறு குழந்தை இந்த உலகத்திலுள்ள சம்பத்துகளைக் காட்டிலும் அதிக மதிப்புடையது!**

சில சமயங்களில் நாம் செய்தித்தாளிலே "ஒரு ஏழை மனிதன் ஒரு ஆயிரம் ரூபாய்க்குத் தன் குழந்தையை விற்றுப் போட்டான்" என வாசித்திருக்கிறோம். நீங்கள் ஒருவேளை "இதென்ன கொடுமை! வெறும் ஆயிரம் ரூபாய்க்காகப் பிள்ளையை விற்பதா?" எனக் கேட்கலாம். சரி, ஆயிரம் வேண்டாம், ஒரு கோடி ரூபாய் நான் உனக்குத் தருகிறேன், உன் பிள்ளையை எனக்குக் கொடு என்றால், நீங்கள் உங்கள் பிள்ளையை விற்பீர்களா? ஒருகோடி ரூபாய்க்கு இப்போது நீங்கள் சற்று தயங்குகிறீர்கள்? சரி, 10 கோடி தருகிறேன் என்றால் என்ன சொல்வீர்கள்? இன்னமும் சத்தமாய் 100 கோடி தருகிறேன், உன் பிள்ளையை கொடு என்று கேட்டால் என்ன சொல்வீர்கள்?

ஆஹா! 100 கோடி ரூபாயில் எவ்வளவு சீரும் சிறப்புமாய் செழிப்போடு வாழலாம். ஒரு குழந்தை போனால் என்ன, இன்னொரு குழந்தை பெற்றுக் கொள்ளலாமே? இப்பொழுது நீங்கள் "100 கோடி ரூபாய் வாங்கிக் கொண்டு குழந்தையைக் கொடுத்துவிடலாமா?" என உங்கள் மனம் தடுமாறுகிறதா?

> **உத்தமக் கிறிஸ்தவர்களான உங்களைப் பொறுத்தவரையில், "இந்த உலகத்தில் உள்ள எத்தனை ஆயிரம் கோடி ரூபாயைக் கொண்டு வந்து கொட்டினாலும், என்னிடமிருந்து என் பிள்ளையை பிரிக்கவே முடியாது" என்று நீங்கள் சொல்வீர்கள் என்றே நான் நம்புகிறேன்.**

பணம் உங்களை மகிழ்ச்சியாக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி எண்ணிக் கொண்டிருப்பீர்கள் என்றால் நீங்கள் ஒரு மதியீனன்! இந்த பூமியிலே யாரையும் விட மிக மகிழ்ச்சியாக வாழ்ந்த நபர் ஒருவர் இருந்தார். அவர் யார்? டாடாவா அல்லது பிர்லாவா? இல்லவே இல்லை! அவர் இயேசுகிறிஸ்து! இயேசு தனது பர்ஸில் எவ்வளவு பணம் வைத்திருந்தார்? அவருடைய பர்ஸில் பணமே இல்லாமல்தான் இருந்தது. ஆனால் அவரைப் போல் யாரும் அவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்ததில்லை! எனவே பணம் என்னை மகிழ்ச்சியாக்கும் என எண்ணுவதெல்லாம் ஒரு கொடிய வஞ்சகமே. பணம் உங்களுக்கு வசதியை தரும் என்பது உண்மைதான். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். பணத்தை வைத்து நீங்கள் ஒவ்வொருநாளும் ஐஸ்கிரீமையும், கேக்கையும் வாங்கிச் சாப்பிடலாம்! ஐஸ்கிரீமையும், கேக்கையும் நீங்கள் சாப்பிடுவதினால் அவை ஒருநாளும் உங்களுக்கு நிரந்தர மகிழ்ச்சியைத் தரப்போவது இல்லையே! ஒவ்வொருநாளும் ஐஸ்கிரீமும், கேக்கும் சாப்பிட்டால்

உங்களுக்கு வியாதிதான் வரும் என டாக்டர்கூட சொல்லுவார். வியாதிப்பட்டியலில் குறிப்பிட்ட சில வியாதிகளின் பெயர் பணக்காரர்களுக்குரிய வியாதிகளாகும், அது பணக்காரர்களுக்குத் தான் வரும்! ஏழை ஜனங்களுக்கு அந்தக் குறிப்பிட்ட வியாதிகள் வருவதே இல்லை. ஏனென்றால், இந்த பிரயோஜனமற்ற உணவுகளையெல்லாம் அள்ளி அடைத்து சாப்பிட அவர்களிடம் பணம் இல்லை. பணம் அதிகம் இல்லாமல் இருப்பதில் ஒரு பெரிய ஆசீர்வாதம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

**எனவே பணம் உங்களை மகிழ்ச்சியாக்கும் என எண்ணிவிடாதீர்கள். தேவன் அதற்கு பதிலாய் நம்மை மகிழ்ச்சியாவதற்கு "குழந்தைகளைக்" கொடுத்திருக்கிறார்.**

தேவனை நோக்கிப் பாருங்கள்..... இந்த அண்ட சராசரத்தில் அவர்தான் ஐசுவரியமுள்ளவர்! அவரிடத்தில் வெறும் பொன்னும் வெள்ளியும் மாத்திரம் இல்லை, எல்லா கிரகங்களும், சகல நட்சத்திரங்களும், வானமண்டலமும் அவருக்குச் சொந்தம்! எல்லாம் அவருடையதுதான்! அவர் வாய் திறந்து பேச ஆரம்பித்து விட்டாலே தங்கமும் வெள்ளியும் பணமும்...... உண்டாகிவிடும்! ஆனால் இன்று ஒரு உண்மையைக் கேளுங்கள்..... இவ்வளவு அண்டசராசரத்திலும் அவர் மகிழ்ச்சி கொள்ளவேயில்லை!! ஆம், நீதிமொழிகள் புத்தகம் "அவருடைய மகிழ்ச்சி மனுபுத்திரரில் இருக்கிறது!" என்றல்லவா பரவசத்துடன் கூறுகிறது.

உண்மைதான், தேவன் தன்னுடைய மகிழ்ச்சியை மனுபுத்திரர் மீது வைத்திருக்கிறார். தேவன் தன்னுடைய இருதயத்தைப் போலவே தான் நமக்கும் ஒரு இருதயத்தைத் தந்திருக்கிறார்! ஆனால், துரதிருஷ்டவசமாக தேவன் கொடுத்த அந்த இருதயம் பாவத்தினால் தீட்டுப்பட்டுவிட்டது. ஆனால் தேவனோ தம் பரிசுத்த ஆவியானவரை நமக்குத் தந்தருளி இழந்துபோன அந்த இருதயத்தை மீண்டும் தம்மைப் போல் பரிசுத்தம் நிறைந்ததாய் மாற்ற முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

**இவ்வாறு மீண்டுமாய் நம்முடைய இருதயம் தேவனுடைய இருதயத்தைப் போல் மாறிவிட்டால் நாம் ஒருபோதும் நம் சந்தோஷத்தை பணத்தின்மீது வைக்கமாட்டோம். தேவனைப் போலவே நம்முடைய மகிழ்ச்சியானது மனுபுத்திரர் மீதே இருக்கும்!**

நீதிமொழிகள் 8:31- ம் வசனத்தில், "மனுமக்களுடனே

மகிழ்ந்து கொண்டிருந்தேன்" என்ற தேவனுடைய வார்த்தையின் படியே இயேசுவும் மனுக்குலத்தின்மீதே மகிழ்ச்சியாயிருந்தார்! அவருடைய மகிழ்ச்சி அண்டசராசரத்தின் யாதொன்றின் மீதும் இருந்ததே இல்லை!! அவரைப் போலவே, நம்முடைய இருதயம் தேவனுடைய இருதயத்திற்கு ஒப்பாய் மாறும்போது நம்முடைய மகிழ்ச்சியும் நம்முடைய பிள்ளைகளின் மீது இருக்குமேயல்லாமல் வேறு எந்தப் பொருள் மீதோ, உலக ஆஸ்தி மீதோ இருந்திடாது.

பெற்றோர்களாகிய நாம், பிள்ளைகளை தேவனுக்குப் பயந்து வாழ்கின்ற வழிகளிலே நடத்தும்படிக்கே, நமக்கென்று தேவன் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்.

**குழந்தையை வைத்திருக்கும் உங்களில் ஒருவரும் "இது என்னுடைய குழந்தை" என்று சொல்லாமல், "தேவன் எனக்கு தந்த குழந்தை" என்றே சொல்லுங்கள்.**

சில ஆண்டுகள் உங்களுடைய கரத்திலே தேவன் அந்தக் குழந்தையைக் கொடுத்து, அக்குழந்தையை கர்த்தருக்குப் பயந்து வாழும் வழியிலே நடத்தும்படியான பொறுப்பை உங்களுக்குத் தந்திருக்கிறார், அவ்வளவுதான்!

இந்த பூமியில் எதையுமே நாம் சொந்தமாய் வைத்துக் கொள்ளும்படி அவர் தரவேயில்லை. பணமும் அல்ல, சொத்தும் அல்ல.... குழந்தையும் அல்ல! இதை யோபு கூறும்போது "நான் நிர்வாணமாய் இந்த பூமிக்கு வந்தேன், நிர்வாணமாய் செல்லுகிறேன்" என்றே கூறினார். நாம் இந்த உலகத்தில் பிறந்து வந்தபோது, நமக்கென்று ஒரு சொத்தும் இல்லை, நமக்கு ஒரு சட்டை கூட இல்லை. ஒன்றும் இல்லாமல்தான் நாம் இந்த பூமிக்கு வந்தோம். ஒரு வீடும், ஒரு சொத்தும், ஒரு குழந்தையும் இல்லை! அதேபோல் நாம் இந்த பூமியை விட்டுப் போகும்பொழுது ஒரு சட்டையைக் கூட எடுத்துச் செல்லமுடியாது!!

ஆம், என்னுடைய குழந்தைகளைக் கூட என்னுடன் எடுத்துச் செல்ல முடியாது. ஏன்? ஏனென்றால் அவைகள் என்னுடைய வைகள் அல்ல. அவைகள் என்னுடையதாய் இருக்கும் என்றால், அதையும் சேர்த்து எடுத்துக் கொண்டு செல்வதற்கு தேவன் அனுமதித்திருப்பாரே. நம்முடைய "கான்பரன்ஸ்" கூட்டங்களுக்கு 3 நாட்கள் குடும்பத்துடன் வந்த நீங்கள் கூட்டம் முடிந்ததும் உங்களுடையவைகளை மாத்திரமே எடுத்துச் செல்ல முடியும். இங்கே இருக்கிற பிளேட்டையும், தண்ணீர்

ஜாடியையும் நீங்கள் எடுத்துச் செல்ல முடியாதே! ஏனென்றால் அதை நீங்கள் கொண்டுவரவில்லை. ஆனால் இங்கு இருக்கிற தம்ளரையும், பிளேட்டையும் நீங்கள் **உபயோகப்படுத்தலாம்.** இவ்வாறு "உபயோகப் படுத்த முடியுமே" அல்லாமல் அதை நீங்கள் எடுத்துச் செல்ல முடியாது.

அதுபோலவே நாம் இந்த பூமிக்கு வந்தபோது, நமக்கென்று கொடுத்திருக்கின்ற எல்லாமே இங்கே இருக்கின்ற தம்ளரையும், பிளேட்டையும் போலத்தான்! அதை உபயோகப்படுத்தலாம், ஆனால் அவைகள் நம்முடையவைகள் அல்ல. நாம் தினமும் அதை உபயோகப் படுத்தினாலும்கூட அது நமக்குச் சொந்தமானது அல்ல! ஒன்றை உபயோகப்படுத்துவதற்கும், ஒன்றை சொந்தம் கொண்டாடுவதற்கும் உள்ள வித்தியாசம், மேற்குக்கும் கிழக்குக்கும் உள்ள தூரத்திற்கு ஒப்பானது என்பதை நாம் அறியக்கடவோம்.

தேவன் உங்களுக்கு ஒரு வீட்டைக் கொடுத்திருக்கிறார். அங்கே உள்ள பதிவு அலுவலகத்திலே உங்களுடைய பெயரும் எழுதப் பட்டிருக்கும். ஆனாலும், அது உங்களுடையது அல்ல, அது தேவனுடையது! தேவன் அந்த வீட்டில் வாழும்படி உங்களை அனுமதித்திருக்கிறாரேயல்லாமல் அது உங்களுக்குச் சொந்தமானது அல்ல, பெங்களூரில் எனக்கென்று ஒரு சொந்த வீட்டில் இருக்கிறேன். பதிவு அலுவலகத்தில் என்னுடைய பெயரில்தான் அந்த வீடு இருக்கிறது. ஆனால் நான் அதை என்னுடைய வீடாய் பாவிப்பது இல்லை. அது தேவனுடைய வீடு!

அவர் என்னை அந்த வீட்டிலே வாடகை இல்லாமல் குடிஇருக்கும்படி அனுமதித்திருக்கிறார், அவ்வளவுதான். ஒரு நிலபிரபு, ஒரு வீட்டை எனக்குக் கொடுத்து, "இந்த வீட்டிலே நீ இருந்துகொள்" என்று அனுமதிப்பது போல, தேவன் இந்த வீட்டைக் கொடுத்திருக் கிறார். அதுபோலவே, குழந்தைகள் இருந்தாலும் அவர்கள் ஒருநாளும் என்னுடையவர்கள் அல்ல. அவர்களும் தேவனுடைய பிள்ளைகள் தான்! அந்தப் பிள்ளைகளை நான் பராமரித்து தேவனுக்கென்று அவர்களை நான் வளர்க்க வேண்டும். அவர்கள் என்னுடையவர்கள் அல்ல. தேவனுடையவர்கள்!!

எனவே நீங்கள் உங்கள் குழந்தைகளை எப்பொழுதெல்லாம் பார்க்கிறீர்களோ அப்பொழுதெல்லாம் இவர்கள் என்னுடைய குழந்தைகள் அல்ல, இவர்கள் தேவனுடையவர்கள் என்றே உங்களுக்குச் சொல்லுங்கள். எனவேதான் நாம், சபையில் குழந்தைகளை தேவனுக் கென்று பிரதிஷ்டை செய்கிறோம். ஒரு உத்தமமான தேவ ஊழியன், ஒரு

*குழந்தையை பிரதிஷ்டை செய்யும்போது, என்ன கூறி கர்த்தரிடம் ஜெபித்து பிரதிஷ்டை செய்வார்?*

> **"ஆண்டவரே, இந்தக் குழந்தை இந்தப் பெற்றோருக்குச் சொந்தமல்ல, அவர்கள் இந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதற் கென்று நியமிக்கப்பட்டவர்கள் மாத்திரமே. இந்தக் குழந்தை உம்முடையது! இந்தக் குழந்தையை உமக்கு ஏற்ற வழியிலே வளர்ப்பதற்கு இந்த பெற்றோர்களுக்கு உதவி செய்யும்" என்றே ஜெபிக்கிறோம்!**

*இந்திய தேசத்திலே புறஜாதிகளுக்குரிய மனப்பான்மை பற்பல உண்டு. இப்புறஜாதிகளின் மத்தியில் நாம் வாழ்கிறபடியால் எத்தனையோ புறஜாதிகளுக்குரிய எண்ணங்கள் நமக்குள் வந்திருப்பதை நாம் அறியாதிருக்கிறோம். "மனைவியை ஒரு அடிமையைப் போல நடத்துவது" புறஜாதியாரின் மனப்பான்மை. மனைவியை ஒரு அடிமையைப் போல் நடத்துவதற்கு தேவன் நமக்குக் கற்றுத்தரவில்லை. புறஜாதியரின் எண்ணங்களே நமக்குக் கற்றுத்தந்திருக்கிறது. ஒரு வீட்டிலே, நீங்கள் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் மனைவியோடு அதற்காக ஜெபிப்ப தில்லையே! இதை யார் உங்களுக்கு சொல்லி கொடுத்தார்? இந்த புறஜாதி மக்கள்!*

*வேதமோ, மனைவியை "கிருபைக்கு உடன் சுதந்திரவாளிகள்" என்றே கூறுகிறது (1பேதுரு.3:7). அவர்கள் உங்கள் பாதத்திலிருந்து உருவாகாமல் உங்கள் விலா எலும்பிலிருந்து உருவானவர்கள். ஏவாளை விலா எலும்பிலிருந்துதான் ஆண்டவர் எடுத்தார். ஏன் இந்த ஆண்டவர் அவளை உங்கள் பாதத்திலுள்ள எலும்பை எடுத்து உருவாக்கவில்லை? இதன் மூலம் ஆண்டவர் மனுஷனுக்குப் போதிக்க விரும்பிய செய்தி என்னவென்றால், "ஸ்திரீயானவள் உன் பாதத்தில் இருக்க வேண்டியவள் அல்ல. உன்னுடைய பக்கத்தில் இருக்க கூடியவள்!" என்ற செய்திதான். ஆகவே, கணவனும் மனைவியும் ஆகிய இருவரும் "ஒரு மனுஷனாய்" இருக்கிறபடியால், இருவரும் சேர்ந்து ஒரு மனதோடு ஜெபித்து முடிவு செய்வதை கர்த்தர் விரும்புகிறார்!*

*இதைப்போலவே, மற்றொரு புறஜாதிக்குரிய எண்ணம் என்னவென்றால், எனக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான்..... எதற்காக இந்த மகன்? இவன் வளர்ந்து வரவேண்டும், நல்லதொரு வேலை கிடைக்க வேண்டும், நல்ல அந்தஸ்தான திருமணமும், குடும்பமும் அமைய வேண்டும்! முடிவாக என்ன நடக்க வேண்டும்?...... இங்குதான்*

*பெரும்பாலான பெற்றோர்கள் தடுமாறி, புறஜாதியாரின் எண்ணத்தை பிரதிபலித்து.....*

**"நான் வயது சென்று வியாதிப்படும் நேரத்தில் என் மகன் என்னைத் தூக்கிக் கொண்டுபோய் என்னை பராமரிக்க வேண்டும்!" இதற்காகத் தானே நீங்கள் பிள்ளைகளை வளர்க்கிறீர்கள்? அது நூற்றுக்கு நூறு நீங்கள் வாழும் புறஜாதி நாட்டின் கேடான சிந்தை என்பதை அறியுங்கள்!**

*வேதப்புத்தகத்திலே, பிள்ளைகளை நீங்கள் வளர்த்து, நீங்கள் வயதாகும் சமயத்திலே அவர்கள் உங்களைக் கவனிக்க வேண்டும் என்றா எழுதியிருக்கிறது? ஆச்சரியம் என்னவென்றால் எத்தனையோ கிறிஸ்தவ பெற்றோர்களும்கூட இந்தப் புறஜாதியரின் கருத்தைத்தான் மனதில் வைத்திருக்கிறார்கள். நாம் தேவனை கனப்படுத்தினால் தேவன் நம்மைப் பொறுப்பெடுத்துக் கொள்வாரே! நம்மை கவனிக்க வேண்டும் என்பதற்காக நாம் பிள்ளைகளை வளர்க்காமல், தேவனுக்காகவே வளர்க்க வேண்டும்!*

*எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் பிற்காலத்தில் என்னை கவனிக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொள்ளாமல், அவர்கள் தேவனுக்காக வாழவேண்டும் என்பதிலேயே ஆர்வம் கொண்டிருக்கிறேன். எதற்காக உங்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள்? எந்த நிலையிலும் 'உங்களுக்காக' என்று நீங்கள் எண்ணமாட்டீர்கள் என்றே நான் நம்புகிறேன். அவர்கள் தேவனுக்காக வாழவேண்டும், அவ்வளவுதான். எப்படி உங்கள் பக்கத்து வீட்டுப்பிள்ளைகள் உங்களுடைய பிள்ளைகள் இல்லையோ, உங்கள் சொந்தப் பிள்ளைகளும் உங்களுக்கு உரியவர்கள் அல்ல! அவர்கள் தேவனுக்கு சொந்தமானவர்கள். அவர்களை தேவனுக்காகவே வளர்த்து வைக்க வேண்டும்!*

*குழந்தை ஆறு வயதாயிருக்கும்போதே தேவன் எடுத்துக் கொண்டால், என்ன செய்ய வேண்டும்? ஆண்டவரே, ஒரு வயதாய் இருக்கும்போது அவன் என்னுடைய பிள்ளை அல்ல, உம்முடைய பிள்ளைதான். ஐந்து வயதாய் இருக்கும்போதும் என்னுடைய பிள்ளை அல்ல, உம்முடைய பிள்ளைதான். இது உம்முடைய தோட்டம். இங்கே ஒரு அழகான ரோஜா மலர் மலர்ந்திருக்கிறது. தோட்டத்தின் எஜமான் வந்து அந்த அழகான மலரைப் பிடுங்கிச் செல்கிறார்! நல்லதுதான்! நான் இந்த தோட்டத்துக்கு காவல்காரன்தான். நீர் சொந்தக்காரர்! ஆகவே நீரே விரும்பி மலரைப் பறித்து சென்றிருக்கிறீர்!!*

*சில சமயங்களில் நம்முடைய பிள்ளை 3,4 அல்லது 5 வயதில் மரிக்க நேரிடுகிறது. நாம் என்ன செய்யலாம்? நாம் தோட்டத்துக் காவல்காரர்தான். தோட்டத்துக்கு சொந்தக்காரராகிய நம்முடைய பிதா தோட்டத்திற்கு வந்து அந்த மலரைப் பறித்துச் சென்றால், அது அவருக்குச் சொந்தம்! அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். நாம் எப்படி முறுமுறுத்து குறை சொல்ல முடியும்? ஆனால் அநேக வேளைகளில் நாமோ நமக்கென்று இந்தப் பிள்ளைகளை வாரிக் கொண்டவர்களாயிருக்கிறோம். என்னுடைய பிள்ளை, "இந்தப் பிள்ளைதான் என்னுடைய தேவன்!" இது எல்லாம், ஒரு இந்து மனிதனைப்போல் உங்கள் குழந்தையை விக்கிரகத்தின் வடிவிலே ஆராதிக்கிறீர்கள். நாமோ, ஆபிரகாம் ஈசாக்கை தேவனிடத்தில் கொடுத்ததைப் போல "ஆண்டவரே இவன் உம்முடைய பிள்ளை" என்று சொல்லிவிட வேண்டும். உங்கள் குழந்தையை நீங்கள் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து விட்டால், தேவன் உங்கள் குழந்தையை நீங்கள் கவனிப்பதை விட அதிக கவனம் எடுத்துக் கொள்வார். எனவே குழந்தைப் பிரதிஷ்டையை ஏதோ சபையில் வழக்கமாய் செய்கிற ஒரு சடங்குபோல், பெற்றோர்களாகிய நீங்கள் செய்துவிட வேண்டாம். உண்மையான ஆவிக்குரிய உணர்வை பெற்று பிரதிஷ்டை செய்யுங்கள்.*

*குழந்தையை நாம் பிரதிஷ்டை செய்து ஜெபிக்கும் போது குழந்தையின் பெற்றோர்கள் என்ன செய்யவேண்டும்?*

> **பெற்றோர்களே, நிஜமாகவே நீங்கள் உங்கள் குழந்தையை தேவனுக்குக் கொடுக்க விரும்புகிறீர்களா? நிஜமாகவே, இன்றிலிருந்து இந்தப் பிள்ளை என்னுடையதல்ல, ஆண்டவரே இது உம்முடையது! என்று சொல்ல விரும்புகிறீர்களா? ஆண்டவரே, இந்தப்பிள்ளையை உமக்காகவே நாங்கள் வளர்ப்போம், எங்களுக்காக அல்ல என்று சொல்வீர்களா? அதுதான் இந்த பிரதிஷ்டையினுடைய முக்கிய நோக்கம்.**

*இவ்விதமாய் நாம் எல்லோருமே அவரவருடைய குழந்தைகளை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்துவிட்டால், அப்பொழுதுதான் நம்முடைய பிள்ளைகள் தெய்வபயத்திலே, தேவபக்தியிலே வளரும். எல்லாவற்றையும் நாம் தேவனுக்கு முற்றிலும் கொடுத்துவிட்டால், தேவன் பொறுப்பெடுத்துக் கவனித்து கொள்வார். நாம் இவ்வாறு சம்பூர்ண பிரதிஷ்டை செய்வது மூலமாய் ஒன்றையும் இழந்து போவதில்லை! பழைய ஏற்பாட்டின் காலத்திலே ஆண்டவர், "ஒவ்வொரு தலை மகனும் எனக்குரியவன்" என்று கட்டளையிட்டார்.*

ஆம், மற்ற பிள்ளைகளை உங்களுக்காக வைத்துக் கொள்ளலாம். எப்படி பழைய ஏற்பாட்டில் வருமானத்தில் பத்தில் ஒன்று ஆண்டவருக்கும் மீதி நமக்கென்றும் இருந்ததுபோல!! ஆனால் புதிய ஏற்பாட்டிலோ "நம் வருமானத்தின் நூறு சதவீதமும் என்னுடைய வைகள் அல்ல, ஆண்டவருடையதுதான்" என இயேசு போதித்தார். எல்லாப் பிள்ளைகளும் மகனோ, மகளோ கர்த்தருடையவர்கள்தான். அப்படித்தான் நாம் புதிய உடன்படிக்கையில் பிரதிஷ்டை செய்ய வேண்டும். எனவேதான் நம்முடைய எல்லாக் குழந்தைகளையும் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்து, என்னுடைய எல்லா பிள்ளைகளும் தேவனுக்கென்று வாழவேண்டும் என பெற்றோர் களாகிய நாம் முடிவு செய்ய வேண்டும்.

பெற்றோர்களாகிய நம்முடைய சம்பாஷணைகள், நடை உடை பாவனைகள் அனைத்தும் இந்தப் பிள்ளைகளுக்கு **நல்ல மாதிரியாய்** இருக்கும்படி விழிப்புடன் ஜீவிக்க வேண்டியது நம்முடைய கடமை. இவ்வாறு தேவனுக்கென்று "பக்தியுள்ள சந்ததி" நம் சபைகளில் எழும்ப தேவன் கிருபை செய்வாராக! ஆமென்.

## குடும்பத்தை தகப்பனே நடத்த வேண்டும்

கணவனாய் இருப்பதைவிட ஒரு மனைவியாய் இருப்பது மிகவும் எளிது! இந்த உண்மையை மனைவியராய் இருக்கும் அநேக சகோதரிகளிடம் நான் சொல்லியிருக்கிறேன். அது ஏனென்றால், **மனைவி செய்யவேண்டிய ஒரே ஒரு வேலை** கணவன் என்ன சொல்லுகிறானோ அதைக் கேட்டு அடங்கியிருப்பதுதான். ஆனால், எப்போதெல்லாம் ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாகிறதோ அப்போதெல்லாம் குடும்பம் எந்தத் திசைக்குச் செல்ல வேண்டுமென்பதை கணவனே தீர்மானிக்க வேண்டிய இடத்தில் இருக்கிறான்!! தகப்பனாகிய நீங்கள் தவறாய் சென்று விட்டீர்களென்றால், உங்களுடைய முழுக் குடும்பமும் தவறாய் சென்றுவிடும். ஆகவே குடும்பத்தை நடத்துவதற்குரிய மிகப் பெரிய பொறுப்பு தகப்பனையே சார்ந்ததாய் இருக்கிறது.

1பேதுரு.3:6-ல் சாராளைப் பற்றி இவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது, "சாராள் தன் புருஷன் ஆபிரகாமை 'ஆண்டவனே' என்று அழைத்து கீழ்ப்படிந்திருந்தாள்." சாராள் அப்படி என்ன பெரிதாய் கீழ்ப்படிந்து விட்டாள்? சாராளைப் பார்த்து ஆபிரகாம் "நாம் இந்த ஊர் பட்டணத்தைவிட்டு வெளியே போகவேண்டும்" என்று சொன்னபோது சாராள் "சரி தான்" என்று அவன் பின்னாலே சென்று விட்டாள்! நாட்கள் பல கடந்ததும் "இப்போது நாம் எகிப்துக்குப் போவோம்" என்று ஆபிரகாம் சொன்னபொழுது சாராள் "சரிதான்" என்று அவன் பின்னாலே சென்று விட்டாள்! இன்னும் சில நாட்கள் சென்றதும் "நாம் இப்போது எகிப்திலிருந்து மறுபடியும் கானான் ஊருக்குச் செல்வோம்" என்று ஆபிரகாம் சொன்னபோது அதற்கும் சாராள் "சரிதான்" என்று அவனுடன் திரும்பச் சென்றாள்! பார்த்தீர்களா, இங்கு சாராள் அடங்கியிருந்தாள். ஆனால்

9



அவளுக்கென்று கடினமான பொறுப்புகள் இங்கு ஏதும் இல்லையே?!

ஆதியாகமம் 13-ம் அதிகாரத்தில் நடந்த நிகழ்ச்சியின்படி ஆபிரகாம் எகிப்துக்குச் சென்றதும், ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் நிகழ்ச்சியின்படி ஆபிரகாம் எகிப்துக்குச் சென்றதும் அவனுடைய பெரிய தவறு. ஆனால் அந்தத் தவற்றிற்கு சாராள் உடந்தையானவள் அல்ல! ஆதியாகமம் 12-ம் அதிகாரம் 10-ம் வசனத்தில், "அந்த தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று; பஞ்சம் கொடியதாயிருந்தபடியால் ஆபிரகாம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்திற்குப் போனான்" என நாம் வாசிக்கிறோம். இவ்வாறு எகிப்துக்குச் சென்றதினிமித்தம்தான் அங்கிருந்து **ஆகார்** என்ற ஸ்திரீயை ஆபிரகாம் கொண்டுவந்தான். இவ்வாறு ஆகார் என்ற வேலைக்காரியை எகிப்திலிருந்து அவன் கூப்பிட்டு வந்ததினால்தானே ஆதியாகமம் 16-ம் அதிகாரத்தில், "நீர் ஒரு சந்ததியை உருவாக்கும்படி இந்த வேலைக்காரியாகிய ஆகாரோடு சேரும்" என்று சாராள் சொல்லும்படி நேரிட்டது! அந்த ஆகார் மூலமாகத்தான் 'இஸ்மவேல்' என்ற மகன் பிறந்தான். அந்த இஸ்மவேல் வம்சத்தின் வழியாகத்தான் இன்று நாம் பார்க்கும் அரபு மக்கள் வந்தார்கள். பாருங்கள், இன்று இவர்கள் இஸ்ரவேலரோடு சுமார் 3500 நீண்ட ஆண்டுகாலமாய் இன்னமும் சண்டை போட்டுக் கொண்டே தான் இருக்கிறார்கள்!

நீங்கள் பத்திரிக்கையை எடுத்துப் பார்ப்பீர்களென்றால், குறிப்பாக ஆங்கிலப் பத்திரிக்கையிலே கிட்டத்தட்ட தினமும் அரபுக்கும், இஸ்ரவேலுக்கும் நடக்கிற சண்டையைப் பற்றிய செய்தியை காணமுடியும்.

இவ்வித அழிவிற்குரிய போர் எங்கே தொடங்கியது? 'ஒரே' மனிதனாகிய ஆபிரகாம் மூலமாய் தோன்றியது! அவன் தேவனிடத்தில் ஆலோசனை கேட்காமல் எகிப்துக்குச் சென்ற விளைவால் ஏற்பட்டது. அங்கிருந்து ஒரு எகிப்திய அடிமையை கொண்டுவந்து அவள் மூலமாய் ஒரு பிள்ளையைப் பெற்றான்! அதனுடைய துவக்கம்தான் இந்த அரபு தேசம்!! அந்த அரபு வம்சத்திலிருந்துதான் "நபி" என அழைக்கப்படும் **முகமது** என்பவர் வந்தார். அவர்தான் முஸ்லீம் மதத்தை ஸ்தாபித்தார்.

இன்று இந்த உலகத்திலே முஸ்லீம் ஜனங்கள் சுமார் 100 கோடி மக்களாய் இருக்கிறார்கள். இது கிறிஸ்தவர்களின் தொகையைவிட அதிக தொகையாகும். இன்று கிறிஸ்தவர்களுக்கு அவர்கள்தான் முக்கிய எதிரியாகவும் இருக்கிறார்கள். இதெல்லாம் இந்த ஆபிரகாம் மூலமாய் உண்டானதுதான்!!

**எனவே ஒரு கணவன் தவறு செய்யும்போது அது பிள்ளையைப் பாதிக்கிறது..... பேரப்பிள்ளையைப் பாதிக்கிறது.... கொள்ளு பேரனைப் பாதிக்கிறது.... இப்படியாக, அவன் சந்ததி முழுவதையும் பாதித்து விடுகிறது!**

*ஆனால் நல்லவேளை, ஆபிரகாம் தேவனுக்குப் பயந்திருந்த படியால் ஒன்றிரண்டு தவறுகளோடு நிறுத்திவிட்டான். மற்ற அநேக தீர்மானங்களை தேவனுக்கு முன்பாகச் சரியாகத்தான் எடுத்தான். எனவேதான் ஈசாக்கு தெய்வபயமும், பக்தியும் நிறைந்த மனிதனாய் வளர்ந்தான். ஈசாக்கின் வம்சம் வந்த அவனுடைய பேரப்பிள்ளைகளும் கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்தார்கள். அவனுடைய சந்ததி மூலமாகவே பரிசுத்தமான* **இஸ்ரவேல்** *கோத்திரமும் உண்டானது.*

*ஆபிரகாமுக்கு அவனுடைய சகோதரன் மகனாகிய* **லோத்து** *என்று ஒருவன் இருந்தான். அவனும் திருமணமான ஒரு மனிதன்தான். அவனும் தன்னுடைய குடும்பத்திற்காக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய நேரம் வந்தது! ஒருநாளில் அவன் தீர்மானித்தான், "நான் இப்போது சோதோமுக்குப் போகப்போகிறேன். அங்கேதான் நல்ல பணம் சம்பாதிக்க முடியும்" என்று முடிவு செய்தான். இந்தத் தீர்மானத்தை யார் எடுத்தது? அவனுடைய மனைவி எடுக்கவில்லை, அவனுடைய பிள்ளைகள் எடுக்கவில்லை, அவன்தான் எடுத்தான்! எனவே பிள்ளைகளும்.... மனைவியும் அவனைப் பின் தொடர்ந்து சென்றார்கள். அதற்குப் பின்பு அங்கு சென்ற அவனுடைய பிள்ளைகள் அங்குள்ள 'பணக்கார' சோதோம் வாலிபர்களை திருமணம் செய்தார்கள். அந்த வாலிபர்களுக்கு தெய்வ பயம் என்பது துளியும் இல்லை. இவ்வாறு.... லோத்து எப்படி தன் முழுக் குடும்பத்தையும் இழந்தான் என்று நாம் பின்பு சரித்திரத்தில் வாசிக்கிறோம். ஏனென்றால், சோதோம் அவ்வளவு மோசமான நகரமாய் இருந்தபடியால் தேவன் அதை "அழிக்க" வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது!*

*ஆனாலும் தேவன் லோத்துவையும், அவன் குடும்பத்தையும் இரட்சிக்க விரும்பினார். ஆனால் அவனுடைய மருமக்கள் இரண்டு பேரும் சோதோமை விட்டு வெளியே வருவதற்கு விரும்பவில்லை! அவன் மனைவி வெளியேவரவிரும்பினாலும் அவளுடைய இருதயமோ சோதோமில் இருந்தபடியால் அவள் திரும்பிப் பார்த்து உப்புத்தூணாய் மாறிவிட்டாள்!!*

*லோத்துடன் சேர்ந்து இரட்சிக்கப்பட்ட அவனுடைய இரண்டு குமாரத்திகள் சோதோமிலிருந்த மோசமான பழக்கங்களையெல்லாம்*

*பழகியிருந்தார்கள். அவர்கள் இருவரும் தனிமையாய் தன்னுடைய தகப்பனோடு இருக்கும்பொழுது, லோத்தை மதிமயங்கச் செய்துவிட்டு தங்கள் சொந்த தகப்பனிடமே விபச்சாரம் செய்துவிட்டார்கள். இதுபோன்ற நிகழ்ச்சியை எங்கேயாவது நீங்கள் கேள்விப்பட்டிருக் கிறீர்களா? சோதோமில் வளர்ந்த இரண்டு குமாரத்திகள் தங்கள் சொந்த தகப்பனிடத்திலே செய்த விபச்சாரம்! இவையாவும் ஆதியாகமம் 19-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.*

*இந்த மோசமான தீய பழக்கங்களை அவனுடைய குமாரத்திகள் எங்கே கற்றார்கள்? சோதோமில்தான்! ஏன் லோத்து சோதோமுக்குச் சென்றான்? அங்கே போனால் அதிக பணம் சம்பாதிக்க முடியும் என்றே சென்றான். பணம் சம்பாதிக்க எத்தனையோ வாய்ப்புகள் இருந்தும் அந்த தீர்மானத்தை எடுத்தது யார்? லோத்தின் மனைவி அல்ல! இந்த லோத்துதான் எடுத்தான்!!*

*அன்பார்ந்த கணவன்மார்களே, நீங்கள் யாவரும் குடும்பத்தில் தீர்மானம் எடுக்கிறீர்கள். ஆனால் லோத்தைப் போல் தீர்மானம் எடுத்து விட வேண்டாம்.* **யோசுவாவோ தன் குடும்பத்தைக் குறித்து நல்ல தீர்மானம் எடுத்தான்.** *இதை யோசுவா 24 - ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அந்த அதிகாரம் 14-ம் வசனத்தில், கூடியிருந்த ஆயிரக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களைச் சுற்றிப் பார்த்து யோசுவா இவ்வாறு சொன்னான், "நீங்கள் கர்த்தருக்குப் பயந்து அவரை உத்தமும் உண்மையுமாய் சேவியுங்கள். உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்தில் எகிப்தில் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு கர்த்தரையே சேவியுங்கள். அதே சமயத்தில், இப்படியெல்லாம் செய்யும்படி நான் உங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. உங்களுக்கு எது நலமானதோ அதை நான் சொல்ல முடியும்." 15 ம் வசனத்தில் தொடர்ந்து சொல்லும்போது, "ஆனால் கர்த்தரை சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய் கண்டால், பின்னே யாரைச் சேவிப்பீர்கள்? இன்று இதைத் தெரிந்து கொள்ளுங்கள். நதிக்கு அப்புறத்திலுள்ள உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களை சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிமக்களாகிய எமோரியரின் தேவர்களை சேவிப்பீர்களோ? இதெல்லாம் உங்களுடைய தீர்மானம்! ஆனால் என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய வீட்டைப் பொறுத்தவரையில்,* **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்**" *என கெம்பீரமாய் உரைத்தான்.*

*யோசுவாவினுடைய குடும்பத்தைக் குறித்த இந்த முக்கிய*

*தீர்மானத்தை யார் எடுத்தது? யோசுவாதான்! அவன், "நான் மாத்திரமே" கர்த்தரைச் சேவிக்கப்போகிறேன் என்று சொல்லவில்லை. என்னுடைய மனைவியும், பிள்ளைகளும் என்ன தீர்மானம் எடுக்கிறார்களோ என்று எனக்குத் தெரியவில்லை என்றும் அவன் சொல்லவில்லை. அவனோ, "நானே என் மனைவிக்காகவும், என் பிள்ளைகளுக்காகவும்* **ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டேன்**" *என கெம்பீரித்தான். என்னுடைய பிள்ளைகள் என் வீட்டிலே வாழும்வரைக்கும் நான் அவர்களைப் பார்த்து, நீங்கள் கர்த்தரை சேவிப்பீர்களா? மாட்டீர்களா? என்று கேட்கப்போவதில்லை. ஒருநாளும் நான் அப்படி கேட்கமாட்டேன். மாறாக, நீங்கள்* **கர்த்தரை மாத்திரமே** *சேவிக்க வேண்டும் என்று கூறுவேன்!*

*எனக்கு நான்கு குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரையாவது இன்று கூட்டத்திற்கு வரவிரும்புகிறாயா? என்று நான் கேட்பதில்லை, கேட்கப்போவதுமில்லை! நீ கண்டிப்பாய் கூட்டத்திற்கு வரவேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறேன். அது உன்னுடைய தீர்மானம் அல்ல, குடும்பத்திற்கு தலைவனாய் இருக்கிற என்னுடைய தீர்மானம்!! இப்படித்தான் நாம்* **குடும்பத்தின் தலைவனாய்** *இருக்க முடியும்.*

*ஆனால் அதேசமயம் என்னுடைய மனைவியைக் கூட்டத்திற்கு வரும்படி நான் கட்டாயப்படுத்த முடியுமா? அவளோ வளர்ந்து பெரியவளாய் இருக்கிறாள். உங்களுடைய மனைவி கூட்டத்திற்கு வருவதற்கு ஆர்வமற்று இருந்தால், நாம் என்ன செய்ய முடியும்? அவளைக் கட்டாயப்படுத்த முடியாது!*

*நம் சபையில் இருக்கிற சில சகோதரர்களின் மனைவிமார்கள் சபைக்கு வர விரும்பாமல் வேறு எங்கேயாவது செல்ல விரும்புகிறார்கள். அதற்கு நாம் என்ன செய்யமுடியும்?*

> **ஆனால் நான் உங்களைப் பார்த்து சொல்லுகிறேன், "உங்கள் மனைவி, உங்கள் பிள்ளைகளைக் குறித்த காரியத்தைத் தீர்மானிக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்!" உங்கள் பிள்ளைகளுடைய காரியங்களை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்!**

*மனைவி எங்கே போக வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவள் அங்கே போகட்டும்.*

*மேலும், எபேசியர் 6:4-ல் "பிதாக்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" எனக் கூறப்பட்டிருப்பதைப் பாருங்கள்.*

நான் பல ஆண்டுகளாய் இந்த குறிப்பிட்ட கட்டளை, ஏன் "பெற்றோர்களே" என்று சேர்த்துச் சொல்லாமல், **"பிதாக்களே" என்று மாத்திரம்** எழுதப்பட்டிருக்கிறது என்று ஆச்சரியப்பட்டிருக்கிறேன். இருப்பினும், முதல் வசனத்திலோ "பிள்ளைகளே" உங்கள் பெற்றோருக்கு அதாவது தகப்பனுக்கும், தாய்க்கும் கீழ்ப்படிந்திருங்கள் என்று எழுதியிருக்கிறதே! இப்படி எழுதியிருக்கிற பட்சத்தில், 4ம் வசனத்தில் எப்படி எழுதியிருக்க வேண்டுமென்றால், "பெற்றோர்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" என்றே எழுதியிருக்க வேண்டும். ஆனால் அப்படி பெற்றோர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல வில்லையே?! 'பிதாக்களே' என்றுதான் எழுதியிருக்கிறது!! எனவே பிள்ளைகளை **கர்த்தருக்கேற்ற வழியிலே** நடத்தவேண்டிய பொறுப்பு தாயினுடையது அல்ல .... தகப்பனைச் சார்ந்துதான்!!

உங்கள் பிள்ளைகளினிமித்தம், உங்களுடைய மனைவியை நீங்கள் குற்றப்படுத்தவே முடியாது. நீங்கள் ஒருநாளும், "என் மனைவி இப்படியிருக்கிறாள், ஆகவே என் பிள்ளைகளும் இப்படியிருக் கிறார்கள்" என்று சொல்லவே முடியாது! நீங்கள் நேர்மையாய் ஒத்துக் கொண்டு, "நான் சரியாய் நடக்காதபடியால்தான் என் பிள்ளைகளும் இப்படி நடக்கிறார்கள்" என்றே கூறுங்கள்.

ஆதியாகமம் 18-ம் அதிகாரம் 18,19-வசனங்களில் "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியை காத்து நடவுங்கள் என்று **கட்டளையிடுவான்** என்பதை அறிந்திருக்கிறேன்" என வாசிக்கிறோம். ஆபிரகாமைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறது என்று நீங்கள் கவனித்து வாசித்தீர்களா?

அவன், தன் பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு ஆலோசனையும், புத்திமதியும் சொல்வான் என்பதைப் போல் இல்லாமல் அவன் தன் பிள்ளைகளுக்குக் **கட்டளையிடுவான்** என்றல்லவா எழுதியிருக்கிறது! கர்த்தருடைய வழியை நீங்கள் காத்து நடவுங்கள் என்று கண்டிப்பாய் கட்டளையிட்டு தன் பிள்ளைகளுக்கு ஆபிரகாம் சொல்வான். "நீங்கள் நீதியையும் நியாயத்தையும் கண்டிப்பாய் செய்யவேண்டும்" .....யார் இப்படி பிள்ளைகளுக்குக் **கட்டளையிட்டு** சொல்லவேண்டும்? ஆபிரகாமா? அல்லது சாராளா? ஆபிரகாம்தான்! இப்படி ஆபிரகாம் செய்யப்போகிறபடியால், "கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றி முடிப்பார்" என வாசித்தோம். இவ்வாறு ஆபிரகா மினிமித்தம் வீட்டார் முழுவதுக்கும் ஆசீர்வாதம் வந்து சேரும்!

கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குதத்தம் எவ்வாறு நிறைவேறும்? ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கு **கட்டளையிட்டு,** போதிப்பதினிமித்தம் தான்!! எனவே நீங்கள் உங்கள் பிள்ளைகளை கட்டளையிட்டு நடத்தாவிட்டால், உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் எதை நிறைவேற்ற விரும்பினாரோ அதை அவரால் நிறைவேற்றி முடிக்கவே முடியாது!

அநேக தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற பயத்திலே வளர்ப்பதற்கு ஜாக்கிரதை கொள்ளவேயில்லை. ஏதோ கூட்டத்திற்குப் பிள்ளைகளை அழைத்து வருவார்கள்.

**ஆனால்.... வெறுமனே கூட்டத்திற்கு மாத்திரம் அழைத்து வருவது போதுமானதல்ல. நாம் வீட்டிலே அவர்களைக் கண்டித்து, போதித்து சரியான பாதையில் நடத்தவேண்டும்!**

இதைப் பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்த நாளிலிருந்து செய்ய வேண்டும், போதிக்க வேண்டும். யாருடைய பென்சிலையோ, ரப்பரையோ திருடக்கூடாது என்று போதிக்க வேண்டும். யாராகிலும் உன்னுடைய பென்சிலைத் திருடிவிட்டாலும் கூட, நீ மற்றவர்களின் பென்சிலை திருடக்கூடாது என்று சொல்லவேண்டும்! பள்ளியில் உள்ள திக்குவாய் உள்ள பிள்ளைகளையோ அல்லது ஒற்றைக் கண் உள்ள பிள்ளைகளையோ அல்லது நொண்டியாய் இருக்கிற பிள்ளைகளையோ மற்ற பிள்ளைகள் கேலி பண்ணுபோது, அவர்களைப் போலவே நீயும் அவ்வாறு கேலி பண்ணாதே என்று போதிக்க வேண்டும்! ஏனென்றால் சிறுபிள்ளைகள் மற்றவர்களை எளிதில் கேலிசெய்துவிடுவார்கள். வாத்தியார்களையும், ஆசிரியைகளையும் கூட கேலி பண்ணுவார்கள். இவையாவையும் செய்யக் கூடாது என்று அவர்களுக்கு யார் போதிக்கவேண்டும்? தகப்பன்தான்!

என்னுடைய பிள்ளைகள் உபரி நேரங்களில் என்னென்ன புத்தகங்கள் படிக்கிறார்கள் என்பதை நான்தான் சோதித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தலையணைக்கடியிலோ அல்லது வேறு எங்கேயாவதோ தீய புத்தகங்களை மறைவாய் ஒளித்து வைத்திருக் கிறார்களா என்று பார்க்க வேண்டும். இவை யாவற்றையும் சோதிக்க வேண்டிய பொறுப்பு யாருடையது? தகப்பனுடையதுதான்!

இவ்வாறு அவர்களுடைய பள்ளிக்கூட நாட்களிலேயே நீங்கள் அவர்களைச் சரியாய் சோதித்து, செவ்வையாய் செய்வீர்களென்றால் அவர்கள் நேர்த்தியாய் வளர்ந்து வருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. “உன் பிள்ளையானவன் சிறுவயதாயிருக்கும்போதே கர்த்தருக்கேற்ற வழியிலே அவனைப் போதித்து நடத்து, அவன் அதை

*முதிர்வயதிலும் விடாதிருப்பான்" என நீதிமொழிகளில் நேர்த்தியாய் வாசிக்கிறோமே!*

*எனவே சிறுவயதாயிருக்கும்போதே நம்முடைய பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற வழியிலே போதித்து நடத்தி விட்டோமென்றால், முதிர்வயதாய் மாறும்போது அவர்கள் வழிதவறிப் போகவே மாட்டார்கள்.*

**மிக எளிதில் ஒரு தகப்பன் கூட்டத்திற்கு வந்து அற்புதமான சத்தியங்களைக் கேட்டுவிட்டு அவனோ அதைத் தன் பிள்ளைகளுக்கு போதிக்காமல் இருந்துவிட முடியும்!!**

*1சாமுவேல் புத்தகத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சியை நாம் வாசிக்கிறோம்.* **ஏலி** *என்றதோர் ஆசாரியன் முதிர்வயதுள்ளவனாய் மாறிய சமயம், அவனுடைய இரண்டு மகன்கள் கர்த்தருக்கென்று வந்த காணிக்கைகளைத் திருடினார்கள் (1 சாமுவேல் 1:22). மேலும், அங்கே ஆலயத்தில் ஆசரிப்புக்கூடார வாசலிலே நின்று கொண்டிருந்த ஸ்திரீகளோடு விபச்சாரம் செய்தார்கள் என்றும் வாசிக்கிறோம். இதையெல்லாம் கேள்விப்பட்ட* **ஏலி** *என்ன செய்தான்?*

*அவன் தன் பிள்ளைகளைக் கண்டித்து வெளியே விரட்டாமல், அவர்களை அழைத்து மிகவும் பவ்வியமாய், "மகன்களே, நீங்கள் இப்படியெல்லாம் செய்யக்கூடாது......" என்று மிகச் சாதாரணமாய் சொல்ல ஆரம்பித்தான். உண்மையில் அவன் என்ன செய்திருக்க வேண்டும்? " நீ போய் யாரிடத்தில் காணிக்கையைத் திருடிவந்தாயோ அவர்களிடம் உடனே கொண்டுபோய் திருப்பிக்கொடு.... தவறு செய்த அந்த பெண்களிடம் மன்னிப்பு கேள்" என்றே அவன் சொல்லி இருக்க வேண்டும். மேலும், "இப்படி நீங்கள் செய்யவில்லையென்றால், நீங்கள் என் வீட்டிலே இருக்கவேண்டாம்" என்றும் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவன் அப்படிச் சொல்லவில்லை! அவன் மிகவும்* **சாதுவாய்** *நடந்து கொண்டான், "மகன்களே இப்படியெல்லாம் செய்யக் கூடாதப்பா!" என்று* **வெகுசாதாரணமாய் அவர்களைத் தட்டிக் கொடுத்து புத்திசொன்னான்.**

*இவ்விதமாய் ஏலி நடந்து கொண்டதைக் கண்ட ஆண்டவர், ஏலிக்கு ஒரு செய்தியை அனுப்பிவிட்டார், "நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிக்கிறபடியால் நான் உன்னைத் தண்டிப்பேன்" என்பதே அந்த செய்தியாகும்.*

*தேவன் ஏலியை தண்டிக்கும் அளவுக்கு அவன் என்ன பாவம் செய்துவிட்டான்? அவன் தன் பிள்ளைகளை தண்டிக்காமல்*

*விட்டதால், "தேவனை கனம்பண்ணாத" பாவத்திற்கு ஆளாகி விட்டான். பின்பு நடந்தது என்ன? அவனுடைய இரண்டு குமாரர்களும் கொல்லப்பட்டார்கள்! 1சாமுவேல் 4ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் நாம் இதைப் பார்க்கிறோம். இரண்டு குமாரரும் இறந்துபோனார்கள்!*

*இப்போது சற்று கவனித்து வாசியுங்கள். 1 சாமுவேல் 3-ம் அதிகாரம் 13 ம் வசனத்தில், ஆண்டவர் சாமுவேலிடம், "தங்கள் குமாரர் தங்கள்மீது சாபத்தை வரப்பண்ணுகிறதை ஏலி அறிந்திருந்தும்* **அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம்** *நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன்" என்று அறிவித்தார்.* **இதை சாமுவேல் கேட்டான்.....** *தன் சொந்த காதுகளால் நன்றாகவே கேட்டான்! ஆனால் அந்தோ! சாமுவேல் நடந்துகொண்டவிதமோ நமக்கு மிகவும் அதிர்ச்சி அளிப்பதாய் இருக்கிறது. சாமுவேல் முதிர்வயதானபோது தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாய் வைத்தான். ஆனால் 1சாமுவேல் 8 ம் அதிகாரம் 3ம்வசனம் கூறுகையில், "ஆனாலும் அவனுடைய குமாரர்கள் அவன் வழிகளில் நடவாமல், பொல்லாப்புக்கு சாய்ந்து பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்....." இதென்ன ஆச்சரியமாய் இருக்கிறது பாருங்கள்!*

*ஏலி குடும்பத்துக்கு நடந்த நிகழ்ச்சியை சாமுவேல் கண்கூடாய் கண்டபோதும்கூட இவனோ தன் பிள்ளைகளை நேர்த்தியாய் வளர்க்கத் தவறிவிட்டான்! இது ஒரு மிகுந்த வருத்தமான செயல் அல்லவா?*

*ஆம்! சபை கூட்டங்களில் பிள்ளைகளை நாம் எவ்வாறு கர்த்தருக்கென்று வளர்க்க வேண்டும் என நாம் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அப்படி கேட்டுக் கொண்டேயிருந்தும்கூட நாம் நம்முடைய சொந்த பிள்ளைகளை சரியாக கர்த்தருக்கேற்ற வழியில் நடத்தாமல் இருந்துவிட முடியும்!!*

*ஏன் சாமுவேலின் பிள்ளைகளும் வழிதப்பிப் போனார்கள்? இஸ்ரவேல் தேசத்திலே சாமுவேல் ஒரு வல்லமையான தீர்க்கதரிசியாய் அல்லவா விளங்கினான்! அவன் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் கர்த்தருடைய வார்த்தையாய் ஜனங்கள் கவனமாய் எடுத்துக் கொண்டார்கள்!! ஆனால் அவனுடைய குமாரர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகள் கவனமாய் போய் சேரவில்லையே!?*

*இதற்கான காரணத்தை 7-ம் அதிகாரம் நமக்கு எடுத்துரைக் கிறது. சாமுவேல் தான் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை*

நியாயம் விசாரித்தான் என இந்த அதிகாரம் கூறுகிறது. அவ்வாறு ஊழியங்கள் செய்தபோது வருஷா வருஷம் அவன் பெத்தேல், கில்கால், மிஸ்பா போன்ற இடங்களுக்கு மாறி மாறி சென்று கொண்டே யிருப்பான்! தன்னுடைய இடத்திலோ தன் குமாரர்களை சாமுவேல் நியாதிபதிகளாய் நியமித்திருந்தான். ஆனால் அவன் குமாரர்களோ ஜனங்களை ஏமாற்றவும், அவர்களிடமிருந்து பரிதானம் வாங்கவும் தொடங்கி விட்டார்கள்!!

"இந்த சாமுவேலுக்குத் தன் சொந்த பிள்ளைகளையே சரியாய் நிதானித்துப் பகுத்தறிய முடியவில்லையே!" என நான் ஆச்சரியப் பட்டிருக்கிறேன். இப்படி அவன் சரியாய் நிதானித்து அறியாத பட்சத்தில் ஏன் அவர்களை இஸ்ரவேலை நியாயந்தீர்க்கும் நியாயதி பதிகளாய் நியமித்தான்?

சாமுவேல் நிச்சயமாய் ஒரு மாபெரும் தேவமனிதன்தான்! ஆனாலும் அவன் தவறு செய்துவிட்டானே!

> **சாமுவேலின் முதல் தவறு, தன் பிள்ளைகளுக்கென்று அவன் நேரத்தை செலவழிக்கவில்லை. இரண்டாவது, அவர்கள் வழிதப்பிப் போனபிறகும் அவர்களை நியாயாதிபதிகளாகத் தன்னுடைய இடத்தில் வைத்துவிட்டான். இந்த தவறு சர்வ சாதாரணமாய் இன்றுவரை பின்தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது.**

இன்றைக்கும் எத்தனையோ வலிமையான பிரசங்கிகள் தங்கள் பிள்ளைகளை வாரிசாக வைத்து, தங்கள் இடத்தில் அவர்களைப் பிரசங்கியாய் மாற்ற விரும்புகிறார்கள். அவர் ஒரு வலிமையான பிரசங்கியாக இருந்தால், அடுத்த வலிமையான பிரசங்கி அவர் மகன் தான் வரவேண்டும்! ஒரு மனிதன் ஒரு சபையின் பாஸ்டராய் இருப்பா ரென்றால், அவர் மரித்தபின்பு தன்னுடைய மகனே பாஸ்டராய் வருவதற்குப் படிக்க வைத்திருப்பார்!! ஆனால் இது போன்ற செயல்கள் சாமுவேல் நாள்தொடங்கி இன்றுவரை ஒருநாளும் நேர்த்தியாய் நடந்த தில்லை, தோல்வியைத்தான் கண்டிருக்கிறது!! எந்த ஊழியனும் தன் பிள்ளைகளுக்கு அபிஷேகத்தைத் தந்துவிட முடியாதே! "**அபிஷேகம்**" **(ANOITING)** தேவன் தெரிந்துகொண்டு தரக்கூடிய ஒன்றல்லவா?

என்னை தேவன் அவருடைய ஊழியத்திற்காக தெரிந்து கொண்டது உண்மைதான். ஆனால், நான் செய்வதைப் போலவே நீங்களும் செய்ய வேண்டுமென்று நான் என் பிள்ளைகளுக்குச் சொல்வதில்லை. என்னுடைய பிள்ளைகள் ஒருவரிடத்திலாவது, "நீங்கள் என்னைப் போலவே முழுநேர ஊழியனாய், பிரசங்கியாய்

மாறவேண்டுமென்று" சொன்னதில்லை. அதற்குப் பதிலாய், "நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும், நீங்கள் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும், இயேசுவை முழு இருதயமாய் பின்பற்றும் அவரின் சீஷர்களாய் மாறவேண்டும்" என்றே நான் கூறுகிறேன். ஆனால், ஒரு குறிப்பிட்ட ஊழியத்தைச் செய்யும்படி நான் என் பிள்ளைகளை நடத்தவோ, அவர்களைக் கட்டாயப்படுத்தவோ கூடவே கூடாது. ஆனால் சாமுவேலோ நேருக்குமாறாய் செய்துவிட்டான். அவனுக்கு ஒரு ஊழியம் இருந்தது. அவன் நியாயாதிபதியாய் இருந்தான். தன்னைப் போலவே தன்னுடைய குமாரர்களை நியாயாதிபதிகளாய் மாற்றி விட்டான்! இதன் விளைவாய் இஸ்ரவேல் மாபெரும் அழிவையே சந்தித்தது.

இதேவிதமாய் அநேக உதாரணங்கள் வேதத்தில் இருக்கிறது. ஆபிரகாம் தன்னுடைய பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற வழியிலே கட்டளையிட்டு நடத்தினான். ஆனால் இந்த நல்ல சாமுவேலோ தோற்கடிக்கப்பட்டவனாய் போய்விட்டான்.

**சாமுவேல், தீர்க்கதரிசிகளுடைய வம்சத்திலே பிழையற்றவனாய் தான் வந்து கொண்டிருந்தான். ஆனால் தகப்பன் என்ற அந்த ஸ்தானத்திலோ தோல்வியடைந்து விட்டான்!**

தாவீதின் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற மனிதனாய் இருந்தான் என நாம் வாசிக்கிறோம். அவன் தன் வாழ்க்கையிலே ஓரிரு தவறுகளைச் செய்திருந்தாலும்கூட கர்த்தருக்கென்று தன்னை முழுமையாய் அர்ப்பணித்து அவரைத் தியானித்த ஒரு மனிதனாய் இருந்தான். ஆனால், அவனும்கூட நல்ல தகப்பனாய் இருக்கவில்லை என்றே நாம் வாசிக்கிறோம். அவனுடைய சொந்த குமாரனாகிய அப்சலோமே, தன்னுடைய தகப்பனாகிய தாவீதை சிங்காசனத்திலிருந்து தூக்கி எறிந்தான் என நாம் வாசிக்கிறோம். அவனுடைய மற்றொரு குமாரன், தன்னுடைய இரண்டாம் தாய்க்குப் பிறந்த மகளோடு.... அவள் தன் சொந்த சகோதரியாய் இருக்கிற பட்சத்திலேயும் அவளோடு விபச்சாரம் செய்தான். மேலும் தாவீதின் குமாரனாகிய சாலோமோன் 300 மனைவியர்களைக் கொண்டிருந்தான் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அவர்களில் பெரும்பாலானோர் புறஜாதிய நாடாகிய எகிப்தைச் சார்ந்தவர்கள்! இவை யாவற்றையும் நீங்கள் 2சாமுவேல் 14,15,16,17-ம் அதிகாரங்களில் வாசிக்கலாம்.

நாம் இங்கே காண்பது என்ன? தாவீது அவ்வளவு ஒரு நல்ல

*மனிதனாகத்தான் இருந்தான். அவன் தேவனுக்குப் பயந்திருந்தான்! அவன் தேவனுக்கு முன்பாய் எது நல்லதோ அதை மாத்திரமே செய்துவந்தான்! ஆனால், கிட்டத்தட்ட அவனுடைய குமாரர்கள் அனைவருமே வழிதவறிப் போனார்கள். ஒருவன் விபச்சாரம் செய்தான், ஒருவன் தன்னுடைய தகப்பனை சிங்காசனத்திலிருந்து தூக்கி எறிந்தான், இன்னொருவன் 300 மனைவிகளை திருமணம் செய்து கொண்டான்! பரவாயில்லை, ஆனால் பெரும் பிழை என்னவென்றால், இதுபோன்ற தன்னுடைய குமாரர்களையும் கூட இந்த தாவீது கடிந்து கொள்ளாமல், அவர்களிடத்தில் மிகவும் சாதுவாயும், மிருதுவாயும் நடந்து கொண்டான் என்றே வாசிக்கிறோம். சாமுவேலும் அப்படித் தானே இருந்தான்!*

*இவையாவும் நம்முடைய எச்சரிப்புக்காய் எழுதப் பட்டிருக்கிறது. இவ்வாறாக, தேவனுக்குப் பயந்து வாழ்ந்த நல்ல மனிதர்களும்கூட தங்களுடைய பிள்ளைகளை கவனமாய் வளர்க்க வில்லையே! ஆம், இவர்கள் யாவரும் தகப்பன் என்ற ஸ்தானத்தில் தோல்வியடைந்து விட்டார்கள்.*

**உங்கள் யாவருக்கும் நான் சொல்லவிரும்புவது என்னவென்றால், உங்களுடைய பிள்ளைகள் வழிதவறிப் போகும்போது உங்களுடைய மனைவிகளை ஒருநாளும் குற்றப்படுத்தாதீர்கள்! அதற்கு மாறாக, "இந்தப் பிள்ளைகளுக்கு நான்தான் தகப்பன்! நான்தான் குற்றவாளி!" என்றே நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.**

*நீங்கள் சாமுவேலைப் போல அல்லது தாவீதைப் போல நல்ல ஒரு சகோதரனாய் இருக்கமுடியும். சபையிலே நல்ல சகோதரனாய் இருந்தும், வீட்டிலே ஒரு நல்ல தகப்பனாய் இல்லாமல் இருக்கமுடியும்! இன்று அநேக சகோதரர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள். சபையிலே வைராக்கியமாய் அநேகக் காரியங்களைச் செய்வதற்கு நன்றாய் இருக்கிறார்கள். ஆனால் வீட்டிலே அவர்கள் தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறார்கள் என்பதைப் பாருங்கள்! அந்தோ, அது நமக்கு எவ்வளவு வருத்தமாய் இருக்கிறது!! நம்முடைய பிள்ளைகள் நம்முடைய வீட்டை விட்டுச் சென்று..... ஒரு குடும்பம் அமைத்து தனியாய் வாழும்போது அவர்களை எவ்விதத்திலும் நாம் ஆளுகை செய்ய முடியாதே! ஆனால், பிள்ளைகள் நம்முடைய வீட்டில் வாழும்போது அந்த நேரம்தான் நாம் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற வழிகளிலே நடத்த தீர்மானிக்கும் நேரம் ஆகும்.*

*எரேமியா 35-ம் அதிகாரத்தில் இன்னொரு உதாரணத்தைப்*

பார்க்கிறோம். எரேமியாவிடத்தில் ஆண்டவர், "நீ ரேகாபியானுடைய வீட்டுக்குப்போய் அவர்களோடே பேசி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தின் அறைகள் ஒன்றிலே அழைத்துவந்து, அவர்களுக்கு திராட்சரசம் குடிக்கக்கொடு" என்றார் (எரேமியா.35:2). எனவே எரேமியா அவ்விதமாய் கர்த்தருடைய ஆலயத்திலே பிரபுக்களுடைய அறைகளின் அருகே அவர்களை அழைத்துவந்து, 5ம் வசனத்திலே, "திராட்சரசத்தை அவர்களுக்குக் குடிக்கும்படியாய் கின்னங்களில் அவன் ஊற்றி வைத்தான். திராட்சரசத்தைக் குடியுங்கள்" என்று அவன் கொடுத்தான். பாருங்கள், இந்த எரேமியா ஒரு தீர்க்கதரிசி. "திராட்சரசத்தை குடியுங்கள்" என்று ஒரு தீர்க்கதரிசி சொன்ன பொழுதுகூட அவர்கள் "மாட்டேன்!" என்று சொல்லி விட்டார்கள். 6-ம் வசனத்திலே அந்தக் குமாரர்கள், "நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை. ஏனென்றால் ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் **யோனதாப்,** நாங்கள் பரதேசிகளாய் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு நாங்களும் எங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கு திராட்சரசம் குடிக்காமலிருக்க வேண்டும்" என்று **கட்டளை** கொடுத்திருக்கிறார். ஆகையால் "நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்க முடியாது" என்று சொல்லிவிட்டார்கள்.

உடனே இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, தேவன் எரேமியாவைப் பார்த்து "இந்தக் குடும்பத்தைக் கவனித்துப்பார். அந்த ரேகாபின் இறந்து விட்டான். அவனுடைய குமாரன் யோனதாபும் இறந்து விட்டான். தகப்பன் யோனதாபும் இறந்த பின்பும்கூட, இறந்துபோன தங்கள் தகப்பனுடைய கட்டளையை அவர்கள் இன்னமும் கைக் கொண்டிருக்கிறார்கள்" என வியந்து எடுத்துரைத்தார்! என்ன அற்புதமான ஒரு உதாரணம்!

உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் **யோனதாப்** என்ற பெயரை என்றைக்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சாமுவேலைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், யோனதாபைக் குறித்து என்றைக்காவது கேள்விப்பட்டதுண்டா? அவன் அறியப்படாத ஒரு மனிதனைப் போலிருந்தான். ஆனால் எத்தனை அருமையான ஒரு தகப்பனாய் அவன் இருந்தான்! புகழ்பெற்ற சாமுவேலும், தாவீதுமோ மோசமான ஒரு தகப்பனாய் இருந்தார்கள். இவ்விதமாய் "மாதிரிகளை" வேதம் நமக்கு முன்பாக வைப்பதைப் பாருங்கள். மோசேயைக் குறித்தும் தாவீதைக் குறித்தும், சாமுவேலைக் குறித்தும் கேட்டுவந்த நீங்கள், இன்றைக்கு யோனதாபைக் குறித்தும் கேள்விப்பட்டீர்கள்!

**நான் இப்பொழுது என்னுடைய சாட்சியை சொல்லுகிறேன்: "நான் யோனதாபைப் போல இருப்பேனேயல்லாமல், சாமுவேலைப் போல உயர்ந்த தீர்க்கதரிசியாய் இருக்க விரும்பவில்லை. நான் ஒரு நல்ல தகப்பனாய் இருப்பேனேயல்லாமல், ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் இருப்பதை விரும்பவில்லை".**

*நாம் எல்லோருமே சாமுவேலைப் போல் ஒரு தீர்க்கதரிசியாய் மாறமுடியாது. ஆனால், யோனதாபைப் போல நல்ல ஒரு தகப்பனாய் நாம் எல்லோருமே மாறமுடியுமா? முடியும்! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு, "இதைச் செய், அல்லது இதைச்செய்யாதே" என்று* **கட்டளையிட்டு** *போதியுங்கள். இப்படி போதித்தால் பின்னால் வரக்கூடிய ஒரு வலிமையான தீர்க்கதரிசிவந்து "இதைச் செய்" என்று சொன்னாலும்கூட அந்தத் தவற்றை அவர்கள் செய்யமாட்டார்கள்! பாருங்கள், இந்த லோத்து தன்னுடைய இரண்டு குமாரத்திகளை இழந்தான், தன்னுடைய இரண்டு மருமக்கள்மார்களையும் இழந்தான். இது அத்தனைக்கும் காரணம், அவன் எடுத்த ஒரே ஒரு தவறான முடிவு! எத்தனையோ தீர்மானங்களை தகப்பன் மாத்திரமே எடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஒரு வேலையைவிட்டு நீங்கள் இன்னொரு வேலைக்குச் செல்ல வேண்டியதிருக்கிறது. ஒரு பட்டணத்தைவிட்டு இன்னொரு பட்டணத்திற்கு செல்ல வேண்டியதாயிருக்கிறது. இதுபோன்ற நேரங்களில் தீர்மானம் எடுக்கவேண்டியது யார்? தாயா? அல்லது தகப்பனா? இதுபோன்ற தீர்மானம் எவ்வளவு பெரியது என்று சற்று யோசித்துப் பாருங்கள். ஆகவே தகப்பனாகிய நீங்கள்தான் இச்சமயங்களில் தேவசித்தத்தை அறியவேண்டும். உங்கள் மனைவியோ நீங்கள் எடுக்கும் அந்தத் தீர்மானத்தைப் பின்பற்றி வரவேண்டும்.*

*இப்பொழுது சொல்லுங்கள், கணவனாய் இருப்பது எளிதா? மனைவியாய் இருப்பது எளிதா? மனைவியாய் இருப்பதுதான் எளிது! ஏனென்றால், அவர்கள் வெறுமனே தன் புருஷனைப் பின்பற்றி சென்று கொண்டிருக்கலாம்.*

**ஆகவே கணவனாய் இருக்ககூடியவனுக்குத்தான் மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அவனே கர்த்தர் சொல்வதை கவனித்துக் கேட்டு சரியான தீர்மானம் எடுக்க வேண்டும்!**

*இங்கு யார் அதிக ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டும்? கணவனா? அல்லது மனைவியா? ஆம், கணவன்தான்! அவன்தான் கர்த்தர் என்ன சொல்லுகிறார் என்று கேட்பதற்கு கவனம் கொண்டிருக்க வேண்டும். அவன்தான் தன்னுடைய குடும்பத்தை*

சரியான பாதையில் நடத்தவும் முடியும். மனைவி ஏராளமான உதவி வேலைகளை செய்யக்கூடும். ஆனால் தலைமை ஸ்தானத்தை எடுத்துக் கொள்வதோ, குடும்பத்தை சரியான திசையில் நடத்துவதோ புருஷனால்தான் கூடும்!!

கடைசியாக, ஒரு எச்சரிக்கை உதாரணத்தையும் கேளுங்கள். ஆம், ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தில் ஒரு நபர் அங்கே ஒரு தீர்மானத்தை எடுத்தார். அது முழு மனிதவர்க்கத்தையும் தலைகீழாய் மாற்றிவிட்டது. அந்தநபர் "ஆதாம்" என எண்ணாதீர்கள். ஏவாளே அந்தத் தீர்மானத்தை எடுத்தாள். ஏதேன் தோட்டத்தில் சாத்தான் உள்ளே பிரவேசித்து, "இந்த மரத்தினுடைய கனியைப் புசிப்பாயாக" என்று சொன்னபொழுது, இவ்விதமாய் சாத்தானுக்கும், ஏவாளுக்கும் நடந்து கொண்டிருந்த இந்த உரையாடலை ஆதாம் கவனித்துக் கொண்டிருந்தானா? அல்லது வேறு எங்கேயாவது நின்று கொண்டிருந்தானா? கவனமாய் ஆதியாகமம் 3-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். ஆங்கிலத்தில் இந்த வசனம் மிகவும் தெளிவாய் இருக்கிறது. "அவள் புசித்து தன்னுடைய புருஷனுக்கும் கொடுத்தாள்" என்ற வசனம் ஆங்கிலத்திலே, "அவளோடு நின்று கொண்டிருந்த புருஷனுக்கும் கொடுத்தாள்" என்றே தெளிவாய் எழுதியிருக்கிறது. அவனும் அவளோடுதான் நின்றுகொண்டிருந்தான். அவன் நின்று கொண்டிருக்கும்பொழுதே அவனுடைய மனைவிக்கும், சாத்தானுக்கும் "பெரிய உரையாடல்" நடந்து கொண்டிருந்தது!

ஆதாம் அங்கே என்ன செய்து கொண்டிருந்தான்? சாத்தான் தன் மனைவியிடம் என்ன பேசுகிறான் என்று கேட்டுக் கொண்டிருந்தான். பின்பு ஆதாம், தன் மனைவி அதற்கு என்ன பதில் சொல்லுவாள் என்பதைப் பார்த்தான். பின்பு அதற்கு, சாத்தான் என்ன பதில் சொல்லுகிறான் என்று கேட்டான். இப்படி மாறி மாறி பார்த்துக்கொண்டேயிருந்தான்! பின்பு அவன், தன் மனைவி அந்தப் பழத்தைப் பறிப்தைக் கவனித்துப் பார்த்தான். இப்போதும் அவன் ஒன்றும் சொல்லவில்லை! அவள் புசித்து, "நீரும் புசியும்!" என்று கொடுத்தாள். அவள் கொடுத்தவுடன், "வாயிலே போடு" என 'ஆ' என்று வாயைத் திறந்து வாங்கி புசித்துவிட்டான்!! ஐயோ, இவன் எத்தகைய புருஷனாயிருந்தான் என்பதைப் பாருங்கள்! சாத்தான் வீட்டுக்குள்ளேயே வந்து உரையாடுகிறான். அதை அவனும் பார்த்து உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறான். எனவே ஆதாம் இங்கே இரண்டு பெரிய தவறுகளைச் செய்துவிட்டான்.

முதலாவது, தன் மனைவி சொல்வதைக் கேட்டான்! இரண்டாவது, அவள் கொடுத்த கனியை வாங்கிப் புசித்தான்!! எனவே ஆண்டவர் 17-ம் வசனத்திலே அவனைப் பார்த்து:

> **"நீ உன் மனைவியின் வார்த்தைக்கு செவி கொடுத்தாயே" என்றார். அதுதான் ஆதாமின் முதலாவது தவறு! ஆண்டவர் புசிக்க வேண்டாம் என்று சொன்ன அந்தக் கனியை அவன் புசித்ததோ அவனுடைய இரண்டாவது தவறுதான்!**

கிறிஸ்தவ வட்டாரத்திலே போய், ஆதாம் செய்த தவறு என்ன என்பதைக் கேட்டு பாருங்கள். அவர்கள் "தேவன் புசிக்க வேண்டாம் என்று சொன்ன கனியை ஆதாம் புசித்தான்" என்றுதான் சொல்லுவார்கள்.

முதல் தவறு, அவன் தன்னுடைய மனைவியின் சொல்லை கவனித்துக் கேட்டான்! இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த உண்மையை உங்கள் வாழ்க்கை முழுவதும் மறந்து விடாதிருங்கள். இந்த உலகத்திலே முதல் மனிதன் செய்த முதல் தவறு என்ன? மனைவி சொல்வதை ஆதாமாகிய கணவன் கேட்டான். அதன் விளைவு என்ன? அந்த முழுக் குடும்பமும் பரலோகத்தைவிட்டு விரட்டப்பட்டுவிட்டது! ஏனென்றால், தேவன் ஆதாமை அந்த முதல் குடும்பத்திற்குத் **தலைவனாய்** நியமித்திருந்தார். அவனோ தன் கடமையிலிருந்து தவறிவிட்டான். ஆகையால் நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு "எப்போதும்" ஓர் உயர்ந்த தலைவனாய் இருக்கப் பாருங்கள்!

நான் ஒரு சகோதரனிடத்தில், அவருக்குத் திருமணமாகும் சமயத்திலும், திருமணம் ஆனபிறகும் இப்படிச் சொன்னேன், "உன் மனைவியைக் குறித்து எனக்குத் தெரியும், சகோதரனே! அவள் மிகவும் வலிமையான சித்தம் கொண்டவள். ஆனால் உங்கள் குடும்பத்திற்கு நீங்கள்தான் தலைவராய் இருக்க வேண்டும்." பின்பு 2, 3 வருடங்களுக்கு பிறகு மறுபடியும் அந்த சகோதரனை சந்தித்தேன். மீண்டுமாய் இந்த ஒரே ஒரு காரியத்தைத்தான் சொல்ல விரும்பினேன், "உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் மாத்திரமே தலையாய், தலைவராய் இருக்க வேண்டும்."

ஆனால் சில ஆண்டுகள் கழித்து அந்த கணவன் எனக்கு என்ன பதில் தந்தார் தெரியுமா? அவர் சொன்னார்: "நான் குடும்பத்திற்கு தலைவனாய் இருப்பதற்கு முயற்சித்தால் வீட்டிலே பெரும் யுத்தம் அல்லவா நடக்கிறது" என்று சொன்னார்! அதற்கு

*நான், "இருக்கட்டும், ஒரு யுத்தம் நடந்தால் நடக்கட்டும். போரிலே வெற்றி வாகை சூடி நீரே தலைவராய் வாரும்" என்று பதில் சொன்னேன்!!*

*எங்களுக்கு சமாதானம் வேண்டும்..... குடும்பம் சமாதானமாய் வாழ வேண்டும், ஆகவே மனைவி எப்படி இருக்க வேண்டுமென்று விரும்புகிறாளோ அப்படி இருந்துவிட்டுப் போகட்டும் என்று சொல்லாதீர்கள்!*

**வீட்டில் சமாதானத்தை நாடுவது நல்லதுதான். ஆனால் மனைவி தலைவராய் இருப்பதற்கு முயற்சிக்கிற பட்சத்திலே ஒரு யுத்தத்தை நடத்தி, யுத்தத்தில் நீங்கள் ஜெயம் பெற்று நீங்கள் மீண்டும் தலைவராய் மாறுவதே ஞானமுள்ள செயலாகும்!**

*அது உங்களுடைய பிள்ளைகளையும், உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ளும்.*

*அப்படி இல்லையென்றால், குடும்பத்தை நீங்கள் சமாதானமாய் வைத்துக்கொண்டு, சமாதானத்தோடு குடும்பமாய் நரகத்திற்குச் செல்லுவீர்கள்! நீங்கள் யுத்தம் செய்து உங்கள் முழுக்குடும்பத்தையும் பரலோகத்திற்கு கொண்டு செல்லலாமே!! இதை நீங்கள் இன்று ஒத்துக்கொள்ள முடியுமா?*

*நம் எல்லோருடைய வீட்டிலும் இப்போது கேட்ட சத்தியத்தை நடைமுறைப்படி செயல்படுத்த ஆரம்பிக்கலாமா? இவ்வாறு நம்முடைய குடும்பத்தை செயல்படுத்துவதற்கு தேவனிடத்திலிருந்து கிருபையையும், ஞானத்தையும் கேட்போமாக!*

10

## குடும்பம் கட்டப்பட பெற்றோர்களின் பங்கு

"நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக் காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நாம் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன்" (யோவான் 17:20,21) என இயேசு பிதாவை நோக்கி ஜெபித்த இந்த அருமையான வசனங்களை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.

"**அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டும்**" என இயேசு வாஞ்சித்த ஜெபம் சபையிலுள்ள சகோதர, சகோதரிகளின் ஐக்கியத்திற்காக மாத்திரமே என நாம் எண்ணக்கூடும். ஆனால் இந்த வசனங்கள் நம் குடும்பத்திற்கும், பெற்றோர்களுக்கும் சேர்த்தே உரியதாகும். இவ்வசனங்களைக் குறித்த தேவனுடைய சித்தம் இவ்வாறாகவே இருக்கிறது என நான் நிச்சயித் திருக்கிறேன்.

ஆகவே, இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருப்பதைப் போலவே குடும்பத்தில் கணவனும் மனைவியும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாஞ்சையும், சித்தமு மாயிருக்கிறது.



சில சமயங்களில் நாம் கண்நோக்கும்போது வீட்டில் நம் வாழ்க்கைத் துணையோடு ஒன்றாய் ஐக்கியப்படுவதைவிட சகோதரர் களிடத்தில் ஒன்றாயிருக்க நாடுவது எளிதாயிருப்பது போலவே தோன்று கிறது! ஆனால் நாம் வாசித்த இந்த வசனங்கள் சகோதர ஐக்கியத்தின் முக்கியத்தைப் போலவே, கணவன் மனைவிக்கு உள்ள ஐக்கியத்திற்கும் சமமான முக்கியத்துவம் தரப்பட் டிருக்கிறது என்பதை ஏற்றுக்

கொள்ள உங்களுக்குக் கடினமாய் இருக்காது என்றே நம்புகிறேன்.

1. **பெற்றோர்களாகிய நாம் கட்டும் "ஒன்றான ஐக்கியமும்" நாம் காத்துக்கொள்ளும் "சமாதானமுமே" பிள்ளைகள் பத்திரமாய் அடைக்கலமிருக்க நாம் கட்டும் கோட்டையாகும்.**

சகோதர ஐக்கியம் மிக எளிதில் தானாய் ஏற்பட்டுவிடுவதில்லை. நாம் மறுபடியும் பிறந்து சபைக்கு வந்தவுடன் ஒன்றாய் கூடிவருகிறோம். சபைக்குரிய எத்தனையோ விஷயங்களை இசைவுடன் ஏற்றுக் கொள்ளவும் செய்கிறோம்! இவ்வாறெல்லாம் இருந்தும் "ஒன்றாயிருக்கும் ஐக்கியத்தை" அடைவதற்கு நீண்டகாலம் ஆகிறது என்றே காண்கிறோம். இந்த ஐக்கியத்தை அடையும் மட்டும் நாம் தொடர்ச்சியாய் பிரயாசப்பட வேண்டியதாய் இருக்கிறது.

இவ்விதமாய் சகோதர ஐக்கியத்திற்கு இருப்பதைப் போலதான் திருமண வாழ்க்கைக்கும் இருக்கிறது. கணவனும் மனைவியும் பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதைப்போல் ஒன்றாயிருக்கும் **ஐக்கியத்தை தங்கள் இலக்காய் கொண்டு பிரயாசப்பட வேண்டும்!!** இந்த ஐக்கியத்தை அடைந்திட நீண்டகாலம் ஆனாலும் முயற்சியை விட்டுவிடாதிருங்கள்....... உறுதியான மனதோடு பிரயாசப்படுங்கள்.

ஒன்றான ஐக்கியத்திற்கு கணவன் மனைவியாகிய இருவரும் ஒரு காரியத்தை ஒரே மாதிரியாய் காணவேண்டுமென்ற அவசியமில்லை. பிதாவும் குமாரனும் ஒன்றாயிருந்த ஐக்கியம் "**ஆவியின் ஒற்றுமையே**" ஆகும். நாம் மாம்சத்தின் வரையறைக்கு உட்பட்டிருக்கிறபடியால், சில விஷயங்களை கணவன் ஒருவிதமாகவும், மனைவி வேறொரு விதமாகவும் காணக்கூடும். ஆனால் இந்த வித்தியாசம் நம்முடைய "ஒற்றுமையை" பாதிக்க வேண்டிய அவசியமேயில்லை!

இந்த "ஒன்றாயிருக்கும் பெற்றோர்களின் ஐக்கியமே" நம்முடைய பிள்ளைகளை தேவ பக்தியுள்ள வழியில் நடத்திச் செல்வதற்கு ஓர் மிக முக்கியமான அஸ்திபாரமாயிருக்கிறது. ஏனெனில் நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து வரும்போது நம்மைக் குறித்த ஞாபகம் அவர்கள் மனதில் பதிந்துவிடுகிறது. தங்கள் பெற்றோர்களைக் குறித்த நினைவு ஞாபகத்தில் வரும்போது, "என் அம்மாவும் என் அப்பாவும் எத்தனையோ விஷயங்களில் குறைவுள்ளவர்களாயிருந்தாலும், எத்தனையோ விஷயங்களில் ஒருவருக்கொருவர் வித்தியாசமாயிருந்தாலும்..... அவர்கள் சண்டையிடுவதையோ அல்லது பிரிவினை ஏற்படுத்துவதையோ நாங்கள்

ஒருநாளும் கண்டதில்லை" என அவர்கள் சிந்திக்க முடியும்!! இவ்வித இனிய ஞாபகத்தை நம் பிள்ளைகளுக்கு நாம் தருபவர்களாயிருந்தால்.... அதுவே நம்முடைய பிள்ளைகளுக்கும் நாம் தரக்கூடிய மிகப் பெரிய சொத்து என நான் கருதுகிறேன்.

ஆனால் மேற்கண்ட இனிய நிகழ்ச்சியா இவ்வுலகில் நடைபெறுகிறது? அந்தோ! எண்ணற்ற குடும்பங்களில் இவ்வாறு நடைபெறவில்லையே! ஆகவேதான் இன்று நாம் நம்முடைய குடும்பத்தை "சமாதான பூமியாய்" பாதுகாக்க வேண்டியது ஓர் அவசரத் தேவையாயிருக்கிறது.

இவ்வாறு சமாதான பூமியாய் இருக்க வேண்டிய குடும்பத்தைப் பற்றி இயேசு அநேக இடங்களில் குறிப்பிட்டிருக்கின்றார். சீஷர்கள் பயணமாய் செல்லும்போது எவ்விதமான வீட்டிற்குள் அவர்கள் பிரவேசிக்க வேண்டும் என இயேசு ஒரு சமயம் குறிப்பிட்டுக் கூறினார். "ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் (ஆங்கில வேதாகமத்தில் SON - புத்திரன் என உள்ளது) அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும் இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பி வரும். அந்த வீட்டில்தானே நீங்கள் தங்கியிருங்கள்" (லூக்கா 10:5-7) எனக் குறிப்பிட்டார். அதாவது இயேசு சீஷர்களுக்கு கூறியது என்னவென்றால், நீங்கள் ஒரு பட்டணத்திற்குப் போகும்போது "ஓர் சமாதானம் நிறைந்த குடும்பத்தைக் கொண்ட" வீட்டையே தேர்ந்தெடுங்கள் எனக் கூறினார். எண்ணற்ற குடும்பங்களில் சண்டைகளும், பதட்டமான சூழ்நிலைகளும் இருப்பது இயேசுவிற்கு நன்றாகவே தெரியும்! ஆகவேதான் சமாதானமுள்ள ஒரு வீட்டைக் கண்டுபிடித்து அங்கே "**சமாதான புத்திரன்**" இருக்கிறானா என பார்க்கும்படி சொன்னார்.

"சமாதான புத்திரன்" (Son of Peace) என இயேசு நமக்கு பெயர் சூட்டுவது மிக அருமையல்லவா! இவ்வாறு சபையிலுள்ள புருஷர்கள் யாவரும் "சமாதான புத்திரர்கள்" ஆகவும், மனைவிகள் யாவரும் "சமாதான புத்திரிகளாகவும்" இருந்துவிட்டால் அது அதிக மேன்மையாயிருக்குமல்லவா! நாம் சமாதான புத்திரர்களாயிருப்பதின் பொருள் சண்டையையும், தன் வாழ்க்கைத் துணையுடன் "பதட்ட சூழ்நிலை" (Tension) உருவாவதையும் வெறுப்பதேயாகும். இவ்வாறு ஒரு நிமிடம்கூட பதட்டத்திற்கு உட்படாமல் துரிதமாய் சமாதானத்தை நாடுபவனே சமாதானப் புத்திரனாவான்.

*இதனிமித்தமே நாம் சிலுவையின் உபதேசத்தை மிக கவனமாய் பின்பற்ற வேண்டியதாயிருக்கிறது. நாம் துரிதமாய் மரிப்பதற்கே இந்த சிலுவை நமக்கு வேண்டும்.*

**நான் சமாதான புத்திரனாயிருக்கிறபடியால், சமாதானத்தை என்ன கிரயம் செலுத்தியாகிலும் பெற்றுவிட நாடுகிறவனாயிருக்கிற படியால், நான் துரிதமாய் சிலுவையில் மரிக்க விரும்புகிறேன்!**

*இவ்வாறு மரிப்பதின் மூலமாய் மாத்திரமே நான் என் இல்லத்திற்கு சமாதானத்தைக் கொண்டு வர முடியும்.*

*நம் இல்லத்தில் சமாதானம் பிரவேசிக்க முடியாமல் தடையாய் நிற்கும் சுயத்தின் உணர்வுகள் யாவை? என் அந்தஸ்தின் உணர்வுகள், என் குலகோத்திர உயர்தரத்தின் உணர்வுகள், என் பதவி செல்வத்தின் மேன்மையைப் பற்றிய உணர்வுகள், என் சுய கௌரவத்தின் உணர்வுகள்.... ஆகியவை யாவும் சமாதானத்திற்குத் தடையாய் வந்து நிற்பதையே நாம் காண்கிறோம்.*

**எப்படியிருந்தாலும், ஓர் சமாதான சூழ்நிலையில்தான் ஒரு குடும்பத்தில் நம்முடைய பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் வளரமுடியும்!**

*ஆகவே சமாதான குறைவான நேரங்கள் வரும்போது நீங்கள் மெய்யான தாகத்தோடு தேவனை நோக்கி உதவிக்காக அபயமிட்டால், அச்சூழ்நிலையில் "துரிதமாய் மரிப்பதற்கு" அவர் நிச்சயம் உதவி செய்வார்.*

*நாம் யாவருமே ஓர் பெலவீனமான மாம்சத்தில் இருப்பது உண்மைதான். ஆகவே சில சூழ்நிலைகளில் கணவன் மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு அவ்வப்போது தோன்றத்தான் செய்யும். அவ்வித சமயங்களில் நாம் மனம் திறந்து ஒருவருக்கொருவர் அவை களைப் பேசி தீர்வு காணவேண்டும். ஆனால் அவ்வித கருத்து வேறு பாடுகளை பகிர்ந்து கொள்ளும்போது, ஒருபோதும் உங்கள் பிள்ளை களுக்கு முன்பாய் பேசாதிருக்க கவனம் கொண்டிருங்கள். இவ்வாறாக நம்முடைய இல்லம் "இவ்வுலகத்தின் பதட்டம்"உள்ளே நுழைய விடாமல் தடுக்கும் கோட்டையைப்போல் இருக்க வேண்டும். நம்முடைய பிள்ளைகள் இந்த கோட்டைக்குள் பத்திரமாய் சமாதானத் தோடு வாழ பெற்றோர்களாகிய நாம்தான் வழி வகுக்க வேண்டும்.*

2. **பெற்றோர்களாகிய நமது "சமநிலைப்படுத்தும்" அழைப்பை நாம் உணர்ந்து கொண்டால், குடும்பம் சமாதானமாய் இருக்கும்! இந்த அழைப்பை உணர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசிக்கத் தயங்கமாட்டார்கள்!**

தேவன் ஸ்திரீயை "ஏற்ற துணையாக" அதாவது "உதவி செய்பவளாக" (Helper) இருக்கும்படியே அழைத்திருக்கிறார். ஆதியாகமம் இரண்டாம் அதிகாரத்தில் "மனுஷனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் (Helper)" என தேவன் கூறியதும், யோவான் 17-ம் அதிகாரத்தில் "பரிசுத்தாவியாகிய தேற்றரவாளன்" (Helper) என இயேசு கூறியதும் ஒரே அர்த்தம் உடையதுதான். அன்பான சகோதரர்களே, புருஷர்களாகிய உங்களுக்கு தேவன் மனைவியை உதவி செய்கிறவளாய் தந்திருக்கிறார் என்பதை நீங்கள் உணரவேண்டியது மிக அவசியம். ஏனென்றால், நம் ஒவ்வொருவருடைய ஜீவியத்திலும் ஏதோ ஒன்று "சமநிலையற்று" இருப்பதை நாம் யாவருமே உணர்ந்திருக்கிறோம். நாம் இச்சமயத்தில் நம்முடைய மனைவியிடமிருந்து உதவியைப் பெறுகிறவர்களாய் இருந்தால் சமநிலை அற்ற நம்முடைய ஜீவியம் வெகு சீக்கிரத்தில் சீரடைந்து சமநிலைக்குள் வந்துவிட முடியும்.

உதாரணமாய், நம்முடைய பிள்ளைகளை ஒழுங்கு செய்ய வேண்டிய பகுதியிலோ அல்லது நம்முடைய வீட்டில் எவைகளை வாங்க அனுமதிக்கலாம், எவைகளை வாங்க அனுமதிக்கக் கூடாது அல்லது நம்முடைய உறவினர்களிடையே நாம் வைத்துக்கொள்ள வேண்டிய உறவுகளைப் பற்றியோ அல்லது இதுபோன்ற எத்தனையோ வேறுபல விஷயங்களைக் குறித்து மாறுபாடுகள் தோன்றும்போது, கணவனாகிய நீங்கள் உங்கள் மனைவியின் அபிப்பிராயங்களை முக்கியமற்றது என நினைக்கும் இடத்திற்குச் சென்றுவிட முடியும். இதுபோன்ற தருணங்களில் நமக்குள் எவ்வளவு அதிகமாய் பெருமையும் அகங்காரமும் குடிகொண்டிருக்கிறது என்பதைக் காண நாம் தவறிவிடுகிறோம். இவ்வித நம்முடைய நடக்கையினால் நாம் தெரியப்படுத்துவதெல்லாம் "எனக்கு ஒன்றும் **உதவி செய்ய ஒருவரும் தேவையில்லை**" என்பதேயாகும். இது எப்படியிருக்கிறதென்றால், நாம் தேவனைப் பார்த்து, "தேவனே, எனக்கு உதவிசெய்ய ஒருவரும் தேவையில்லை! நீர் எனக்கு தரும் மனைவி, பிள்ளைகளைப் பெற்று வீட்டை சுத்தமாய் வைத்துக் கொண்டால் போதும்! ஆனால் என் வாழ்க்கைக்கும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் உதவிசெய்ய அவள் தேவையில்லை!!" எனக் கூறுவதைப் போலாகும்.

ஆனால் இவ்வித கணவனின் கூற்று உண்மையானதல்ல. ஆம், நமக்கு மெய்யாய் உதவும்படிக்கே தேவன் மனைவியைத் தந்திருக்கிறார்.

**கணவன்மாராய் இருக்கிற அனைவருமே "என் மனைவியானவள் எனக்கு முற்றிலும் வித்தியாசமானவளாய் இருக்கிறாள்" எனக் கூறுவது வழக்கமாய் இருக்கிறது. ஆனால், நம்மை சமநிலைப் படுத்துவதற்கென்றே தேவன் மனைவியை அவ்வாறு சிருஷ்டித்திருக்கிறார்.**

*எனவேதான், புருஷர்களே "உங்கள் மனைவியினிடத்தில் விவேகத்தோடு நடந்து..... அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" (1 பேதுரு 3:7) என வேதம் கூறுகிறது.*

*நீங்கள் உங்கள் மனைவியை கனம் செய்வது எப்படி? அவர்கள் உங்களிடத்தில் சொல்வதை நீங்கள் கவனமாய் கேட்பதே அவளுக்கு நீங்கள் செய்யக்கூடிய கனமாகும். இவ்வாறு நீங்கள் கவனித்துக் கேட்டுவிட்டால், உங்கள் ஜீவியத்திற்குரிய சமநிலையை நீங்கள் பெற்றுவிட முடியும். இவ்வாறு மனைவி கூறுவதைக் கவனித்துக் கேட்டு, அதனிமித்தம் உங்களுடைய கருத்துக்களை நீங்கள் மாற்றிக் கொள்ளக் கூடுமென்றால், உங்களுடைய மனைவியோடு கொண்ட ஐக்கியம் வளருவது மாத்திரமல்லாமல் உங்களிடமுள்ள கடினத் தன்மையும் நிச்சயம் மாறிவிடும்!*

*இருப்பினும், இந்த இடத்திலும் ஓர் அபாயம் இருக்கத்தான் செய்கிறது. இன்று அநேகர் சத்தியத்தை கைக்கொள்வதில், கடிகாரத்தின் ஊசல்குண்டுபோல் ஒரு கோடிக்குச் செல்வார்கள். அல்லது அதை விட்டுவிட்டு மறுகோடிக்குச் செல்வார்கள். அதேபோல ஒரு கணவன் "பெலஹீனமாய்" இருக்கும்பட்சத்தில் மனைவி சொல்வதையெல்லாம் கேட்டு..... அவளுக்கு ஒரு சீஷனைப்போல் மாறி...... சாந்தத்தோடும், அமைதியோடும் தன் தலையசைத்து தன் மனைவியைப் பிரியப்படுத்துகிறவனாய் மாறிவிட முடியும்! இதுபோன்ற குடும்பமும் ஒருக்காலும் சமநிலையாய் இருந்திட முடியாது.*

**இப்படிப்பட்ட நிலையில்** *அந்த வீட்டில் வலிமையாய் இருக்கும் மனைவி தன்னைத்தானே தாழ்த்தி, "தன்னை தேவன் குடும்பத்தின் தலைவியாய் இருக்கும்படி ஒருபோதும் நியமிக்கவில்லை" என்பதை உணரவேண்டியது மிகவும் அவசியமாகும். இதற்கு மாறாக, தன் வலிமையினிமித்தம் தலைமை ஸ்தானத்தைப் பிடித்துக் கொள்ளும் ஸ்திரீயானவள், தன் புருஷனை ஆட்டிப்படைத்து, தான் சொல்வதை யெல்லாம் தன் கணவன் கீழ்ப்படிந்து செய்யும்படி ஆண்டுகொள்ள முடியும். ஆனால் இதுபோன்ற குடும்பம் ஒருக்காலும் தேவன்*

*விரும்புகிற பாதையில் கட்டப்படவே முடியாது!*

*எனவேதான் 1கொரிந்தியர் 11:3-ம் வசனத்தை நாம் தெளிவாய் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இங்கே தேவஞானத்தின்படி குடும்பத்தின் வரையறை வகுக்கப்பட்டுள்ளது, "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றால், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்" (1 கொரி. 11:3) என பவுல் கூறினார். இவ்வசனத்தை நாம் கவனித்துப் பார்த்தால், கிறிஸ்து தேவனுக்கு கீழ்ப்படிந்திருந்தது போல புருஷனும் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்பதையும், அதன்பொருட்டு ஸ்திரீயானவளும் புருஷனுக்கு அடங்கியிருக்க வேண்டும் எனவும் புத்தி சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். இன்று இந்த அடங்கியிருத்தல் எப்படியெனில், ஒரு மனிதன் கிறிஸ்துவைப் பார்த்து "அவர் என்ன செய்ய வேண்டும்" என கூறமுடியாததைப் போலவேயாகும். இதைப்போலவேதான், இயேசுவும் இந்த பூமியில் இருந்தபோது "பிதா என்ன செய்ய வேண்டுமென்று" அவரைப் பார்த்து கேட்கவேயில்லை.*

**அதைப்போலவே, புருஷனுக்கு அடங்கியிருக்கும் ஒரு ஸ்திரீயும், தன் புருஷன் என்ன செய்ய வேண்டுமென அவனுக்கு ஒருபோதும் கட்டளையிடமாட்டாள்!**

*இவ்வாறு ஸ்திரீ - புருஷனுடைய உறவையும், கிறிஸ்து-தேவனுடைய உறவையும் வரிசைப்படுத்தி அடங்கியிருக்கும் ஜீவியத்தைப் பவுல் போதித்தார். இவ்வித அடங்கியிருத்தலே "ஸ்திரீ தன் தலையை முக்காடிட்டுக் கொள்வதின்" அர்த்தம் என்பதை பவுல் தெளிவுபடுத்தினார். இவ்வாறு புருஷனுக்குதான் அடங்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை உணராமல் ஒரு ஸ்திரீ தன் தலையை முக்காடிட்டுக் கொண்டால், அது வெறும் மார்க்க அனுசாரமேயாகும்! இன்று இதுபோலவே "பொருளை விட்டுவிட்டு" ஏராளமான மார்க்க அனுசாரங்களை இன்றைய கிறிஸ்தவம் செய்து கொண்டிருக்கிறது.*

*எனவே, தேவன் நம் குடும்பத்திற்கென நியமித்திருக்கும் ஒழுங்குவரிசையை நம் முழு இருதயத்தோடும் கைக்கொண்டுவிட்டால், பிள்ளைகள் பத்திரமாய் வாசம்செய்யக் கூடிய இல்லத்திற்கு செம்மையான அஸ்திபாரம் போட்டவர்களாய் இருப்போம். தலையாகிய புருஷனுக்கு, ஸ்திரீ ஏதோ வீட்டு வேலைசெய்கிறவள் போல் இல்லாமல், மெய்யாகவே தன் புருஷனுக்கு எல்லாவிதத்திலும்*

உதவி செய்கிறவளாயும், புருஷன் தன் மனைவி தனக்கு உதவும்படி கூறுவதை கவனித்துக் கேட்டு தன் கருத்துக்களை மாற்றிக்கொள்ள கூடியவனாயும் இருந்தால்.... அவ்வித குடும்பமே நேர்த்தியான (சமநிலை) குடும்பமாய் கட்டப்படும்.

**3. பெற்றோர்களின் "ஒரே ஆவியின்" ஐக்கியமே, குடும்பத்தில் ஏற்படும் எந்தப் பிரச்சனையையும் ஜெபத்தினால் ஜெயங்கொள்ளச் செய்கிறது!**

ஆகவேதான் கணவன் மனைவியுடைய ஐக்கியம் மிக மிக முக்கியமானதாகும். ஒருசமயம் ஓர் சகோதரன் என்னிடம் தன்னுடைய ஐந்து வயது மகனை அழைத்துவந்து "சகோதரனே, இவன் அதிக முரட்டாட்டமும் தொந்தரவும் செய்கிறான். இவனுக்காக இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டார். அதற்கு நான், "சகோதரனே நீங்கள் செய்யவேண்டிய நேர்த்தியான காரியம் உங்கள் மனைவியோடு ஒன்றாக இருப்பதுதான்!" என கூறினேன்.

ஆம், உங்கள் முரட்டாட்டமான மகனுக்கு நீங்கள் செய்யக்கூடிய நன்மை இது ஒன்றே ஆகும்.

**நீங்கள் மாத்திரம் உங்கள் மனைவியோடு ஒன்றாய் இருந்து விட்டால், உங்கள் இல்லத்தில் சொல்லிமுடியா வல்லமை புரண்டோடிவிடும். அந்த வல்லமையைக் கொண்டு உங்கள் பிள்ளைகளைத் தாக்க முயற்சிக்கும் " முரட்டாட்ட ஆவிகளை" நீங்கள் எளிதில் கட்டிப்போட்டுவிடலாம்!**

உங்கள் பிள்ளைகள் சிறுவர்களாய் இருக்கும்போது வீட்டில் காரியங்கள் இலகுவாய் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் வளர்ந்து வரும்போது, பிரச்சனையை காணும் நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ஆம், உங்கள் வாழ்க்கைத் துணையோடு ஐக்கியம் கொண்டு ஒன்றுபடுங்கள்! அதுவே இந்த எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வாகும்.

நம்முடைய பிள்ளைகள் வயது வந்த வாலிபர்களாய் மாறும்போது நாம் அவர்களுக்காக ஜெபிக்கும்படி உந்தித்தள்ளப் படுவதை உணர்கிறோம். இச்சமயத்தில் நம் மனைவியோடு ஒன்றாகாத பட்சத்தில் நம் ஜெபத்திற்கு பதில் ஒருபோதும் கிடைக்காது. இதைக் குறித்து 1பேதுரு3:7-ல் கூறும்போது, "புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாய் இருக்கிற படியால், **உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு,** நீங்கள் விவேகத்தோடு அவர்களுடன் வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்கிறவர்க

ளானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" எனக் கூறுவதைப் பார்க்கிறோம்.

எனவே கணவனும் மனைவியும் ஒன்றான ஐக்கியத்தில் ஜீவிக்காவிட்டால் அவர்களுடைய ஜெபம் தடைபடும் என வேதம் எச்சரிக்கிறது. ஒருவேளை, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காக மிக முக்கியமான தேவையைக் கருதி, அதிக ஊக்கத்துடன் ஜெபிக்கலாம். ஆனால் கணவன்- மனைவியாகிய உங்களிடத்தில் சண்டையும், பதட்டமும் நிலவினால், நீங்கள் என்னதான் ஜெபித்தாலும் உங்கள் ஜெபம் ஒருக்காலும் கேட்கப்படாது!

இந்த உண்மையை என்னுடைய பல வருட கிறிஸ்தவ ஜீவியத்தில் தெளிவாய் கண்டுபிடித்திருக்கிறேன். நம்முடைய பிள்ளைகளை வளர்ப்பதில் மிக முக்கியமான பங்கு "ஜெபமேயாகும்." அவர்களுக்காக ஜெபிப்பதைக் காட்டிலும் குழந்தைகளை வளர்ப்பதற்குரிய வேறு எந்த தாற்பரியமும் முக்கியமானது அல்லவே அல்ல. ஜெபம், தேவ இரக்கத்தை நம் பிள்ளைகளுக்கு கொண்டு வந்து தருகிறது. இந்த இரக்கமே, தேவன் அவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்து..... ஏற்றவேளையில் அவர்களை இரட்சிப்புக்குள் நடத்தும்படிச் செய்கிறது. அவர்கள் மேலும் வளரும்போது, "அதிகமான தெய்வ பயத்தில்" வளரவும், இந்த இரக்கம் கிரியை செய்வதை நாம் காண முடியும்.

எனவே, **சிறுபிள்ளைகளாய் இருக்கும்போதே அவர்களின் தாயும், தகப்பனும் அவர்களுக்காக ஜெபிக்கத் துவங்க வேண்டும்.** இங்குதான் நம் ஜெபத்திற்குத் தடை வரக்கூடாது. அவ்வாறு தடை ஏற்பட ஆரம்பித்து விட்டால், என்ன சம்பவிக்கும்? ஆம், நம்முடைய பிள்ளைகள்தான் அதிக துன்பத்திற்கு உள்ளாவார்கள்! எனவேதான் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய மிக முக்கியமான நன்மையே "உங்கள் மனைவியோடு ஐக்கியமாய் ஒன்றாய் இருப்பதுதான்" என நான் வலியுறுத்திக் கூறினேன்.

ஆகவே இனியும் உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடி, உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத்துணைக்குமிடையே எதுவும் வராதிருக்க கவனமாயிருங்கள். இன்று அநேக கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்காக பாரத்தோடு "**சேர்ந்து ஜெபிக்க வேண்டிய**" முக்கியத்துவத்தை இன்னமும் கூட உணராமலேதான் இருக்கிறார்கள்.

இந்த சத்தியத்திற்கு மத்தேயு 18-ம் அதிகாரம் அதிக முக்கியத்தும் வாய்ந்ததாகும். இந்த அதிகாரத்திலுள்ள 18 முதல் 20 வசனங்கள்

சபையின் சூழ்நிலைக்கு மாத்திரமே உரியதென நாம் எண்ணக்கூடும். ஆனால் இந்த வசனங்கள் குடும்பச் சூழ்நிலைக்கும் மிக முக்கியமான தாகும். பூலோகத்திலே நீங்கள் எதைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டியிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளை கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். அல்லாமலும், உங்களில் **இரண்டுபேர்** தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே **ஒருமனப்பட்டிருந்தால்,** பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என இயேசு ஆணித்தரமாய் கூறினார் (மத்தேயு 18:18,19).

> **"உங்களில் இரண்டுபேர்" என்பது உங்களையும் உங்கள் வாழ்க்கைத் துணையையும் குறிக்கிறதாகவே உள்ளது. குறிப்பிட்ட சில விஷயங்களில் ஒருவன் மாத்திரமே ஜெபித்து பலன் பெற முடியாது. இந்த உண்மையை வலியுறுத்தும்படியே "உங்களில் இரண்டுபேர் வேண்டிக்கொள்ளும்போது" என இயேசு சுட்டிக்காட்டினார்.**

எத்தனையோ விஷயங்களுக்காக நாம் தனியாய் ஜெபிக்க முடியும். ஆனால் சில குறிப்பிட்ட விஷயங்களில் குறைந்தது இரண்டு பேராவது வேண்டுமென்ற உண்மையைத்தான் இயேசு வெளிப்படுத்தினார். அதாவது, உங்களில் இரண்டுபேர் பாரத்துடன் ஜெபிக்க வேண்டுமென்று இயேசு கூறாமல், "உங்களில் இரண்டுபேர் ஒருமனப்பட்டிருக்க வேண்டும்" என்றே இயேசு குறிப்பிட்டார்.

"ஒருமனப்பட்டிருத்தல்" என்ற வார்த்தை கிரேக்க பதத்தில் "இசைந்த ராகம்" (Symphony) என்றே கூறப்பட்டுள்ளது. அதாவது ஒரு பெரிய இசை நிகழ்ச்சியில் இரண்டு வாத்தியக்கருவிகள் ஒரே தாளத்தோடு வாசிக்கும்போது ஏற்படுவதே "இசைந்த ராகமாகும்" இதற்கு மாறாக ஒரு வாத்தியக்கருவி தாளம் தப்பி வாசிக்கும்பொழுது அந்த ராகம் நம் காதுகளில் "இசைவற்ற ஒலியாய்" (Discord) தொனிக்கும். அதைக் கேட்பதற்கு இனிமையாயிராது!

ஒரு கணவனும் மனைவியும் ஜெபிக்கும்பொழுது அங்கு உண்மையான இசைந்த ஐக்கியம் இருக்கிறதா? இன்று சிலவீடுகளில் கணவன் தன் மனைவியை ஆட்டிப்படைப்பதினிமித்தம் ஒரு ஐக்கியம் இருக்கக்கூடும். அதாவது, "நான் என்ன சொல்லுகிறேனோ அதற்கு அப்படியே கீழ்படிந்து நட! நீ சொல்லுகிற எதையும் நான்

கேட்கவேண்டிய அவசியமில்லை" என ஒரு கணவன் கட்டாயமாய் கூறும்போது அங்கு ஒரு ஐக்கியமிருக்கக்கூடும். ஆனால் அது உண்மையான ஐக்கியம் அல்ல! அதற்கு மாறாக, 1பேதுரு 3-ம் அதிகாரத்தில் நாம் வாசித்ததைப்போல "தன் மனைவியுடன் விவேகமாய் வாழ்ந்து அவளும் கிருபையின் ஒளியில் தன்னோடு இணைந்த சுதந்திரம்" என்ற உணர்வோடு ஒரு குடும்பம் இருந்தால் அதுவே உண்மையான ஐக்கியமாகும். இவ்வித ஐக்கியம் கொண்ட கணவன் மனைவியாகிய இருவரும் சேர்ந்து ஜெபித்தால், அவர்கள் எதைக் கேட்டு ஜெபித்தாலும் பரலோகத்திலுள்ள தன்னுடைய பிதா அதை அவர்களுக்கு அருளிச்செய்வார் என்றே இயேசு வாக்குரைத்தார்.

எத்தனையோ சமயங்களில் இந்த வாக்குதத்தத்தைப் பற்றிக் கொண்டு நானும் என் மனைவியும் எங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்திருக்கிறோம். அதேபோல், எத்தனையோ சமயங்களில் இந்த வாக்குத்தத்தத்தை பற்றிக்கொண்டு நானும் இன்னொரு சகோதரனும் சேர்ந்து ஜெபித்திருக்கிறோம். இந்த இயேசுகிறிஸ்துவின் வாக்குதத்தத்தை "ஒருமனங்கொண்ட" பெற்றோர்கள் யாவரும் தங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்திட முழு உரிமையையும் இயேசு வழங்கியிருக்கிறார்.

நம்முடைய ஆரம்ப குடும்ப ஜீவியத்தில் நம்முடைய பிள்ளைகளுக்காக ஜெபிக்க வேண்டிய தேவைகள் உணவு, சரீரப்பிரகாரமான சுகம் போன்றவைகளாய் இருக்கலாம். பின்பு பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்ல ஆரம்பித்தவுடன், மற்ற பிள்ளைகளோடு சண்டைபோடும் பிரச்சனையாகவும் அல்லது அவர்களுடைய ஆசிரியர் மூலம் ஏற்படும் பிரச்சனையாகவும் இருக்கலாம். இவ்வாறு பிள்ளைகள் வளர்ந்து வரும்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு அளவே இல்லை எனலாம். இவ்வாறு எழும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் விடை காண வேண்டியது மிகவும் அவசரமான தேவையாய் இருப்பதை நாம் உணரமுடியும். இங்குதான் கணவனும் மனைவியும் தங்கள் ஆவியில் "ஒருமனதாய்" இசைந்திருக்க வேண்டும்.

**இவ்வாறு கணவனும் மனைவியும் தங்கள் ஆவியில் மெய்யாகவே ஒருமனம் கொண்டுவிட்டால், "அவர்கள் எதைக் கேட்டாலும்" அதை பரலோகத்தில் உள்ள பிதா அவர்களுக்கு செய்வார் என தேவனுடைய வார்த்தை கூறுகிறது. எதைக் கேட்டாலும் என்பதற்கு பொருள், நம் குடும்ப ஜீவியத்தில் "நம் பிள்ளைகள் சந்திக்கப்போகும் எந்தப் பிரச்சனைகளுக்கும்" என்பதேயாகும்.**

இவ்வாறு ஒருமனப்பட்டிருந்தால் மத்தேயு 18:18-ம் வசனம் குறிப்பிடுகிறபடி நாம் "பொல்லாத ஆவிகளையும் கட்டிப்போட" முடியும்! நம் குடும்பத்தில் அவ்வப்போது ஆவிகள் பிரவேசித்து குழப்பத்தை உண்டுபண்ண முயற்சிப்பதை நான் நம்புகிறேன். இவ்வாறு குழப்பத்தை உண்டுபண்ண வகைதேடும் ஆவிகளை நாம் இயேசுவின் நாமத்தினால் எவ்வாறு கட்டிப்போட வேண்டும். என்பதை நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும். மத்.18:20-ம் வசனம் குறிப்பிடுகிற, "இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என இயேசு கூறிய வார்த்தைகள் சபைக்கு உரியதாகும். இருப்பினும் இந்த வசனம் குடும்ப ஜீவியத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. எனவே கணவனும் மனைவியும், எவ்வாறு பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்களோ அதேபோல் ஒன்றாயிருந்து இயேசுவின் நாமத்தில் கூடி ஜெபித்தால் சாத்தானையும், அவனுடைய தலையீடுகளையும் அவர்கள் வீட்டை விட்டு வெகுதூரத்தில் தள்ளிவைத்திட முடியும்!

4. **பெற்றோர்களாகிய நம்மிடமுள்ள "புறங்கூறுதல்" ஜெபத்தின் வலிமையைக் குன்றச் செய்வது மாத்திரமல்லாமல், நம் பிள்ளைகளையும் தீட்டுப் படுத்திவிடுகிறது!**

நல்லதோர் குடும்பத்திற்கு "ஒருமனப்பட்டிருப்பதே" அவசிய மாயிருக்கிறது. இவ்வித ஒருமனப்பாட்டை இழப்பதற்கு அநேக அபாயங்கள் உண்டு. அதில் மிக முக்கியமானது "புறங்கூறுதலே" ஆகும். வீட்டில் உள்ள தகப்பனும் தாயும் எவ்வித புறங்கூறுதலையும் தங்கள் ஜீவியத்திலிருந்து முற்றிலும் அகற்றியிருக்க வேண்டும். எனக்குத் தெரிந்தவரை நம் குடும்ப ஜீவியத்தில் ஆவிக்குரிய வல்லமையை இழப்பதற்கு முதல் எதிரியே இந்த புறங்கூறுதல்தான் என்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். வேறு யாரோடும் உட்கார்ந்து புறங் கூறுவதைவிட கணவனும் மனைவியும் சேர்ந்து பேசுகிற புறங்கூறுதல் தான் ஏராளமாய் இருக்கிறதென நான் அறிவேன்! இவ்வித ஒவ்வொரு புறங்கூறுதலிலும் உங்கள் குடும்ப ஜீவியத்தில் உள்ள ஆவிக்குரிய வல்லமை "சொட்டு சொட்டாக" வழிந்தோடிச் சென்றுவிடும் என்ற உண்மையை இன்று அறிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டில் "டெலிவிஷன்" வைத்திருக்காதபடியால் நீங்கள் பெரிய ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்திருப்பதாக நினைத்திருக்கலாம்.

**ஆனால் ஒரு டெலிவிஷன் பெட்டி ஏற்படுத்தும் ஆவிக்குரிய நஷ்டத்தைவிட புறங்கூறுவதினால் ஏற்படும் ஆவிக்குரிய நஷ்டம் நூறு மடங்கு அதிகமென்றே நான் சொல்லுவேன்!**

*நீங்கள் இன்னும் புறங்கூறிக்கொண்டு "எங்கள் வீட்டில் டெலிவிஷன்! இல்லை" என கூறுவதில் ஒரு பிரயோஜனமும் இல்லை.*

*நான் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை பார்ப்பதில்லை எனக் கூறிவிட்டு அந்த நேரத்தில் பிறரைப் பற்றி புறங்கூறிக் கொண்டிருந்தால் .... அதைவிட, நீங்கள் டெலிவிஷன் நிகழ்ச்சியைப் பார்ப்பதே நல்லது! இதினிமித்தமாய் நீங்கள் யாரோ சிலரைப் புறங்கூறுவதிலிருந்து இந்த டெலிவிஷன் பெட்டி உங்களை இரட்சித்து விட்டதென கூறலாம்!!*

**டெலிவிஷன் பெட்டியும் வேண்டாம், புறங்கூறுதலும் வேண்டாம் என்பதுதான் உயர்ந்த ஜீவியம்!** *இருப்பினும் நான் மேற்கண்டபடி கூறியதற்கு காரணம் என்னவென்றால், இன்று அநேகர் தங்கள் வீட்டிலிருந்து டெலிவிஷன் பெட்டியை அப்புறப் படுத்தியப்படியால், தங்கள் வீடு இப்போது ஆவிக்குரிய வீடாய் மாறிவிட்டதென எண்ணிக்கொள்கிறார்கள். இந்த 'ஐடியாவை' தயவுசெய்து உங்களைவிட்டு அகற்றிவிடுங்கள். இனியும் நீங்கள் மெய்யாய் யுத்தம் செய்ய வேண்டிய பகுதியை அறியாதவர்களாய் இருக்க வேண்டாம். ஏனெனில் நாம் உட்கார்ந்து பேச ஆரம்பிக்கும் பொழுது யாரையும் புறங்கூற வேண்டுமென்ற நோக்கம் நம்மில் இருப்பதில்லை. அல்லது, "இப்போது, இன்னாரை புறங்கூறுவோம்" என நாம் திட்டமிட்டு தொடங்குவதுமில்லை. அதற்கு மாறாக நம்மை அறியாமலேயேதான் புறங்கூறத் துவங்குகிறோம்!*

*எனவேதான், நான் என்னுடைய மனைவியினிடத்தில் மாத்திரமல்லாமல், மற்ற சகோதரர்களிடத்திலும் கீழ்கண்டவாறு கூறியிருக்கிறேன். "அன்பார்ந்த மனைவியே அல்லது அன்பார்ந்த சகோதரனே எனக்கு உன் உதவி தேவை! நாம் சம்பாஷிக்கும்போது சம்பாஷணையின் திசை மெல்ல மெல்ல அபாய எல்லைக்குச் சென்று யாரோ ஒருவரைப் புறங்கூறி அபாய சிகப்புக்கோட்டை தொட வந்துவிட்டால், தயவுசெய்து எனக்கு உதவிசெய்து என் சம்பாஷணையை நிறுத்துங்கள்" எனக் கூறுவதுண்டு. இங்குதான் நம்முடைய மனைவி நமக்கு ஏற்றதுணையாய் இருந்து உதவி செய்துவிட முடியும். எனவே மேற்கண்டவாறு ஒருவருக்கொருவர் நாம் உதவும்படி தீர்மானம் செய்து கொள்வது மிகவும் நல்லது! பிறரை நான் புறங்கூறும்பொழுது மனைவியோ அல்லது கணவனோ அதைத் தடுத்து*

*நிறுத்தி விட்டால் "அதற்காக நான் ஒருபோதும் மனம் புண்பட மாட்டேன்" என்ற வாக்குறுதியையும் முன்கூட்டியே நாம் ஒருவருக் கொருவர் சொல்லிக்கொள்ள வேண்டும். ஆம், நம்முடைய சம்பாஷ ணையில் இந்தப் பகுதி ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டிய மிக முக்கியமான பகுதியாகும்.*

*கணவனுக்கும் மனைவிக்கும் இடையே எத்தனையோ விதமான ஐக்கியங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் இவர்கள் பாவத்தோடு உடன்படும் ஐக்கியம்! பிறரைக் குறித்த சம்பாஷணையில் புறங்கூறும் பாவத்திற்கு கணவனும் மனைவியும் ஐக்கியமாய் சேர்ந்து கொள்ள முடியும். அவ்வாறு புறங்கூறிவிட்டு அதினிமித்தம் இருவரும் மகிழ்ச்சியடையவும் முடியும்! இது வேதனையன்றோ!!*

*நாம் மெய்யாகவே நம்முடைய ஆவிக்குரிய வல்லமையைப் பாதுகாக்க விரும்பினால் நம்முடைய நாவைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். என்னுடைய நாவை கொஞ்ச நேரம் சாத்தானுக்கு கொடுத்துவிட்டு, பின்பு கூட்டங்களில் தேவன் உபயோகிக்கும்படியாய் எதிர்பார்ப்பது வீணானதேயாகும். என் மனைவியோடு நான் பேசும் போது பிறரைக் குறித்து தீமையாய் பேசும்படி சாத்தானுக்கு சார்பாய் என் நாவின் 'ஸ்விட்சைப் போட்டுவிட்டு' திடீரென்று ஆவிக்குரிய ஆலோசனைக்காக என் வீட்டிற்கு வருவோருக்கு இப்போது தேவனுடைய சார்பாய் 'ஸ்விட்சை' மாற்றிப்போட எப்படி முடியும்? ஆகவே இப்புறங்கூறுதலின் பகுதி நம் ஆவிக்குரிய வல்லமையை இழக்கச் செய்யும் கொடிய பகுதியாகும். வீட்டில் டெலிவிஷன் வைத்திருப்பதும், கெட்ட பத்திரிக்கைகள் வைத்திருப்பதும் பகிரங்கமாய் இருக்கிறபடியால் நாம் அதைக் குறித்து மிக கவனமாய் இருக்கிறோம். ஆனால் இப்புறங்கூறுதலின் பகுதி பகிங்கிரமாய் இல்லாதபடியால், நாம் மிகவும் விழிப்புடன் இருந்து நம் ஆவிக்குரிய வல்லமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்.*

*தாயும் தகப்பனும் புறங்கூறிக் கொண்டிருக்கிறதை நம்முடைய பிள்ளைகள் சிறுகுழந்தைகளாய் இருக்கும்போது கேட்டால் அவ்வளவாய் அது அபாயமில்லைதான். ஆனால் நம் பிள்ளைகள் பெரியவர்களாய் வளரும் பருவத்தில் இவைகளைக் கேட்டால் அவைகள் கண்டிப்பாய் நம் பிள்ளைகளை சீரழித்துவிடும்.*

**குறிப்பாய், சபையிலுள்ள சகோதர சகோதரிகளை புறங்கூறுவதால் கணவன் மனைவியாகிய நீங்கள் மாத்திரம் கறைபடுவதல்லாமல், உங்கள் பிள்ளைகளும் தீட்டுப்படுவார்கள் என்பதை நாம் ஒருபோதும் மறக்க வேண்டாம்!**

*யாக்கோபு 4:11-ல் "சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதீர்கள்" என வாசிக்கிறோம். நாம் சில சமயங்களில் சில* **சகோதரர்களைப் பற்றி** *பேசவேண்டிய* (Speak about a brother) *அவசியமிருக்கலாம். ஆனால் நாம் ஒருபோதும்* **சகோதரருக்கு விரோதமாய்** (Speak against a brother) *அல்லது அவரை நியாயந்தீர்த்து பேசவே கூடாது!*

*மேலும் யாக்கோபு.5:9-ல் "சகோதரரே, நீங்கள் ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்"* (Complaint) *என்றும், "இதோ நியாயதிபதி வாசற்படியில் நிற்கிறார்" என்றும் வாசிக்கிறோம். அதாவது நீங்கள் யாரோ சிலரைக் குறித்து உங்கள் வீட்டில் அமர்ந்து குறைகூறிக்கொண்டிருக்கும்பொழுது உங்கள் வீட்டு வாசலில் "காலிங் பெல்" சத்தம் தொனிக்கிறது .....*

**அச்சமயம் உங்கள் குறைகூறுதலை அங்கு வந்த நபர் கேட்டுவிட்டாரோ என்று நீங்கள் அஞ்சுவீர்கள். ஏனென்றால், அந்தளவிற்கு நீங்கள் பேசிய குறைகூறுதல் உங்களுக்கே வெட்கமாயிருக்கிறது!**

*ஆனால் இதற்கெல்லாம் ஒருபடி மேலாக வாசற்படியில் வந்து நின்றது "நியாயாதிபதி" என்றல்லவா இந்த வசனம் குறிப்பிடுகின்றது. ஆகவே நான் என் மனைவியோடோ, கணவனோடோ மற்றவர்களைப் பற்றி பேசும் போதெல்லாம் வாசற்படியில் "நியாயாதிபதி" நின்று கொண்டிருக்கிறார் என்ற விழிப்போடு பேசக்கடவோம்.*

*நான் மற்றவர்களைப்பற்றி வீட்டில் பேசுபவைகளையெல்லாம் வாசற்படியில் நின்று கேட்டுக் கொண்டிருக்கும் நியாயாதிபதியும் அங்கீகரிக்கிறார் என்பதே நாம் பரீட்சையில் தேறியதற்கு சமமாகும்! இவ்விஷயத்தை வேதம் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதற்கு காரணம் "ஒன்றாயிருக்கும் ஐக்கியத்திற்கும்" இந்த புறங்கூறுதலுக்கும் அதிக தொடர்பிருப்பதே காரணமாகும். ஏனென்றால் கணவன் மனைவி ஐக்கியம் வெறும் "ஒன்றாய் கூடிவருவது" என்று இல்லாமல் அது "கர்த்தருக்குள் ஒன்றான ஐக்கியமாய்" இருப்பதே காரியமாகும்!!*

5. **பிள்ளைகளை கண்டிப்பதும், அன்புகூருவதும் பெற்றோர்களாகிய நாம் "தேவனை நெருக்கமாய் அறிந்து" அவரைப் பிரதிபலிப்பதே 'நல்லதோர் குடும்பம்' கட்டப்பட வழி வகுக்கும்!**

*பெற்றோராய் இருக்கும் நம்முடைய பொறுப்பில் அடுத்து முக்கியமாய் காணவேண்டிய பகுதியை 1 யோவான் 2:13,14 வசனங்களில் காண்கிறோம். "பிதாக்களே, ஆதிமுதல் இருக்கிறவரை நீங்கள்*

அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" என்பதுதான். இந்த வசனம் சபையில் ஆவிக்குரிய தகப்பனாய் இருந்து நிறைவேற்ற வேண்டிய ஊழியத்தைக் குறித்து குறிப்பிடுவது உண்மைதான். இருப்பினும் குடும்ப ஜீவியத்திலுள்ள தகப்பனுக்கும் தாய்க்கும் இந்த வசனம் பொருந்தும் என்பதை நாம் மறக்கலாகாது. சபையில் ஒருவன் ஆவிக்குரிய தகப்பனாய் இருந்து ஊழியம் செய்வதற்கு அவன் "ஆதிமுதல் இருக்கிற தேவனை ஒரு தகப்பனாக அறிந்திருக்க வேண்டும்." அதைப்போலவே, குடும்ப ஜீவியத்தில் நீங்கள் ஒரு நல்ல தகப்பனாகவும், தாயாகவும் இருக்க விரும்பினால் நீங்களும் தேவனை அதிகமாய் நெருங்கி அறிந்திருக்க வேண்டும். எந்த அளவுக்கு நான் தேவனை ஒரு தகப்பனுடைய ஸ்தானத்தில் அல்லது ஒரு தாயினுடைய ஸ்தானத்தில் வைத்து அறிந்திருக்கிறேனோ அந்தளவுக்குதான் நான் என் பிள்ளைகளிடத்தில் நல்ல தகப்பனாகவும், தாயாகவும் இருக்க முடியும்.

**தேவன் நம்மை பெற்றோர்களாய் வைத்திருப்பதின் நோக்கமே, பிள்ளைகள் நம்முடைய நடக்கையைக் கண்டு அதன் மூலம் தேவன் எப்படிப்பட்டவர் என அறிந்துகொள்ளும் பொருட்டே வைத்திருக்கிறார்.**

பிள்ளைகள் தேவனைக் காணமுடியாது, ஆனால் பெற்றோர் களாகிய நம்மை பார்த்துதான் தேவன் எப்படி இருக்கிறார்? என்பதை அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு அவர்களுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே நம்முடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய இடத்தில் நம்மை வைத்து காட்டுவதே பெற்றோர்களாகிய நம்முடைய அழைப்பு என நான் விசுவாசிக்கிறேன்.

"தேவன் அன்பும், கண்டிப்பும் உடையவராயிருக்கிறார்" இந்த அவருடைய சுபாவத்தில் எப்போதும் ஓர் சமநிலையை நாம் காணமுடியும். அதைப்போலவே நமது பிள்ளைகளும் பெற்றோர் களாகிய நம்மிடத்தில் அன்பையும் அதற்கு சமமாய் கண்டிப்பையும் காணவேண்டும். தேவன் எவ்வளவுதான் கண்டிப்பாய் இருந்தாலும் "கடினமானவர்" அல்ல. அதைப்போலவே நாம் எவ்வளவுதான் **கண்டிப்பாய் இருந்தாலும், அவர்களிடம் கடினமாய் இல்லை** என்பதைப் பிள்ளைகள் காணவேண்டும்!

இவ்வாறாக, தேவன் எவ்வாறு இருக்கிறார் என்றும், அவர் தன் பிள்ளைகளிடத்தில் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்றும் நாம் காண்பது, நம்முடைய பிள்ளைகளிடத்தில் நாம் எவ்வாறு நடந்து கொண்டு அவர்களை அன்புகூர வேண்டும் என்பதை அறிவதற்கான சிறந்த பாடமாகும்.

ஒரு சமயம் என்னிடம் ஒரு சகோதரன் நான் எவ்வாறு

பிள்ளைகளைக் கண்டித்து வளர்க்கிறேன் என்பதைக் குறித்து கேட்டார். ஆனால் இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல மிகவும் தயங்குகிறேன். ஏனென்றால் பிள்ளைகளைக் கண்டிக்கும் விஷயத்தில் நான் எல்லாவற்றையும் நேர்த்தியாய் செய்தேன் என என்னால் சொல்ல முடியாது. இவ்விஷயத்தில் நான் எவ்வளவோ தவறுகள் செய்திருக்கிறேன். இந்த இடத்தில் வேதமும்கூட "பிள்ளைகளுக்கு இதைச் செய்ய வேண்டும்...... இதைச் செய்யக்கூடாது" என எந்த வரையறையும் விதிக்கவில்லை. வேதம் கூறுவதெல்லாம் "**கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்** அவர்களை வளர்ப்பீர்களாக" என்று மாத்திரம் கூறுகிறது (எபேசியர் 6:6). இந்த புத்திமதி நமக்குப் போதாதா? அல்லது வேறுபல சட்டவிதிகள் நமக்குத் தேவையா?

இது ஏன் என்றால், சில சமயங்களில் யாரோ சில தேவ மனுஷர்கள் எவ்வாறு தன் குடும்பத்தை நடத்தி வந்தார்கள் என்பதைக் கேள்விப்படுவதினிமித்தம் அது நம்மை வெகுவாய் பாதித்துவிடுகிறது! இப்போது அவர்கள் செய்தது போலவே நாமும் செய்ய முயற்சிக்கிறோம்!! இது எத்தனை பெரிய அடிமைத்தனத்திற்குள் நம்மை கொண்டு வருகிறது என்பதைப் பாருங்கள். இதுபோன்ற அடிமைத்தனத்திலிருந்து நீங்கள் விடுதலையாக வேண்டுமென உங்கள் யாவரையும் நான் உற்சாகப்படுத்துகிறேன். இந்த ஒரு காரணத்தினிமித்தமே "நான் எப்படி என் பிள்ளைகளிடம் நடந்து கொள்கிறேன்" என்பதை அதிகமாய் பேசுவதில்லை. ஆம், யாரும் நான் செய்தது போலவே செய்வதற்கு தூண்டப்பட நான் விரும்பவே இல்லை!!

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவதெல்லாம் வேதவசனம் குறிப்பிடுகிறபடி, "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்ற புத்திமதியை பின்பற்றுங்கள், அதுபோதும். அப்படியில்லாமல், யாரோ சிலர் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிச் செய்தார்களென்று நீங்கள் கேள்விப்பட்டு, அதைப்போலவே நீங்களும் செய்ய ஆரம்பிக்கிறீர்கள்! ஆனால், அந்தோ! இவ்வித செயல் உங்களுக்கு எந்த பலனும் அளிப்பதில்லை. இதை நாம் என்னவென்று சொல்வோம்? ஆம், அந்த சகோதரனுக்கு அக்குறிப்பிட்ட சூழ்நிலையில் அவ்விதமாய் செயல்பட்டது **அவருக்குச் சரியானதாய்** இருக்கலாம். ஆனால், உங்களுடைய சூழ்நிலையோ வேறுவிதமாய் இருக்கிறபடியால் நீங்கள் அவருடைய செயலைப் பின்பற்றியது பெருத்த அபாயமாகும்!

பிள்ளைகளைக் கண்டிப்பதில் எத்தனையோ வழிகள் உள்ளன. ஒருசமயம் நாம் அவர்களை அடிக்க வேண்டியதாய் இருக்கலாம், சில

சமயங்களில் கண்டிப்பான வார்த்தைகளால் திருத்தலாம், சில சமயங்களில் தண்டனையை அறிவித்து அதனிமித்தம் கொண்ட அச்சத்தினால் அவர்களைத் திருத்தலாம். இவ்வாறு அந்தந்த சூழ்நிலைக்கேற்ப பல வழிகளை நாம் கையாள முடியும்.

நினிவேயை தேவன் தண்டித்து அழிக்கப்போவதாக முதலில் கூறினார். ஆனால், அவர்கள் மனந்திரும்பியவுடன் அவர்களை அவர் தண்டிக்கவில்லை. அதைப்போலவே **ஆகாப் ராஜாவைத்** தண்டிக்கப் போவதாக ஒருசமயம் தேவன் கூறினார். ஆனால் ஆகாப் மனந்திரும்பியதைக் கண்டவுடன், தனது மனதை தேவன் மாற்றிக் கொண்டு அவனைத் தண்டிக்கவில்லை. இவ்வாறு அநேக நிகழ்ச்சிகளை பழைய ஏற்பாட்டில் காண்கிறோம்.

**தேவன் தன்னுடைய பிள்ளைகளை நடத்தியவிதத்தை இவ்வாறு நாம் காணும்போது நாமும் அவ்விதமே நடந்து கொள்ள முயற்சிப்பதுதான் அவரை அறிகிற அறிவாகும்!**

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் நாம் தேவனைப் பற்றி கற்றுக் கொள்ளும் ஓர் முக்கியமான குணாதிசயம் என்னவென்றால், “ஜனங்களைத் தண்டிப்பதற்கு அவர் மிகவும் தயங்கினார்” என்பதுதான். தண்டனையை வழங்குவதில் அவர் ஒருநாளும் பிரியப்படவேயில்லை. தண்டிக்க வேண்டியது அவசியமானபடியால் தண்டித்தார். ஆனால் அவ்வாறு தண்டித்ததொன்றும் அவருக்கு மகிழ்ச்சியாயிருந்ததில்லை. இவ்வாறு தேவனைப் போலவே நானும் இருக்க விரும்புகிறேன். என் பிள்ளைகளை நான் தண்டிப்பதில் எனக்கு மகிழ்ச்சியில்லை என்பதை அவர்கள் அறிந்து கொண்டால் அது எவ்வளவு நலமாயிருக்கும். நான் அவர்களைத் தண்டிக்கக்கூடும்.... ஆனால் எனக்கோ அதில் கொஞ்சம் கூட மகிழ்ச்சி யில்லை! “கூடுமானவரை” நான் அவர்களைத் தண்டிக்காமலிருப்பதை என் பிள்ளைகள் என்னைக் குறித்து காண்பதே மிகவும் நல்லது.

மேற்கண்ட இந்த ஒரு உதாரணத்தின் மூலம் தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதையும், அவர் தம்முடைய பிள்ளைகளிடம் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதையும் நாம் கற்றுக்கொள்ள முடிகிறது. எனவே தான் “ஆதிமுதல் இருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால்” என வேதம் குறிப்பிடுகிறது. ஆம், தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதை நாம் அறிந்து கொண்டால் அவ்விதமே நாமும் நமது பிள்ளைகளிடம் அவரைப் போலவே அன்பிலும், கண்டிப்பிலும் சமநிலையாய் இருந்திடவும் முடியும்! இவ்விதமாய் நம்முடைய பிள்ளைகளுக்குத் தேவனுடைய ஸ்தானத்தில் நம்மைக் காட்டுவது நமக்குத் தரப்பட்ட உயர்ந்த அழைப்பாகும்.

இதனிமித்தம் நாம் தேவனை அறிந்து அவரைக் கற்றுக்கொள்வதற்கு அவரிடம் தொடர்ச்சியாய் உந்தி தள்ளப்படுகிறோம்!

6. **தேவனைப்போல் "வாக்கு மாறாமல்" பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகளிடம் நடந்து கொள்வது எத்தனை இனிமையானது! எல்லா சூழ்நிலைகளிலும் தேவனை அறிந்து, அதன் ஆதாரத்தில் "நல்லதோர் குடும்பம்" கட்ட பெற்றோர்களாகிய நாம் தீவிரிப்போமாக!**

தேவன் தன்னுடைய தண்டனையையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து எவ்வளவு துரிதமாய் மனம்மாறி விடுகிறார் என்பதைப் பார்த்தோம். அதேபோல் பெற்றோர்களாகிய நாம் பிரதிபலிக்க வேண்டிய இன்னொரு தெய்வசுபாவத்தை யோசுவா.21:45-ல் வாசிக்கிறோம், "கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லி இருந்த நல்வார்த்தைகளிளெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப் போவதில்லை எல்லாம் நிறைவேறிற்று." பார்த்தீர்களா, தேவன் இஸ்ரவேல் குடும்பத்தாருக்கு என்னென்ன வாக்குத்தத்தங்கள் கொடுத்தாரோ அத்தனையையும் தேவன் கவனமாய் நிறைவேற்றி விட்டார்.

> **அவர் தன்னுடைய தண்டனையைக் குறித்து அடிக்கடி மனம்மாறி விடுவார். ஆனால் ஒன்றைக் கொடுப்பதாகவோ அல்லது செய்வதாகவோ வாக்கு கொடுத்துவிட்டால் அந்த வாக்கை காத்துக்கொண்டு கவனமாய் நிறைவேற்றிவிடுவார்!**

இந்த தேவனுடைய சுபாவத்தைப் பெற்றோர்களாகிய நாம் கிரகித்துக்கொண்டால், அது எத்தனை நலமானது என யோசித்துப் பாருங்கள். நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து வரும்போது அவர்களுக்கு ஏதாகிலும் ஒன்றைச் செய்வதாக நீங்கள் வாக்குக் கொடுத்தால், தேவனைப் போலவே எப்பாடுபட்டாகிலும் அதை நிறைவேற்றி விடுங்கள்.

உதாரணமாய், ஒருசமயம் எனது பிள்ளைகளை பூங்காவிற்கு அழைத்துச் செல்வதாக நான் வாக்குக் கொடுத்திருந்தேன். அவ்வாறு போக ஆயத்தமானபோது, யாரோ ஒருவர் வீட்டிற்கு வந்து அதிகம் நேரம் என்னோடு பேசிக்கொண்டிருந்தார். நேரம் தாமதமாகி விட்டபடியால் பூங்காவிற்கு நாங்கள் செல்லமுடியவில்லை. "நான் சொன்ன வார்த்தையை காத்துக் கொள்ளவில்லையென" எனது பிள்ளைகள் பல வருடங்களாய் இச்சம்பவத்தை மறக்காமல் நினைவில் வைத்திருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து நான் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டேன். அதாவது, என்னைப் பார்க்க வந்த சகோதரனிடத்தில்,

"சகோதரனே, தயவுசெய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இவ்வேளையில் நான் என் பிள்ளைகளிடத்தில் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும். ஆகவே ஏதாவது அவசர செய்தி இருந்தால் அதை மட்டும் என்னிடத்தில் கூறிவிட்டு, தயவுசெய்து அடுத்த நாள் வாருங்கள்" என நான் கூறி இருக்கலாம். ஆனால் அந்த சமயத்தில் நான் எண்ணியதோ, "பிள்ளைகள் தானே! ஆகவே கொடுத்த வாக்கை மீறியதால் ஒன்றுமில்லை. இப்போது இந்த சகோதரனிடம் ஐக்கிய மாயிருப்பதே சிறந்தது" என தவறாய் எண்ணிவிட்டேன்!

இந்த நிகழ்ச்சியிலிருந்து நான் கற்ற பாடத்தை அதன்பின் ஒருபோதும் மறக்கவேயில்லை. என்னுடைய பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்வதாக வாக்கு கொடுத்தால் இப்போது அதை அப்படியே நிறைவேற்றுகிறேன். எனது பிள்ளைகளுக்கு நான் தரும் வாக்கு, "அவர்களுக்கு" அது அதிமுக்கியமாகும். இதுபோன்ற சின்னச் சின்ன விஷயங்களைப் பல ஆண்டுகள் ஆனாலும் பிள்ளைகள் அதனை மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். அதேபோல, அவர்களுக்கு தந்த வாக்கை நிறைவேற்றுவதற்காக உங்கள் அசௌகரியங்களையும் பொருட்படுத்தாமல் நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியையும் அவர்கள் மறக்காமல் நினைவில் வைத்திருப்பார்கள். ஆகவே இதுபோன்ற சிறு விஷயங்களில் நம் பிள்ளைகளிடம் ஒருபோதும் அசட்டையாய் நடந்து கொள்ளவே வேண்டாம்.

**கர்த்தரோ இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த எல்லா வாக்குகளையும் தவறாமல் நிறைவேற்றினார் என வாசித்தோமே! இவ்விதமே நம்மைக் குறித்தும், நம் பிள்ளைகளுடைய விஷயத்தில் சொல்லப்படுவதாக!**

ஒருவேளை, "அவர்களைத் தண்டிப்பேன்" என கூறிய வார்த்தையில் மனம்மாறி நாம் தண்டிக்காமல் இருந்துவிடலாம். ஏனெனில் பிள்ளைகளுடைய மனமாற்றத்தை நாம் கண்டபடியால் அந்தத் தீர்மானத்தை மாற்றிக்கொண்டோம். ஆனால் நம் பிள்ளை களுக்குத் தரும் நல்வாக்குகள் எதையும் மாற்றாமல் அதை அப்படியே நிறைவேற்ற கவனம் கொள்ளக்கடவோம்!!

இவ்வாறு நாம் தேவனை கற்றறிவது சொல்லிமுடியா மகத்துவம் நிறைந்ததாகும்! இனி வருங்காலங்களில் நாம் அவரை அறிகிற அறிவில் அதிகமதிகமாய் வளர்ந்து பெருகுவோமாக!! அதுவே, "நல்லதோர் குடும்பம்" கட்டப்பட பெற்றோர்களாகிய நமது பங்குகளில் மிக மிக முக்கியமான பங்காகும்!! ஆமென்.

# பகுதி – 4

## கேள்வி – பதில்கள்

# கேள்வி – பதில்கள்

**கேள்வி-1 : "நான் அனேகம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்" என வேதாகமம் கூறுகிறதா? நான் அதிகமான பிள்ளைகளைப் பெற்றுவிடுவேனோ என்ற பயமும், அதனிமித்தம் அதிகமான சோர்வும் எனக்கு அடிக்கடி நேரிடுகிறது! இவ்வித பயத்தையும், மனச்சோர்வையும் நான் எவ்வாறு மேற்கொள்ளலாம்?**

*இவ்விஷயத்தைக் குறித்த பதில் கூறுவதற்கு முன்பாக, உங்களுக்கு நான் முதலாவது வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், "தேவன் ஓர் அன்புள்ள தகப்பன்" என்ற உண்மையை நீங்கள் ஒருக்காலும் மறக்கவே கூடாது. ஆம், தேவன் நம்மை ஒருபோதும் இம்சிப்பதேயில்லை! இவ்வித இம்சைபடுத்தும் செயலை சாத்தான்தான் செய்கிறான். ஆனால் தேவனோ, ஓர் அன்புள்ள தகப்பன் மாத்திரமல்லாமல்..... நமக்கு சகலமும் மிகமிக அருமையாய் சம்பவிக்க வேண்டுமென்ற விருப்பத்தையும் கொண்டிருக்கிறார்!!*

*இந்த இடத்தில், நம் ஒவ்வொருவர் ஜீவியத்திலும் தேவன் சொல்லி முடியா* **சுதந்திரத்தை** *நமக்கு வழங்கியிருக்கிறார் என்ற உண்மையையும் நாம் மறந்து விடவே கூடாது.*




**நாம் விரும்பாத ஒரு கட்டுக் குள்ளாக நம்மைக் கொண்டுவர தேவன் ஒருக்காலும் பிரியப்படுவதேயில்லை!**

*ஆனால் இன்றைய அனேக கிறிஸ்தவத் தலைவர்கள் தங்களைச் சுற்றியுள்ள ஜனங்களை ஒருவித கட்டுக்குள் கொண்டு வரும்படியே விரும்புகிறார்கள். இவ்வித கட்டுகள் எத்தகையதென என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? அதாவது, "நான் எவைகளைக்குறித்து நம்பியிருக்கிறேனோ அவைகளை மற்றவர்களும்*

அப்படியே நம்ப வேண்டும்'' என்ற நோக்கமே இவர்கள் மற்றவர்களுக்கு கொண்டுவரும் கட்டுகளாகும்.

எனவேதான் வேதம் ரோமர் 14-ஆம் அதிகாரத்தில், "உனக்கு விசுவாசம் இருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும்'' எனப் போதிக்கிறது. ஆனால் இன்று கிறிஸ்தவத்தில், ஒருவர் தனக்கென்று சில கருத்துக்களை (CONVICTIONS) வைத்துக் கொள்வதற்கு அவருக்கென கொஞ்சமும் சுயாதீனம் தராமல், தங்கள் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் பிறரிடத்தில் திணிப்பதற்கே எத்தனிக்கிறார்கள். இதுபோன்ற செயலே நாட்கள் செல்லச் செல்ல "மார்க்க கண்மூடிதனத்திற்கு'' (CULTISM) ஒருவனை நடத்திச் சென்று விடுகிறது. ஆகவே, ஜீவனுள்ள தேவனுடைய சபையிலும், தேவனைப் போலவே எவ்விதக் கட்டாயத்திணிப்பும் இருக்கவே கூடாது.

நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து வரும்போது நம்மோடு தொடர்புகொண்டு குடும்பங்களின் மூலமாய், பற்பல கட்டாய அழுத்தங்களை நாம் சந்திக்க நேரிடும். அதாவது, "உங்கள் பிள்ளைகள் இதைச்செய்வதற்கு அனுமதிக்காதிருங்கள்'' "உங்கள் பிள்ளைகள் இந்த இடத்திற்கு ஏன் அனுப்பினீர்கள்'' என்றெல்லாம் மற்றவர்கள் நம்மிடம் கூறும் கட்டாய அழுத்தங்கள்! இவையாவும் பொல்லாங்கு நிறைந்ததாகும். "என்னுடைய பிள்ளைகள் இதைச் செய்வதற்கு நான் அனுமதிப்பதில்லை'' என உங்களுக்கு நீங்களே கூறிக்கொள்ளுங்கள். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் உங்கள் வழிமுறையை **மற்றவர்களுக்குச்** சொல்லாதீர்கள்.

இவ்வாறு மற்ற வீடுகளுக்குச் சென்று கட்டாய ஆலோசனை களைச் சொல்லும் சகோதரிகள் அல்லது சகோதரர்கள் தாங்கள் வீட்டை விட்டு வெளியேறாத வண்ணம், தங்கள் கால்களில் ஒரு விலங்கைப் போட்டுக்கொண்டால்கூட அது அவர்களுக்கு நல்லது! அப்படி யில்லையென்றால், இவர்கள் பல வீடுகளுக்குச் சென்று **மற்றவர்களுக்கு** விலங்கு மாட்டிவிடுவார்கள்!! ஒருவேளை நீங்கள் உங்கள் பிள்ளை களை சிவப்புநிற ஆடைகள் உடுத்துவதற்கு அனுமதிக்காதிருக்கலாம். ஆனால் மற்றவர்கள் சிவப்புநிற ஆடைகள் வாங்குவதை நீங்கள் ஏன் நிறுத்துவதற்கு முயற்சிக்கிறீர்கள்? வேதாகமத்தில் ஒரு இடத்தில்கூட "நீ சிவப்புநிற ஆடை உடுத்தக் கூடாது'' என்ற கட்டளை காணப்பட வில்லையே! ஆகவே இதுபோன்ற "மனுஷர்களின் கட்டளைகள்'' நீண்ட பட்டியலாய் வெளிப்படுத்தின விசேஷம் 23-ஆம் அதிகாரத்தில் இன்று எழுதப்பட்டு வருகிறது. உண்மையான வேதாகமம் வெளிப் படுத்தின விசேஷம் 22-ஆம் அதிகாரத்தோடு முடிவடைந்து விட்டது!

*கொலோசெயர்.2:20-22 வசனங்களில், "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால்... மனுஷருடைய கட்டளைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம், அழிந்துபோகும்" என வாசிக்கிறோம்.*

**பொதுவாய் 'கட்டளைகள்' என வேதம் குறிப்பிடுவதெல்லாம் தேவனுக்குரியதேயாகும். ஆனால் மதிகேடான அநேக விசுவாசிகள் இன்று அநேக கட்டளைகளை வகுத்து வைத்திருப்பது பெருத்த துரதிருஷ்டமேயாகும்!**

*ஆகவே "தேவனுடைய வார்த்தைகளில்"நான் காண்பதை மாத்திரமே கைக்கொண்டு,சபையிலுள்ள மற்ற சகோதர சகோதரிகளின் தேவையில்லா ஆலோசனை அழுத்தங்களுக்கு நாம் விலகியிருப்போ மென்றால் எப்போதும் மிகுந்த மகிழ்ச்சியோடு நாம் வாழ்ந்திட முடியும்!*

*இப்போது, உங்கள் கேள்விக்கான பதிலை கூறுகிறேன். "நான் அநேகம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விசுவாசம் கொண்டிருக்க வேண்டும்" என வேதப்புத்தகம் எங்காவது கட்டளை யிட்டிருக்கிறதா? அவ்வாறு இல்லவேயில்லை! இதுதான் நான் உங்கள் கேள்விக்குத்தரும் பதில். பழையஏற்பாடு, பூமிக்குரிய ஆசீர்வாதத்தை நாடிய ஜனங்களுக்குத் தரப்பட்டதாகும். ஆனால் புதிய ஏற்பாட்டிலோ "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத் தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபேசியர்.1:3) என வாசிக்கிறோம். இதை பழைய ஏற்பாட்டு வசனமாய் மாற்றிச் சொல்ல வேண்டுமென்றால், "மோசேக்குள் இப்பூமியில் சகல உலக ஆசீர்வாதங் களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" என்றே கூற வேண்டும்.*

*மோசேக்குள்ளாக ஒரு கட்டிடம் ஆலயமாயிருந்தது. ஆனால் இன்று நாமே கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய ஆலயமாய் இருக்கிறோம். அவர்களுடைய பலி சரீரத்திற்குரியதாய் இருந்தது. இன்று நம்முடைய பலியோ ஆவிக்குரிய பலியாய் இருக்கிறது. அவர்களுக்குத் தரப்பட்ட ஆசீர்வாதம் உலக ஆசீர்வாதம், நமக்குத் தரப்பட்ட ஆசீர்வாதமோ ஆவிக்குரிய ஆசீர்வாதம். இவ்வுலகத்தில் நீடிய ஆயுசு அவர்களுடைய பங்கு, நம்முடைய பங்கோ ஆவிக்குரிய நித்திய ஜீவன்! இதைப் போலவேதான் அவர்கள் "திரளான பிள்ளைகளை" வாக்குத்தத்தமாய் பெற்றிருந்தார்கள். ஆனால் நமக்கோ "ஆவிக்குரிய பிள்ளைகள்" வாக்குத்தத்தமாய் வழங்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு புதிய உடன்படிக்கையில் சகலமும் ஆவிக்குரியதாகவேயிருக்கிறது.*

*இவ்வாறிருக்க, நீங்கள் திடீரென்று பழையஏற்பாட்டின் வாக்குதத்தத்தை எடுத்து புதிய உடன்படிக்கையில் சேர்த்துக் கொண்டு அதை நம்பவும், நடைமுறையில் ஏற்றுக்கொள்வதும் தவறல்லவா? இதைப்போல் எத்தனையோ பழையஏற்பாட்டு சத்தியங்களை புதிய ஏற்பாட்டின் "தேவ சித்தமென" பிரசங்கிக்கும் ஏராளமான பிரசங்கங் களை நாம் கேட்கிறோம். "நீங்கள் ஐசுவரியவானாய் மாறுவது தேவனுடைய சித்தம்" என பிரசங்கிக்கும் பெந்தெகொஸ்தே பிரசங்கங்களை இன்று நாம் ஏராளம் கேட்கிறோம். இந்த வாக்குதத்தத்தை இவர்கள் எங்கிருந்து எடுத்தார்கள்? புதிய உடன்படிக்கையில் இந்த வாக்குத்தத்தம் இல்லவேயில்லை!*

*இதைப்போலவே நீங்கள் அநேகம் பிள்ளைகளைப் பெறவேண்டும் அல்லது அநேகம் பிள்ளைகளைப் பெறுவதற்குரிய விசுவாசம் கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் புதிய உடன்படிக்கையில் ஒரு இடத்தில் கூட இல்லை! மாறாக, புதிய உடன்படிக்கை நமக்குப் போதிப்பது என்னவெனில், "அநேகம் பிள்ளைகளைப் பெறுவதற்கு உனக்கு விசுவாசம் இருக்கிறதா? அந்த விசுவாசத்தை தேவனுக்கு முன்பாக* **உன்மட்டில்** *வைத்துக்கொள்" என்றுதான் கூறுகிறது.*

**உங்கள் விசுவாசத்தின் அளவு எவ்வளவோ அந்த அளவின்படி வாழ புதிய உடன்படிக்கை சுதந்திரம் அளிக்கிறது.**

*இதுபோன்ற காரியங்களில் நாம் இன்னொருவர் விசுவாசத்தின் அளவின்படி வாழ புதிய உடன்படிக்கை நமக்கு எந்த நிர்ப்பந்தமும் தருவதில்லை!*

**கேள்வி-2: ஒன்றைக்குறித்து நான் கொண்டிருக்கும் ஆழமான உணர்த்துதல் விசுவாசத்திற்குச் சமமென கூறமுடியுமா?**

*நீங்கள் சொல்லுகிறபடி நீங்கள் பெற்ற உணர்த்துதல் விசுவாசத்திற்கு சமமானதுதான்! உங்கள் கேள்விக்கு ரோமர் 14:22 நேரடியாகவே பதில் கூறுகிறது. அதாவது, "நீங்கள் நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும்" என தெளிவாய் கூறுகிறது. எனவே நீங்கள் நிச்சயித்துக் கொண்டவைகள் எவைகளோ அவைகள் தான் உங்கள் விசுவாசம்! நீங்கள் பெற்ற அந்த அளவைக் காட்டிலும் மேலான அளவை தேவன் உங்களிடம் எதிர்பார்ப்பதில்லை. ஆகவே நீங்கள் பெற்ற விசுவாசத்திற்கு, எவ்விதத்திலும் உங்களைத் தாழ்வாகவோ அல்லது குறைவுள்ளவர்களாகவோ ஒருபோதும் நீங்கள்*

*சிந்திக்க வேண்டிய அவசியமேயில்லை.*

**கேள்வி-3 : குடும்பத்தில் குழந்தைகளை வளர்ப்பதிலும், அவர்களுக்கு கல்வி வழங்குவதிலும், அவர்களுக்கு எவ்வித சுதந்திரம் அளிக்க வேண்டுமென்பதிலும் பெற்றோர்களாகிய எங்களிடம் வெவ்வேறான கருத்துக்கள் இருக்கும்போது, சபையில் நாங்கள் எவ்வாறு ஒரே ஆவியிலும், ஒரே மனதிலும் ஐக்கியமாய் கட்டப்பட முடியும்?**

*நீங்கள் எந்தவிதத்தில் உங்கள் குழந்தைகளை வளர்த்தாலும், அதேபோல்தான் மற்ற பெற்றோர்களும் குழந்தைகளை வளர்க்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. இதை நாங்கள் சபையில் கண்டிப்புடன் பிரசங்கித்து வருகிறோம். நீங்கள் உங்கள் பிள்ளைகளை ஒருவிதமாய் உடையணிந்திட அனுமதிக்காததினால் மற்றவர்களும் அதேபோல் அவர்களுடைய குழந்தைகள் உடையணிந்திட அனுமதிக்க கூடாது என எண்ணுவது வளர்ச்சியற்ற கிறிஸ்தவர்களின் அடையாள மாகவே இருக்கிறது.*

*இந்த வளர்ச்சியற்ற கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஜீவனில் தங்கள் பாதுகாப்பை அடையாதபடியால்தான் இவ்வாறு வெளிப்புற மாயுள்ள சில காரியங்களில் சமநிலையை நாடுகிறார்கள். இது போன்றவர்கள் சபைக்கு மரணத்தையே கொண்டு வருகிறார்கள். இவ்வாறு சபைக்கு மரணத்தைக் கொண்டுவரும், தேவன் குறிப்பிடாத* **"மனுஷீகப்பிரமாணங்களை"** *நாம் ஒருக்காலும் அனுமதிக்கவே கூடாது.*

*ஜீவனுள்ள தேவனுடைய சபையில்* **"வாழ்வளிக்கும் சுதந்திரம்"** *எப்போதும் உண்டு! நீங்கள் பரிசுத்தமாயிருப்பதற்கோ அல்லது உலகத்தை வெறுத்து வாழ்வதற்கோ இந்த சுதந்திரத்தை நாம் பயன்படுத்துவதில்லை. ஆனால் நீங்கள் லௌகீகமானது என கருதுவதை, மற்ற சகோதரன் அது லௌகீகமானதல்ல என கருதுவதற்குத் தாராளமாய் சுதந்திரம் அளித்துவிட வேண்டும். உதாரணமாய் ஒருசிலர் "கர்நாடக சங்கீதம் மாத்திரமே" கேட்பதற்குச் சிறந்தது என எண்ணுகிறார்கள். அது அப்படியே உங்களுக்கு இருக்கட்டும்! ஆனால் இன்னொருவர் இன்றைய நாகரீக இசையைக் கேட்பதில் தவறில்லை என்று எண்ணினால், அவரிடம் நீங்கள் கொண்ட கருத்தை வற்புறுத்தாதீர்கள்.*

*என்னுடைய பிள்ளைகள் நாகரீக இசையைக் கேட்பதற்கு நான் தடைசெய்தது இல்லை. ஆனால்* **"ராக் மியூசிக்" போன்ற லௌகீகம்** *நிறைந்த காமஉணர்வைத் தூண்டுவது போன்ற இசையைக் கேட்க வேண்டாமென நான் ஆலோசனை சொல்வதுண்டு. ஆனால் இந்த*

*என்னுடைய கருத்தை நான் மற்றவர்களுக்கு ஒருபோதும் திணிப்பதில்லை. நாம் சொல்லுவதெல்லாம் “சகோதரனே நீங்கள் விரும்புகிறபடி இசையை நீங்கள் தாராளமாய் கேட்கலாம்” என்றே கூறுகிறோம்.*

*நம்முடைய பிள்ளைகளை ஞாயிற்றுகிழமையில் விளையாட அனுமதிக்கலாமா? என சிலர் கேட்பதுண்டு. இன்று சிலர் தங்களுடைய பிள்ளைகள் ஞாயிற்றுகிழமைகளில் வேதம் வாசிக்கவோ அல்லது பாடம் படிக்கவோ மாத்திரமே செய்ய வேண்டும், விளையாடக்கூடாது என கூறுகிறார்கள். ஆனால் சில வீடுகளில் விளையாட அனுமதிக்கிறார்கள். இன்னும் சில வீடுகளில் வேதம் ஒன்றுதான் வாசிக்க வேண்டும், திங்கள் கிழமை பரீட்சை இருந்தால்கூட பாடம் படிக்கக்கூடாது என கூறுகிறார்கள். நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அதை தாராளமாய் செய்யலாம்! ஆனால் உங்களைப் போல் அல்லாமல் வேறு கருத்தைக் கொண்டிருப்பவர்களிடம் உங்கள் அபிப்பிராயங்களை ஒருபோதும் திணிக்காதீர்கள். “ஒரு காரியத்தில்” நாம் அனைவருமே ஒரே மனதாயிருக்கிறோம். “நம் பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாய் வாழவேண்டும்” அவ்வளவுதான்!*

*இவ்வாறு உடை உடுத்துவதிலும், என்ன செய்ய வேண்டு மென்பதிலும், சர்க்கஸிற்கு போகலாமா அல்லது போகவேண்டாமா என்பதிலும்.... இன்னும் இதுபோன்ற ஏராளமான காரியங்களில் அவனவன் தன்தன் மனதில் நிச்சயித்துக் கொண்டபடி செய்யக்கடவன். இவ்வாறு பிறரை நியாயந்தீர்க்காமல் அல்லது பிறரை அடிமைத் தனத்திற்குட்படுத்தாமல், ஒருவருக்கொருவர் சுதந்திரம் வழங்கும் முதிர்ச்சி நிலையை நாம் யாவரும் கற்றுக் கொள்வது நலம்! இதுபோன்ற விஷயங்களில் சற்று வலிமையான சகோதர சகோதரிகள், தங்கள் சொந்த அபிப்பிரயாங்களுக்கு, ஏராளமாய் மரிக்க வேண்டிய தருணம் இருக்கிறது. இவ்வாறு தங்கள் அபிப்பிரயாங்களுக்கு மரிக்க ஆயத்தமில்லாத சகோதர சகோதரிகள் சபையில் இருந்தால், அது போன்றவர்கள்* **“உங்கள் மீது” எதையும் திணிப்பதற்கு நீங்கள் அனுமதிக்காதிருக்க** *ஜாக்கிரதையாயிருங்கள். குறிப்பாய் சில சகோதரிகள் அப்படியிருந்தால், அவர்களுடைய கணவர் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அல்லது கணவன் அப்படியிருந்தால், அவர்களுடைய மனைவி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.*

**கேள்வி-4: ஒரு சகோதரியாகிய நான் என் கணவருடைய நல்லவைகளையோ அல்லது பெலவீனமானவைகளையோ வேறொரு சகோதரியிடம் பகிர்ந்து கொள்ளலாமா?**

*இது ஒரு ஞானமுள்ள செயலல்ல! ஏனென்றால் வெகு சிலரான சகோதரிகளே புறங்கூறுதலில் ஜெயம் பெற்றிருக்கிறார்கள். ஒருவேளை, உங்கள் கணவரைக்குறித்த நல்லவைகளைத் தாராளமாய் பகிர்ந்து கொள்ளுங்கள். ஆனால், அவருடைய பெலவீனங்களை தயவுசெய்து பகிர்ந்து கொள்ளாதிருங்கள். ஏனென்றால் இதுபோன்ற இடத்தில்தான் உங்கள் கணவரை, யாரோ சிலருக்கு முன்பாக மட்டம் தட்டுவதற்கு உங்கள் மாம்சம் வாய்ப்பை பெற்றுக்கொள்கிறது! உங்கள் கணவனுடைய அல்லது உங்கள் மனைவியினுடைய பெலவீனங்களை மற்றவர்களிடம் பேசுவது,* **“அவர்களின் நிர்வாணத்தைப் பிறரிடம் காட்டுவதற்கு ஒப்பாகும்”** *என்ற சத்தியத்தை நான் ஆழமாய் அறிந்திருக்கிறேன். ஆகவே இதுபோன்ற தவறுகளை நீங்கள் செய்ய வேண்டாம்.*

*ஆனால் உண்மையிலேயே ஏதாவது முக்கிய பிரச்சனையிருந்தால், உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான, உங்கள் பிரச்சனைக்கு உதவிசெய்ய வலிமை கொண்ட, உங்கள் பிரச்சனையை தனக்குள் தானே வைத்துக் கொள்வார் என நீங்கள் நம்புகிற மூத்த சகோதரர்களிடம் கூறி ஆலோசனை பெறுங்கள். இதைத்தவிர வேறு யாரிடமும் நீங்கள் செல்லவே வேண்டாம்.*

**கேள்வி-5 : அப்படியானால் என் கணவரைக் குறித்த அல்லது மனைவியைக்குறித்த நன்மைகளைப் பிறரிடம் பேசலாமா?**

*இங்கும் நமக்கு ஞானம் அவசியமாயிருக்கிறது. ஒரு சகோதரி தன் கணவனைக்குறித்த அருமைகளை இன்னொரு திருமணமான சகோதரியிடம் பகிர்ந்து கொள்ளும்போது, அதுபோன்ற நல்ல குணங்கள் இல்லாத தன் கணவனை அந்த சகோதரி தன்னையறியாமலே இளப்பமாய் எண்ணுவதற்கு தூண்டப்பட முடியும்! எனவே உங்கள் கணவரைக்குறித்த அல்லது உங்கள் மனைவியைக்குறித்த மேன்மையைப் பேசுவதற்கும் நீங்கள் நிதானமாகவேயிருக்க வேண்டும்.*

*உதாரணமாய், ஒரு குறிப்பிட்ட பகுதியில் நான் என் மனைவி யையோ அல்லது என் கணவனையோ மேன்மையாகப் பேசும்போது அதைக்கேட்கும் ஓர் பெலஹீனமான நபர் தன் மனைவியையோ அல்லது தன் கணவனையோ “அவர் அவ்வாறு இல்லாதினிமித்தம்” இளப்பமாய் எண்ணிவிட முடியும். எனவே நான் பிறர்மீது அக்கறை கொண்டவனாய், நான் பேசுகிற எதுவும் மற்றொருவர் தன் மனைவியையோ அல்லது கணவனையயோ மெச்சிக்கொள்ள கடினமாய் மாற இடம் தரவே கூடாது அல்லது நான் எதைப்*

பேசினாலும் அதைக்கேட்கும் ஒருவர் தன் கணவனையோ அல்லது மனைவியையோ இன்னும் அதிகமாய் மெச்சிக்கொள்வதற்கு வழி நடத்துவதாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு கணவனையும் ஒரு மனைவியையும் அதிக ஐக்கியத்திற்குள்ளாக கொண்டுவரும் ஊழியமே தேவன் நமக்குத் தந்த உன்னதமான அழைப்பாகும். அதாவது அந்த கணவன் தன் மனைவியையும் அந்த மனைவி தன் கணவனையும் இன்னும் அதிகமாய் ஒருவரையொருவர் மெச்சிக்கொள்ள நீங்கள் உதவி செய்துவிட்டீர்கள்! இந்த செயலையே நாம் யாவரும் மனப்பூர்வமாய் செய்வோமாக. இதற்குப் பதிலாய், நான் ஒரு சிறந்த கணவன் என்றோ அல்லது நான் ஒரு சிறந்த மனைவி என்றோ உங்களை நீங்கள் காட்ட முயற்சித்தால், என்னைப் பொருத்தவரையில் அதை நான் அருவருக்கிறேன்.

சில கூட்டங்களில் சில சகோதரர்கள் பிரசங்க பீடத்திற்கு முன்பாக நின்று தங்கள் மனைவியைப் புகழ்ந்து பேசுவதை கேட்கும் போது அதுவும் எனக்கு மகிழ்ச்சியைத் தருவதில்லை. இதைவிட இன்னும் அதிக மோசம், சில சகோதரிகள் எழுந்து நின்று தங்கள் புருஷர்களைப் புகழ்ந்து பேசுவதுதான்! நாம் இதற்காக சபைகூடி வரவில்லையே?

**நாம் சபைகூடி வருவது ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியடையச் செய்வதற்கே அல்லாமல் ஒருவரையொருவர் உயர்த்திக் காட்டுவதற்கு அல்ல!!**

சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில், சில சகோதரர்களிடம் நான் கீழ்கண்டவாறு கூறவேண்டியது எனக்கு அவசியமாய் இருந்திருக்கிறது. "சகோதரனே உங்கள் மனைவி ஓர் அற்புதமான மனைவி என எங்கள் எல்லோருக்கும் தெரியும். அதற்காக நாங்கள் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறோம். ஆனால் இப்போது தயவுசெய்து மற்றவர்களை பக்திவிருத்தி செய்யும்படியான காரியங்களை மாத்திரமே பேசுங்கள். இதற்கு பதிலாய் உங்கள் உயர்ந்த சாட்சி யினிமித்தம், இன்னொருவர் தன் மனைவியை இளப்பமாய் எண்ணுவதற்குச் செய்தால் நீங்கள் சரீரத்தைக் கட்டுவதற்கு எந்த உதவியும் செய்யவில்லை" எனக் கூறியிருக்கிறேன்.

நீங்கள் எங்கு உங்கள் கணவனை அல்லது மனைவியைப் புகழலாம் என்பதை நான் உங்களுக்கு கூறுகிறேன். உங்கள் மனைவியோடு நீங்கள் தனிமையில் இருக்கும்போது அவளை புகழ்ந்து மெச்சிக்கொள்ளுங்கள் அல்லது உங்கள் கணவனோடு தனிமையில்

*இருக்கும்போது அவரைப் புகழ்ந்து மெச்சிக் கொள்ளுங்கள்! அது நல்லது!*

*இன்னும் சில தருணங்களில் தன் மனைவியைக் கூட்டங்களில் புகழ்ந்த சகோதரனிடம், "சகோதரனே இவ்வாறு புகழ்வதை பிரசங்க பீடத்தில் ஏன் செய்தீர்கள்? உங்கள் வீட்டில் உங்கள் மனைவியிடம் சண்டை போட்டுவிட்டு அதைச் சரிகட்டுவதற்காக இங்கு வந்து அவளைப் புகழ்கிறீர்களா?" எனக் கேட்டிருக்கிறேன். இதுபோன்ற காரியங்களை தேவபக்தியுள்ள மூத்த சகோதரர்கள் சபையில் ஞானமாய் கையாள வேண்டும்.*

*இன்னும் சில சகோதரர்கள், "என் மனைவியை ஓர் நல்ல மாதிரியாக எடுத்துக்காட்டி உற்சாகமூட்ட முயற்சித்தேன்" எனக் கூறுகிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், பெலஹீனமான மனைவியைக் கொண்ட அநேக சகோதரர்கள் அந்தக் கூட்டத்தில் சோர்வுதான் அடைந்தார்கள்!*

*இவ்விஷயங்களில் நாம் அதிக ஞானமுள்ளவர்களாய் நடந்து கொள்ளக்கடவோம். "ஒருவருக்கொருவர் கரிசனையுள்ளவர்களாய் இருங்கள்" என்ற பிரமாணத்தை ஐக்கியத்திற்கு ஆதாரமாய் நாம் கொள்ளக்கடவோம். நீங்கள் எதையும் பேசுவதற்கு முன்பாக நான் சொல்லுவது யாரையாகிலும் பாதிக்குமா என்பதை அறிந்து பிறர்மீது கரிசனை கொண்டு பேசுங்கள்.*

**கேள்வி-6: என்னுடைய பிள்ளை சுகவீனமாயிருக்கும்போது அந்தப் பிள்ளையைக் கண்டிக்கலாமா?**

*உங்கள் பிள்ளைக்கு காய்ச்சலோ அல்லது இதுபோன்ற சுகவீனமோ ஏற்படும்போது அப்பிள்ளைக்குத் தரவேண்டிய தண்டனையை தள்ளிப்போடுவது நலம். தான் காய்ச்சலில் இருக்கிற படியால் தன்னை அப்பா கண்டிக்கமாட்டார்கள், விட்டுவிடுவார்கள் என அந்த பிள்ளை இலேசாக எண்ணிவிடக் கூடாது.*

*உதாரணமாய் கடந்த 23-ஆண்டுகளில், என் வீட்டில் விருந்தாளிகள் வரும்போது அவர்கள் முன்னிலையில் என் பிள்ளைகளை நான் தண்டிப்பதே இல்லை. ஆனால் விருந்தாளிகள் சென்ற பின்பு, அவர்களை நான் தண்டிப்பேன் என்பதை என் பிள்ளைகள் நன்கு அறிவார்கள். இதற்கு காரணம் யாதெனில், என் பிள்ளைகளை பிறர் முன்னிலையில் இழிவுபடுத்தவே கூடாது என்பதுதான். என் பிள்ளைகளை மற்ற பிள்ளைகளின் முன்னால்கூட நான் கண்டித்ததில்லை. அதற்கு பதிலாய் அவர்களைத் தனியறைக்கு*

*அழைத்துச் சென்று நான் கண்டிப்பது வழக்கம். மாறாக, மற்றவர்கள் முன்னிலையில் நான் கண்டித்துவிட்டால், என் பிள்ளைகளுக்கு இரண்டு தண்டனைகள் வாங்கித்தந்த குற்றத்திற்கு நான் ஆளாகி விடுவேன். 1) நான் வழங்கிய தண்டனை 2) பிறர்முன் அடைந்த அவமானம்! இந்த இரண்டாவது பகுதி என் பிள்ளைகள் அடைய வேண்டிய அவசியமேயில்லை. ஆகவே நாம் நம்முடைய பிள்ளைகளை மற்றவர்களுக்கு முன்பாகத் தண்டிப்பதோ அல்லது இழிவுபடுத்தவோ கூடவேகூடாது. இவ்வாறாகவே எப்போதும் நடந்து கொள்வதற்கு நான் விரும்புகிறேன்.*

*ஆகவே உங்கள் பிள்ளை சுகவீனமாயிருக்கும்போது கண்டிப்பது சரியான நேரமல்ல. அச்சமயத்தில் உங்கள் பிள்ளை முரட்டாட்டம் செய்தோ அல்லது கீழ்படியாமலோ இருந்தால் சுகம் அடைந்தபின்பு கண்டிப்பதே நல்லது. இந்த விதியைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டுமென்பதில்லை. உங்களை ஆவியானவர் நடத்துகிறபடி நீங்கள் செய்யலாம். ஆனால் பிள்ளைகள் பெற்றோருக்கு காட்டும் கீழ்ப்படியாமை எந்த வகையிலாவது கண்டிக்கப்பட வேண்டும் என்பது மாத்திரம் உறுதி.*

*இதுபோன்ற விஷயங்களில் தகப்பனுடைய முடிவே இறுதியானது. ஏனென்றால், "பிதாக்களே...... கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" என தகப்பனுக்கே எபேசியர் 6:4 புத்தி சொல்லுகிறது. இவ்வாறு பொறுப்பை ஏற்றுக் கொண்ட தகப்பனுக்கு தேவன் அதிக ஞானத்தைத் தருகிறார். ஆகவே பிள்ளையை எந்தவிதத்தில் சிட்சிக்க வேண்டும் என்கிற பிரச்சனை வரும்போது எபேசியர் 6:4 சொல்லுவதை கவனிப்பது நல்லது. அங்கு நாம் காணும் விடை யாதெனில், இவ்விஷயத்தை தகப்பனே தீர்மானிக்க வேண்டும் என்பதுதான். ஆகவே இப்பொறுப்பைத் தகப்பனுக்குத் தந்துவிடும்படியே தாய்மார்களுக்கு நான் புத்தி சொல்லுகிறேன். வேதவசனமும் அப்படித்தான் சொல்லுகிறது. அதேசமயம், தகப்பன் வீட்டில் இல்லாமல் நீங்கள் மாத்திரம் தனியாய் இருந்தால் நீங்களே தாராளமாய் முடிவெடுக்கலாம்!*

**கேள்வி-7: வீட்டில் உள்ள என் பிள்ளையைக் கண்டிக்கும்போது நீண்டநேரம் கத்தி அழுது கொண்டேயிருக்கிறது. அந்த பிள்ளை தானாகவே அழுகையை நிறுத்தும்வரை அழ அனுமதிப்பது சரிதானா?**

*இவ்விஷயத்தில் இப்படித்தான் செய்ய வேண்டுமென எந்த விதியும் இல்லை. தேவன் உங்களுக்குத் தந்த ஞானத்தின்படி*

*இப்பிரச்சனையைக் கையாளுங்கள். ஆனால் இச்சமயங்களில் நான் எவ்வாறு நடந்து கொள்ளுகிறேன் என்ற மாதிரியை நீங்கள் விடுதலையோடு ஏற்றுக்கொள்ள முடிந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். பிள்ளைகளை நாம் தண்டிக்கும்போது அழத்தான் செய்வார்கள். ஆனால் அச்சமயத்தில் நான் உடனே என் பிள்ளைகளிடத்தில் சொல்லுவதெல்லாம், "நீ அழலாம், ஆனால் கூக்குரலிடக்கூடாது!* **அழுவதையும் அதிக சப்தமில்லாமல் மெதுவான சப்தத்தோடு அழு**" *என நான் கூறுவதுண்டு.*

*என் பிள்ளைகளில் இருவர் சண்டைபோட்டு ஒருவன் மற்றொருவனை அடித்து விட்டால்கூட, அதினிமித்தம் கூக்குரலிடு வதையும் நான் அனுமதிப்பதில்லை. அவ்வாறு ஏதாகிலும் நடந்தால் அதற்கு தீர்வு காணும்படி பெற்றோர்களிடத்தில் வந்துதான் அதைக் கூறவேண்டுமேயல்லாமல் பிள்ளைகள் சப்தத்தை உயர்த்தி கூக்குரலிடவே கூடாது. இவ்வாறு கூறியும் தொடர்ந்து பிள்ளைகள் கூக்குரலிட்டால், "இவ்வாறு நீ கூக்குரலிடுவதினிமித்தம் உன்னை நான் இரண்டாவது முறை தண்டிக்கப்போகிறேன்" என பிள்ளைகளை எச்சரிப்பது நல்லது!*

*கூக்குரலிடுவது சுயசித்தத்தின் பிரதிபலிப்பேயாகும். பிள்ளைகள் அழுவது தவறில்லை! ஆனால் கூக்குரலிடுவது தவறு. நம்முடைய இல்லம் சமாதானத்தின் இல்லமாயிருக்க வேண்டும். பிள்ளைகள் அழுவது நூற்றுக்கு நூறு சரியானதுதான். சில சமயங்களில் தாயோ அல்லது தகப்பனோ அழுவது கூட நல்லதுதான். ஆனால் "கூக்குரலிடுவது" ஓர் சமாதானம் நிறைந்த வீட்டிற்கு நல்லதே இல்லை.*

**கேள்வி-8: எபேசியர் 5:24–ல் "சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்த காரியத்திலும் கீழ்படிந்திருக்கவேண்டும்" எனக் கூறப்பட்டிருக்கிறதே. இவ்வசனத்தில் கூறப்பட்ட "எந்த காரியத்திலும்" என்பதற்கு என்ன அர்த்தம்? அப்படியானால் மனைவி தானாக எதையும் தீர்மானிக்க முடியாதா? உணவைக்குறித்தும், பிள்ளைகளின் உடையைக்குறித்தும், மற்ற சகோதரிகளோடு வைத்துக்கொள்ளும் ஐக்கியத்தைக்குறித்தும், மனைவி தானாக எதையும் செய்யக்கூடாதா? இதுபோன்ற காரியங்களில் எனக்கு வித்தியாசமான அபிப்பிராயங்கள் இருந்தால் என் கணவருக்கு எவ்வாறு அடங்கியிருக்க முடியும்?**

*சகோதரிகளாகிய உங்கள் யாவருக்கும், நீங்கள் சொல்லுவதை கவனித்து கேட்கும் கரிசனையுள்ள கணவன்மார்கள் இருப்பார்கள் என நான் நம்புகிறேன். கீழ்படிதலுக்கும் அடங்கியிருத்தலுக்கும் ஆழமான*

வித்தியாசம் இருக்கிறது. ஒருசமயம், ஒரு தகப்பன் தன் பையனைப் பார்த்து, "கீழே உட்காரு" என கட்டளையிட்டார். ஆனால் அவனோ நின்றுகொண்டேதான் இருந்தான். உடனே அவனுடைய அப்பா பிரம்பினால் ஒருஅடி கொடுத்து உட்கார வைத்தார். கீழே உட்கார்ந்த அந்த மகன், தன் அப்பாவை ஏறிட்டுப் பார்த்து, "இப்போது நான் உட்கார்ந்திருப்பது உண்மைதான். ஆனால் எனக்குள்ளே நான் இன்னமும் நின்று கொண்டுதானிருக்கிறேன்" என பதில் கூறினான். இங்கு கீழ்படிதல் இருந்தாலும் அடங்கியிருத்தல் இல்லை. ஆகவே அடங்கியிருப்பதே ஆவிக்குரியதாகும்! எனவே "மனைவிகளே உங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படிந்திருங்கள் (அடங்கியிருங்கள் என்பதே உண்மையான அர்த்தம்)" எனக் கூறியிருப்பது ஆவிக்குரியதேயாகும். ஒரு மனைவி தன் கணவன் கூறும் எல்லாவற்றிற்கும் கீழ்படிந்துவிட்டு..... இன்னமும் அடங்கியிருக்காமல் இருக்க முடியும்!?

ஆனால் அதேசமயம் நீங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்பதற்காக எந்த அபிப்பிராயமும் கூறுவதற்கு உரிமையில்லை என்பது அர்த்தமல்ல. அப்படியிருந்தால் நான் என் கணவனுடைய கட்டளைகளையெல்லாம் நிறைவேற்றும் "ரோபர்ட்" இயந்திரத்தைப் போல்தான் இருப்பேன்!

**கணவனும் மனைவியும் "கூட்டாளிகளாய்" இணைந்து** ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும், ஐக்கியம் கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவிசெய்வதும்..... இவ்விதமாய் இருப்பதையே தேவன் விரும்புகிறார். உங்கள் கணவனுடைய காரியத்தில் மனைவி யராகிய நீங்கள் வேறுவிதமாய் எண்ணினால் அதை நீங்கள் உங்கள் கணவருக்குச் சொல்லுங்கள் என நான் உங்களை ஊக்குவிக்கிறேன். சிலசமயங்களில் நான் என் பிள்ளைகளை அடித்து கண்டிக்கும்போது, என் மனைவி என்னிடம் வந்து, "இவ்வளவு கடுமையாய் தண்டனை தரும் அளவிற்கு இந்தக் காரியம் அவ்வளவு சீரியஸானது அல்ல" எனக் கூறியிருக்கிறார்கள். அச்சமயங்களில் நான் என் பிழையை உணர்ந்து தண்டனையை குறைவாகவோ அல்லது தண்டிக்காமலோ கூட இருந்திருக்கிறேன். இவ்வாறு தேவன் எனக்குத் தந்த நல்ல துணைக்காய் நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆகவே, என் கணவர் பிழையற்றவர், அவருக்கு நான் அப்படியே அடங்கியிருக்க வேண்டும் என்பது பொருளல்ல. நம்மில் ஒருவர்கூட பிழையற்ற பூரணமானவர்கள் இல்லை. எனவே கணவருக்கு எந்தக் காரியத்திலும் அடங்கியிருக்க வேண்டும் என்ற ஆவிக்குரிய

அர்த்தத்தை நன்கு விளங்கி செயல்படுவோமாக. நீங்கள் தாராளமாய் உங்களின் மாற்று அபிப்பிராயங்களை உங்கள் கணவரிடம் கூறுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு!!

இருப்பினும் உங்கள் அபிப்பிராயங்களுக்கு **முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பை உங்கள் கணவருக்கே** கொடுத்துவிடுங்கள். உதாரணமாய், உங்கள் பிள்ளைக்கு ஒரு குறிப்பிட்ட ஆடையை எடுக்கும்படி உங்கள் கணவரிடம் நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் உங்கள் கணவரோ அதைக் குறித்து ஆலோசனை செய்துவிட்டு, "இந்த ஆடை வேண்டாம். இது அதிக விலையாயிருக்கிறது அல்லது பளிச்சென்று அதிக நிறமாயிருக்கிறது. இந்த ஆடையை உடுத்தினால் நம் பிள்ளை நம் சபையில் யாரோ 'ஸ்பெஷல்' போல் எடுத்துக் காட்டும். ஆகவே வேண்டாம்" எனக் கூறினால் அதற்கு அப்படியே இணங்கி அடங்கியிருங்கள்.

ஆகவே, உங்கள் கணவருடைய அபிப்பிராயத்திற்கு நீங்கள் வித்தியாசமாய் இருப்பதற்கோ அல்லது உங்கள் அபிப்பிராயங்களை சொல்வதற்கோ தாராளமாய் இடமுண்டு. ஆனால் முடிவில், "நீ சொல்வதுபோல் இதைச் செய்யமுடியாது" என உங்கள் கணவர் கூறிவிட்டால் அதற்கு உடனே இணங்கி அடங்கியிருக்க ஆயத்தமாயிருங்கள். அதுவே தேவனுடைய வழியாகும்.

**கேள்வி-9: நான் என்னுடைய பிள்ளைகளை தண்டிக்காமலே கீழ்ப்படியச் செய்யலாமா?**

அது எப்படியென்று எனக்கும் தெரியவில்லை. பிள்ளைகளை தண்டிக்காமலே அவர்களைக் கீழ்ப்படியபண்ணுவதற்கு வேறு ஏதேனும் வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான்கூட அவ்வாறு முயற்சித்து தோல்வியடைந்திருக்கிறேன். என் பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொடுப்பதற்கு நான் அவர்களைத் தண்டிக்கத் தான் வேண்டியிருக்கிறது.

எபிரெயர் 12:6-ல், "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என வாசிக்கிறோம். இவ்வாறு தேவன் உங்களை சிட்சிக்கும்போது அதை ஏற்றுக்கொண்டு நீங்கள் சகிக்கிறவர்களாக இருந்தால், தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துவார் என அடுத்த வசனம் கூறுகிறது. மேலும் தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எனவும் வாசிக்கிறோம்.

"தண்டிக்கிறார்" என்ற வார்த்தை ஆங்கிலத்தில் "Scourging" என எழுதப்பட்டுள்ளது. அதற்கு அர்த்தம் "தோல் சாட்டையினால் அடிப்பது" என்பது பொருளாகும். இந்த வசனத்திற்கு கீழ்ப்படிந்தே நானும் என் பிள்ளைகளைத் தண்டிப்பதற்கு "பெல்ட்டை"

பயன்படுத்துகிறேன்! தேவன் பயன்படுத்துகிறபடியால் நானும் அதைப் பயன்படுத்துவதில் எனக்கு சிறிதும் ஆட்சேபணை இருந்ததில்லை. ஆனால் நான் பிள்ளைகளை பெல்ட்டினால் அடித்தபின்பு, கீழ்கண்டவாறு ஜெபிக்கும்படி என் பிள்ளைகளுக்குப் போதிப்பதுண்டு, “ஆண்டவராகிய இயேசுவே நான் செய்த பாவத்திற்காக என்னை மன்னியும்.” இவ்வாறு என் பிள்ளைகள் ஜெபிக்கும்போது, நான் அவர்களை வெறுத்தபடியினால் தண்டிக்கவில்லை என்பதை அறிந்து கொள்கிறார்கள். **தேவன் நம்மை வெறுத்துத் தண்டிப்பதில்லை, தான் அன்புகூருகிறவர்களையே அவர் தண்டிக்கிறார்!**

எனவே, இந்த வசனத்தின்படி தன் பிள்ளைகளைத் தண்டித்து சிட்சிக்காத ஒரு தகப்பன் தன் பிள்ளைகளை நேசிக்கவில்லை என உறுதியாக கூறலாம். ஏனென்றால் அவன், தன்னுடைய பிள்ளைகள் தங்களுக்கு இஷ்டமான வழியில் சென்று சீரழிய விட்டுவிட்டான்!

இவ்வாறு தேவன் நம்மை சீர்ப்படுத்தி தண்டிப்பது அவருக்கு அவசியமாயிருக்க, தண்டனையே தராமல் நாம் பிள்ளைகளை ஒழுங்குசெய்ய முடியும் என்ற கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. அது உங்கள் பிள்ளைகளை நேசிப்பதற்குரிய “அன்பின் அடையாளம்” என எண்ணாதிருங்கள். ஏனென்றால், “கர்த்தர் தாம் சேர்த்துக்கொள்ளுகிற **எந்த மகனையும்** தண்டிக்கிறார்” என்றல்லவா வாசிக்கிறோம். அதாவது ஒருவர் பாக்கியில்லாமல் அவரிடத்தில் கிட்டிச்சேருகிற எந்த மகனையும் அவர் தண்டிக்கிறார்!

ஒருசமயம் ஒருதகப்பன் தன்னுடைய முப்பது வயது நிரம்பிய மகனைக் குறித்து என்னிடம் கூறும்போது, “நான் என் மகனை ஒருநாள்கூட தண்டித்ததில்லை” எனக்கூறினார். ஆனால் இப்போது அந்த மகனோ தன் திருமண வாழ்க்கையில் எண்ணற்ற பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டார். எந்தசபையிலும் நிரந்தரமாய் இருப்பதில்லை. தனிப்பட்ட ஜீவியத்திலும் பிரச்சனை...... என உழன்று கொண்டிருக் கிறார். இவருடைய பிரச்சனைகளையெல்லாம் சற்று ஆராய்ந்து பார்த்தால், அந்த அம்புக்குறி “தன்னை ஒருபோதும் சிட்சியாத தகப்பனிடத்திற்கே” செல்லுவதை நான் கண்டேன். இதனிமித்தமாய் அந்த மகன் ஒரு இடத்திலேயும் ஒரு அதிகாரத்திற்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்க கற்றுக்கொள்ளவே இல்லை. இதுபோன்ற தன் பிள்ளைகளை தண்டிக்காமல் (நேசிக்காமல்) விட்டுவிட்ட பெற்றோர்களுக்காய் நான் வருந்துகிறேன்!

நீங்கள் மெய்யாகவே உங்கள் பிள்ளைகளை நேசித்தால் அவர்களைக் கண்டித்து சரிப்படுத்துங்கள். கண்டிக்கும் செயலை நாம் ஒருபோதும் விரும்பி செய்துவிடக்கூடாது. நான் என் பிள்ளைகளை பெல்ட்டினால் அடிக்கும்போது, அது அவர்களுக்கு மாத்திரமல்லாமல் தகப்பனாகிய எனக்கும் வலிக்கத்தான் செய்கிறது! இருப்பினும் இவ்வித கண்டிப்பு ஏராளமான நன்மைகளை பிள்ளைகளுக்கு கொண்டு வருவதையே நான் காண்கிறேன். மேலும் இச்சமயங்களில் நாம் அவர்களை எரிச்சலோடும், கோபத்தோடும் கண்டித்து விடக்கூடாது. அவ்வாறு நாம் கண்டித்திருந்தால், தேவனிடத்தில் சென்று மனந்திரும்பி நம்முடைய கண்டிப்பில் வெளிப்பட்ட கோபத்தையும், எரிச்சலையும் கழுவிக்கொள்ள வேண்டும்.

**கேள்வி-10 : பிள்ளைகளைப் பிரம்பினால் அல்லது பெல்ட்டினால் அடித்து வளர்ப்பதை எத்தனை வயதுவரை கடைப்பிடிக்கலாம்?**

இந்த இடத்தில் ஒரு சட்டதிட்ட வரையறையை நான் கொண்டுவர விரும்பவில்லை. ஆகிலும் என்னுடைய ஆலோசனைகளை நான் நிச்சயமாய் தரமுடியும். என்னுடைய குமாரர்கள் பதிமூன்று வயதைத் தாண்டியவுடன் அவர்களைப் பிரம்பினால் அடிப்பதை நிறுத்தி விட்டேன். ஆகவே பிள்ளைகளாய் இருக்கும் போதுதான் பிரம்பு ஏராளமான நன்மைகளை அவர்களுக்குச் செய்ய முடிகிறது. ஆனால், அவர்கள் பதிமூன்று வயதைத் தாண்டியவுடன், இன்னமும் அவர்களைத் தண்டிக்க அவசியமிருக்கும் என்றால், பிரம்பை விட்டுவிட்டு வேறு யுக்தியை கையாளுவதே நலம் என்று நான் எண்ணுகிறேன். உதாரணமாய் அவர்களுக்கு நாம் அளித்த சில சலுகைகளை மறுக்க வேண்டியிருக்கலாம். சிலசமயங்களில் தவறு செய்த மகனோடு நானும் முழங்கால் படியிட்டு, "ஆண்டவரே நான் ஒரு நல்ல தகப்பனாய் விளங்க எனக்கு உதவிசெய்யும். என்னுடைய மகன் உமக்கு முன் நேர்மையாய் வளரவே நான் விரும்புகிறேன். ஆண்டவரே நீர் நேசிப்பதைப் போலவே நானும் அவனை நேசிக்கிறேன்" என ஜெபித்திருக்கிறேன்.

ஆகவே பிள்ளைகளின் சரீர உறுப்புகளும், உணர்வுகளும் வளர்ந்த பின்பு அவர்களைத் தண்டிப்பது காலதாமதமான செயலேயாகும். எனவே உங்கள் பிள்ளைகள் இரண்டு வயதாயிருக்கும் போது பிரம்பைக் கையாளுவதே உசிதமான செயலாயிருக்கும்.

**கேள்வி-11 : என்னுடைய கணவர் பிள்ளைகளைக் கண்டிப்பதற்கோ அல்லது ஆவிக்குரிய காரியங்களை அவர்களுக்குப் போதிப்பதற்கோ ஆர்வமற்று இருக்கிறார். இந்நிலையில் தாயாகிய நான் என்ன செய்ய வேண்டும்?**

*பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு பிரதானமாய் பிதாக்களுக்கே உரியதென வேதம் கூறுகிறது. "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள்" எனக் கூறும் வேதம் "பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" எனக் கூறாமல் "பிதாக்களே" என்றுதான் அழுத்தமாய் கூறுகிறது. ஆகவே வீட்டில் தகப்பன்தான் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்றபடி வளர்க்கவேண்டிய பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.*

*இருப்பினும், தகப்பன் இந்த பொறுப்பை எடுக்காவிட்டால் இப்போது என்ன செய்வது?*

*உதாரணமாய், குடும்பத்திற்கு வேண்டிய அப்பத்தை சம்பாதிப்பது தகப்பனுடைய கடமைதான். ஆனால் அவன் வியாதிப்பட்டு எந்த வேலையும் செய்ய முடியாத நிலைக்கு வந்து விட்டால் என்ன செய்வது? ஆம், இப்போது தாய்தான் வேலை செய்து குடும்பத்தின் அப்பத்தை சம்பாதிக்க வேண்டும்.*

*இவ்வாறு ஒருவர் தன்னுடைய பணியை செய்யாதிருக்கும் பட்சத்தில் அதை மற்றொருவர் சேர்த்துச் செய்வதுதான் இயல்பானதாகும். ஒருவேளை வீட்டிலுள்ள தாய் சுகவீனமாகி விட்டால், சமையல் வேலையை தகப்பன் தான் செய்ய வேண்டும். இதைப்போலவே* **தகப்பன் பிள்ளைகளைச் சிட்சித்து வளர்க்கத் தவறிவிட்டால், அந்தப் பொறுப்பை தாய்தான்** *தன்மேல் ஏற்றுக் கொண்டு செய்யவேண்டும். இதுபோன்ற சூழ்நிலைக்கு நீங்கள் ஆளாகும்போது அதற்கேற்ற அதிகமான கிருபையை தேவன் உங்களுக்கு நிச்சயமாய் தருவார்!*

**கேள்வி-12 : பிள்ளைகளுக்கு முன்பாக சபை காரியங்களை விவாதிக்கக் கூடாது என நீங்கள் கூறினீர்கள். ஆனால் பொருளாதாரப் பிரச்சனைகளை பெற்றோர்களாகிய நாங்கள் அவர்களுக்கு முன் பேசிக் கொள்ளலாமா?**

*எந்தக் காரியத்தையுமே நாம் பிள்ளைகளுக்கு முன்பாய் விவாதிக்காமல் இருப்பதே நலமென்று நான் எண்ணுகிறேன். கணவன் மனைவியாகிய உங்களுக்குள் ஏற்படும் வேறுபாடுகளைக் கூட ஒருவருக்கொருவர் தனியாய் பகிர்ந்துகொள்வதே நலமாயிருக்கும்.*

*நம் சபைகள் ஒன்றாகிலும் பூரணமானவைகள் அல்ல. ஆகவே*

இங்குள்ள பிரச்சனைகளை காணும் நாம், பிள்ளைகளுக்கு முன்பாக அவைகளை ஒருக்காலும் பேசிவிடக்கூடாது. ஏனென்றால் அது அவர்களால் தாங்கிக்கொள்ளக் கூடாததொன்றாகவும், அவர்களைக் குழப்புவதாகவும்..... எல்லாவற்றிற்கும் மேலாக சபையை அவர்கள் தவறாய் புரிந்து கொண்டு விசுவாசத்தை விட்டு அவர்கள் வழிவிலகச் செல்லும்படி தூண்டிவிடவும் முடியும்! ஆகவே **பிள்ளைகள் முன்பாக சபை காரியங்களை விவாதிக்காமல் இருப்பதற்கு எப்போதும் கவனமாயிருங்கள்.**

இதேபோல் பொருளாதாரப் பிரச்சனைகளை பிள்ளைகளுக்கு முன்பாகப் பேசி, அது அவர்களுடைய இருதயத்தில் கவலைகளைத் தரும்படி அனுமதித்து விடாதிருங்கள். ஆனால் பொருளாதார விஷயத்தில் நீங்கள் வாழும் வாழ்க்கை பிள்ளைகளுடைய விசுவாசத்தை உற்சாகப்படுத்துவதாய் இருந்தால் அதை மாத்திரம் பேசுங்கள். அல்லது யாதேனும் ஒன்று குறைவுபட்டு அதினிமித்தம் தேவனிடமிருந்து உதவியைப் பெற்றிட குடும்பமாய் சேர்ந்து ஜெபிக்கும்படி நீங்கள் செய்தால் அதுவும் நல்லதுதான்! ஆகவே எதைப் பேசவேண்டும் அல்லது எதைப் பேசக்கூடாது என்பதை "பிள்ளைகளின் நலனைக் கருதி செயல்படுவதே" சிறந்த வழியாகும்.

**கேள்வி-13 : சபையைக் குறித்த அல்லது சகோதரர்களைக் குறித்த காரியங்கள் அனைத்தையும் ஒரு கணவன் தன் மனைவியிடம் பகிர்ந்து கொள்ளலாமா?**

சபையைக் குறித்தோ அல்லது சகோதரர்களைக் குறித்தோ மனைவியிடம் பகிர்ந்து கொள்வது ஞானமுள்ள செயலல்ல. இதனிமித்தமாய் கணவன் மனைவிக்குள் ஐக்கிய குறைவு ஏற்படுமே என எண்ணுவதும் தவறு.

உதாரணமாய், இரகசிய உளவுத்துறையில் வேலைபார்க்கும் ஒருவர் தன் உளவுத்துறையைப் பற்றிய இரகசியங்களை யாரிடமும் சொல்லுவதற்கு 'குறிப்பாய்' மனைவியிடம் சொல்லுவதற்கு அவருக்கு அனுமதியில்லை. ஒருவருக்கொருவர் வெளிப்படையாய் இருக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் எல்லாவற்றையும் சொல்லியாக வேண்டும் என்ற நிர்ப்பந்தமும் இல்லை. மனைவியை சம்பந்தப்படுத்தும் குடும்ப காரியங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்தான். அவைகள் தவிர வேறு விஷயங்களைப் பகிர்ந்து கொள்வது தேவையில்லாதது மாத்திரமல்ல, சில சமயங்களில் மதியீனமாயும் மாறிவிடக்கூடும்.

சபையைக் குறித்த காரியங்களை ஒரு சகோதரன் தன் மனைவியிடம் பகிர்ந்து கொண்டால், அந்த மனைவி படிப்படியாக "சக-மூப்பராக" மாறி தன்னுடைய ஆலோசனைகளால் சபையைத்

திசை மாறும்படி செய்துவிடக்கூடும். இவ்வித செயல் ஞானமற்றது என நாம் எண்ணினாலும், ஆங்காங்குள்ள சபைகளில் இவ்வித துயரச்செயல் சம்பவிக்கத்தான் செய்கிறது. சபையின் பொறுப்பை வகிக்கும் சகோதரர், சில சமயங்களில் சபையிலுள்ள சில சகோதரிகளைக் குறித்த காரியங்களை தன் மனைவியிடம் விவாதிக்க முடியும். ஏனென்றால் அந்த சகோதரன் சில சமயங்களில் சகோதரிகளிடம் தனியே பேசுவதற்கு வாய்ப்பு இல்லாதிருந்திருக்கலாம். ஆயினும், இதுவும்கூட மனைவி ஆவிக்குரிய சிந்தை கொண்டவளாய் இருந்தால் மாத்திரமே செய்ய முடியும்! எப்படியிருந்தாலும் சபையிலுள்ள சகோதரர்களைக் குறித்து மனைவியிடம் விவாதிப்பது முற்றிலும் தவறாகும்.

ஓர் இடத்தில் நடந்த சம்பவத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அந்த சபையிலுள்ள இரண்டு மூப்பர்களில் ஒருவர் மற்றொரு மூப்பரை ஏதோ குறைவாக பேசிவிட்டார். தான் குறைவாய் பேசப்பட்ட விஷயத்தை, பாதிக்கப்பட்ட மூப்பர் தன் மனைவியிடம் பகிர்ந்து கொண்டார். ஆனால் அடுத்த வாரத்திலேயே இந்த இரண்டு மூப்பர்களும் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு இணக்கமான ஐக்கியம் கொண்டுவிட்டார்கள்!

இருப்பினும், துயரமான சம்பவம் யாதெனில், பாதிக்கப்பட்ட மூப்பரின் மனைவி பாதிப்பிற்கு காரணமாயிருந்த மூத்த சகோதரனை மன்னிக்கமுடியாத இடத்திற்குச் சென்றுவிட்டாள். இது மிகவும் ஆச்சரியமாகவே இருக்கிறது. இந்த சகோதரி தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் பிறர்மீது கொண்ட கசப்பை ஜெயித்து வாழுகிறார்கள். ஆனால் தன் கணவனைப் பாதிக்கும்படி பேசிய மூத்த சகோதரனை சாதாரணமாக **மன்னிக்கக்கூட இயலாத நிலைக்குச்** சென்று விட்டார்களே! இவ்வித நிலையைக் கண்ட அந்த மூத்த சகோதரன், தன் மனைவியிடம் தன் உடன் சகோதரனோடு ஏற்பட்ட பிரச்சனையை கூறியதற்காக மிகவும் தன்னை நொந்து கொண்டார். ஏனென்றால் இப்போது இந்த இரண்டு சகோதரர்களும் கர்த்தருக்குள் ஐக்கியமாயும், மகிழ்ச்சியாயும் இருக்கிறார்கள்! ஆனால் முதல் சகோதரனின் மனைவியோ "தன்னால் மன்னிக்க முடியாத" கொடிய துன்பத்திற்கு பலியாகிவிட்டார்கள். இவ்வாறு தன் மனைவியின்மீது இக்கொடிய பாரத்தை வைத்தது யார்? ஆம், இந்த மதியீனமான செயலைச் செய்தது அவளுடைய கணவனாகிய அந்த மூத்த சகோதரன்தான்!

ஆகவே நம் மனைவியினிடத்தில் நாம் ஒன்றைச் சொல்லாமல் இருப்பது, நாம் 'வெளிப்படையாக இல்லை' என்பதோ அல்லது

'அன்பு தாழ்ச்சி' கொண்டிருப்பதோ அல்லவே அல்ல. உண்மையில் அதுவே அன்பின் அடையாளமாகவும் இருக்கிறது. உங்கள் மனைவியின் தலையில் அவர்கள் சுமக்க முடியாத பாரத்தை வைக்காமல் இருப்பது அன்பின் அடையாளம்தானே! ஆகவே நாம் கவனமாயிருக்கக்கடவோம்.

**கேள்வி-14: கிறிஸ்தவ விசுவாசிகள் குடும்பக்கட்டுப்பாடு செய்யலாமா? கர்ப்பத்தடை செய்வதைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?**

புதிய ஏற்பாட்டில் வேதாகமம் குடும்பக்கட்டுப்பாட்டைக் குறித்தோ, கர்ப்பத்தடையைக் குறித்தோ எதுவும் கூறவேயில்லை. பழைய ஏற்பாட்டில், "தன் அம்பாரத்தூணியை அம்புகளால் நிறைப்பவன் பாக்கியவான்" என சங்கீதத்தில் வாசிக்கிறோம். இந்த வசனத்தில்கூட அம்பாரத்தூணியின் அளவு மூன்று அம்புகள் பிடிக்கக்கூடியதாய் இருக்கவேண்டுமா? அல்லது பத்து அம்புகள் பிடிக்கக்கூடியதாய் இருக்க வேண்டுமா? என அளவைக் குறித்துச் சொல்லப்படவில்லை. எப்படியிருந்தாலும் புதிய ஏற்பாட்டில் இவ்விஷயத்தைக் குறித்து தெளிவான போதனை தரப்படவில்லை. ஆகவே வேதாகமம் அமைதியாய் விட்டுவிட்ட பகுதிகளில் நாம் பொதுவான தாற்பரியத்தைப் பின்பற்றுவதே சிறந்ததாகும்.

இவ்விஷயத்தில் "தனக்கானதை (சுயநலத்தை) நாடக்கூடாது" என்ற வசனமும் "நீங்கள் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்காக செய்யுங்கள்" என்ற வசனத்தையும் நாம் பின்பற்ற வேண்டிய பொதுவான தாற்பரியமாக எடுத்துக்கொள்ளலாம்.

**நீங்கள் சுயநலமாய் குடும்பக்கட்டுப்பாடு செய்து கொண்டால் அது வேதத்திற்கு முரணானதாகும்.** ஆனால் உங்கள் மனைவி தன்னுடைய உடல் பெலஹீனத்தினிமித்தமோ அல்லது குடும்ப பொருளாதார நிலையினிமித்தமோ அல்லது அநேகம் பிள்ளைகளை சமாளிக்க முடியாத காரணத்தினிமித்தமோ குடும்பக்கட்டுப்பாடு செய்ய விரும்பினால், அதை அப்படியே செய்து கொள்வதற்குத் தாராளமாய் அனுமதிக்கலாம். இருப்பினும் இவ்விஷயத்தில் இன்னொரு சகோதரனோ அல்லது சகோதரியோ **வித்தியாசமான கருத்து** கொண்டிருந்தால் அதன்படி அவர்கள் வாழவும் வேதம் சுயாதீனம் அளிக்கிறது. இந்த இருவரையும் தேவன் ஏற்றுக்கொண்டாலும், இவர்களோ ஒருவரையொருவர் நிச்சயமாய் நியாயந்தீர்க்கவே கூடாது!

வேதம் அமைதிகாட்டும் அநேகப் பகுதிகளில், அதற்கேற்ற விடையை ரோமர் 14-ம் அதிகாரம் நமக்குத் தருகிறது. குறிப்பாய், நாம் கிறிஸ்துமஸ் கொண்டாட வேண்டுமா? அல்லது வேண்டாமா?

*விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டதை நாம் புசிக்கலாமா? அல்லது புசிக்கக்கூடாதா? இன்னும் இதுபோன்ற அநேகக் கேள்விகளுக்கு* **"அவனவன் தன்தன் மனதிலே"** *கொண்ட நிச்சயத்தின்படி செய்யக்கடவன் என ரோமர் 14:5 கூறுகிறது.*

*இருப்பினும் ஒரு குழந்தை மாத்திரம் வைத்திருப்பவர்களுக்கு "உங்கள் பிள்ளை வாழ்வின் முக்கியபகுதிகளைத்* **தனியாய் இருந்து** *கற்றுத்தேறுவது கடினம்" என நாம் ஆலோசனை தருவது உண்மை தான். ஆகிலும், ஒருவேளை ஒரு குழந்தைக்கு மேல் இன்னொரு குழந்தை பெற்றிட முடியாத சூழ்நிலையில் நீங்கள் இருந்தால் அது பரவாயில்லை. மற்றபடி உங்கள் குழந்தையின் நலத்தினிமித்தம் குறைந்தது இரண்டு குழந்தைகள் இருப்பது மிகவும் தேவையானதாகும். உங்கள் பிள்ளை தனக்கொரு துணையில்லாமல் வளர்ந்து வருவது அவ்வளவு நல்லதல்ல. இந்த ஆலோசனையைத் தவிர நீங்கள் எத்தனை குழந்தைகளோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை நான் கூறமாட்டேன்! அதைத் தீர்மானிப்பது முழுக்க முழுக்க* **உங்கள் நிலைமையைச் சார்ந்ததேயாகும்!**

*மேலும், குடும்பக்கட்டுப்பாட்டிற்கு எந்த முறையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை கணவன் மனைவியாகிய நீங்கள்தான் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும். அவரவர் வசதிப்படி அல்லது விருப்பத்தின்படி தாங்கள் விரும்புகின்ற ஒரு வழிமுறையை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தெரிந்து கொள்ளலாம். இச்சமயத்தில் நீங்கள் ஜெபித்து முடிவுசெய்து "இதை நான் செய்வதால் தேவனுடைய நாமம் மகிமைப்படுமா?" (1கொரி 10:1) என கேள்வி கேட்டுப்பார்ப்பதும் மிகவும் நல்லது. நீங்கள் தற்காலிக முறையைப் பின்பற்றுகிறீர்களா? அதை தேவனுடைய மகிமைக்காக செய்யுங்கள்! அல்லது நிரந்தர முறையை பின்பற்றுகிறீர்களா? அதை தேவனுடைய மகிமைக்காக செய்யுங்கள்! உங்கள் சுயநலத்திற்காக எதையும் செய்யாதிருக்க கவனம் கொண்டிருங்கள், அதுபோதும்!*

**கேள்வி-15 : 1பேதுரு.3–ல் கூறப்பட்டபடி மனைவி அடங்கி கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என கூறியிருந்தாலும், கணவன் ஆவிக்குரிய ஜீவியத்தில் என்னோடு ஒருமனம் கொண்டிருக்காத பட்சத்தில், என் கணவரோடு உடலுறவில் ஒன்றாயிருப்பதற்கு எனக்கு கஷ்டமாயிருக்கிறதே?**

*திருமணமான சிலநாட்களில் ஒரு இளம் தம்பதியினர் என் வீட்டிற்கு வந்தார்கள். திருமணமான அந்த சகோதரியோ "சூப்பர் ஆவிக்குரியவராய்" இருந்தாள். அந்த சகோதரியும் உங்களைப்*

போலவே, "என் கணவர் என்னோடு ஆவிக்குரிய விஷயத்தில் ஒன்றாயிராத பட்சத்தில் என்னுடைய சரீரத்தை என் கணவருக்குத் தந்திட எனக்கு விருப்பம் இல்லை" எனக் கூறினார்கள். அந்த சகோதரிக்கு, **"நீங்கள் சொல்லுவது தவறு" என உடனடியாக பதில் கூறினேன்.** ஏனென்றால் நீங்கள் திருமணமான அந்த நாளிலேதானே "ஒரே மாம்சமாய் இருப்பீர்கள்" என வேதம் கூறுகிறது. ஆனால் நீங்கள் "ஒரே ஆவியையுடையவர்களாய்" மாறுவதற்கு ஐம்பது ஆண்டுகள்கூட ஆகலாம். ஆகவே ஒரே மாம்சமாய் ஆவதற்கு, தாங்கள் ஒரே ஆவியுடையவர்களாய் மாறும்வரை காத்திருக்க வேண்டும் என எண்ணுவது புத்தியீனமாகும்! ஏனெனில் ஒரே ஆவியுடையவர்களாய் மாறுவது ஓர் நீண்ட வாழ்வின் பாதையாகும். ஒரே மாம்சமாய் இருப்பதோ திருமணமான அன்றே நடைபெறும் செயலாகும். உங்கள் மனைவி அல்லாத அல்லது கணவன் அல்லாத ஒருவரோடு "ஒரே மாம்சமாய்" இருப்பதை மாத்திரமே வேதம் தடைசெய்கிறது. ஆகவே உங்கள் கணவரின் உணர்வுகளை நீங்கள் துன்புறுத்தல் செய்வது கொடிய பாதகமான செயலாகும்!

**கேள்வி-16: தன் மனைவி உண்மையற்றவளாய் இருப்பதைக் கண்டுபிடித்த ஒரு கணவனின் மனப்பான்மை எவ்வாறு இருக்க வேண்டும்?**

இக்கேள்விக்கு என்னுடைய உடனடி பதில், "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் அவர்களை மன்னியுங்கள்" என்பதுதான். விபச்சாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயின் நிகழ்ச்சியை எண்ணிப்பாருங்கள். இந்த இடத்தில் உங்கள் மனைவியைப் வைத்துப் பாருங்கள். அந்த பரிசேயர்களைப் போலவே நீங்களும் உங்கள் மனைவியின்மீது இப்போது கல்லெறிய ஆயத்தமாயிருக்கிறீர்கள். அன்று பரிசேயர்களுக்கு இயேசு கூறிய அதே வார்த்தைகளைத்தான் உங்களுக்கும் கூறுவார், "உங்களில் பாவம் இல்லையென்றால் இவள்மீது கல்லெறியுங்கள்" என்றே கூறுவார்.

வேசித்தனத்தினிமித்தம் விவாகரத்தை வேதம் அனுமதிப்பது உண்மைதான். ஆனால் அது ஒன்றும் ஆணித்தரமான கட்டளையல்ல. எனவே ஒரு மனைவி தன் செயலுக்காய் ஆழமாய் வருத்தம் கொண்டு மனந்திரும்பினால், அவளை நாம் நிச்சயமாய் மன்னிக்கலாம். அப்படி இல்லாவிட்டாலும் "உங்கள் பிள்ளைகளின் நலனிமித்தமாவது" திருமணத்தின் ஐக்கியத்தை காத்து நடவுங்கள்.

ஒழுக்கமான கிறிஸ்தவ ஜீவியத்தில் இதுபோன்ற உண்மையற்ற நிலை ஏற்பட்டுவிடாதிருக்க நாம் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்க

வேண்டும். ஒருவேளை தவறு ஏற்பட்டு விட்டால்..... **மெய்யான மனந்திரும்புதல்** இருக்கும் பட்சத்தில் மனப்பூர்வமாய் மன்னிக்க வேண்டியது நம்முடைய கடமை ஆகும்.

இந்தக் கேள்விக்குரிய பதிலை இத்துடன் நிறுத்திக் கொள்ளவே நான் விரும்புகிறேன். ஏனென்றால் இதுபோன்ற விஷயத்தில் நான் கூறும் பதில்களை சாதாரண நிகழ்ச்சிகளுக்கு சிலர் பயன்படுத்தி தீராத பிரச்சனைக்கு ஆளாகமுடியும் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே நான் முதலாவது அளித்த பதிலைத் தவிர வேறுவிதமான சூழ்நிலையில் நீங்கள் இருப்பீர்களென்றால், தயவுசெய்து என்னிடம் நேரடியாக தொடர்பு கொண்டு ஆலோசிப்பதே இவ்விஷயத்தில் நலம் என்று நான் கருதுகிறேன்.

**கேள்வி-17: உடலுறவு விஷயத்தில் கணவன் சொல்லுகிறபடியெல்லாம் மனைவி செய்வது சரியா? அல்லது வேதம் இதற்கொரு வரையறை வைத்திருக்கிறதா?**

பொதுவான ஒழுக்கத்திற்கும், அவரவர் சரீரத்திற்கு அளிக்கும் மரியாதைக்கும் உட்பட்டு ஒரு வரையறையை வேதம் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது. ஒருவர் சரீரத்தை இன்னொருவர் தாறுமாறான விதத்தில் பயன்படுத்துவதை வேதம் தடைசெய்கிறது. கணவன் மனைவிக்குள்ள உடலுறவை அவர்களின் இன்பத்திற்காகவும், ஐக்கியத் திற்காகவும் தேவன் படைத்திருக்கிறார். இவ்வாறு தேவன் அளித்த இப்பகுதியை தங்கள் காமவிகாரத்திற்கு ஏதுவாய் சில புருஷர்கள் மாறுபாடாய் நடப்பதை வேதமும் கூறுகிறது, நாமும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆகவே, கணவனாய் இருக்கக்கூடிய நீங்கள், “தேவன் என் மனைவியின் ஒவ்வொரு உறுப்புகளையும் எதற்காகப் படைத்திருக் கிறார்?” என்ற கேள்வியைக் கேட்டுப்பார்ப்பது நல்லது. புசிப்பதற்கு தேவன் வாயை சிருஷ்டித்ததுபோல், உடலுறவுக்கென தேவன் வேறு உறுப்புகளையும் சிருஷ்டித்திருக்கிறார். எந்த நோக்கத்திற்காக தேவன் உடலுறுப்புகளை சிருஷ்டித்தாரோ அந்த நோக்கத்தை மாத்திரமே அந்தந்த உறுப்புகளை பயன்படுத்துவது தெய்வபயமுள்ள கிறிஸ்தவனுக் குரியதாகும்.

**கேள்வி-18: நான் திருமணமாகிவிட்டபடியால் இப்போது என்னுடைய உபரி நேரத்தில் கூட ஜெபத்திற்கு அதிகநேரம் தரமுடியாமல் இருக்கிறதே! நான் என்ன செய்யவேண்டும்?**

பொதுவாய் இதுபோன்ற நிலை சகஜமானதுதான். நாம் திருமணமான பிறகு அதுவும் குறிப்பாய் குழந்தைகள் பெற்ற பின்பு அதிகநேரம் வேதம் வாசித்து ஜெபிப்பது கடினமாகத்தான் இருக்கிறது.

*இருப்பினும் நீங்கள் அதிகநேரம் வேதம் வாசித்து ஜெபிப்பதை வைத்து நீங்கள் எந்த அளவு தேவனுக்கு முதலிடம் தருகிறீர்கள் என கணிக்கும் நிரூபணமாய் எடுத்துக் கொள்ள முடியாது. நீங்கள் எந்த அளவு தேவனுக்கு முதலிடம் தருகிறீர்கள் என்ற உங்கள் மனப்பான்மையே மிகவும் முக்கியமாகும்.*

*ஒருவேளை நீங்கள் முழுநேர ஊழியராய் இருந்து அதிகநேரம் வேதம் வாசித்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் அதேசமயம் உங்கள் மனதில் தேவன் முதலிடம் வகிக்காமல் இருக்கக்கூடும். நான் கண்ட அநேக முழுநேர ஊழியர்கள் அதிகநேரம் வேதவாசிப்பிற்கு நேரம் செலவழித்தாலும், தங்கள் மனதில் 'பணத்திற்கே' முதலிடம் தருகிறார்கள். ஆனால் அதேசமயம் ஒரு அரசாங்க அலுவலில் உள்ள சகோதரன் அதிகநேரம் வேலை செய்கிறபடியால் வேதவாசிப்பிற்கும், ஜெபத்திற்கும் குறைந்த நேரமே செலவழிக்கிறார். அப்படியிருந்தும் அவருடைய மனதிலோ தேவனே முதலிடம் வகிக்கிறார்! ஆகவே தங்கள் சம்பாத்தியத்தில் தேவனுடைய ஊழியத்திற்கென தாராளமாயும் தருகிறார்கள். இதுபோன்றவர்கள் தேவனுடைய இராஜ்யம் துரிதமாய் பரவிட மிகுந்த அக்கறையும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் இவர்கள் வேதவாசிப்பிற்கும், ஜெபத்திற்கும் செலவழிக்கும் நேரமோ மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆகவே நான் உங்களுக்கு கூற விரும்புவதெல்லாம், நேரம் கிடைக்கும் போதெல்லாம் வேதம் வாசித்து ஜெபியுங்கள். ஆனால் உங்கள் மனப்பான்மையில்* **தேவனே உங்கள் வாழ்வில் முதலிடம்** *வகிக்கிறாரா என்பதில் கவனம் கொள்ளுங்கள், அதுபோதும்!*

**கேள்வி-19: நான் மனந்திரும்புவதற்கு முன்பாக ஒரு அவிசுவாசியான பெண்ணிடம் காதல் கொண்டிருந்தேன். இப்போது நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன். இப்போது அந்தப் பெண்ணும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டாள். ஆனால் அவளுடைய மனமாற்றம் உண்மையானதாய் இருக்காது என்றே நான் சந்தேகிக்கிறேன். இந்நிலையில் அவளை நான் தொடர்ந்து காதலிக்க முடியாது என்றே உணருகிறேன். இச்சூழ்நிலையில் நான் என்ன செய்யவேண்டுமென்பதை தயவுசெய்து கூறுங்கள்?**

*உங்களை ஒருவர் அதிகமாய் நேசித்து, இப்போது அதனிமித்தம் அவனோ அல்லது அவளோ தானும் ஆண்டவரை ஏற்றுக்கொள்வதாக கூறினால் அதைக் குறித்து நீங்கள் கவனமாயிருக்க வேண்டும். ஏனென்றால் உங்களைத் திருமணம் செய்து கொள்வதற்கு இது ஒன்றுதான் வழி என்பதை அறிந்து மாயமாய் சொல்லியிருக்க முடியும். இந்த இடத்தில்தான் உண்மையை பகுத்தறியும்படி தேவன் உங்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கும்படி ஜெபம் செய்ய வேண்டும்.*

*உதாரணமாய், நீங்கள் காதல் கொண்ட நபரோடு சிறிது காலம் நட்பு கொள்ளாமல் விலகியிருந்து பார்க்கலாம். இப்போது அந்த நபருக்கு உங்கள் காதல் இல்லாவிட்டாலும் தொடர்ந்து ஆண்டவரை நேசிக்கிறாரா? உண்மையிலேயே கர்த்தரைப் பின்பற்றுகிறாரா? என்பதைக் கண்டுபிடித்துவிட முடியும். நான் சற்றுமுன் அளித்த பதிலைப்போல், அந்த நபரின் வாழ்க்கையில் தேவனே முதலிடம் வகித்தால், தனக்குத் திருமணம் கைகூடாவிட்டாலும் தொடர்ந்து ஆண்டவரைப் பின்பற்றுகிறவராயிருப்பார். இந்த அடிப்படையை நீங்கள் உறுதி செய்து கொண்டால்தான் மணவாழ்க்கை மகிழ்ச்சியுள்ளதாயிருக்கும். அப்படியில்லாவிட்டால் எல்லா காதல் திருமணங்களிலும் சம்பவிக்கும் துயரநிலை உங்களையும் கவ்விக் கொள்ளும். ஆகவே மிகுந்த ஜெபத்துடன் ஜாக்கிரதையாய் செயல்படுங்கள்!*

**கேள்வி-20 : என்னுடைய பெற்றோர்கள் எனக்கேற்ற வாழ்க்கைத் துணையைத் தாங்களே தெரிந்தெடுக்கிறோம் என்று கூறுகிறார்களே, ஆனால் இங்கு சபையிலோ தேவனுடைய உதவியைக் கொண்டு நாம்தான் ஏற்றத்துணையை தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறதே. இவைகளில் எது சரியானது?**

*உங்கள் பெற்றோர்கள் உங்களுக்காகத் தெரிந்துகொள்ளும் திருமண வாழ்க்கை, காதல் திருமணமா? அல்லது பேசி ஒழுங்கு செய்யும் திருமணமா? இதற்கு விடை உங்களுக்கே தெரியும். பேசி ஒழுங்கு செய்யும் திருமணத்தைத்தான் உங்கள் பெற்றோர்கள் முயற்சிக்க முடியும். அதேசமயம் நீங்கள் ஒரு சகோதரனை விரும்பி, சபை ஒழுங்கின்படி மூப்பர்கள் மூலமாய் ஒழுங்குசெய்யவும் முடியும். இந்த இரண்டிற்கும் வித்தியாசம் எதுவுமில்லை. இந்த இரண்டிற்கும் பிரதானமாய் இருக்கவேண்டியதெல்லாம் "இந்த துணையை தேவன் தம்முடைய சித்தத்தின்படி எனக்கு ஏற்படுத்தி இருக்கிறாரா?" என்பதையே நீங்கள் காணவேண்டும். இவ்வாறு தேவசித்தத்தின்படி* **தீர்மானிக்கும் "முடிவு" உங்கள் கையில்** *இருந்தால், திருமண முயற்சியை யார் செய்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல!*

*சிலருடைய வாழ்க்கை கலாச்சாரத்தில் ஒரு பெண்ணையோ அல்லது ஒரு ஆடவனையோ சந்தித்து பேசுவது கூடாத காரியமாய் இருக்கக்கூடும். அவ்வாறு பேச வேண்டுமென்றால் பெற்றோர்களின் அல்லது உறவினர்களின் மத்தியஸ்தர் வாயிலாகத்தான் பேச முடியும். தேவன் எந்த கலாச்சாரத்திற்கும் அடிமைப்பட்டவரல்ல. உங்கள் கலாச்சாரம் எதுவாயிருந்தாலும் அவருடைய சித்தத்தின்படியான சரியான நபரை உங்களிடம் நடத்த அவரால் முடியும். இயேசுவும்,*

பவுலும் வாழ்ந்த காலங்கள் மேற்குறிப்பிட்ட கலாச்சாரமாகவே யிருந்தது. "தகப்பன் தன் புத்திரியை விவாகம் பண்ணிக்கொடுக்கிறான்" என 1கொரிந்தியர் 7-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஆனால் மேற்கத்திய நாட்டு கலாச்சாரத்தில் தெய்வபக்தியுள்ள வீட்டில் கூட இவ்விஷயத்தில் பெற்றோர்கள் எதுவும் செய்வதில்லை. தங்கள் தம்பதியை அவரவர் தாங்களாகவே தெரிந்துகொள்ளும் சுயாதீனமும் அந்நாட்டு கலாச்சாரத்தில் உண்டு. இங்கும் தேவன் கலாச்சாரத்திற்கு கட்டுப்பட்டவரல்ல. இவர்களின் கலாச்சாரத்தின் மூலமாகவே தன் சித்தப்படியான ஏற்ற துணையை தெரிந்து கொள்ளும்படி தேவன் அவர்களை நடத்தத்தான் செய்கிறார். முதலாவது நாம் கண்ட கலாச்சாரத்தின்படி மகிழ்ச்சியான திருமணங்களையும், இரண்டாவது கலாச்சாரத்தின்படி மகிழ்ச்சியான திருமணங்களையும் நாம் சமநிலையிலேயே காண்கிறோம்.

இங்கு முக்கியமாயிருப்பதெல்லாம், நீங்கள் அவசரப்படாமல் தேவனுக்காக காத்திருக்க வேண்டும் என்பதுதான். "ஆண்டவரே நான் வாழும் இந்த கலாச்சாரத்தில் நீர் எனக்காக தீர்மானித்த ஏற்ற துணையை கண்டுபிடிப்பதற்கு எனக்கு நீர் உதவி செய்யும்" என்று ஜெபியுங்கள். எந்த சமுதாயத்திலும் எந்த சந்ததியிலும் தேவன் தம்முடையவர்களுக்கு ஏற்ற துணையைத் தருகிறார் என்பதை இவ்வுலக சரித்திரம் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

> **திருமண விஷயத்தில் வாலிபர்கள் மிக கவனமாயிருக்க வேண்டும். "காதலுக்கு கண்ணில்லை" என உலகத்தார் கூறுவார்கள். அது உண்மைதான். இன்னும் சிலர் "காதலுக்கு குருடாகிவிட்ட கண்கள், திருமணமானபின் விழித்துக்கொள்கிறது" என்றும் கூறுவார்கள். இன்று வாலிப பிள்ளைகள் வஞ்சிக்கப்பட்டு, திருமணமான பின்புதான் தங்கள் பரிதாபநிலையை கண்ணாரக் காண்கிறார்கள்! அதிலென்ன பிரயோஜனம்!!**

எனவே வாலிப உள்ளங்களாகிய உங்களுக்கு நான் சொல்வதெல்லாம் உங்கள் திருமணத்திற்கு முன்பே உங்கள் இருகண்களும் நன்றாகத் திறந்திருக்கும்படி செய்யுங்கள். திருமணமான பின்பு ஒரு கண்ணை நிரந்தரமாய் மூடிவிடுங்கள். நான் சொல்லும் இந்த ஆலோசனையை நீங்கள் விளங்கிக் கொண்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் வாழ்க்கைத் துணையை தெரிந்துகொள்வதற்கு முன்பாக மிகுந்த கவனமாயிருங்கள். வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் நிதானமாய் ஆராயுங்கள். ஆனால் தேவசித்தம் அறிந்து திருமணமான பின்பு, எத்தனையோ பல காரியங்களைப் பாராமுகமாய் விட்டுவிடுவதே மிகவும் நல்லது!

*ஆகவே திருமணத்திற்கு முன்பு அவசரப்படாமல் நிதானமாய் ஜெபித்து தீர்மானியுங்கள். "மதியீனனுக்கும், தன் காரியத்தை பதட்டமான அவசரத்தோடும் செய்பவனுக்கும் நம்பிக்கையில்லை" என வேதம் கூறுகிறது. இவ்விஷயத்தில் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான, உங்களை மெய்யாய் நேசிக்கக்கூடிய, ஓரளவு ஆவிக்குரிய முதிர்ச்சி பெற்ற மூத்தவர்களின் உதவி உங்களுக்கு இருக்குமென்றால் அது மிகவும் நல்லது. இவ்விஷயத்தில் உங்கள் பெற்றோர்களையும் அலட்சியப்படுத்தாதீர்கள். நீங்கள் நினைப்பது போல் அவர்கள் ஆவிக்குரியவர்களாக இல்லாவிட்டாலும் உங்களைவிட ஏராளமான ஞானம் அவர்களிடத்தில் உண்டு. அதைவிட உங்களைக் குறித்த அன்பும் அக்கறையும் நிச்சயமாய் அவர்களிடத்திலுண்டு.* **இவ்விஷயத்தில் அநேக வாலிபர்கள் தங்கள் பெற்றோரை அலட்சியப்படுத்துகிறார்கள். அது மிகவும் அபாயமானதாகும்.** *அதற்காக, உங்கள் பெற்றோர்கள் சொல்வதையெல்லாம் நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென நான் கூறவில்லை. ஆனால் நிச்சயமாய் அவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையைக் கொடுத்து அவர்களுடைய ஆலோசனையை கரிசனையோடு சீர்தூக்கிப்பார்ப்பது உங்களுக்கு நல்லது!*

**கேள்வி-21 : இரண்டு வித்தியாசமான நாட்டைச் சேர்ந்த விசுவாசிகள் திருமணம் செய்து கொள்வது தவறா?**

*தவறு ஒன்றுமில்லை. அவர்களுடைய பாஸ்போர்ட் வித்தியாசமாய் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய பழகும் முறைகள் அல்லது கலாச்சாரம் ஒருவருக்கொருவர் ஒத்துவருமா? என்பதை மிக முக்கியமாய் கவனிக்க வேண்டும். ஏனென்றால் ஒரு கலாச்சாரம் மிக வலிமை கொண்டதாய் மற்றொரு கலாச்சாரத்தை ஆண்டுகொள்ள முடியும். இதை நீங்கள் திருமணத்திற்கு முன்பே யோசித்து முடிவு செய்தால் நல்லது. திருமணம் செய்ய விரும்பும் சகோதரனும், சகோதரியும் கர்த்தருக்குத் தங்களை சம்பூரணமாய் அர்ப்பணித்தவர்களாய் இருந்தால் மாத்திரமே இவ்வித திருமணம் நன்றாயிருக்க முடியும். இங்கே நான் குறிப்பிட்ட கலாச்சார வித்தியாசம் ஓர் உதாரணத்திற்காகவே குறிப்பிட்டேன். இதைப்போல் எத்தனையோ பல பகுதிகளையும் நீங்கள் விசாரித்து முடிவு செய்வது நல்லது.*

**கேள்வி-22: ஒரு விசுவாசியான கிறிஸ்தவப்பெண் அவிசுவாசியான முஸ்லீம் வாலிபனைத் திருமணம் செய்யலாமா?**

*அவ்வித திருமணம் நூற்றுக்கு நூறு தவறானதாகும். உண்மையாய் மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும்*

**தேவனுடையபிள்ளை** என்பதையும், மறுபடியும் பிறக்காத பரம்பரைக் கிறிஸ்தவர்கள் கூட **பிசாசின் பிள்ளைகள்** என்றும் நாம் திட்டமாய் அறிந்திருக்கவேண்டும். இதை 1யோவான்3:10-ல் வாசிக்கும் போது, "இதினாலே (தேவனால் மறுபடியும் பிறப்பதினால்) தேவனுடைய பிள்ளைகள் இன்னார் என்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னார் என்றும் வெளிப்படும்" என வேதம் திட்டவட்டமாய் கூறிவிட்டது. தேவனால் மறுபடியும் பிறக்காத யாரையும் "பிசாசின் பிள்ளைகள்" எனக் கூறுவதற்கு நான் வேண்டுமானால் தயங்கலாம். ஆனால், இந்த இரண்டிற்கும் நடுநிலையான பெயரை வேதம் நமக்குச் சுட்டிக் காட்டவே இல்லை.

எனவே ஒரு தேவனுடைய பிள்ளை ஒரு பிசாசின் பிள்ளையை திருமணம் செய்தால், இப்போது இந்த தேவனுடைய பிள்ளைக்கு யார் மாமனார்? பிசாசுதான் மாமனார்! அவனுடைய பிள்ளையை நீங்கள் திருமணம் செய்த பின்பு, இந்த மாமனாரை உங்கள் வீட்டிற்கு வரக்கூடாது என உங்களால் சொல்ல முடியாதே! ஆம், அவன் வீட்டிற்கு வருவது மாத்திரமல்லாமல் தான் விரும்புகிறபடியெல்லாம் தன் பிள்ளைகளுக்கு குடித்தனமும் செய்து வைப்பான்!! இவன் அமைத்துத்தரும் குடித்தனம் ஏராளமான பிரச்சனைகளைக் கொண்டுவரும் என்பதில் சந்தேகமேயில்லை. எனவேதான் வேதம் "**விசுவாசிக்கும் அவிசுவாசிக்கும் பங்கில்லையென்றும், ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமில்லை**" என்றும் திட்டமாய் கூறுகிறது.

இதை பழையஏற்பாடு குறிப்பிடும்போது, "எருதையும் கழுதையையும் ஒன்றாகப் பூட்டக் கூடாது" எனக்கூறுகிறது! அவ்வாறு பூட்டி உழவு செய்தால், ஏதோ ஒரு வகையில் நிலத்தை உழுதுவிடலாம், ஆனால் அந்த உழவு கோணல்மானலாய் நேர்த்தியாய் இருக்காது என்பதை வேதம் அரிதியிட்டுக் கூறுகிறது. தயவுசெய்து ஜாக்கிரதையாய் இருங்கள்.

**கேள்வி-23: நான் வித்தியாசமான கலாச்சாரத்தில் திருமணம் செய்த பின்பு, இப்போது மனைவியினுடைய கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டுமா? அல்லது கணவனுடைய கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டுமா?**

இதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். இருப்பினும் "நீங்கள் எந்த நாட்டில் குடும்பம் அமைத்திருக்கிறீர்கள்" என்பதை வைத்தே பதில் கூறமுடியும். உதாரணமாய், ஒரு இந்தியன் ஒரு மேற்கத்தியப் பெண்ணை திருமணம் செய்து, இந்தியாவின் ஒரு கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தால், நீங்கள் எப்படி அந்த

*கிராமத்தில் மேற்கத்திய கலாச்சாரத்தைப் பின்பற்ற முடியும்? ஆம், நீங்களும் ஒரு இந்தியப் பெண்ணாகவே மாறவேண்டும். அதேபோல் இந்திய கிராமத்திலுள்ள ஒருவன் அயல்நாட்டுப் பெண்மணியை திருமணம் செய்து, அமெரிக்க தேசத்தில் குடிஅமைத்திருந்தால், அவர் அமெரிக்க நாட்டின் கலாச்சாரத்தைத்தான் பின்பற்ற வேண்டும். எனவே யாருடைய கலாச்சாரம் என்பதை தீர்மானிப்பது எல்லாம் நீங்கள் வாழும் சூழ்நிலையை வைத்தே முடிவு செய்யவேண்டும்.*

*பொருளாதார நிலை, உறவினர்கள்..... இவ்வாறு பல பகுதிகள் திருமண விஷயத்தை ஒருவருக்கொருவர் பிரச்சனைக்குரியதாய் மாற்றிவிட முடியும். நீங்கள் ஒன்றாய் ஐக்கியம் கொள்வதற்கு இது போன்றவைகள் அதிக சிக்கலைக் கொண்டுவராமல் இருக்க கவனமாய் இருங்கள். ஆகவே, நான் பொதுவாய் ஜனங்களிடத்தில் கூறுவதெல்லாம், உங்களைப் போன்ற வாழ்க்கைச் சூழலும், வசதியும் உள்ளவர்களைத் திருமணம் செய்வதே நல்லது என ஊக்குவித்திருக்கிறேன்.*

*ஆனால், அதேசமயம் ஒரு தென்னிந்தியன் ஒரு தென்னிந்திய நபரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்றோ அல்லது ஒரு வடஇந்தியன் ஒரு வடஇந்திய நபரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்றோ நான் ஒருபோதும் போதித்ததில்லை! நான் உங்களுக்கு கூற விரும்புகிறதெல்லாம், ஒருவருக்கொருவர் நடை உடை பாவனைகளும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும்..... உங்களுக்கு ஒத்துவருமா என்பதை நிதானித்து முடிவு செய்யுங்கள், அதுபோதும்!*

**கேள்வி-24 : ஒழுங்கு செய்த திருமணம் செய்வதுதான் நல்லதா? அல்லது காதல் திருமணம் செய்வது நல்லதா?**

*திருமண விஷயத்தில் காதல் கொள்வது தவறு என்று நான் எண்ணுவது இல்லை. ஆனால் நீங்கள் ஒரு வாலிபராயிருக்கும் இந்நிலையில் உங்கள் காதலைத் தூண்டியது என்ன என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். அவனின் அல்லது அவளின் முகவசீகரம் தான் பிரதான காரணமா? இந்த அடிப்படையில் நீங்கள் காதல் கொண்டால் அது நிச்சயம் கடும் பிரச்சனையை உங்களுக்குக் கொண்டுவரும் என்பது உறுதி.*

*இதற்கு பதிலாக அவனோ அல்லது அவளோ கொண்டிருக்கும்* **ஆவிக்குரியத்தன்மை** *ஒருவருக்கொருவர் காதல் ஈர்ப்பைத் தந்திருந்தால், அது மிகவும் நல்லதேயாகும். உங்கள் காதல் தூய்மையானதுதானா என்பதை அறிய, காதலுக்குரிய காரணமே முக்கியமானதாயிருக்கிறது.*

*இன்று அநேக திரைப்படங்களை ஜனங்கள் கண்டதினிமித்தம் மிகவும் எளிதில் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் திரைப்படத்தில் ஒருவரின் முகஅழகு மாத்திரமே முக்கியமாய் கருதப்படுகிறது. ஆனால் ஒழுக்கமான பண்பிற்கோ அல்லது ஆவிக்குரிய தன்மைக்கோ தரப்படும் முக்கியத்துவம் "பூஜ்ஜியமேயாகும்!"*

*வாலிப உள்ளங்களாகிய நீங்கள் இவ்விஷயத்தில் கவனமாய் இல்லையென்றால் வஞ்சிக்கப்படுவீர்கள் என்பதை திட்டமாய் அறிந்து கொள்ளுங்கள்.*

**கேள்வி-25 : என் வாலிப ஈர்ப்பினால் ஒரு பெண்ணை நான் காதலிக்கிறேன். இப்போது அந்தப் பெண்ணை திருமணம் செய்யாமல் காதலைக் கைவிடுவது கஷ்டமாயிருக்கிறது. நான் என்ன செய்யலாம்?**

*பொதுவாய் வாலிபக் காதல் எப்போதும் மேலோட்டமானது தான். ஏனென்றால் இவர்கள் தங்கள் வாழ்வின் பிரச்சனைகளைக் குறித்து ஆழ்ந்து யோசிப்பதேயில்லை. குறிப்பாய் வயதுவரம்பைக்கூட உணரமுடியாத குருடர்களாய் மாறிவிடுகிறார்கள். ஒரு வாலிபன் குறைந்தது இருபத்தைந்து வயதும், ஒரு வாலிப பெண் இருபது வயதும் ஆகாத பட்சத்தில் திருமணத்தைக் குறித்து யோசிப்பது அல்லது காதலில் சிக்குவது நல்லதல்ல! இந்த வயதில் வாலிபர்களாகிய உங்களுக்கு இருக்க வேண்டியது ஒரே பிரமாணம் "தேவனாகிய கர்த்தரிடத்தில்* **முழு***இருதயத்தோடும்,* **முழு***ஆத்துமாவோடும்.* **முழு***பெலத்தோடும்,* **முழு***மனதோடும் அன்பு (Love- காதல்) கூருங்கள்" முற்றுப்புள்ளி, அவ்வளவுதான்.*

*இந்த வயது வரம்பை நான் கூறியது என்னுடைய சொந்த ஆலோசனையாகும். இருப்பினும் இதை நான் கூறுவதற்கு முக்கிய காரணம், ஒரு வாலிபன் இருபத்தைந்து வயதிற்கு கீழாக அல்லது ஒரு வாலிபபெண் இருபது வயதிற்கு கீழாக தகப்பனாகவோ அல்லது தாயாகவோ முதிர்ச்சி நிலையைப் பெற்றிட முடியாது என்பதேயாகும்.*

*குறிப்பாய் வாலிபக் காதல், ஒருவரை காதலிப்பது பின்பு விலகுவது; மற்றொருவரைக் காதலிப்பது பின்பு விலகுவது...... என இருமனதுள்ளதாய் அலைபாய்வதையே நாம் கண்டிக்கிறோம். முகஅழகின் ஈர்ப்பும், ஒருவரின் வசீகரமும் உண்மையான காதலுக்கு அடிப்படையானவைகள் அல்ல! இதுபோன்ற நிலையில் நீங்கள் இருந்தால் இந்த மாயையிலிருந்து நீங்கள் விடுபட்டு ஆண்டவராகிய இயேசுவை உங்கள் முழு இருதயத்தோடு காதலியுங்கள் (அன்பு கூருங்கள்) என்றே புத்தி சொல்லுகிறேன்!*

*மேலும், இன்று நான் திருமணம் செய்திருக்கும் மனைவியை என் வாலிப நாட்களில் காதலித்திருந்தால்கூட இந்த அளவுக்கு நான் ஆவிக்குரிய மனிதனாய் வளர்ந்திருக்க மாட்டேன். தேவனிடத்திலும், வேதாகமத்தினிடத்திலும் என் முழுகவனத்தை இருபது முதல் இருபத்தாறு வயது வரை செலவழித்திருக்கிறேன். அப்படியில்லாமல் நான் காதலில் ஈடுபட்டிருந்தால், வேதம் வாசிக்க எனக்கு எவ்வளவு நேரம் இருந்திருக்கும்? நிம்மதியான பத்துநிமிடம் கூட எனக்கு எஞ்சியிருக்காது!*

*இந்த வாலிப நாட்களை நீங்கள் கிறிஸ்துவுக்கு முழுமையாய் அர்ப்பணம் செய்து வாழ்ந்தால் உங்கள் பிற்கால மண வாழ்க்கை தேவனுக்குப் பயனுள்ளதாய் விளங்கும். இவ்வாறே என் வாலிப நாட்களை முழுமையாய் கிறிஸ்துவுக்கே அர்ப்பணம் செய்து நான் வாழ்ந்தேன். என் மனைவியும் அவ்விதமே தன் வாலிப நாட்களை முழுமையாய் கிறிஸ்துவுக்கே அர்ப்பணம் செய்து வாழ்ந்தார்கள்.*

*ஏற்ற வேளையில் அதாவது, நான் இருபத்தெட்டு வயது நிரம்பியபின் என் மனைவி இருபத்தைந்து வயது நிரம்பிய பின் எங்கள் இருவரையும் தேவன் இணைத்தார். கிறிஸ்தவ வாழ்க்கையில் நல்லஅஸ்திபாரம் எங்களுக்கு இருந்தபடியால் எங்கள் மணவாழ்க்கையைக் குறித்த ஏமாற்றம் (Regret) ஒருதுளியும் எங்களுக்கு இல்லை. தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கும் மேலான திட்டத்தை இழந்து விடாதிருக்க ஜாக்கிரதையாயிருங்கள்.*

**கேள்வி-26: பிள்ளைகள் "ராக் மியூசிக்" (Rock Music) கேட்க அனுமதிப்பது தவறு என்று சொன்னீர்களே சற்று விளக்கமாய் கூறுங்கள்? பிள்ளைகளை பாதிக்கக்கூடிய வேறு தீமைகள் இருந்தால் அதையும் எங்களுக்கு கூறுங்கள்?**

*ராக் மியூசிக் பிசாசோடும், பில்லிசூனியத்தோடும் தொடர்புடையதாகும். இதைக்குறித்து விளக்கமாக "பேயின் சீஷர்கள்" (Devils Disciples) என்ற புத்தகத்தில் அதிகமாக கூறப்பட்டுள்ளது. அதாவது பேய்த்தனமான காமஉணர்வுகளையும் கொடூரமான வன்முறை உணர்வுகளையும் இந்த ராக்-மியூசிக் உங்களுக்குள் அவிழ்த்துவிடும். ஆகவே இவ்வளவு பயங்கரமான ராக் மியூசிக்கை பிள்ளைகள் கேட்கக்கூடாது என பெற்றோர்களாகிய நாம் அவர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும்.*

*இதேபோல் காமவிகாரத்திற்கு ஏதுவான புகைப்படங்கள், பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள், டெலிவிஷனில் வெளியாகும் தீய திரைப்படங்கள், ஒருபால் உறவு பழக்க வழக்கங்கள்.... போன்ற யாவும் தீமைகளாகும். இதனிமித்தமே நாம் பெற்றோர்களுக்கு சொல்லும்*

*புத்திமதி என்னவென்றால் உங்கள் பிள்ளைகள் வாசிக்கும் புத்தகங் களையும், பார்க்கும் வீடியோ படங்களையும், நல்லதுதானா என்பதை நீங்களே சோதித்துப் பார்க்க வேண்டும்.*

*ஒரு விசுவாசியான குடும்பத்தில் தகப்பனும் தாயும் வெளியே சென்றபின்பு வீட்டிலிருக்கும் பிள்ளைகள் அருவருப்பான செய்கை களில் ஈடுபடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அல்லது பணம் சம்பாதிப்பதற்காக அரபு நாடுகளுக்குச் சென்ற பெற்றோர்கள், இந்தியாவிலிருக்கும் தங்கள் பிள்ளைகள் தாங்கள் அனுப்பும் பணத்தை வைத்து எவ்வாறெல்லாம் தீமையான செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதைத் தெரியாமலே, ஏராளமான பணம் அனுப்புவதை கேள்விப் பட்டிருக்கிறேன். ஆகவே பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை மிகுந்த கவனமாய் கண்காணிக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.*

*எல்லாம் சரியாகத்தான் நடக்குமென நீங்களாக எண்ணிக் கொள்ளாதீர்கள்.* **உங்கள் பிள்ளைகளிடத்தில் மறைவான தீமைகள்** *இருந்தால், அதை ஏதாவது சில அடையாளங்கள் மூலம் வெளிப்படுத்திக் காண்பிக்கும்படி தேவனிடத்தில் கேளுங்கள். அப்போது பிள்ளைகளிடத்தில் தோன்றும் மறைவான தீமைகளை சில அடையாளங்கள் மூலமாய் தேவன் ஆரம்பத்திலேயே வெளிப்படுத்திக் காண்பித்து உங்களுக்கு உதவுவார்.*

*நாம் வாழும் இந்நாட்களில் எத்தனையோ தீமைகளை நாம் காண்கிறோம். இவைகளிலிருந்து தப்பித்து வாழ நாம் பிள்ளைகளுக்கு ஓர் எளிய பாடத்தைக் கற்றுத்தர வேண்டும். நான் பார்க்கும் இந்தப்படத்தை அல்லது நான் செய்யும் இந்த செயலை இயேசுவும் என்னோடு சேர்ந்து பார்ப்பரா? அல்லது செய்வாரா? என்ற கேள்வியை தங்களுக்குள் கேட்டுப்பார்ப்பதே அந்தப்பரீட்சையாகும்.*

*ஒருசமயம் வடஇந்தியாவின் ஒருபகுதியில் நான் பிரசங்கிக்க சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்திலுள்ள அனைத்து விசுவாசிகளும் புகைபிடித்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு செல்லும் வரைக்கும் புகைபிடிப்பது தவறு என ஒருவர்கூட அவர்களுக்குப் பிரசங்கித்தது இல்லை! ஆகவே இந்த ஜனங்களுக்கு இதை எப்படி உணர்த்துவது என யோசித்து நான் மேற்கூறிய வழிமுறையைத்தான் அவர்களுக்குக் கூறினேன். நான் பிரசங்கித்தேன், "இரட்சகராகிய இயேசு உங்களைவிட்டு நீங்காத நண்பர். நீங்கள் எதைச் செய்தாலும் உங்கள் நண்பரும் அதில் பங்குபெறுவார் அல்லவா? ஆகவே நீங்கள் அடுத்தமுறை சிகரெட் குடிக்கும்போது உங்கள் நண்பர் இயேசுவுக்கும்*

*ஒரு சிகரெட் கொடுங்கள்! என் நண்பராகிய இயேசுவே நீர் பல வருடங்கள் சிகரெட் குடித்ததில்லை என்பது எனக்குத் தெரியும். நீர் என் நண்பராயிருக்கிறபடியால் என்னோடு சேர்ந்து இன்று சிகரெட் குடியுங்கள்! புகைபிடிப்பது உமக்கு மிகுந்த ஆனந்தமாய் இருக்கும்" என்று சொல்லிப்பாருங்கள். அவர் அதை ஏற்றுக்கொண்டால் நீங்களும் மகிழ்ச்சியோடு சிகரெட் குடியுங்கள். அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், சிகரெட்டைத் தூக்கியெறியுங்கள் என பிரசங்கித்தேன். முதலாவது, எனக்கு மொழிபெயர்த்துக் கொண்டிருந்த சகோதரன் என்னைப்பார்த்து, "சகோதரன் சகரியா பூணனே, நான் இன்றிலிருந்து சிகரெட் குடிக்கும் பழக்கத்தை அடியோடு விட்டுவிட்டேன்" எனக் கூறினார்.*

*இதேபோல் T.V. திரையில் "உலக மல்யுத்த கழகம்" நடத்தும் நிகழ்ச்சிகளை நம் பிள்ளைகள் காண்பது தவறு. ஜனங்களைப் பிரியப்படுத்துவதற்காக இவர்கள் ஒருவரையொருவர் மிருகத்தனமாய்த் தாக்கிக்கொள்வதை இயேசு உங்களோடு உட்கார்ந்து கொண்டு ரசிப்பாரா? என கேட்டுப்பாருங்கள். இவ்வித இயேசுவிடம் கேட்டுப் பார்க்கும் எளிய பரீட்சை உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் எத்தனையோ தீமைகளிலிருந்து காத்துக்கொள்ள முடியும்!*

*நீங்கள் எதையும் பார்க்கக்கூடாது அல்லது செய்யக்கூடாது என நான் கூறவில்லை. நம் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக நாம் ஏதாவது அவர்களுக்கு வழிவகுக்கத்தான் வேண்டும். ஆனால் பெற்றோர்களாகிய நாம் அதைக்கவனமாய் தேர்ந்தெடுத்து பிள்ளைகளுக்குத் தரவேண்டும். வீடியோ படங்கள் காண்பது தவறில்லை.*

*ஆனால் எதை வேண்டுமானாலும் பார்ப்பதற்கு விட்டுவிடாமல் நல்லவைகளைத் தெரிந் தெடுத்து உங்கள் பிள்ளைகள் பார்த்திட அனுமதியுங்கள். எப்படியிருந்தாலும், காமஉணர்வையும், வன் முறையையும் தூண்டும் எதுவும் நம்முடைய பிள்ளைகளுக்கு ஒரு நன்மையும் தராது. இதைப் பெற்றோர்களாகிய நாம் மனதில்கொண்டு கவனமாய் நடக்கக்கடவோம்.*

**கேள்வி-27 : பிள்ளைகள் இல்லாத தம்பதியர்களைக் குறித்த நிலை என்ன? பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொள்வதைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?**

*தேவன் உங்களுக்கென்று பிள்ளையை கொடுத்திருக்காவிடில், நீங்கள் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக்கொள்வதில் எந்த தவறும் இல்லை. பிள்ளைகளைத் தத்தெடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்பாய் வேதவசனம் எதுவும் கூறவில்லை. ஆகவே நீங்கள் தாராளமாய்*

உங்களுக்கென ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். ஒரு பிள்ளைக்கு தாயோ அல்லது தகப்பனோ இல்லாதிருந்தால் அல்லது அந்த பிள்ளை அனாதையாய் இருந்தால் அல்லது இதுபோன்ற நிர்கதியிலுள்ள பிள்ளைகளை நீங்கள் தத்தெடுத்துக்கொள்வதே நல்லது என நான் கருதுகிறேன்.

**கேள்வி-28 : கிறிஸ்துவின் மாதிரியையும், பவுலின் மாதிரியையும் பின்பற்றி நான் திருமணமாகாதிருக்க விரும்புகிறேன். அது நல்லது தானா?**

உங்கள் அழைப்பைச் சார்ந்தே உங்கள் கேள்விக்கு பதில் இருக்கிறது. திருமணமாகாமல் ஊழியம் செய்வதற்குத்தான் அழைப்பைப் பெற்றிருந்ததாக பவுல் கூறினார். சுமார் ஆயிரத்தில் ஒருவரைத்தான் தேவன் இவ்விதமாய் அழைக்கிறார் என்பதை நான் கண்டிருக்கிறேன். திருமணமாகாதிருப்பதற்கு அழைப்பும், முழுநேர ஊழியராயிருப்பதற்கு அழைப்பும் சமமானது என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் ஊழியத்திற்கு, சுமார் ஆயிரத்தில் ஒருவரைத்தான் தேவன் அவ்வாறு அழைத்திருக்கிறார்.

இவர்களைத் தவிர மற்ற கிறிஸ்தவர்கள், ஒரு உலக அலுவலில் வேலையைச் செய்துகொண்டு ஊழியம் செய்யவே தேவன் விரும்புகிறார். இதேபோலவேதான் திருமணமாகாதிருப்பதற்குரிய அழைப்புமாகும். தேவன் உங்களை அப்படி அழைத்திருக்கிறார் என்பதை "என் மனம் பாலிய இச்சையின் சோதனையினால் அலைபாயவில்லை" என்ற உங்கள் சாட்சியே நிரூபணமாய் இருக்கும்.

இதற்கு மாறாக பாலிய சிந்தைகள் உங்கள் மனதில் இருந்தால் "வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் செய்வதே நல்லது" என வேதம் கூறுகிறது. ஆகவே பவுலின் சிந்தையில் "பாலிய எண்ணங்கள் அவரை அலைக்கழித்திருக்காது" என நான் உறுதியாய் நம்புகிறேன். ஆகவே தான் அவர் தேவனுடைய மகிமைக்காக திருமணம் செய்யாதிருந்து விட்டார்.

சுமார் 1000 பேரில் 999 பேர் திருமணம் செய்கிறபடியால் திருமண வாழ்க்கையைக் குறித்து ஏராளமான ஆலோசனைகள் அவர்களுக்குத் தேவையாயிருக்கும். இச்சமயத்தில் திருமணம் ஆகாதிருக்கும் மனுஷன் இந்த ஊழியத்தை நிறைவேற்றிட முடியாதே! ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சுயாதீனமாய் பயணம் செய்து விரைந்து ஊழியம் செய்வதற்கு இந்த அழைப்பு அவருக்கு அவசியமாயிருந்தது. ஆனால் இன்று பயணவசதிகள் பெருகிவிட்டபடியால், திருமணமாகாத சகோதரன் பயணம் செய்வதைப்போலவே திருமணமான சகோதரன் பயணம் செய்வதும் மிகவும் எளிதாகி விட்டது!

*எப்படியிருந்தாலும் “அழைப்பு இல்லாமல்” எதையும் நாம் செய்துவிட முடியாது!!*

**கேள்வி-29 : இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் எடுக்காத ஒரு பெண்ணை திருமணம் செய்வது சரியா?**

*ஞானஸ்நானமும் சேர்த்துத்தான் இரட்சிப்பென்று நான் எண்ணவில்லை. ஆனால், மெய்யாகவே மறுபடியும் பிறந்திருக்கிறார்களா? என்பதுதான் முக்கியம்.*

*இருப்பினும், கூடுமானவரை உபதேசரீதியில் ஒரே கருத்துடையவர்களைத் திருமணம் செய்வதுதான் நல்லது. இதுவே என்னுடைய பொதுவான கருத்து. திருமணத்திற்கு பின் நீங்கள் ஒரே மனதுடையவர்களாய் ஒரே சபைக்கு செல்லுவதுதானே நல்லது. அப்படியில்லாமல், ஞானஸ்நானத்தை உபதேசிக்காத சபைக்கு உங்கள் மனைவியும் நீங்கள் வேறொரு சபைக்கு சென்றால் அது நல்லது தானா? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே,. இவைகளையெல்லாம் திருமணத்திற்கு முன்பே நீங்கள் யோசித்து முடிவு செய்வது நல்லது.*

**கேள்வி- 30 : ஆதாமுக்கு ஏற்றதுணையாய் அல்லது உதவி செய்கிறவளாய் இருக்கும்படிதானே தேவன் ஏவாளை சிருஷ்டித்தார்? ஆகவே, கணவனுக்கு நன்கு உதவிசெய்யக்கூடிய மனைவியிருந்தால் அது போதாதா?**

*தேவன் ஏவாளை சிருஷ்டிப்பதற்கு முன்பாக மிருகங்களிலிருந்து ஏவாளை ஏற்றதுணையை ஆதாமுக்குத் தேடினாரா? இல்லவே இல்லை. முதலில் இந்த மிருகங்களிலிருந்து ஆதாமுக்கு ஏற்றதுணை உண்டாகுமா? என பார்த்துவிட்டு அதற்கு பின்புதான் தேவன் ஏவாளை சிருஷ்டித்தார் என எண்ணுவது தவறு! இங்கு காணும் சத்தியம் என்னவென்றால் ஆதாமுக்குத் தன்னைப் போன்ற ஒருநபர்தான் ஏற்ற துணையாயிருக்க முடிந்ததேயல்லாமல் வேறுஎதுவும் அவனுக்கு ஏற்றதுணையாயிருக்க முடியவில்லை என்பதேயாகும்.*

*இந்த உண்மையை இன்றைய திருமண வாழ்வுக்கு ஒப்பிட வேண்டுமென்றால், ஒரு விசுவாசியான நபர் அவிசுவாசியான நபரை திருமணம் செய்யமுடியாது என்பதேயாகும். ஒரு விசுவாசி வேறொரு “இனத்தை” (Race) சேர்ந்தவராகவே வேதம் கருதுகிறது.*

*ஒரு பன்றி (அவிசுவாசி) எவ்வளவுதான் அழகாயிருந்தாலும், ஆதாம் அந்த வேறொரு இனத்தைத் திருமணம் செய்யவே முடியாது. ஆகவே அவன் தன்னுடைய சுபாவத்திற்கொப்பாகவே ஏற்ற துணையைத் தேடினான். எனவே மறுபடியும் பிறந்த ஒருவன் நிச்சயமாய்*

*மறுபடியும் பிறந்த ஒரு ஸ்திரீயைத்தான் திருமணம் செய்யவேண்டும். திருமண வாழ்வில் மனைவியின் பங்கு "உதவி செய்கிறவள்" என்பதை விட பன்மடங்கு மேலான ஒரு நிலையாகும். ஆகவே உங்கள் வாழ்நாள் முழுவதும் திருமண வாழ்க்கை நலமுடன் இருக்க வேண்டுமென்றால் வேதம் குறிப்பிடும் ஏற்றதுணையைத் திருமணம் செய்வதுதான் நல்லது!!*

**- முற்றும் -**

**ஆசிரியர் குறிப்பு :** இப்புத்தகத்தை வாசித்தபின் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள், கேள்விகள் இருப்பின், நீங்கள் எனக்கு கடிதம் எழுதுங்கள். உங்கள் கடிதங்களை வரவேற்கிறேன்.

*எனது முகவரி:*
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com